# வெண்மையில் எத்தனை நிறங்கள்

ரமணிசந்திரன்



# வெண்மையில் எத்தனை நிறங்கள்

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வெண்மையில் எத்தனை நிறங்கள் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : பிப்ரவரி, 1981 |
| ஐந்தாம் பதிப்பு | : ஜூலை, 1990 |
| ஆறாம் பதிப்பு | : செப்டம்பர், 1992 |
| ஏழாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1993 |
| எட்டாம் பதிப்பு | : மே, 1994 |
| ஒன்பதாம் பதிப்பு | : நவம்பர், 1995 |
| பத்தாம் பதிப்பு | : டிசம்பர், 1997 |
| பதினொன்றாம் பதிப்பு | : ஜூன், 1999 |
| பனிரெண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2001 |
| பதின்மூன்றாம் பதிப்பு | : ஜூலை, 2003 |
| பதினான்காம் பதிப்பு | : டிசம்பர், 2004 |
| பதினைந்தாம் பதிப்பு | : ஜூன், 2006 |
| பதினாறாம் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| பதினேழாம் பதிப்பு | : ஜனவரி, 2009 |
| பதினெட்டாம் பதிப்பு | : பிப்ரவரி, 2010 |
| பத்தொன்பதாம் பதிப்பு | : செப்டம்பர், 2012 |
| இருபதாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2014 |
| மொத்தப் பக்கங்கள் | : 272 |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |



# வெண்மையில்
# எத்தனை
# நிறங்கள்

# வெண்மையில் எத்தனை நிறங்கள்

1

அன்பும் அறிவும் போட்டி இடுகையில் எது வெல்லக் கூடும்?

நிச்சயமாக அன்புதான்!

அறிவு சொல்லும் ஆயிரம் ஆயிரம் சமாதானங்களும் அர்த்தமற்று வலுவிழந்து போய்விட அந்த அன்பு எவ்வளவு வேதனைகளை இழுத்து வைத்துவிடுகிறது!

செய்வதற்கும் ஒன்றும் இல்லை; வீணே வருந்துவதால் எவ்விதப் பிரயோசனமும் இல்லை என்பதெல்லாம் நன்றாகவே தெரிந்துவிட்ட பிறகும் மனவேதனை பெருகிக் கொண்டுதானே போகிறது?

தந்தையின் கையைத் தன் கையில் எடுத்து மெல்ல வருடிய சசியின் மனம் என்னென்னவோ அர்த்தமற்று எண்ணிக் கலங்கியது.

அப்பாவின் கை இப்படியா இருக்கும்?

அலுவலகத்திலிருந்து வந்ததும் தன்னை உயரே தூக்கிப் போட்டுப் பிடிக்கும் தந்தையின் கரங்கள் அவளது நினைவுக்கு வந்தன.

வலிவும் வனப்பும் மிகுந்த கரங்கள்.

சீராக வெட்டப்பட்ட நகங்கள் இளரோஜா வண்ணத்தில் மின்ன, அந்தக் கரங்களை ஆர்வத்துடன் பார்ப்பாள் சிறுமி சசி.

அந்தக் கரங்கள் இப்போது தசையிழந்து, மெருகிழந்து, மெலிந்து...

சசியின் விழிகளில் நீர் மல்கியது.

வயதினால் மட்டும் வந்த மாற்றம் என்றால் வருந்த ஒன்றும் இல்லையே!

ஆனால் அவர் உள்ளே குடையும் இந்த நோய்,

அது தரும் வேதனை,

வேதனையின் விளைவால் வந்த உருக் குலைவு. கடவுளே...

வாயிலில் குரல் கேட்கவே எழுந்து சென்று பார்த்தாள் அவள்.

வேலைக்காரி சின்னிதான்.

''வா சின்னி!'' என்று கதவைத் திறந்துவிட்டு, ''சின்னி! அப்பாவைக் கொஞ்சம் பார்த்துக் கொள்கிறாயா? நான் சற்று வெளியே லில்லி வீடுவரை போய் வருகிறேன்,'' என்றாள்.

''சரிதாம்மா, போய் வா,'' என்று சசியின் பின்னோடு வந்தாள் சின்னி.

உள் அறைக்குச் சென்றதும் குரலைத் தணித்து, ''டாக்டரு இன்னாம்மா சொல்றா?'' என்று விசாரித்தாள்.

ஒரு பெருமூச்சுடன், ''மலைப் பக்கம் போக வேண்டும் என்கிறார்,'' என்றாள் சசி. மலை! எவ்வளவு உயரத்தில் எட்டாததாகத் தெரிகிறது!

சசியின் முகத்தில் தெரிந்த ஆற்றாமை கண்டு அந்தப் பிரியமுள்ள வேலைக்காரிக்குப் பொறுக்கவில்லை.

''அட வுடும்மா. சொம்மா கவலைப் பட்டுக்கினு... தோப்பாரு நம்ம வள்ளுவனை இட்டாரேன். அவன் பார்த்து ஒரு சூரணம் கொடுத்தாக்க இல்லா வியாதி எல்லாம் அலறி அட்சிகினு ஓடும். ஏம்மா சிரிக்கிறே?'' என்று விசாரித்தாள்.

''ஒன்றுமில்லை சின்னி! இல்லாத நோய் ஓடும் என்கிறாயே, இருக்கிற நோய் அல்லவா போக வேண்டும்!'' என்றாள் சசி சிறு புன்னகையுடன்.

தானும் கூடவே பல்லைக் காட்டியபடி, ''ஒரு பேச்சுக்குச் சொன்னேம்மா. எனக்கென்ன இலக்கணமாப் பேச

உன்னாட்டமா படிச்சேனாங்காட்டியும்! அது போறது. நாளைக்கு வள்ளுவனை இட்டாரவா?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''பிறகு பார்க்கலாம் சின்னி,'' என்று அவள் மனம் நோகாமல் முறுவலுடன் பதிலிறுத்தாள் சசி. பின், ''சின்னி! அப்பாவுக்கு எட்டு மணிக்குக் கஞ்சி. ஆனால் அதற்குள் வந்துவிடுவேன்,'' என்றாள்.

''எங்கம்மா வர முடியும்? அந்த லில்லியம்மா வுடவே வுடாதே. ஒரு சினிமாக்காச்சும் இட்டும் போவும். நீயும்தான் வேற எங்கே போறே? போயி, அதுகூட ஒரு நல்ல படமாப் பாரு. லச்சுமி கொட்டாயிலே நம்மளவு...'' என்று அவள் தொடருமுன் சசி குறுக்கிட்டாள்.

''சரி சரி, நான் கிளம்புகிறேன் சின்னி! நேரம் ஆகிறது,'' என்றாள் அவசரமாக. தன் அபிமான நடிகனைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டால் சின்னி நிறுத்தமாட்டாள் என்பதுதான் அவளுக்கு நன்றாகத் தெரியுமே.

ஆயினும் பெரிய வயலட் கலர் பொட்டும், வெற்றிலைக் காவி படிந்த உதடுகளும், அள்ளிச் செருகிய கூந்தலும், கில்ட் வெளிறிய கம்மலுமாக இந்தச் சின்னி மட்டும் இல்லா விட்டால் இந்த ஓர் ஆண்டு எப்படிக் கழிந்திருக்கும்?

தங்கம் எங்கெங்கே இருக்கிறது என்று மனதினுள் வியந்தபடி தன் லேசான அலங்காரத்தை முடித்தாள் சசி.

தந்தையிடம் சென்றாள்.

மாறாத வேதனையில் லேசான புருவச் சுழிப்புடன் விழித்திருந்தார் சபேசன்.

''அப்பா! லில்லி வீடுவரை போய்விட்டு வருகிறேன்,'' என்றாள் மகள் மெல்லிய குரலில்.

புரிந்து கொண்டதற்கு அடையாளமாகச் சபேசனின் இமைகள் ஒருமுறை மூடித் திறந்தன.

சம்மதத்தின் அறிகுறியும் தெரிந்தது.

தொண்டையை நம்பாமல் தலையை அசைத்துவிட்டு வேகமாக வெளியேறினாள் சசி.

லில்லியின் வீடு வரையிலும் அதே வேகம்தான். அங்கே சசியைத் தடுப்பவர் இல்லை. வேகமாகவே மாடிப்படி ஏறி லில்லியின் அறைக்குள் சென்றாள்.

பியானோவை லொட்டு லொட்டென்று ரசனையற்றுத் தட்டிக் கொண்டு இருந்தாள் லில்லி.

ஆள் அரவம் கேட்டுத் திரும்பியவள் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

''ஹாய் சசி! மெய்யாகவே நீதானாடி? கொஞ்சம் இரு,'' என்று ஜன்னல் பக்கம் ஓடிச் சென்றாள்.

வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, ''மழை ஒன்றையும் காணவில்லையேடி,'' என்று வெகுவாக அதிசயித்த வண்ணம் மீண்டும் திரும்பித் தோழியை ஏற இறங்கப் பார்த்தாள்.

பிறகு கண்ணடித்துச் சிரித்தாள்.

சசிக்குச் சிரிப்பு வந்தது.

''இன்று பாடம் அவ்வளவுதானா?'' என்று கேட்டபடி எழுந்தாள், பியானோ கற்றுக் கொடுக்க வந்த பெண்மணி.

''போதாதா டீச்சர்? இன்றேனும், கொஞ்சம் நிம்மதியோடு நல்லபடியாய்த் தூங்குங்களேன்,'' என்று கண் சிமிட்டினாள் லில்லி.

தன்னை மீறிச் சிரித்தபடி வெளியேறினாள் அந்த அம்மா.

''புதுப் பைத்தியமா?'' என்று பியானோவைக் கண்ணால் காட்டி வினவியபடி அமர்ந்தாள் சசி.

''இதுவா?'' என்று அலட்சியமாகப் பியானோவைப் பார்த்தாள் லில்லி. ''அன்றைக்கு நளினியைப் பார்த்தேனா, பியானோ படிப்பதாகப் பெரிதாகப் பீற்றிக் கொண்டாள். 'பெ...ங்களூரிலிருந்து' வாங்கி வந்ததாகப் பெருமை வேறு. அதான் சித்தப்பாவிடம் பியானோ படிக்கப் போவதாகச் சொன்னேனா? வாங்கித் தந்து விட்டார். வாங்கித் தந்தால் அதோடு நிற்க வேண்டியதுதானே? ஆறாயிரம் செலவு செய்து வந்த பொருளாம். வீணாக்கப்படாதாம். இந்த டீச்சர் வேறு, பாவம் வாங்குகிற சம்பளத்துக்குக் கடனே என்று முட்டிக் கொள்கிறார். எனக்கோ...''

''சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை,'' என்று முடித்துவிட்டுச் சிரித்தாள் சசி.

எழுந்து சென்று 'கீ'யைத் தட்டிப் பார்த்துவிட்டு, ''நன்றாயிருக்கிறதடி!'' என்று சர்டிபிகேட் கொடுத்தாள்.

''ச்சு! மூடுடி...ம்... இப்போது என்ன சாப்பிடுகிறாய்?''

''ஒன்றும் வேண்டாம் லில்லி. சும்மா உன்னைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. வந்தேன்.''

''இப்போது பார்த்தாயிற்று. போகிறேன் என்கிறாயா? அதெல்லாம் நடக்காது. பேசாமல் உட்கார்ந்திரு. வருகிறேன்,'' என்று வெளியே ஓடிப் போனாள்.

கையில் ஒரு ட்ரேயுடன் திரும்பி வந்தாள்.

பிஸ்கட்ஸ், வடை, கேக், கப்பில் காஃபி.

''ம், சாப்பிடு,'' என்றாள் அதிகாரமாக.

''வேறு ஒன்றும் வேண்டாம் லில்லி! காஃபி மட்டும் கொடு,'' என்று காஃபி கப்பைக் கையில் எடுத்தாள் சசி.

சட்டென்று அதைப் பிடுங்கிக் கீழே வைத்தாள் லில்லி. ''அட சாப்பிடுடி என்றால் பொல்லாத பிகு பண்ணிக் கொள்கிறாயே! ஆள் வேறு... ம்... மெலிந்து போயிருக்கிறாய். ஏன்? என்ன விஷயம் சசி?'' என்று அதட்டலில் தொடங்கி மென்மையான வினவலில் முடித்தாள் லில்லி.

கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தியபடி தரையைப் பார்த்தாள் சசி.

ஒரு கணம் தோழியை உற்று நோக்கி விட்டுக் காஃபி கப்பை எடுத்து அவள் கையில் கொடுத்தாள் லில்லி. ''இதையேனும் முதலில் குடி,'' என்று ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கொறிக்கத் தொடங்கினாள்.

சசி குடித்து முடிகிற வரையிலும் பார்த்திருந்து விட்டுக் கப்பை வாங்கி டீபாயின் மேல் வைத்தாள்.

''என்னடி?''

தன் இயலாமையைக் காட்டுவது போல லேசாகத் தலையசைத்தாள் சசி. ''அப்பாதான்! உடம்பு மோசமாகிக்

கொண்டே போகிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை. மெல்ல மெல்ல...''

''டாக்டர் என்ன சொல்கிறார்?''

தோற்றுப் போனவளாக, ''மலைப் பிரதேசத்தில் வைத்து மருத்துவம் பார்க்க வேண்டுமாம்,'' என்று லேசாகச் சிரித்தாள் சசி.

''அப்படிச் சிரிக்காதே,'' என்றாள் லில்லி சுருக்கென்று. ''தெளிவாய்ச் சொல்லு. மலைப் பக்கம் என்றால் குளிர் தானே. உன் அப்பாவின் உடம்புக்கு அது எப்படி நல்லதாகும்?''

''மலைக் குளிரில் ஈரம் கிடையாதாம். அதனால் நல்லதாம். இந்தத் தரைக் குளிரும் சூடும்தான் நல்லதில்லையாம்,'' என்று விரக்தியுடன் கூறினாள் சசி.

''அப்புறம்?''

''அங்கே குன்னூரில் டாக்டர் ஜான் என்று ஒருவர் நர்ஸிங் ஹோம் வைத்திருக்கிறாராம். இந்த டாக்டர் சொன்னால் கட்டாயம் சேர்த்துக் கொள்வாராம்.''

''ம்ம்...''

''சாப்பாடு, சிகிச்சை எல்லாம் சேர்த்து... எல்லாமே சேர்த்து மாதம் இரண்டாயிரம் ரூபாய் ஆகுமாம்.''

''வாட்... எவ்வளவு என்றாய்?''

மெலிந்த புன்னகையுடன், ''இரண்டாயிரம். சுமார் ஐந்து மாதச் சிகிச்சை செய்ய வேண்டும்,'' என்றாள் சசி.

''இரண்டாயிரம்தானாமா? டாக்டர்களுக்கு என்ன தாராள மாகச் சொல்லி விடுவார்கள். அவர்கள் பிழைக்க வேண் டாமா?'' என்றாள் லில்லி கோபத்துடன்.

''டாக்டரைச் சொல்லி என்னடி பயன்? அப்பாவுக்கு என்று வந்திருக்கும் நோயைத்தான் சொல்ல வேண்டும். பெட்டி பெட்டியாகப் பூட்டி வைத்து இருப்பவர்களுக்கு வர வேண்டியது எல்லாம் நமக்கு வருவானேன்?''

''ஆமாம், ஒவ்வொருவருக்கும் ஒரு நியாயம் கற்பி. உனக்காக யார்தான் பார்க்கிறார்களோ?'' என்றாள் லில்லி எரிச்சலுடன்.

''யாரை யார் பார்க்கிறார்கள்? கடவுள் கூடப் பார்க்க வில்லை போல இருக்கிறதே!'' மீண்டும் நெஞ்சின் ஆற்றாமை விசுவரூபம் எடுக்க. நெற்றிப் பொட்டை விரலால் தேய்த்து விட்டாள் சசி.

லில்லியின் பார்வை குற்றக் குறுகுறுப்புடன் பியானோவின் மீது விழுந்தது. தந்தையின் உயிரைக் காப்பாற்றச் சசியிடம் பணம் இல்லை. இங்கானால் வீண் பெருமைக்காக...

சட்டெனத் திரும்பினாள்: ''சசி! சித்தப்பாவிடம் ஒரு நாடகம் ஆடிப் பார்க்கட்டுமா?''

''என்ன நாடகம்?''

''ஏதோ ஏமாந்து போனேன் சித்தப்பா. அந்தப் பயலானால் இப்போது பத்தாயிரம் ரூபாய் கேட்கிறான். ஒரு பத்தாயிரம் தாருங்கள். அவன் மூஞ்சில் விட்டெறிந்து விடுகிறேன் என்றால்...''

''அந்தப் பயலை என்னிடம் விட்டு விடு. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ ஆளை மட்டும் காட்டு என்பார்,'' என்று மெல்லச் சிரித்தாள் சசி.

''செய்வார் செய்வார்! நிச்சயமாகச் செய்வார்!'' என்று கண்ணை உருட்டினாள் லில்லி. சற்று நேரம் யோசித்து விட்டு, ''வேறு எல்லா வகையிலும் முயற்சி செய்து பார்த்து விட்டாயா சசி?'' என்று வினவினாள்.

முகம் கறுக்கத் தலையாட்டினாள் சசி.

அலுவலகத்தில் பணம் கேட்டு விட்டு அனுபவித்த அவமானம் நெஞ்சில் பச்சைப் புண்ணாக இருக்கிறதே.

ஆனால் அவள் கேட்டதும் தப்புதானே? மாதம் முன்னூறு ரூபாய் சம்பளக்காரி. பிணைக்கு என்று எதுவுமே இல்லை. பத்தாயிரம் கடன் தாருங்கள் என்று கேட்டிருக்கக்

கூடாதுதான். அப்பாவின் அவதி அவளுக்குத்தானே தெரியும்? ஆனால் இவ்வளவு பெரிய தொகை தருவதற்கு இல்லை என்று மட்டும் சொல்லி அந்த மானேஜிங் டைரக்டர் நிறுத்தியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! அதை ஒரு பெரிய ஜோக் மாதிரி செக்ஷனுக்கே வந்து சொல்லிச் சிரித்திருக்க வேண்டாம்.

ஏற்கெனவே துன்புற்றிருந்த சசியின் மனம் எவ்வளவு நொந்து போகும் என்று அவர் எண்ணவே இல்லையே.

சசிக்குக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை. நெஞ்சில் இரத்தம் வடிகையில் உதட்டால் வலியப் புன்னகை செய்துவிட்டு வரும்படியாக ஆயிற்று.

''அலுவலகத்தில் கேட்டேன். கிடைக்கவில்லை,'' என்றாள் மெல்லிய குரலில்.

''சித்தப்பாவிடம் உங்கள் மானேஜிங் டைரக்டர் சொன்னாராம். சித்தப்பா சொன்னார். இரண்டு ஆண்டுகள் உழைத்திருக்கிறாய். ஒரு பத்தாயிரம் நம்பித் தரக்கூடா தாக்கும். இவர்கள் எல்லாம் மனிதர்களா?''என்று கடுகடுத்தாள் லில்லி.

சித்தப்பா ராபர்ட், விஷயத்தைச் சொன்னதோடு மட்டும் நிற்கவில்லை. 'பொறுப்பற்ற பெண். பெரிய தொகையைக் கேட்டு, சிபாரிசு செய்த எனக்குக் கெட்ட பெயரை உண்டாக்கி விட்டாள். இனி உன்னிடமும் கேட்க வருவாள். தட்டிக் கழித்து விடு,' என்று அவர் மேலே தொடர்ந்து சொன்னதும் நினைவு வந்து லில்லியின் கோபம் அதிகரித்தது. 'பணப் பிசாசுகள்!' என்று பொருமினாள்.

''ஷ்... அப்படிச் சொல்லலாமா லில்லி? பிணை ஏதும் இல்லாமல் இந்தச் சம்பளத்தில் பத்தாயிரத்தை எப்படி அடைப்பேன் என்று எண்ணியிருப்பார். கம்பெனிப் பணத்துக்கு அவர் பொறுப்பு அல்லவா?''

''திரும்பவும் அடுத்தவர்களுக்காக நியாயம் கற்பிக்கத் தொடங்கி விட்டாயா? இது சுத்தமான வடிகட்டிய மண்டுத்தனம். மற்றவர்களுக்காக நீ வாதிக்கத் தொடங்கி

விட்டால் பிறகு உனக்காக வாதிட யாரும் இருக்கமாட்டார்கள்,'' என்று படபடத்தாள் லில்லி.

''கடவுள் இருப்பார்!'' என்று லில்லிக்கு மட்டும் இல்லாமல், தன் மனத்துக்கும் சொல்லிக் கொண்டாள் சசி.

''அவர் பரலோகத்தில்தான் வாதிப்பார். இங்கே உனக்கு ஒன்றுமே செய்யமாட்டார்!'' என்று எரிச்சலுடன் முடித்தாள் லில்லி.

மறுத்துப் பேச வாயில்லாமல் பேசாதிருந்தாள் சசி.

என்ன பேசுவது?

மெய்யாகவே கடவுள்கூட அவளைக் கைவிட்டுவிட்டது போலத்தான் நிலைமை இருந்தது.

இனிக் கண் முன்னே அப்பா அணு அணுவாக உயிர் விடுவதைக் கண்டு ஒன்றுமே - ஒன்றுமே செய்ய இயலாமல் கையைக் கட்டிக் கொண்டு பார்த்திருக்கும் சித்திரவதை மகளான சசிக்கு.

கட்டாயம் அனுபவித்தாக வேண்டிய சித்திரவதை.

''ஒன்றுமே... ஒன்...றுமே செய்ய இயலாதவளாக இருக்கிறேனே லில்லி! அதுதான் தாங்க முடியவில்லை,'' என்னுமுன் சசிக்குக் குரல் உடைந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு எங்கோ பார்த்தாள்.

சசியைப் பார்த்துக் கொண்டு நின்ற லில்லிக்குத் தொண்டையை அடைத்தது. இவள் துயரத்தை அடக்கப் பாடுபடுவதைக் காணவே அவளால் பொறுக்க முடியவில்லையே. தந்தை அணு அணுவாக வேதனையுடன் நலிவதைப் பார்த்துச் சகிப்பது என்றால் எப்படிச் சாத்தியம்?

சட்டெனத் தலையைக் குலுக்கியவள், ''சசி! வாடி ஒரு சினிமாவுக்குப் போகலாம். வீட்டில் அங்கிளை வேலைக்காரி பார்த்துக் கொள்வாள், இல்லையா? நீ என்னோடு வா. எங்கேனும் போய் வந்தால் உனக்கும் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்,'' என்று அழைத்தாள்.

சசி சற்றுத் தயங்கினாள்.

ஆனால் லில்லி விடுவதாக இல்லை. "வாடி என்றால் பிகு பண்ணுகிறாயே. நீயாக வருகிறாயா அல்லது நானாக உன்னைத் தூக்கிக் கொண்டு போய் விடட்டுமா?" என்று விழிகளை உருட்டிச் சசியைச் சம்மதிக்க வைத்தாள்.

இருவருமாக மாடியிலிருந்து இறங்கினர்.

'செகரட்டரி சா...ர்!" என்று ராகமிட்டாள் லில்லி.

புன்னகையுடன் எழுந்து வந்தான் ஓர் இளைஞன். அவளது கண்ணோரம் கனிவில் செல்லமாகச் சுருங்குவதைச் சசி வியப்புடன் கண்டாள்.

## 2

கொஞ்சம் கறுப்பில் சேர்த்துக் கொள்ளக் கூடிய நிறம். நல்ல உயரம். உதடு, கண், மூக்கு எல்லாமே 'இதோ சிரிக்கப் போகிறேன். என்னோடு சேர்ந்து சிரிக்கத் தயாரா?' என்று கேட்பது போல் துடித்து நின்றன.

லில்லியைப் போலவே...

அவளுக்கு மிகவும் பொருத்தம்...

திகைப்பும் குறுகுறுப்புமாகச் சட்டெனத் திரும்பித் தோழியைப் பார்த்தாள் சசி.

அங்கும் அதே மலர்ச்சி.

சுவாரசியத்துடன் சசி கவனிக்கலானாள்.

"என்ன விஷயம் லில்லி?" என்றான் இளைஞன்.

"எனக்கு நூறு ரூபாய் வேண்டும்," என்று உதட்டைக் குவித்தாள் லில்லி.

"எதற்கோ?"

"சினிமாவுக்குப் போக."

"அதற்கு நூறு ரூபாயா? ஒரு..." லில்லியுடன் நின்ற சசியிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, "இரண்டு டிக்கெட்டுக்கு மிஞ்சி மிஞ்சி இருபது ரூபாய்தானே ஆகும்?" என்று கணக்குப் போட்டான் அவன்.

லில்லியின் முகம் லேசாகச் சிவந்தது. "பைசாக் கணக்குத் தர வேண்டுமா குணா? சினிமா என்றால் சினிமா மட்டும்தானா? ஓட்டலுக்குப் போவோம். பிறகு ஷாப்பிங் போவோம். என்... என்... 'டிக்கிள் பிங்க்' கலர் லிப்ஸ்டிக் முடியப் போகிறது. வாங்க வேண்டும்... ம்... காருக்குப் பெட்ரோல் போட வேண்டியிருக்கும்..."

"பெட்ரோலுக்குச் 'சிட்' கொடுத்தால் போதும் லில்லி," என்றான் அவன் புன்னகை விரிய.

லில்லியின் முகம் மாறுவதைக் கண்டதும், "பொறுமை லில்லி! இது என் பணமாக இருந்தால் உன் ஒரு வார்த்தையில் அவ்வளவையும் அள்ளித் தந்து விடுவேன். ஆனால் இந்தப் பணத்தில் எனக்கு உரிமை கிடையாதேம்மா?" என்று கையை விரித்தான்.

"என் பணம்தானே!" என்றாள் லில்லி விரைப்புடன்.

"நிச்சயமாய். பெட்டிக்குள் இருக்கும் பணம் அவ்வளவும் உன்னதேதான். ஆனால், சாவி உன்னுடையது இல்லை பார்."

"இப்போ என்னதான் சொல்லுகிறீர்கள்?"

"உன் சித்தப்பாவிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டுத் தருகிறேன்," என்று லில்லியின் முகச் சுழிப்பைக் கவனியாதவன் போல டெலிபோனை எடுத்தான்.

லில்லிக்காக வக்காலத்து வாங்கிப் பேசினான்.

கடைசியில் டெலிபோனை வைத்துவிட்டு உள்ளே போய் வந்து பத்துப் பத்து ரூபாய் நோட்டுகளை லில்லியின் கையில் வைத்தான்.

"கணக்குக் கொடுக்க வேண்டும்," என்றான் பற்கள் பளீரிட.

"கொடுப்பார்கள் கொடுப்பார்கள்!" என்று கறுவிக் கொண்டே பணத்தை வாங்கிக் கைப் பையுள் வைத்தாள் லில்லி.

பிறகு விழிகளை மலர்த்தி அவனைப் பார்த்து ஒரு முறுவல் செய்தாள்.

அவன், ''எந்தத் தியேட்டர்?'' என்றான் மெதுவாக.

''சினிமாப் படம் ஓடுகிற தியேட்டர்!'' என்று சிரித்து விட்டுச் சசியின் கையைப் பற்றினாள் லில்லி.

''சித்தப்பாவிடம் சொல்லுகிறேன்,'' என்று மென் குரலிலேயே மிரட்டினான் அவன்.

''நானும் சொல்லுகிறேன் பாருங்கள்! 'தியேட்டருக்குப் போனால் பின்னாலேயே வந்து விடுகிறார் சித்தப்பா!' என்று வத்தி வைத்து விடுகிறேன்,'' என்று பதிலுக்கு மிரட்டினாள்.

''சரண்டர்!'' என்று கைகளை உயர்த்தினான் அவன்.

கலகலவென்று சிரிப்பைச் சிந்திவிட்டு, ''இப்போது வரக் கூடாது,'' என்றாள் லில்லி.

தோளைக் குலுக்கிவிட்டு மீண்டும் ஆபீஸ் அறைப் பக்கம் திரும்பினான் அவன்.

''நில்லுங்கள்! இவ்வளவு நேரம் மறந்து விட்டேன். ஸாரி. சசி, இவர் பெயர் குணாளன்... இவள்...''

''சசி!'' என்று லில்லிக்குப் பதிலாக முடித்து விட்டு, சசியிடம், ''வணக்கம்!'' என்று முறுவலித்தான் குணாளன்.

அந்த முறுவலில் மனதில் ஏதோ ஒரு பாசம் நெகிழத் தானாய் விரிந்த புன்னகையுடன் பதில் வணக்கம் தெரிவித் தாள் சசி.

செல்லும் வழியில், ''என்னடி?'' என்று தோழியின் தோளைத் தட்டினாள் சசி.

லில்லியின் முகம் அந்தி வானமாய்ச் சிவந்தது.

''என் செலக்ஷன்!'' என்றாள் லில்லி பெருமையும் நாணமுமாக.

''யாரடி?''

''அப்பாவுக்குத் தூரத்து உறவாம். வேலை என்று தேடி வந்தார். சித்தப்பா வீட்டில் இருந்து பணப் பொறுப்பைப் பார்க்கச் சொன்னார்...''

''கொடி கொம்பை நாடி விட்டதாக்கும்?''

''க்கும்.''

''உன் சித்தப்பாவுக்குப் பிரியம்தானாடி ?''

''அவரிடம் யார் சொன்னார்கள்?'' என்றாள் லில்லி கவலையற்று. ''ஆனால் பொதுவாக இவரிடம் சித்தப்பா வுக்கு மிகவும் மதிப்பு. அதனால் மறுக்க மாட்டார்,'' என்றாள் திட நம்பிக்கையோடு.

''எதற்கும் மெல்லச் சொல்லி உன் சித்தப்பாவின் அனுமதியைப் பெற்று விடடி. உன் திருமணத்துக்கு அவருடைய சம்மதம் இருக்க வேண்டும் என்றுகூட உன் அப்பா ஏதோ எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறாயே,'' என்றாள் சசி.

''ஆமாமடி. ஆனால் இவரை மறுக்கச் சித்தப்பாவுக்குக் காரணம் இல்லையே,'' என்றாள் லில்லி கலக்கமற்று.

தியேட்டருக்குச் செல்லும் வழியில் சசியின் வீட்டில் காரை நிறுத்தினாள் லில்லி.

சபேசன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

சின்னியிடம் சினிமா போவதாகச் சொன்னவுடன், அவள் முகமெல்லாம் பல்லாயிற்று.

''நம்ம நடிகருங்க படம்தானேம்மா. இன்னா சண்டை தெரியுமா? ஐயோ, ஒத்தக் கையால ஈரோயினைப் பிட்சிகினு மறுகையாலேயே பத்துப் பேரோட சண்டை போடறாரு பாரு.''

''சரி சரி, சின்னி! நேரமாயிற்று பார், நான் கிளம்புகிறேன். அப்பாவைப் பார்த்துக் கொள். எட்டு மணிக்குக் கஞ்சி. நினைவு இருக்கிறதா?'' என்று கிளம்பினாள் சசி.

''மறக்குமாம்மா? நீ கவலைப்படாத போம்மா,'' என்று வழியனுப்பி வைத்தாள் சின்னி.

அதற்குள் சபேசனைப் பார்க்க அவரது அறைக்குள் சென்றிருந்த லில்லி திகைத்த முகத்துடன் அங்கிருந்து வருவதைக் கண்டதும், ''இங்கே கொஞ்சம் காஃபி குடிக்கிறாயா லில்லி?'' என்று வினவினாள்.

''வேண்டாம்,'' என்று தலையசைத்துவிட்டு, கலக்கத் துடன், ''என்னடி இப்படி இருக்கிறார்? நான் நினைக்கவே

இல்லை. உடம்பு மோசம் என்று நீ சொன்னபோதும் இவ்வளவு மெலிவை நான் எதிர்பார்க்கவில்லை,'' என்று திணறினாள் லில்லி.

''மெலிவுகூட எனக்குக் கஷ்டமாயில்லை லில்லி! ஆனால் சர்வ சதா வேதனைப்படுகிறார். இந்த உறக்கமும் மயக்கமும் கலைந்தால் போதும். வேதனையில் முகமே மாறிவிடும். சில சமயம் மூச்சுவிட அவர் படும் துன்பத்தைப் பார்க்கையில் நாம் இவ்வளவு எளிதாய் மூச்சு விடுவதுகூடப் பெரும் குற்றம் போலத் தோன்றி விடுகிறது. அது மாதிரி நேரங்களில்தான் தாங்க முடிவது இல்லை,'' என்றாள் சசி துயரத்துடன்.

ஆனால் லில்லியின் விழிகளில் கண்ணீரைக் கண்டதும், சசியே லில்லியைத் தேற்றலானாள். ''இந்த வியாதி இப்படித்தான் லில்லி! அதற்காக மன வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? உடனே அபாயம் ஏதும் இல்லை என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். கவலைப்படாதே!'' என்றாள்.

கடைசியாகச் சின்னி வந்து, ''சினிமாவுக்கு நேரமாயி டும்மா!'' என்று இருவரையும் துரிதப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

''என்ன சினிமா?'' என்று யோசித்தாள் லில்லி.

''ஏதாவது பக்கத்தில் ஒன்று பார்க்கலாம்,'' என்றாள் சசி. ''சின்னி சொன்ன படமே பார்க்கலாம், சிரிப்பாய் இருக்கும்.''

முதலில் போன தியேட்டரில் அபிமான நடிகரின் ஆதரவாளர்களின் கூட்டம். ''ஹவுஸ் ஃபுல்'' என்றார்கள்.

சற்று தூரத்தில் இருந்த தியேட்டரில் ஒரு மாய மந்திர ஜாலப் படம்.

மன இறுக்கம் தளர்த்துவதற்காகத்தானே. இதைப் பார்த்தாலும் வேடிக்கையாக இருக்கும் என்று டிக்கெட்டை எடுத்துக் கொண்டு அந்தத் தியேட்டருக்குள் நுழைந்தனர்.

அதற்குள் தியேட்டரில் விளம்பரப் படங்கள் தொடங்கி விட்டன.

தலை நிறைய மகுடம் போல ஷாம்பூ நுரையுடன் பாடிக் கொண்டிருந்தாள் ஒருத்தி.

இருட்டில் கால் தடுமாறிய சசி, அருகில் இருந்த சீட்டில் அதில் இருந்த மனிதன் மேல் லேசாகச் சரிந்து விட்டாள்.

அவன் ஒரு கரத்தால் அவளைத் தாங்கி நிமிர்த்தினான்.

நிமிர்த்துகையிலேயே அந்தக் கரம் அவளை விலக்கி ஒதுக்கித் தூரத் தள்ளுவதைச் சசி உணர்ந்தாள்.

கூச்சத்துடன், 'ஸாரி' சொல்லிவிட்டு லில்லியின் பின்னே நடந்தாள்.

பக்கவாட்டில் இரு வரிசைகள் தாண்டிச் சில இடங்கள் காலியாக இருந்தன.

அங்கே ஒரு பெண்மணியின் அருகில் தோழியர் இருவரும் அமர்ந்தனர்.

''இந்த விளம்பரம் நன்றாக இருக்கும் பார் சசி! எல்லாம் டிஸ்னி மாடலில் கார்ட்டூன் படங்களாகவே எடுத்திருக்கிறார்கள்,'' என்று லில்லி சொல்லும்போது திரையை மறைத்துக் கொண்டு ஓர் இளம் ஜோடி அவர்களுக்கு முன் வரிசையினுள் புகுந்தனர்.

இவர்களுக்கு நேர் முன்னதாகக் காலியாக இருந்த இரு இடங்களில் அமர முயன்றனர்.

இதில் ஒரு விஷயம் சசியின் கவனத்தைக் கவர்ந்தது.

புதியவர்கள் அமர முயன்ற இரு இடங்களிலுமே ஸீட்டில் கைக்குட்டைகள் கிடந்தன.

ஆனால் அதன் அர்த்தத்தை அலட்சியம் செய்து கைக்குட்டைகளை ஒதுக்கித் தள்ளி விட்டான் அந்த இளைஞன். பின்னர் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

''இது என்ன மடத்தனம்? யாரோ ரிஸர்வ் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்,'' என்றாள் லில்லியிடம் சசி மெதுவாக.

அவள் கிசுகிசுத்ததற்கு ஏற்ப அடுத்த ஸீட்டில் இருந்த ஒரு சிறுமி - வயசு சுமார் எட்டு இருக்கக் கூடும் - ''அங்கே ஆள் வராங்க,'' என்றாள் கலவரம் அடைந்த குரலில்.

''வாராங்களா பாப்பா? வந்தாக்கா எழுந்துக்கறோம்,'' என்ற அந்த இளைஞன் கால் மேல் கால் போட்டு வசதியாகச் சாய்ந்து கொண்டான்.

பாவம், அந்தச் சிறுமியின் முகம் கலங்கிப் போயிற்று. தவிப்புடன் கைக்குட்டைகளை எடுத்துக் கொண்டு வாயிலையே பார்க்கலானாள்.

சசியின் பார்வையும் அவளுடன் சேர்ந்து வாயிலை நோக்கிற்று. ''இந்தச் சிறு பெண்ணைத் தனியே விட்டு விட்டுப் பெரியவர்கள் எங்கே தொலைந்தார்கள்?'' என்று எரிச்சலுடன் எண்ணியபடி, மீண்டும் திரும்பி வாயிலைப் பார்த்தாள்.

பார்வை வாயிலிலிருந்து திரும்புகையில் அந்த மனிதன் மேல் - அவளைக் கீழே விழாமல் தாங்கிப் பின் தள்ளிவிட்டானே - அவன் மேல் பாய்ந்தது.

திரையில் ஓடிய படத்தின் எதிர் ஒளியில் அவன் முகம் தெளிவாகத் தெரிந்தது.

இளைஞன்தான்.

கல்லில் செதுக்கிய சிலை போல முகத்தில் ஒரு கடினம் இருந்தது.

கண், மூக்கு, புருவம், உதடு, முகவாய் எங்கும் ஓர் அழுத்தம், பிடிவாதம் தெரிந்தது.

தன்னையறியாது பார்த்துக் கொண்டு இருந்தவளுக்குள் ஏதோ குறுகுறுப்பு உண்டாயிற்று.

'சே, என்ன இது?' என்று தன்னையே கடிந்து கொண்டு பார்வையைத் திரையில் பதித்தாள்.

ஆனால் அவளையும் மீறிப் பார்வை அவனிடமே பாய்ந்தது.

அவனும் அப்போது அவளைத்தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

இவளது பார்வையை எதிர்பார்த்தவன் போல, அவனது இதழ்கள் வளைந்தன.

அந்த வளைவில் ஏளனம் மிகுந்தது போலத் தோன்றவே, சட்டெனத் திரும்பிக் கொண்டாள் சசி.

எதற்காக இந்த ஏளனம் என்று மனதில் வேதனை உண்டாயிற்று.

'யாரோ, எவனோ, எப்படியோ போய்த் தொலைகிறான்!' என்று அலட்சியப் படுத்த இயலாமல் மனதின் ஒரு மூலையில் வலித்தது.

## 3

அந்தப் புதியவனின் ஏளனத்தைப் பற்றி அதிகம் சிந்திக்க விடாமல் முன் வரிசையில் நடந்த நாடகம் அவளை ஈர்த்தது.

சுமார் முப்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு பெண்மணியும் அவளுடைய கணவன் போல ஒரு மனிதரும் உள்ளே வந்தனர். இருவர் கைகளிலும் ஐஸ்கிரீம் கப்களும், பாப் கார்னும் இருந்தன.

''அனு! ஏன் மற்றவர்களை உட்கார விட்டாய்?'' என்று சிறுமியை அதட்டிவிட்டு, உட்கார்ந்திருந்த இளைஞனிடம், ''தயவு செய்து வேறு இடம் பாருங்கள் ஸார்! இது எங்கள் இடம். கர்ச்சீப்கூடப் போட்டு விட்டுத்தான் போனோம்,'' என்றார்.

''மேலே ஃபேன் ஓடுகிறது தெரியலை? நீ போட்ட கைக்குட்டை எங்கே பறந்ததோ? நீ யாரையாச்சும் இடத்தைப் பார்த்துக் கொள்ளவாவது சொல்லியிருக்கணும்,'' என்றான் அந்த இளைஞன் ஏக வசனத்தில்.

''என்ன பொய்!'' என்றாள் சசி, லில்லியிடம்.

''நீ சும்மாயிரு சசி! அந்த ஆள் தரம் இல்லாதவன். இதில் நாம் தலையிடக் கூடாது,'' என்றாள் லில்லி, அதே ரகசியக் குரலில்.

''ஐயோ! நான் சொன்னேனப்பா. ஆள் வந்ததும் எழுந்து போய் விடுகிறதா இவர் சொன்னார்ப்பா,'' என்றாள் அனு என்றழைக்கப்பட்ட அந்தச் சிறுமி. அழுகை வரும் போது உதடு பிதுங்கிற்று.

''அம்ம்...மாடி, இத்துனூண்டு இருக்குது. பொய்யைப் பாரேன். நாங்கள் வந்து உட்கார்ந்தபோது இந்தப் பொண்ணு விளம்பரப் படத்தை 'ஆ'ன்னு பார்த்துக் கொண்டு இருந்தது. எங்களிடம் ஒன்றுமே சொல்லலை,'' என்று அடித்துப் பேசினான் அந்த அடாவடிக்காரன்.

''நான் சொன்னேன் மம்மி,'' என்றாள் சிறுமி அழுகைக் குரலில்.

அந்தக் குழந்தையின் அருகில் இருந்து எல்லாவற்றையும் கவனித்தவர்களில் யாருமே பேசவே இல்லை.

சசிக்கு முகம் சூடாயிற்று. கொதிப்புடன் எழுந்தாள்.

''உஷ் சசி! கூட்டம் எல்லாம்...'' என்று இழுத்த லில்லியை அவள் லட்சியமே செய்யவில்லை.

''ஸார்! உங்கள் பெண் அனு சொல்வதுதான் மெய். ஆள் வரும் என்று இவர்கள் உட்காரும் முன்பே அவள் சொன்னாள். அதோடு கைக்குட்டைகளும் ஸீட்டில் கிடக்கவே செய்தன. இவர்கள்தான் கைக்குட்டைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு யாரும் வந்தால் உடனே எழுந்து விடுவதாகச் சொல்லி உட்கார்ந்தார்கள். நான் நன்றாகக் கேட்டேன்,'' என்றாள் தெளிவாகவும் அழுத்தமாகவும்.

''நான் டிக்கெட்டு வாங்கியவன். எங்கானாலும் உட்காருவேன்,'' என்றான் அவன் ஆத்திரத்துடன்.

''நன்றாக. அது உங்கள் விஷயம். ஆனால், அந்தக் குழந்தை சொல்லச் சொல்ல ஆள் வந்ததும் எழுந்து விடுவதாகச் சொல்லி உட்கார்ந்ததும், உட்கார்ந்துவிட்டு இப்போது இல்லவே இல்லை, அவள் ஏதும் சொல்லவே இல்லை என்கிறீர்களே, இது பொய் அல்லவா? இதை எப்படிப் பொறுப்பது? சின்னப்பெண் என்பதால் ஏய்ப்பதா? இதை எப்படி அனுமதிப்பது? உங்களுக்கு இது வெட்கமா இல்லையா?'' என்று படபடத்தாள்.

''இன்னாமே...'' மட்டமாகத் தொடங்கினான் அவன்.

''ஏய் மிஸ்டர், பெண்களிடம் மரியாதையுடன் பேசு,'' என்று அழுத்தத்துடன் கூறியபடி ஒருவன் எழுந்து வந்தான்.

அவனது அகன்ற தோள்களையும், வலுமிக்க தோற்றத்தையும் கண்டு அடாவடி ஒதுங்கினான். ''வா மோனி! வேறே இடம் பார்க்கலாம்,'' என்று உடன் வந்த கண்ணாடி நைலானுடன் எழுந்து விலகினான்.

கண்ணில் நன்றியுடன் திரும்பிய சசி குழம்பிப் போனாள்.

அவன்!

அந்த ஏளனப் பார்வைக்காரன்.

லில்லியிடம் திரும்பி, ''வாடி போகலாம். எனக்கு சினிமாவை ரசிக்கும் மனம் இல்லை,'' என்றாள்.

''சரி சசி! எப்படியும் உன் மனம் சினிமாவில் சரியாகப் போவதும் இல்லை. வா போகலாம்,'' என்று எழுந்தாள் லில்லியும்.

முன் வரிசைக்காரரின் நன்றியைப் பெற்றுக் கொண்டு, தோழியர் இருவரும் வெளியேறினர்.

வாயில் அருகே வந்ததும் சசி சற்றுத் தயங்கினாள்.

அந்த 'அவனி'டம் ஒரு நன்றி சொல்லிவிட்டுப் போகலாமா?

கூடவே அவனது ஏளனப் பார்வை நினைவு வரவும், மடமடவென்று வெளியே நடந்து விட்டாள்.

''கொஞ்சம் இரு சசி!'' என்று போய் டெலிபோன் செய்துவிட்டு வந்தாள் லில்லி.

''வா,'' என்று காரை நோக்கி நடந்தாள். ''பீச் வரை போய் வரலாம் சசி! சினிமா என்று சொல்லிவிட்டு வந்தாயிற்று. இனி இப்போதே வீட்டிற்குப் போய் என்ன பண்ணப் போகிறோம்?''

சசி பதிலே சொல்லவில்லை.

அவ்வளவு ஏளனமாகப் பார்த்தவன், பிறகு ஏன் உதவிக்கு வர வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

கடற்கரையில் ஒரு படகின் ஒரு புறமாய் அமர்ந்து கொஞ்சம் சுண்டலை வாங்கிக் கொறிக்கலாயினர்.

இருவருக்குமே பேச்சு எழவில்லை.

கடைசியில் ஒரு பெருமூச்சுடன், ''உன்னை விடு. உன்னிடமாவது பணம் இல்லை எனலாம். ஆனால் என்னிடம் இவ்வளவு இருந்து என்ன பயன்? சித்தப்பா ஒரு பைசா நகட்டமாட்டாரே. இருந்திருந்து என் சொத்துக்களை நிர்வகிக்க இவரையா அப்பா ஏற்பாடு செய்து விட்டுப் போகவேண்டும்? சரியான கண் குத்திப் பாம்பு. சுரங்கம் காக்கும் பூதம்!'' என்று குமுறினாள் லில்லி.

தன் சொத்தைக் கவனத்துடன் பாதுகாத்து வருபவரைப் பற்றி லில்லி வர்ணித்த விதத்தில் சசிக்குச் சிரிப்பு வந்தது.

''போடி, நீயும் உன் சிரிப்பும். மாதம் இருநூறு... மூன்னூறு என்றால் எப்படியாவது ஜாலம் செய்து ...பாவை ஏமாற்றி விடுவேன். ஆனால் மாதம் இரண்டா யிரத்து..., எங்கேடி போவது?'' என்று கவலையுடன் புலம் பினாள் லில்லி.

தோழியின் துயரத்தைத் தன் துயரமாக எண்ணி வருந்தும் லில்லியைப் பார்க்கையில் சசிக்குப் பெருமிதம் உண்டாயிற்று.

லேசாகத் தோழியின் கன்னத்தை வருடி, ''நடப்பது நடக்கட்டும் லில்லி! விடு. இப்போது உன்னிடம் சொன்னதிலேயே எனக்குப் பாதிக் கவலை குறைந்து போயிற்று,'' என்றாள் தேறுதலாக.

உதட்டைப் பிதுக்கி, ''மீதிப் பாதியைக் குறைக்க இன்னொரு முறை சொல்கிறாயா?'' என்றாள் லில்லி.

''போடி...'' என்று மீண்டும் மவுனத்தில் ஆழ்ந்தாள் சசி.

சற்று நேரம் பொறுத்து, ''லில்லி! இந்த சினிமாக்களில் வருவது போல உடம்பை விற்றாவது பணம் சம்பாதிக்க லாமா என்று தோன்றுகிறதடி!'' என்றாள் சசி திடீரென்று.

''சீ, உளறாதே!'' என்று அதட்டினாள் லில்லி.

''மெய்யாகத்தான் சொல்கிறேன் லில்லி! எங்கே போய் எப்படி என்றெல்லாம் தெரிந்தால் துணிந்து விடுவேன்.

ஆனால்... ஆனால் அதில்கூட மாதம் இரண்டாயிரம் கூடுதலாகக் கிடைக்குமா?'' என்றாள் சசி யோசனையாக.

பிரமிப்புடன் அவளை வெறித்துப் பார்த்தாள் லில்லி.

சசி...

நேர்மையே உருவான சசி.

மானத்தை உயிராக மதிக்கும் சசி.

அனாவசியமாக ஆண்களிடம்... ஏன், ஓரளவு அவசியம் என்ற நிலையில் கூட ஆண்களிடம் பேச விரும்பாது ஒதுங்கும் சசி.

அந்தச் சசி பேசுகிற பேச்சா இது?

இவள் மனதில் எவ்வளவு வேதனை கொந்தளித்துக் கொண்டு இருக்க வேண்டும்! கர்த்தரே!

''ஹாய்!'' என்று நன்றாக மலர்ந்து புன்சிரிப்புடன் பாண்ட் அணிந்த கால்களை நன்கு மடக்க முடியாமல் முக்கால் மடக்கலாய் மடக்கித் தொப்பென எதிரே உட்கார்ந்தான் குணாளன்.

''குணா!'' என்ற லில்லி கரகரவென்று கண்ணீர் வடிக்கலானாள்.

''என்ன லில்லி? என்னாடாம்மா?'' என்று பதறிப் போனான் அவன்.

''ஷ்... என்ன லில்லி? ஏன் அழுகிறாய்?'' என்று தன் சிந்தனை கலைந்து திகைப்புடன் வினவினாள் சசி.

''நீ ஒன்றும் கேட்க வேண்டாம், போ,'' என்று முகத்தை வெட்டித் திரும்பினாள் லில்லி.

''சரி, நான் கேட்கிறேன், சொல்லுகிறாயா?'' என்று சமாதானமாய்ப் பேசியபடியே தன் கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான் குணாளன்.

அந்தப் பெரிய வெண்ணிறக் கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, ''குணா! இவளைத் தெரியும் அல்லவா?'' என்று தொடங்கினாள் லில்லி.

''நீ நிறையச் சொல்லியிருக்கிறாய், உண்மையின் உறைவிடம், ஒழுக்கத்தின் மறு உருவம் என்றெல்லாம்.''

''ஆமாம், அந்த இவள் இப்போது என்ன சொன்னாள் தெரியுமா?'' என்று மீண்டும் கண்களில் பெருகிய நீருடன் சசியை வெறித்தாள் லில்லி.

முகம் சிவந்து போய், ''லில்லி! ப்ளீஸ் சும்மாயிரு,'' என்றாள் சசி.

மீண்டும் அவளை முறைத்துவிட்டு, ''வேசியாகப் போகிறாளாம்,'' என்றாள் லில்லி ஆத்திரத்துடன்.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலையை வேறுபுறம் திருப்பினாள் சசி.

குணாளன் அதிர்ந்து போனான். ''லில்லி! சீ... இதெல்லாமா வேடிக்கை?'' என்று அதட்டினான்.

''வேடிக்கையாம் வேடிக்கை!'' என்று எரிந்து விழுந்தாள் லில்லி. ''இவள் மெய்யாகவே சொன்னாள் என்கிறேன். எங்கே என்ன என்று வழிமுறை தெரிந்தால் போதுமாம். மாதம் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்தால் தயாராம்!'' என்று சொல்லும்போதே அவள் குரல் மீண்டும் தழுதழுத்தது.

பாதி திரும்பி யிருந்த சசியின் கிளறிய முகத்தை யோசனையுடன் நோக்கினான் குணாளன். இவள் மறுப்புக் கூறவில்லை! ஆனால் லில்லியின் பேச்சிலிருந்து உருப் பெற்றிருந்த சசி இப்படிப் பேசக்கூடியவள் அல்லவே!

''இரண்டாயிரம் ரூபாய் அவ்வளவு அத்தியாவசியம் ஆனதா?'' என்று வினவினான்.

சசி பதில் கூறவில்லை.

ஆனால் லில்லி விடவில்லை. ''இப்போது சொல்லேன்டி, வாயில் என்னத்தை அடைத்து வைத்திருக்கிறாயாம்?'' என்று வெடித்தாள்.

தன் தெளிவான விழிகளால் திரும்பிப் பார்த்தாள் சசி. ''அவசியம்தான்!'' என்றாள் தடுமாறாமல்.

அவன் மீண்டும் அதிர்ந்தான்.. ''லில்லியின் சசி மானத்திற் காக உயிரை விடத் துணிபவள்.''

''என் உயிருக்காக நான் அஞ்சவில்லை. ஆனால்... ச்.. இது வீண் பேச்சு. இதில் விவாதம் என்ன? சர்ச்சை என்ன?'' என்றாள் மீண்டும் தெளிவாகவே.

மின் விளக்குகளின் ஒளியில் சசியின் கண்களில் திரை யிட்டிருந்த நீர் பளபளத்தது. ஆனால் அங்கே வருத்தம் இருந்ததே தவிர, கலக்கமோ கபடமோ இல்லை.

நேர் பார்வை. இந்தப் பார்வையை உடையவள் மானத்தை அலட்சியப்படுத்தக் கூடியவளாக எப்படி இருக்க முடியும் என்று நினைத்தான் குணாளன்.

''இவளுடைய அப்பாவுக்கு உடம்பு ரொம்பவும் சரியில்லை. வைத்தியம் செய்வதற்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமாம். அதற்காகத்தான் இப்படி யெல்லாம் இவளுக்குப் பைத்தியம் பிடிக்கிறது,'' என்றாள் லில்லி.

''அதற்காக?''

''அப்பா வதைப்பட்டு, வேதனைப்பட்டு, அணுஅணுவாக மடிவதைக் காண என்னால் தாள முடியவில்லை. அதைச் சகிப்பதை விட, எதை எதை வேண்டுமானாலும் செய்து விடலாம் போல இருக்கிறது. உங்களுக்கு இது புரியாது என்று நினைக்கிறேன்.''

''புரிகிறது,'' என்று உடலைச் சிலிர்த்தான் குணாளன். ''என் அப்பா முற்றிவிட்ட புற்று நோயால் இறந்தார். அப்பப்பா! என்ன வேதனை! ஒன்றுமே இதம் என்று செய்ய முடியாமல் அதைப் பார்த்துக் கொண்டு இருக்க நேர்ந்த போது... என் அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்றுகூட அஞ்சினேன். அன்று அப்பாவின் வேதனையைத் தீர்க்க முடிந்திருக்கும் என்றால் நானும் எதை வேண்டு மானாலும் செய்திருப்பேன்,'' என்றான்.

அவனிடம் ஏதோ உறவு போல ஓர் உணர்ச்சி தோன்றியது சசிக்கு. பார்வையில் பரிவைக் காட்டினாள்.

''நீங்களும் இவளோடு சேர்ந்து கொண்டு உளறுகிறீர் களாக்கும். இனி 'பிராத்தல் ஹவுஸ்' ஏதாவதின் விலாசம்

கொடுக்கப் போகிறீர்களா?'' என்று சினம் தணியாமல் கேட்டாள் லில்லி.

''ஷ்... மெல்லப் பேசேன் லில்லி!'' என்று அவளை அடக்கினான் குணாளன்.

பின் தீவிரமான யோசனையுடன், ''அந்த மாதிரி எதுவும் வேண்டாம். ஆனால் எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. உங்களுக்குச் சம்மதமானால் செய்யலாம்,'' என்றான் சசியிடம்.

''என்ன? என்னவென்று சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள்,'' என்று பரபரத்தாள் சசி.

''என்னவென்று சொல்லப் போகிறீர்கள்?'' என்று பயத்துடன் கேட்டாள் லில்லி.

## 4

லில்லியின் பயத்தைக் கண்டு லேசாக முறுவல் செய்தான் குணாளன்.

அவள் கையைப்பற்றி அழுத்திவிட்டுச் சசியிடம் திரும்பினான்.

''கேளுங்க சசி...'' எனத் தொடங்கினான்.

''இவளைப் போய் என்ன 'ங்கள்' போட்டுப் பேசுகிறீர்கள்? சும்மா 'கேள் சசி' என்று சொன்னால் போதும்,'' என்று இடையிட்டுச் சொன்னாள் லில்லி.

''ஆமாம். என்னை 'நீ' என்றே அழையுங்கள். ஆனால் விஷயத்தைச் சீக்கிரம் சொல்லுங்கள்,'' என்றாள் சசி.

''எனக்குத் தெரிந்தவன் ஒருவன் இருக்கிறான். என்னோடு படித்தவன். நல்ல பணக்காரன்...''

''நீங்கள் சொல்லப் போவது எனக்குத் தெரிகிறது. அந்தப் பணக்காரனிடம் கொஞ்ச நாள் 'கீப்' ஆக இருக்கும்படி சசிக்கு யோசனை சொல்லப் போகிறீர்கள். அதுதானே? சீ!'' என்று அழுகைக் குரலில் பேசினாள் லில்லி.

''சியாம் எந்தப் பெண்ணையும் அப்படி வைத்துக் கொள்ள மாட்டான்!'' என்றான் குணாளன்.

''ஏன் மாட்டானாம்? எங்கள் சசியின் அழகு அவனுக்குக் கசக்குமோ?''

''நீ கொஞ்சம் குறுக்கே பேசாமல் கேள் லில்லி!'' என்று கடிந்தான் குணாளன். ''சியாம் பெண்ணினத்தையே வெறுப்பவன். இங்கே ஊருக்கு வெளியே ஒரு தனி பங்களாவில் வசிக்கிறான். அவனிடம் ஒரு சின்ன ஏமாற்று வேலை செய்து பார்க்கலாம்.''

''ஏமாற்றா?'' என்று தயங்கினாள் சசி.

ஆனால் லில்லிக்கு சுவாரஸ்யம் பிறந்து விட்டது. ''ஆமாமாம். எதற்கோ துணிகிறாளாம். இதில் என்ன தயக்கம்? நீங்கள் சொல்லுங்கள் குணா,'' என்று தூண்டினாள்.

''அவனிடம் இரவு நேரத்தில் ஏதோ ஒரு கதை சொல்லி அடைக்கலம் என்று சசி கூற வேண்டும். இரவில் அவன் வீட்டில் தங்க வேண்டும்...''

''சே, வேறு சொல்லுங்கள்,'' என்று வெட்டினாள் லில்லி.

''நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை லில்லி! அவன் பெண்ணைத் தொட மாட்டான். ஆனால் சசி அங்கே தங்கினால்தான் நம் காரியமும் நடக்கும். மறுநாள் காலையில் நாம் சசியைத் தேடி அங்கேயே சென்று கண்டுவிட வேண்டும். எங்கள் பெண்ணின் மானம் போயிற்றே என்று கத்த வேண்டும். பத்தாயிரம் ரூபாய் கொடு அல்லது ஊரெல்லாம் உன் வண்டவாளத்தைப் பரப்பி விடுவோம் என்று மிரட்டுவோம்!'' குணாளன் உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு போனான்.

''போன மானம் பத்தாயிரம் ரூபாயில் திரும்பி வந்து விடுமா என்று அவன் கேட்பானே!'' என்றாள் லில்லி.

''எதற்கும் தப்புச் சொல்வாயா லில்லி? மிரட்டிப் பார்ப்போமே! அவனுக்குத் தான் ரிஸ்ய சிருங்கர் என்று பெருமை. அது கலையக் கூடும் என்றால் மிரண்டு போவான்.''

''குணா! இது உதவாக்கரை ஐடியா. அவன் அந்த வீட்டில தனியாக இருப்பான் என்று என்ன நிச்சயம்? எவளையாவது இழுத்துக் கொண்டுகூடப் போயிருக்கலாம்.''

''அவன் அப்படிப்பட்டவன் அல்ல என்பதில்தான் நம் திட்டமே எழுகிறது. அவன் நிச்சயமாய்த் தனியாகத்தான் இருப்பான். அது அவனது தனியிடம். ஒரு மாதிரி சரணாலயம் என்றுகூடச் சொல்லலாம். வாரத்தில் ஆறு நாள்கள் இங்கே ஊருக்குள் வாசம். சனியன்று இரவு அந்தப் பங்களாவுக்குப் போகிறவன் திங்கள் கிழமை காலையில் தான் திரும்புவான். தலை போகிற காரியம் என்றாலன்றித் தன்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பது அவனுடைய தலைமை நிர்வாகிக்கு இடப்பட்டுள்ள கட்டளை... கடுமையான உத்தரவு. அங்கே டெலிபோன் கூடக் கிடையாது. வேண்டுமென்றே வைத்துக் கொள்ளவில்லை என்று ஒரு ஞாயிறன்று உன் சித்தப்பாவுக்காக சியாமிடம் தொடர்பு கொள்ள முயன்றபோது அந்த நிர்வாகி என்னிடம் சொல்லியிருக்கிறார்.''

''ஓ! சாப்பாடு?''

''சிம்பிளாக ஏதாவது வாங்கிப் போய்விடுவானாம்.''

''தனியாக என்ன செய்வார் அந்த ஆள்?''

''ஓவியம் வரைவானாம். படிக்கிறபோதே அழகாகச் சித்திரம் தீட்டுவான். தோட்டத்தில் வேலை செய்வான்.''

''அகப்பட்டீர்களா? வாரம் ஒரு நாள் மட்டும் கவனித்தால் தோட்டம் உருப்படுமா? தோட்டக்காரன் இருப்பான் அல்லவா?'' என்று மடக்கினாள் லில்லி.

''இருப்பான், இருப்பான், நிச்சயமாக இருப்பான். வீட்டைப் பார்த்துக் கொள்வதுகூட அவன்தானாம். ஆனால் சனியன்று வெளியேறித் திங்களன்றுதான் திரும்ப வேண்டும் என்பது அவனுக்கு இடப்பட்டுள்ள கட்டளை. போதுமா?''

''அப்படித் தன்னந்தனியாக இருக்க வேண்டும் என்றால் அந்த ஆள் ஒரு மாதிரி பைத்தியம் கிய்த்தியம் இல்லையே குணா?'' என்று கவலையுடன் விசாரித்தாள் லில்லி.

''ஊகூம், அதெல்லாம் இல்லை. ஆனால் யாரிட்மும் சிறு தப்புகளைக்கூட அவனால் பொறுக்க முடியாது. மனிதரில் தவறாதவர் யார்? அதுதான் வார முழுமையும் எல்லாருடனும் சகித்துப் பழகுகிறவன் அன்று ஒரு நாள் தனியே நிம்மதியாக இருக்க நினைக்கிறான். பணம் இருப்பதால் நினைப்பதை நடத்தவும் முடிகிறது. இனி... சசி. நீங்... நீ என்னம்மா சொல்கிறாய்?'' என்று வினவினான் அவன்.

''நான்... அப்பாவை நினைத்தால் முயன்று பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. ஆனால் கூசாமல் ஒருவரை இப்படி ஏமாற்றுவதா என்று கஷ்டமாகவும் இருக்கிறது,'' என்றாள் சசி மெதுவாக. ''அந்த ஆள் - மிஸ்டர் சியாம் - பாவம் அல்லவா?''

''இல்லவே இல்லை. அவனுக்கு இந்தத் தண்டனை கட்டாயமாக வேண்டியதுதான். காரணம் இல்லாமல் பெண் களைக் கரித்துக் கொட்டுவான். நாம்தான் ஒரு காரணத்தை அளிப்போமே!'' என்றான் குணாளன் வற்புறுத்தலாக.

''எவ்வளவுக்குத் துணிந்தவள் ஏமாற்றுவது தப்பு என்கிறாயாக்கும்?'' என்று அதட்டினாள் லில்லி.

''ப்ளீஸ் லில்லி! அது வேறு. இது வேறு. தயவு செய்து இப்படிப் பேசாதே,'' என்றாள் சசி கெஞ்சலாக.

''என்ன வேறாம்? இப்படித்தான் ஒரேயடியாக நீ உன்னைக் கொடுத்து விடுவாயாக்கும் ஒவ்வொரு வனுக்கும்?'' என்றாள் லில்லி விடாமல்.

சசியின் முகம் சுன்றுவதைக் காணக் குணாளனுக்குப் பரிதாபமாக இருந்தது.

ஆனால் லில்லிக்கோ சசியின் பேச்சில் விளைந்த அதிர்ச்சி இன்னமும் அடங்கவில்லை. அதிர்ச்சியில் பிறந்த கோபமும் குறையவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

லில்லியின் கையைப் பற்றி மெல்ல வருடி, ''மெய்யாகவே உனக்குப் புரியவில்லையா லில்லி? சசி

சென்னை மாதிரிச் சம்பாதித்தால் பொருளைக் கொடுப்பவனுக்கு அவன் வேண்டுவது கிடைக்கும். ஏமாற்றம் இராது, இது அப்படியில்லையே என்றாள் சசி,'' என்று விளக்கினான்.

''வழக்கம் போல அடுத்தவர்களுக்காக உருகுகிறாளாக்கும்! உன் பாடே இந்தப் பாடா இருக்கிறது. இதில் அறியாத ஒருவருக்காக... அழுவதா? சிரிப்பதா என்றே தெரியவில்லையே சசி,'' என்று அலுத்துக் கொண்டாள் லில்லி.

''சிரித்துவிடு! உடம்புக்கு நல்லது,'' என்று அவளிடம் பதில் கூறிவிட்டு, குணாளனிடம், ''அவரிடம் கார் இருக்கும் அல்லவா? கொண்டு போய் விட்டு விடுகிறேன் என்று சொன்னால்?'' வினவினாள்.

''கவனிக்க வேண்டிய விஷயம்தான். அவன் அறியாமல் கார் சக்கரத்தின் காற்றைப் பிடுங்கிவிட வேண்டியதுதான். ஆனால் இரண்டில் பிடுங்க வேண்டும் அப்போதுதான் ஸ்டெப்னியை மாட்டிக் கொண்டு கிளம்ப முடியாது. அதை விடவும் ஒரேயடியாய் ஒன்றும் முடியாத மாதிரி நடுங்கி நடிப்பது மேல்!'' என்றான் குணாளன்.

''நாய் இருந்தால்?'' இது லில்லி.

''நாய் இல்லை... என்று நினைக்கிறேன். அவன் தன் துப்பாக்கியையும் தன்னையுமே நம்புகிறவன். அப்படி இருந்தால் சரி, பதினாலு ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்'' என்று புன்னகை செய்தான் லில்லியினுடைய காதலன்.

''எப்படி இங்கே வந்தாய் என்று கேட்டால்?''

''கேட்கத்தான் கேட்பான்! என்ன பதில் சொல்லலாம். ம்... நீயும் உன் தோழியும்... இங்கே ஒரு தோழி... தோழி வீட்டுக்கு வருகிறீர்கள். கார் பிரேக் டவுன். பக்கத்தில் ஒரு லாட்ஜ் அல்லது வீட்டில் இடம் கேட்டுத் தங்குகிறீர்கள் ஊரைப் பார்க்க என்று நீ எனக்கு டெலிபோன் செய்து வரா

சொல்கிறாய். வருகிறேன். ஒரே தலைவலி என்று சசி சொல்ல மூவருமாகக் குளிர்காற்றில் உலாவப் போகிறோம். பேச்சு சுவாரஸ்யத்தில் நாம் முன்னே போய் விடுகிறோம். இரண்டு முரடர்கள் அவளை மடக்கித் தூக்கிப் போகிறார்கள். விடுவித்துக் கொண்ட சசி மிரண்டு போய்த் தறிகெட்டுத் திசைமாறி ஓடுகிறாள்...''

''ஓடுகிறாள்... ஓடுகிறாள்... ஓடிக் கொண்டே இருக்கிறாள்.''

''மீண்டும் மீண்டும் குறுக்கே வராதே லில்லி! சசி ஓடிச் செல்கையில் சியாமின் வீடு கண்ணில் படுகிறது. உள்ளே ஓடிச் சென்று காப்பாற்றுங்கள் என்று மயங்கி விழுகிறாள்.''

''அருமையாக அளக்கிறீர்கள். ஆனால் இவள் மயங்கி விழவும் அந்த முரடர்கள் திடீரென்று அந்தர்த்தியானம் ஆகிவிடுவார்களாக்கும்!''

''சும்மா சும்மா ஊடுபா ஓட்டாதே என்றேனே லில்லி. இனிக் குறுக்கே பேசினால் எனக்குக் கோபம் வரும். சொல்லி முடிக்கும் வரை பொறுமையாகக் கேள். முரடர்கள்தான் சசியைப் பின் தொடர்ந்தார்களே தவிர, சசி அவர்களைத் தொடரவில்லையே. சசி வீட்டினுள் சென்ற பின் அவர்கள் எங்கே மறைந்தால் சசிக்கென்ன? அசையவும் சக்தியற்றவள் போல அதிர்ச்சியால் பலமிழந்து போய்க் கிடப்பதுபோல் சசி நடிக்க வேண்டும். அவனாக இரவு தங்கி ஓய்வெடு என்று சொல்ல வேண்டும்.''

''தப்புத் தப்பாகச் சொல்லிவிட்டுக் குறுக்கே பேசாதே என்று சொன்னால் எப்படி? நீங்கள் சொல்கிற மாதிரி பெண் விரோதி சசியை மட்டும் உபசாரம் செய்வானா? அவளும் பெண்தானே!'' என்று வாதிட்டாள் லில்லி.

''பெண்தான். ஆனால்... ஆனால் சசியிடம் மனிதர்களைத் தூண்டி விடுகிற தோற்றம் இருக்கிறது. அதனால் அவன் உதவி செய்யாமல் இருக்க மாட்டான். ஆனால் இது நாம் எடுத்தாக வேண்டிய ரிஸ்க்.''

''அப்புறம் இரவு முழுவதும் இவள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று இருந்துவிட்டு, மறுநாள் காலையில்தான்... நாம் சசியைத் தேடிப் போகிறோ மாக்கும்? பிரமாதம்!'' என்றாள் லில்லி கேலியாக.

''சும்மா இருந்ததா யார் சொன்னது? இங்கும் அங்குமாய் இரவு முழுவதும் அலைந்து திரிந்து தேடினோம். கண்டுபிடிக்கவே முடியவில்லை. கடைசியாய்க் காலையில் இந்தப் பக்கம் வருகிறோம். சியாமின் வீடு கண்ணில் படவே உள்ளே சென்று விசாரிக்கிறோம். அங்கே சசியைப் பார்க்கிறோம். வீட்டில் வேறு யாரும் இல்லாதது கண்டு அதிர்ச்சியுறுகிறோம். அலறுகிறோம், கண்ணான மானம் காற்றோடு போயிற்றே என்று கதறுகிறோம்.''

''நீங்கள் ஒரு சினிமாக் கதாசிரியர் ஆகியிருக்க வேண்டும் குணா,'' என்று மெச்சினாள் லில்லி.

''சசி பேசவே இல்லையே?'' என்று வினவினான் அசோக்.

லில்லி, சசியிடம் திரும்பி, ''என்னடியம்மா, எதற்கும் தயார் மேடம்! இதற்கும் தயார்தானா?'' என்றாள் குத்தலாக.

கெஞ்சுவது போல லில்லியைப் பார்த்தாள் சசி.

'பாப்' தலையை ஒரு சிலுப்புச் சிலுப்பினாள் லில்லி. ''பின்னே நீ மட்டும் அப்படிப் பேசலாமா? எனக்கு இன்னமும் படபட என்கிறது தெரியுமா?'' என்று குற்றம் சாட்டும் குரலில் கூறினாள்.

''ஷ்... ஷ்... இரு லில்லி! நீ என்ன சொல்கிறாய் சசி?'' என்று கேட்டான் குணாளன்.

தன் மனதில் எழுந்த போராட்டத்தை அடக்கியபடி, ''கொஞ்சம் பயமாக இருக்கிறது,'' என்றாள் சசி.

''என்ன பயம்? எதற்குப் பயம்? எது எதற்கோ பயம் இல்லையாம். இதில் என்ன வந்தது?'' என்றாள் லில்லி விடாமல்.

''லில்லி! அந்தப் பேச்சை விடு என்றேன் இல்லையா?'' என்று குரலை உயர்த்தி, லில்லியை வாய் மூட வைத்தான்

குணாளன். ''சொல் சசி! என்ன பயம்? சியாமிடமா அல்லது ஒட்டு மொத்தமாய் எல்லாமேயா?''

''ஏதோ... ஏதோ எல்லாம் திசை மாறிவிடப் போவது போலக் கலவரமாய் இருக்கிறது. ஏதோ பெரிதாக... அது கெடுதல்தான் என்பது போல... என்னவென்று சரியாகச் சொல்லவும் முடியாமல் புரியவும் இல்லாமல் உள்ளூர நடுங்குகிறது,'' என்றாள் சசி கலங்கிய குரலில்.

புரிந்து கொண்டாற் போலக் குணாளன் புன்னகை செய்தான். ''தப்பு செய்து அறியாதவர்களுக்கு முதல் தப்பு இப்படித்தான் பயத்தைக் கொடுக்கும். ஆனால் இப்போது ஏதோ ஒரு தப்பு செய்தாக வேண்டும் என்று இருப்பதால்...''

''குணா!'' திடுமெனக் கூவினாள் லில்லி.

மற்ற இருவரும் திடுக்கிட்டு அவளைப் பார்த்தனர்.

''அந்தப் பெண் விரோதியும் மனிதர்தானே! சசியிடம் தவறாக நடந்து விட்டால்...? அப்புறம் அவள் கதி என்ன ஆகும்?'' என்றாள் பயத்துடன்.

சசியின் முகம் சட்டென வெளுத்தது.

ஆனால், ''அந்தப் பயமே வேண்டாம்,'' என்று அடித்துப் பேசினான் குணாளன். ''பெண் என்றாலே வெறுத்து ஒதுக்குகிறவன் அவன். பெண்ணை மனதால் கூடத் தொட மாட்டேன் என்பவன். ஒன்றைப் பிடித்தால் அதிலேயே நிற்பதில் அவன் உடும்பு ரகம். அதனால் சசிக்கு அந்த வகை ஆபத்தே கிடையாது.''

''அப்படியானால் உங்கள் திட்டத்தில் இன்னும் ஓர் ஓட்டை குணா! அப்படிப் பட்டவன், நான் இவளைத் தொடவே இல்லை, வைத்தியப் பரிசோதனை வேண்டுமானால் செய்து பார் என்றால் என்ன செய்வதாம்?''

''இப்படி ஒரு குதர்க்கவாதி அருகில் இருப்பதும் நல்லதுதான். திட்டங்களில் என்ன ஓட்டை இருந்தாலும் அடைபட்டுப் போகும். கேள் லில்லி! நாம் அந்தப் பாயின்டுக்கே போகப் போவது இல்லை. 'இரவெல்லாம்

தேடியதில் இவள் அறிந்தோருடன் இல்லை என்பது வெளியாகி விட்டது. இப்போது உன் வீட்டில் தனியாக இருந்ததும் வெளிவரப் போகிறது!' என்றுதான் மிரட்டப் போகிறோம். உன்னோடு தனிமையில் இருப்பது வெளி வராமல் இருக்க வேண்டுமானால் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து விடு என்று பிடிக்கப் போகிறோம். என் கணக்கு சரியானால் கூட ஐந்தாக வாங்கிக் கொண்டு கண்காணாத தூரத்திற்குத் தொலையுங்கள் என்பான். பெட்டி பெட்டியாகச் சேர்வதில் ஒரு நல்ல காரியத்துக்காகக் கொஞ்சம் செலவாகட்டுமே!'' என்றான் குணாளன் வேகத்தோடு.

''எனக்கு உதவ வேண்டும் என்பது தவிர இந்த சியாமைப் பலியாடு ஆக்க வேறு காரணமும் இருக்கிறதா குணாளன்?'' என்று வினவிக் குணாளனைக் கூர்ந்து பார்த்தாள் சசி.

அவன் முகம் லேசாகச் சிவந்தது. ''சசி! உனக்கு உதவ வேண்டும் என்பது முதல் காரணம். தனிப்பட்ட முறையில் எனக்கு அவனிடம் விரோதம் இல்லைதான். ஆனாலும் அவன் பெண்களைப் பழிப்பதும் உரிய மதிப்புத் தராமல் மட்டம் தட்டுவதும் எனக்குப் பிடிக்காது. ஓரிரு முறைகள் மோதியும் இருக்கிறோம். இப்போது ஒரு பெண்ணுடன் தனிமையில் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அவன் முகம் கறுத்து நிற்பதைக் காண எனக்கு விருப்பமே; தவறு நடந்ததோ இல்லையோ, அந்த மாதிரி ஒரு நிலை வெளியே தெரிவதை அவன் நிச்சயம் விரும்ப மாட்டான். நாம் அதை வைத்துத்தான் கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்,'' என்றான்.

முன்பின் அறிந்திராத அந்த சியாமுக்காக சசியின் மனம் பரிதாபப்பட்டது.

அஸ்திவாரம் போட்ட பின் மேலே கட்டடத்தை எழுப்புவது சிரமமாக இல்லை.

நகாசு வேலைகளை லில்லியும் குணாளனும் ஆர்வத்துடன் திட்டமிட்டனர்.

''சசி! உன் கருநீலச் சேலையைக் கட்டி வாடி. அப்படியானால்தான் முகம் இன்னமும் பயந்து வெளுத்தாற் போலத் தெரியும்,'' என்றாள் லில்லி.

''கழுத்தில் கருமணி மாலை, கருப்பு வளையல்கள் கையில்,'' என்றான் குணா.

''கரும் பூதம் என்று பயந்து போய் அவன் மயங்கி விழுந்துவிட மாட்டானே?'' என்று லில்லி சிரித்தாள்.

''அவன் புலி வேட்டைக்குப் போகிறவன். அவனா பூதத்துக்குப் பயப்படுவான்? அவன் கிலியெல்லாம் பெண்களிடம்தான்!'' என்று நகைத்தான் அவன்.

இந்த இடக்குப் பேச்சில் கலந்து கொள்ள முடியாமல் சசி தவித்தாள்.

அவளுக்காக மெனக்கெடுகிறவர்கள் என்பதால் தவிப்பைக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை.

சற்று நேரமாக அவளிடம் சத்தம் இல்லாததைக் கவனித்தவன் குணாளன்தான்.

சிரித்துக் கொண்டிருந்த லில்லியிடம் ஜாடை காட்டினான்.

அவள் சசியைப் பேச்சுக்கு இழுத்தாள். ''ஒரு ஐஸ் கிரீமோடு 'வழிகாண் விழா'வைச் சிறப்பாகக் கொண்டாடலாமாடி?''

ஆனால், சசி எழுந்து விட்டாள். ''வேண்டாம் லில்லி! அப்பா எப்படி இருக்கிறாரோ, போக வேண்டும். ப்ளீஸ்டி.''

''இன்னமும் எல்லாம் பேசி முடிக்கவில்லையே.''

''காரில் போய்க் கொண்டே பேசலாம் லில்லி! தயவு செய்து இப்போது கிளம்பு.''

மறுத்து உரைக்க முயன்ற லில்லியைத் தடுத்துக் கையைப் பற்றி இழுத்து எழுப்பினான் குணாளன்.

''வா, போகலாம்.''

மூவரும் கள்ளம் கபடு அறியாதவர்கள்.

முன்னே பின்னே சூழ்ச்சி செய்து தெரியாதவர்கள்.

இதுபோன்ற விஷயங்களைப் பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும். இருளில் அதுவும் கூடாது என்று புரியாதவர்கள்.

படகின் மறுபுறம் ஓர் ஆணும் பெண்ணும் இருந்ததைப் பாராமல் பேசிவிட்டார்கள்.

அதுவும் ஆண் பேச முயன்றபோது, உதட்டில் விரல் வைத்துத் தடுத்துவிட்டு, அவர்கள் பேச்சைக் கவனத்துடன் கேட்டது அவர்களுக்கு அறவே தெரியாது.

அவன் பேசாதிருப்பதற்காக அவனது கைகளுக்குத் தன் உடலில் மிகுந்த சுதந்திரம் கொடுத்துவிட்டு அவர்களது பேச்சை அவள் ஆர்வத்துடன் ஒட்டுக் கேட்டதும் தெரியாது.

மூவரும் எழுந்து சென்றபோது விளக்கின் ஒளி சசியை நன்கு வெளிப்படுத்தியதை அவள் ஒரு விதக் குரூர திருப்தியுடன் கண்டதை - அந்த மூவரும் அறியவில்லை.

## 5

அந்த வாரக் கடைசியிலேயே தங்கள் திட்டத்தை அமல்படுத்த மூவரும் முடிவு செய்தனர்.

நாள் செல்வது சபேசனுக்கு நல்லது இல்லையே.

அண்ணா நகரில் இருந்தது குணாளனின் வீடு. ஃப்ளாட் முறைக் கட்டடம். நாலில் ஒன்று இவன் வீடு.

சசியின் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிச் சித்தப்பாவிடம் அனுமதி பெற்று வந்தாள் லில்லி.

லில்லி வீடு செல்வதாகச் சொல்லி சபேசனைக் கவனிக்கச் சின்னியை ஏற்பாடு செய்து விட்டு வந்தாள் சசி.

மூவரும் டவர் அருகில் சந்தித்தனர்.

லில்லியின் காரில் சென்று சியாமின் வீட்டைத் தூரத்திலிருந்து காட்டினான் குணாளன்.

பிறகு திரும்பி வந்து அவனது வீட்டை அடைந்தனர்.

குணாளனுடைய அன்னை மூவருக்கும் உணவு அளித்தார். தோசையும் சாம்பாரும். லில்லி ஆசையுடன் வெட்டினாள்.

சசிக்கு ஒன்றுமே தொண்டையை தாண்டி இறங்குவதாக இல்லை.

''நீ சரியாக உண்ணவில்லையேம்மா!'' என்று ஒரு தம்ளரில் ஹார்லிக்ஸ் கலந்து சசியிடம் கொடுத்து அருந்த வைத்தார் குணாளனுடைய அன்னை ரேச்சல்.

குணாளனும் லில்லியும் ஹாலில் அரட்டை அடிக்க, சமையலறையில் காரியங்களை முடிக்க, ரேச்சலுக்கு உதவி செய்தாள் சசி.

ஹால் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டுச் சசியிடம் இரகசியம் பேசினார் ரேச்சல்.

''லில்லியும் உன் போலச் சாதாரணப் பெண்ணாக இருந்தால் நன்றாக இருக்கும்,'' என்றார்.

எதையும் வெளிக்காட்டாத முகத்துடன் அவரைப் பார்த்தாள் சசி.

''குணா அவளை விரும்புகிறான் அம்மா. அவளும் குணாவிடம் அப்படித்தான். ஆனால் அவளுடைய சித்தப்பாவின் சம்மதம் வேண்டுமாமே. அவர் சம்மதிக்கா விட்டால் சொத்து சுகத்தை உதறிவிட்டு வந்து விடுவேன் என்கிறாளாம். வரட்டும். அவள் பணம் இங்கே வேண்டியது இல்லை. இவனுக்கும், இந்த வேலை போனால் வேறு வேலை கிடைக்காமல் இராது. ஆனால் அவ்வளவு வசதியில் வாழ்ந்த பெண் இந்த வாழ்வுக்குப் பழகுவது எளிதா? இப்போது பார், நீ எவ்வளவு இயல்பாக உதவிக்கு வருகிறாய்? அவளுக்கு அது தோன்றவே இல்லையே!'' என்று வருத்தப்பட்டார் குணாளனின் அன்னையார்.

''பழக்கம் இல்லாததுதான் காரணம் அம்மா! அங்கே இவள் எழுமுன் வேலையாட்கள் செய்து பழக்கம்,'' என்றாள் சசி சமாதானமாக.

''அதையேதான் நானும் சொல்ல வந்தேன்,'' என்றார் அந்த அம்மா. ''வேலையாட்களே வேலை செய்து பழக்கம். இவர்கள் இந்த மாதிரி உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிச்

சிரித்துப் பழக்கம். இதை நான் தப்பாகச் சொல்லவில்லை. அவரவர் செல்வ நிலைக்குச் சரியாக வாழப் பழகுவது இயல்புதான். ஆனால் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதபோது செய்யும் எண்ணமே மறைந்து போய்விடுகிறது. மறைந்த ஒன்றை வரவழைப்பது, சுலபமா? அதோடு இங்கே உடல் வலிக்க உழைக்க வேண்டுமே, முடியுமா? இளமை மயக்கத்தில் நாலு நாள்கள் செய்யலாம். ஆனால் ஐந்தாவது நாளும் வரும் அல்லவா? அன்று அலுத்துக் களைத்துப் போய் விடுமே! வயிற்றில் ஒன்று கையில் ஒன்று என்று ஆகிற காலத்தில் என்ன ஆகும்? நான் பார்க்கிற அளவில் லில்லிக்குப் பொறுமையும் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை,'' என்று பெருமூச்சு விட்டார் ரேச்சல்.

''ஆனால் மிக மிக நல்ல பெண் அம்மா! நெஞ்சு நிறையப் பாசம் உள்ளவள்!'' என்று தோழிக்கு வக்காலத்து வாங்கினாள் சசி.

''இல்லை என்று சொல்லவில்லை சசி! துன்பத்தைத் தாங்கி அனுபவிக்க வேண்டுமானால் நல்ல குணமும் பாசமும் மட்டும் போதாது. விடாமுயற்சியும் பொறுமையும் வேண்டும்... ம், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவதாகச் சொல்கிறார்கள். அங்கே இருக்கும் கர்த்தர் என் மகனுக்கு நல்லதையே செய்யட்டும். இதுதான் என் பிரார்த்தனை,'' என்றார் அவர்.

இங்கும் பிரச்னையா? பிரச்னை இல்லாத இடம் கிடையாதா?

அவருக்கு ஆறுதலாக, ''உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் ஒரு குறையும் நேராது அம்மா,'' என்றாள் சசி.

''இங்கே ஆன்ட்டியுடன் என்னடி கிசுகிசுக்கிறாய்?'' என்று சிரித்தபடி லில்லி உள்ளே வந்தாள்.

ஆனால் சசி கழுவிய தட்டுகளைத் துடைத்துக் கொண்டு இருப்பதைக் கண்டதும் அவள் முகம் வாடிப் போயிற்று.

''என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா சசி? நானும் உதவியிருப்பேனே!'' என்றாள் தாங்கலோடு.

கூடவே வந்த குணாளனுடைய முகத்தில் ஒரு விதமான புன்னகையைக் கண்டதும் அவள் முகம் மேலும் கன்றியது. ''எனக்குத் தெரியாது குணா! தெரிந்திருந்தால் ஆன்ட்டி வேலை செய்யும் போது உங்களோடு அரட்டை அடித்திருக்க மாட்டேன்,'' என்றாள் கலங்கிய குரலில்.

தோழியின் குரலை உணர்ந்த சசி உதவிக்கு வந்தாள். ''இன்று தெரிந்து விட்டதால் இனி மறக்க மாட்டாய். சரி தானே லில்லி? உன் குணம்தான் எனக்குத் தெரியுமே!'' என்று தட்டிக் கொடுத்தாள்.

''நிச்சயமாய்,'' என்றாள் லில்லி முகம் மலர.

அதுவரையில் பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த ரேச்சலும் லில்லியை அழைத்தார். ''இப்போது இந்தத் தட்டுகளை எல்லாம் வரிசையாக அந்த 'ராக்'கில் அடுக்கு லில்லி!'' என்று பணித்தார்.

வெகு கவனத்துடன் அவள் பயபக்தியோடு தட்டுகளை அடுக்குவதைக் கண்டதும் குணாவும் சசிவும் ஒருவரை ஒருவர் பார்த்து ஓசையின்றி நகைத்தனர்.

அடுக்கி முடிந்ததும் நால்வருமாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

கலகலப்பில் நேரம் பறந்தது.

கடைசியில் குணாளன் மணிக்கட்டைத் திருப்பிக் கைக் கடிகாரத்தைப் பார்க்கவும் சசிக்குப் பகீரென்றது.

அதற்குச் சரியாகக் குணாளனும் நிமிர்ந்து அவளைப் பார்த்து லேசாகப் புன்னகை செய்யவே வயிறு கலங்கிப் போனாள் சசி.

'அதற்குள்ளாகவா நேரம் ஆகிவிட்டது? கடவுளே!' என்று மனத்துக்குள் அஞ்சினாள்.

''நே... நேரமாகி விட்டது அம்மா! நான்... நான் கிளம்ப வேண்டும்,'' என்று தடுமாறினாள்.

''ஆமாம். பதினொன்றுக்குள் கொண்டு விடுவதாய்ச் சொன்னோமில்லையா லில்லி?'' என்று குணாளன் எழுந்தான்.

''கட்டாயம் போக வேண்டுமா? லில்லியோடு நீயும் இங்கேயே இரவு தங்கிவிட்டுப் போவதுதானே சசி! என்னவோ உன்னை முதல் தடவையாகப் பார்ப்பது போலவே எனக்குத் தோன்றவில்லை. இருந்துதான் போயேன்,'' என்றார் ரேச்சல்.

அது மட்டும் முடிந்தால்... என்று சசியின் மனது ஏங்கியது. ஆனால் முடியாதே, அப்பாவின் நிலைமை அவளைத் துரத்தி அடிக்கிறதே.

''இ... இல்லை அம்மா, போக வேண்டும்,'' என்று மெல்ல எழுந்தாள். கால்கள் துணியாய்த் துவண்டன. பெருமுயற்சி செய்து சமாளித்துக் கொண்டு நின்றாள்.

''வீட்டில் அவள் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை ஆன்ட்டி. அதற்காகத்தான் அவள் கட்டாயம் போக வேண்டியிருக்கிறது,'' என்றாள் லில்லி.

''ஓகோ! இவள் போய்த்தான் அவரைக் கவனிக்க வேண்டுமா? பகலில் வேலையாள் யாரும் பார்த்துக் கொண்டார்களாம்மா? என்ன செய்கிறது? இப்போது தேவலையா?'' என்றெல்லாம் பரிவுடன் விசாரித்தார் குணாளனுடைய அன்னை.

''ம்... என்னமோ அது நுரையீரல் சம்பந்தப்பட்ட வியாதிம்மா! இப்போது குணமாகிக் கொண்டு இருக்கிறது. சீக்கிரம் நல்ல குணமாய் விடும்...'' என்று ஏதோ சொல்லி முடித்தாள் சசி.

மூவரும் காரில் ஏறிக் கொண்டு கிளம்பினர்.

சற்று நேரம் அமைதியாய்க் கழிந்தது.

திடீர் என்று நினைவு வந்தவளாய், ''சசி! எதற்கும் கத்தி ஒன்று வைத்துக் கொள் என்றேனே. வைத்திருக்கிறாயா?'' என்று வினவினாள் லில்லி.

''ம்,'' என்றாள் சசி சுருக்கமாக.

''சசி, நீ...'' என்று தோழியின் கையைப் பற்றிய லில்லி திடுக்கிட்டு, ''என்னடி உன் கை இப்படி ஐஸாய்ச் சில்லிட்டு இருக்கிறது!'' என்றாள்.

சசி பதில் ஒன்றும் கூறவில்லை.

காரை மெல்ல நிறுத்தினான் குணாளன்.

''சசி! உனக்கு மிகவும் பயமாக இருந்தால் வேண்டாம். வீட்டுக்குப் போய் விடலாம்,'' என்றான் பரிவாக.

இப்போது போய்விடலாம். பிறகு?

சபேசனின் வேதனை... முடிவு...?

''வீட்டுக்கு வேண்டாம் குணாளன்! மேலே போங்கள்,'' என்றாள் மெல்லிய, ஆனால் திடமான குரலில்.

''நாட்டி கேர்ள்!'' என்று தட்டிக் கொடுத்தாள் லில்லி. கார் தொடர்ந்து சென்றது.

ஆனால் உடனேயே கலங்கி, ''குணா! நிச்சயமாக அவன் ஒழுக்கமுள்ளவன்தானே?'' என்று வினவினாள்.

''உனக்கு அந்தப் பயமே வேண்டாம். லில்லி!'' என்றான் அவன். மீண்டும் கார் நின்றது.

''சசி! இதற்கு மேல் கார் செல்வது நல்லதல்ல. கார் ஓசை கேட்டுவிடலாம் அல்லது கார் வெளிச்சம் தெரிந்து விடலாம். அதோ பார், அந்த மதில்தான், சுற்றிக் கொண்டு போ. மதில் முடிந்ததும் நேராக உட்புறமாகவே தொடர்ந்து நட. கடைசியில் ஒற்றையாக இருக்கும் அவன் வீடு. ஓசைப்படாமல் சென்று கார் டயரில் காற்றைத் திறந்து விடு. இரண்டிலும் திறக்கக் கற்றுக் கொடுத்தது நினைவு இருக்கிறது அல்லவா?''

சசி தலையாட்டினாள்.

''பிறகு தலையைக் கலைத்துக் கொண்டு மூச்சிரைக்க ஓடிக் களைத்தாற் போல அவன் கதவைத் தட்டிவிட்டு அவனைக் கண்டதும் மயங்கிச் சாய்ந்து விடு. பிறகு ஒன்றும் இல்லை. அதிகாலையிலேயே நாங்கள் வந்து விடுவோம். சரிதானா?''

சசி மீண்டும் தலையை ஆட்டினாள்.

''சசீ...'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டாள் லில்லி.

''அவளை விடு லில்லி! வீணாக அவளை மிரள வைக்காதே!'' என்று அதட்டி லில்லியை விலக்கினான் குணாளன்.

''அப்புறம் பேச நேர்ந்தால் நீயும் லில்லியுமாக வந்தது, கார் ரிப்பேராகி நின்றது, தலைவலி, முரடர்கள் எல்லாம் நினைவு இருக்கிறதா?''

அதற்கும் தலையாட்டினாள் சசி.

''ஓகே. பெஸ்ட் ஆஃப் லக்!'' என்று விடை பெற்றான் குணாளன்.

''ஜாக்கிரதை சசி!'' என்றாள் லில்லி.

இருவருக்கும் பதிலாக லேசாக முறுவலிக்க முயன்று விட்டுத் திரும்பி நடந்தாள் சசி.

மதிலை ஒட்டித் திரும்புகையில் நின்று திரும்பிப் பார்த்தாள்.

லில்லியும் குணாளனும் நிற்பது தெரிந்தது.

லேசாகக் கையாட்டிவிட்டு மேலே சென்றாள்,

சற்று தூரம் சென்றதும் கார் கிளம்பும் ஓசை கேட்டது.

அவளுக்கு உள்ளே பகீரிட்டது.

தன்னந்தனியாக இந்த இடத்தில் இந்த இருளில் சசி என்ன செய்கிறாள்?

''லில்லி போகாதே..'' என்று மெல்லக் கூவியபடி திரும்பி ஓடி வந்தாள் சசி.

ஆனால் காரின் பின் விளக்கு எங்கோ தூரத்தில் புள்ளியாகத் தெரிந்தது.

திகைத்து நின்றாள்.

சே, என்ன பைத்தியக்காரத்தனம்!

இந்தத் திட்டமும் பைத்தியக்காரத்தனம்தான்.

அதைக் கைவிட்டு ஓட நினைப்பதும் பைத்தியக்காரத் தனம்தான்.

ஒருவேளை இந்தத் திட்டம் நிறைவேறினால் அப்பாவுக்கு வைத்தியம் செய்வது இயலக் கூடும்.

இல்லாவிட்டால் அப்பாவும் இல்லைதான்.

அதுவும் எப்படி?

அந்த வேதனை தாங்காமல் இன்னமும் எதற்கெல்லாமோ மனம் துணிந்தது நினைவு வந்தது.

அதைவிட இது மேல்தானே.

தளர்ந்த உள்ளம் மீண்டும் நிலைப்படத் திரும்பி மேலே நடந்தாள்.

பாவம், அடுத்தமுனையில் பேய் இருப்பது அவளுக்குத் தெரியாதே.

தந்தையின் முகத்தை மனதில் கொண்டு வந்து தைரியத்தைக் கூட்டி மேலே நடந்தவள், ''தா யாரு, நில்லு,'' என்று கட்டைக் குரலைக் கேட்டதும் அப்படியே பீதியால் உறைந்தாள்.

சும்மாவே உதறிக் கொண்டு இருந்த நெஞ்சுக்குத் துணையாகக் கை கால் எல்லாம் நடுங்கலாயிற்று.

பயத்துடன் திரும்பியவள் கண்களுக்குப் பாதையை ஒட்டிச் சற்று உட்புறமாய் நின்ற புளியமரத்தின் கீழே கிடந்த இரு உருவங்கள் புலனாயின.

அதற்குள் எழுந்து ஆடி ஆடி நடந்து அவள் அருகே வந்தான் ஒருவன். சரக்கென்று தீக்குச்சி கிழிபட்டது.

''டேய் காளி, பொண்ணுடா! கிளியாட்டம்.''

''பேயோ? காலிருக்கா? மொதல்ல அதப் பாரு. மோகினிப் பேயோ முனியோ!'' என்று அடுத்தவனும் எழுந்து வரலானான்.

மீண்டும் தீக்குச்சி பளீரிட்டது.

''யே... காலு இருக்குடா. செவப்புக் காலுடா!'' என்று கும்மாளம் கொட்டியது முதல் குரல்.

''ஐயோ! ஐயோ! இந்த எடத்துலே தனியா கடவுளே நமக்குன்னே இவளக் கொணாந்து உட்டுருக்காருடா!'' என்றான் அடுத்தவன்.

இன்னொரு குச்சி ஒளி பெற்றது.

''ஆமாமடா! அந்த சினிமாவுல ஆடுன பொண்ணு மாதிரியே அளகுடா!'' என்று இளித்தான் முதலாமவன்.

சசி அரண்டு போனாள்.

இது என்ன சோதனை?

இருவரும் குடித்திருப்பார்கள் போல இருந்தது.

இதிலிருந்து மீள்வது எப்படி?

வேண்டும், வேண்டும், அவளுக்கு நன்றாக வேண்டும். வேசியாகப் போகிறேன் என்றாள் அல்லவா? நாக்கிலே சனி இருந்ததோ?

''இந்தா பொண்ணு, சொன்னபடி கேட்டு நட,'' என்று ஒருவன் அவளது தோளைத் தொட்டான்.

பீதியில் உறைந்து நின்ற சசிக்கு அவன் தொட்ட கணத்தில் மீண்டும் உயிர் வந்தது.

தொட்ட கையைத் தட்டிவிட்டுப் பறந்தாள்.

''யே பிடி!'' என்று இருவரும் துரத்தினர்.

எப்படியும் அவர்கள் இருவர். எவ்வளவு ஓடினாலும் அறிமுகம் அற்ற இந்தப் பகுதியில் மாட்டிக் கொள்ளக் கூடும். கையும் காலும் உதறுகையில் இங்கே அதிக தூரம் ஓடுவது கூடச் சந்தேகம்.

ஓடியபடியே ஒரு முடிவுக்கு வந்த சசி சற்றுத் தொலைவில் இருந்த ஒரு சவுக்குத் தோப்பினுள் புகுந்தாள்.

நெருக்கமாய் வளர்ந்திருந்த சவுக்கு மரங்களும் இருளும் அந்த முரடர்களின் பார்வையிலிருந்து அவளைக் காத்தன.

அவர்களுடைய குடி போதையும் அப்போதைக்குச் சசிக்கு உதவியாகவே இருந்தது.

ஆயினும் அவர்களும் விடுவதாக இல்லை, தோப்பினுள்ளும் அவளைத் தொடர்ந்தனர்.

இருளில் ஆள் தெரியாமல் சரியாகவே அவர்களில் ஒருவன் அருகில் சென்று விட்டாள்.

நல்ல வேளையாக அவன் உணருமுன் இவள் அவனைக் கண்டுவிடவே திரும்பி ஓடினாள்.

நெஞ்சு உலர்ந்து போயிற்று.

தொண்டை காய்ந்து விட்டது.

இனி ஓட முடியாது. நிச்சயம் முடியாது.

'கடவுளே! கடவுளே!' என்றபடி ஒரு மரத்தோடு ஒட்டிக் கொண்டு சற்று நின்றாள்.

அந்த முரடர்களும் களைத்தனரோ!

பெரிய மூச்சுகளுடன் அவர்கள் பேசுவது அருகிலேயே கேட்டது.

''அவள இன்னிக்கு விடவே படாதுடா. என்ன ஆட்டம் காட்டுகிறா? இதுக்கெல்லாம் வட்டியும் முதலுமா வாங்கணும். நீ பீச்ச கைப் பக்கம் போ. நான் சோத்துக்கைப் பக்கம் போறேன். சும்மா நண்டுப் பிடியா மடக்கிறணும்.''

இருவரும் இருபுறமாக நகர்வது புரிந்தது.

சற்றுப் பொறுத்து மெல்ல நேரே முன்னோக்கி நடந்தாள்.

தோப்பு முடியும் இடம் வந்தது.

தோப்பைத் தாண்டினால் வெகு தூரம் வெட்டவெளி. அவள் செல்வது தெரியக் கூடும். என்னதான் இரவு இருள் என்றாலும் நட்சத்திரங்களின் ஒளியில் ஓரளவு உருவம் புலன் ஆகிவிடுமே. அதுவும் இலை தழை மறைக்காத வெட்டவெளி.

ஆனால் தோப்பினுள் இனியும் இருந்தால் நிச்சயம் அகப்பட்டுக் கொள்ள நேரும் என்று புரிந்தது. அவர்கள் திட்டம் போட்டு அலசுகிறார்களே.

அவர்கள் காணாதபடி வெட்ட வெளியைத் தாண்டி அடுத்து மரங்கள் அடர்ந்த பகுதியை அடைந்து விட்டால்....?

சேலையைச் சற்றே உயர்த்திப் பிடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் ஓடினாள்.

பாதி தூரம் கடக்கும்போது, 'அதோ... அங்கடா!' என்ற சத்தம் கேட்டது.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினாள்.

மரங்கள் அடர்ந்த பகுதியை அடைந்து விட்டபோதும் ஆசுவாச மூச்சுவிட முடியவில்லை.

ஏதோ வேலிபோல வரிசையாக நடப்பட்டிருந்த அந்தத் தாவரங்களின் ஊடே உள்ளே நுழைய முடியவில்லை.

வேறு வழி காணாமல் சுற்றிக் கொண்டு ஓடினாள்.

பின்னே காலடிச் சத்தம் நெருங்குவது புரிந்தது.

இனி அதிகம் ஓட முடியாது. அம்மா.

திடுமென ஒரு கேட் தெரிந்தது.

திறந்து கொண்டு உள்ளே ஓடினாள்.

கார் செல்லும் பாதை. கார்... காரைச் சுற்றிக் கொண்டு வராந்தாவின் படி ஏறினாள்.

பெரிய வெண்ணிறக் கதவு. வேகமாகத் தட்டினாள்.

அவசரமாகத் தட்டினாள்.

ஒருவரும் குடி வராத வீடோ?

கண்கள் இருண்டு காதை அடைத்தது.

செடி வேலிப் பக்கம் ஓடிவரும் ஓசையும் கேட்டது.

துடித்தவளாய் மீண்டும் தட்டினாள்.

கதவு திறந்ததோ... திறப்பது போலத் தோன்றியதோ...

''காப்... என்னைக் காப்பா...ற்..றுங்...'' என்று முடிக்கு முன் நிற்க இயலாமல் விழுந்தாள்.

விழும்போதே யாரோ பிடிப்பது போலத் தோன்றியது.

அந்த முரடர்களோ?

திமிற முயன்றவள் அப்படியே மயங்கிச் சாய்ந்தாள்.

## 6

சசிக்கு மெல்ல நினைவு திரும்பியது.

அந்த முரடர்கள் அவளைத் தூக்கி...

வீல் என்ற அலறலுடன் கண் விழித்தாள்.

பதறிப் போய் எழ முயன்றாள்.

அந்த முயற்சியின் போதுதான் அவள் ஒரு மிருதுவான படுக்கையில் படுத்திருப்பதை உணர்ந்தாள்.

மெத்தை தலையணைகளின் வெண்ணிற உறைகள் கண்ணைப் பறித்தன.

அச்சம் தீராமலே விழிகளைச் சுற்றியபோது, "பயமின்றிப் படுத்திரு!" என்று ஓர் ஆழ்ந்த குரல் மென்மையாகக் கூறியது.

மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

இதழ்களில் முறுவலுடனும், கையில் ஒரு கப்புடனும் நின்றிருந்தான் அவன்.

அவன்!

அதிர்ச்சியுடன் சட்டென எழுந்து உட்கார்ந்தாள் சசி.

ஏனெனில் அந்த அவன் அன்று தியேட்டரில் ஏனோ ஏளனமாகச் சிரித்தவன்.

பின் ஏனோ உதவிக்கும் வந்தவன்.

இவன் யார்?

இது யார் வீடு?

சசி மலங்க மலங்க விழித்தாள்.

அருகில் வந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான் அவன்.

"ஹார்லிக்ஸ் குளுகோஸ் கலந்திருக்கிறேன். குடித்தால் அயர்வெல்லாம் பறந்துவிடும். படபடப்பும் மறையும்," என்று கப்பை அவள் வாயருகே கொண்டு சென்றான்.

கப்பைத் தன் கையில் வாங்கிப் பானத்தை மெல்ல அருந்தலானாள் சசி.

வறண்டு காய்ந்து போயிருந்த தொண்டைக்கு அது அமுதம் போல் இருந்தது.

அவள் அருந்தி முடிக்கும் வரை பொறுத்திருந்துவிட்டு, "ஆமாம், மயக்கம் போட்டுவிடும் அளவுக்கு உனக்கு என்ன

பயம்?'' என்று வினவினான். ''காப்பாற்றுங்கள் என்று வேறு கதறினாயே?''

அந்தப் பயங்கர அனுபவத்தின் நினைவிலேயே அவளுக்கு முகம் வெளுத்தது. ''இரண்டு... இரண்டு குடிகாரர்கள்...'' என்று விவரிக்கும்போதே உடம்பு நடுங்கியது.

''வேண்டாம் வேண்டாம். விட்டு விடு. அதைப் பற்றிய நினைவே உனக்கு இப்படி நடுங்குகிறதே. மறந்துவிடு. இனி உனக்கு எந்த வித ஆபத்தும் இல்லை. இங்கே யாரும் உன்னை நெருங்க முடியாது. முயற்சி செய்தால் சுட்டு விடுவேன்,'' என்று அவளைத் தேற்றினான் அவன்.

'சுட்டு விடுவேன்.'

அவன் துப்பாக்கியை நம்புகிறவன்.

புலி வேட்டை ஆடுகிறவன்.

சசியின் நெஞ்சில் ஒரு பயங்கரச் சந்தேகம் முளைத்தது. இவன்தான் குணாளன் குறிப்பிட்ட அந்த சியாமா?

''நீங்கள்... நீங்கள்... உங்கள் பெயர் என்ன?'' என்றாள். புது விதமான அச்சத்துடன்.

அவள் கையிலிருந்த காலிக் கப்பை வாங்கினான் அவன். ''என் பெயர் சியாம்,'' என்று எழுந்து திரும்பினான். ''ஆனால் முதல் மந்திரி, அமைச்சர்கள் போல என் பெயர் பிரபலம் இல்லை!'' என்று நகை கலந்த குரலில் கூறியபடியே கப்பைப் பின்னிருந்த ஒரு மேசை மேல் வைத்து விட்டுத் திரும்பி வந்தான்.

''இன்னமும் உன் முகத்தில் வெளுப்புக் குறைய வில்லையே. இப்போதும் படபடப்பாய்த்தான் இருக் கிறதா?'' என்று பரிவுடன் வினவினான்.

இவனைப் போய்ப் பெண்ணை வெறுப்பவன் என்று குணாளன் சொன்னானே! அது எப்படிச் சாத்தியம்? எவ்வளவு பரிவான குரலில் விசாரிக்கிறான்!

அவள் பதில் சொல்லாததைக் கண்டு, ''பலவீனமாய் இருந்தால் படுத்துக் கொள்கிறாயா?'' என்றான் அவன்.

''இ... இப்போது பரவாயில்லை,'' என்றாள் அவள் மெலிந்த குரலில்.

''உன்னைக் கொண்டு போய் உன் வீட்டில் சேர்க்க வழியில்லை. சசி... சசிதானே உன் பெயர்? உன்னோடு வந்த பெண் அப்படித்தான் அழைத்ததாக நினைவு!'' என்றான் புன்னகையோடு அவன்.

''சசிதான்,'' என்றாள் அவள்.

''காரில் இரண்டு சக்கரங்களில் காற்று இல்லை - என்ன சசி?''

அவள் தூக்கிவாரிப் போடக் கண்டு, அக்கறையுடன் விசாரித்தான் சியாம்.

ஆனால் இரண்டு சக்கரங்களில் காற்றை உருவிவிடத்தான் திட்டமிட்டது என்பதை அவனிடம் எப்படிச் சொல்ல முடியும்?

''ஒ... ஒன்று...மில்லை...'' என்று திக்கித் திணறினாள்.

'எனக்குப் புரிகிறது சசி! ஏதடா, இங்கே இவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் காணோம்! தன்னந்தனி யாக இரவில் ஓர் ஆணுடன் எப்படித் தங்குவது? இவனை நம்புவது எப்படி என்றெல்லாம் யோசிக்கிறாய். அது தானே?'' என்றான் முறுவலுடன். ''ஆனால் நீ பயம் கொள்ளத் தேவையில்லை. சசி! உன் சுண்டு விரல் நகத்துக்குக்கூடச் சேதம் வராமல் நான் உன்னைக் காப்பேன். அது என்னிட மிருந்தும் கூடத்தான். ஏன் தெரியுமா? இந்த உலகில் நான் மதிக்கும் ஒரே ஒரு பெண் நீதான். உனக்கு நானே ஊறு செய்வேனா?'' என்றான் உணர்ச்சியுடன்.

இப்போது சசி மேலும் திணறிப் போனாள்.

''நான்... புரியவில்லையே!'' என்று திகைத்தாள்.

''நீயேதான்...'' என்றான் அவன், மென்முறுவலுடன். ''சிறு வயதிலிருந்தே எனக்குப் பெண்களைக் கண்டால் மதிக்கத் தோன்றுவது இல்லை. ஓர் அருவருப்பும் வெறுப்புமே உண்டாகும். ஆனால் அன்று தியேட்டரில் அத்தனை பேரும் சும்மா இருக்க, நீ உண்மையாகப் போராடியதை

என்னால் மறக்கவே முடியவில்லை. உன்னை மீண்டும் எப்போது சந்திக்க முடியுமோ என்று எண்ணிக் கொண்டே இருந்தேன். எப்படியோ இறையருள் என்றுதான் கூற வேண்டும். நீயாக இங்கே வந்து சேர்ந்திருக்கிறாய்,'' என்றான் மகிழ்ச்சியுடன்.

''நான் மெய்யைச் சொன்னேன். அவ்வளவுதானே. இதைப் போய்ப் பெரிதாய்ப் பேசுகிறீர்கள்!'' என்றாள் சசி. கூச்சத்தினால் முகம் லேசாகச் சிவக்க.

அதை ரசிப்பவனாய் அவள் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தான் சியாம். ''உனக்கு... நீ என்று உன்னை நான் அழைக்கலாம் அல்லவா? சில தினங்களாக மனதில் அப்படியே உன்னை நினைத்துப் பழகி விட்டேன்... ஆச்சரியமாக இருக்கிறதா? மெய்யாகவே அன்றிலிருந்து எனக்கு ஓயாது உன் நினைவுதான். பொதுவாகப் பெண்கள் சுயலாபம் கருதாமல் எதுவும் செய்யக்கூடும் என்று எனக்கு நம்பிக்கை கிடையாது. அன்று நீ அந்தச் சிறுமிக்காக வாதாடியதில் உனக்கு எவ்வித லாபமும் இல்லை. மாறாக நட்டம்தான். அந்தப் போக்கிரி உன்னிடம் கலாட்டா செய்திருக்கக் கூடும். படம் பாராமல் சென்றதில் பண நட்டம் வேறு...''

கூச்சத்தை மீறி அவனை ஏறிட்டுப் பார்த்தாள் சசி. ''டிக்கெட் எடுத்தது லில்லிதான்,'' என்றாள் நேராகப் பார்த்து.

அவன் இலகுவாய் நகைத்தான். ''இருக்கட்டுமே... சும்மா வந்த லாபம் விட்டு விட்டது இழப்புதானே!'' என்று விடாமல் வாதிட்டான்.

''ப்ளீஸ்... சாதாரண விஷயம். அதைப் போய் நீங்கள் பெரிதுபடுத்தினால் எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது. ஏதோ ஏமாற்று வேலை போலத் தோன்றுகிறது,'' என்றாள் சசி.

''ஏமாற்று வேலையா? நீயா? நெருப்பில் ஈ மொய்க்குமா?'' என்றான் சியாம் திடமான குரலில்.

கூடை நெருப்பை அள்ளிக் கொட்டினாற் போலச் சுரீரென்றது சசிக்கு.

நெருப்பில் ஈ மொய்க்காதுதான். ஆனால் அந்த நெருப்பு எரியப் பிராணவாயு வேண்டுமே. அது இல்லா விட்டால் நெருப்பு அவிந்துவிடுமே.

உயிர் வாழப்... பணம் வேண்டுமே.

அது கட்டாயம் வேண்டுமே.

ஆயினும் இப்படி நம்புகிறவனை எப்படிப் பலியாடு ஆக்குவது?

அவனிடம் உண்மையைச் சொல்லிவிடத் துடித்த நாவை, பெற்றவரின் நிலைமை உள்ளிழுக்க, சசி திணறினாள்.

அவன் அவளது முகத்தையே பார்த்திருப்பான் போலும்! "களைத்து இருந்தவளை மேலும் அலுப்படையச் செய்து விட்டேனா? மன்னித்துக் கொள் சசி... உடம்பில் வலி கிலி இல்லையே?" என்று பரிந்தான்.

'இல்லை,' என்பதுபோலத் தலையசைத்தாள் அவள்.

"நீ தூங்கு! மற்றதைக் காலையில் பார்க்கலாம். ஏனென்றால் இப்போதைக்கு உன்னைக் கொண்டு போய் உன் வீட்டில் விடுவதோ அல்லது உன் வீட்டாருக்குத் தகவல் சொல்வதோ அசாத்தியம். அதனால் மனதை அலட்டிக் கொள்ளாமல் தூங்கு," என்று சொல்லிவிட்டுப் போனான்.

அறையை விட்டுச் சென்ற அவனது அகன்ற முதுகை வெறித்துப் பார்த்தாள் சசி.

இவனுக்கு ஒன்றுமே தவறாக, சூழ்ச்சியாகத் தோன்ற வில்லையே.

காலையில் பார்க்கலாம் என்கிறானே.

காலையில் லில்லியும் குணாளனும் வருவார்களே! அப்போது இவன் என்ன சொல்லுவான்?

கண்ணில் குபுக்கென்று நீர் பொங்கி வந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் படுத்தபோது கதவைத் தட்டிவிட்டு அவன் மீண்டும் உள்ளே வந்தான்.

''சசி, உனக்குப் பசிக்கிறதா? இரவு ஏதேனும் உண் டாயோ என்னவோ? இங்கே ரொட்டி, பிஸ்கட், பழங்கள், பால் எல்லாம் இருக்கின்றன. புளியோதரை பாக்கெட் கூட இருக்கிறது. கொஞ்சம் சாப்பிடுகிறாயா?'' என்று கனிவாகக் கேட்டான்.

''வேண்டாம். நன்றி!'' என்றாள் சசி சிறு குரலில்.

''கொஞ்சம் சாப்பிடேன். சும்மா ஒரு 'கம்பெனி ஸேக்.' என்னோடு இரண்டு பிஸ்கட் மட்டுமே!'' லேசாக வற்புறுத்தினான் அவன்.

திடுக்கிட்டவளாய், ''நீங்கள் இன்னமுமா சாப்பிட வில்லை? மணி என்ன?'' என்றாள் சசி.

''மணி...'' கையைத் திருப்பிப் பார்த்தான் சியாம். லேசான வியப்புடன், ''மணி ஒன்று சசி! இவ்வளவு நேரம் ஆகியிருக் கிறதே,'' என்றவன், தப்பு செய்தவன் போலச் சிரித்துச் சமாதானம் சொன்னான்: ''சித்திரம் தீட்டிக் கொண்டே இருந்தேனா, நேரம் போனதே தெரியவில்லை,'' என்றான். பிறகு, ''நேரம் அதிகம்தான் ஆகிவிட்டது. நீ... நீ தூங்கு சசி,'' என்று முடித்தான்.

''சரிதான். வாருங்கள், முதலில் சாப்பிடலாம்,'' என்று வேகமாக எழுந்து இரண்டு எட்டு எடுத்து வைத்தாள் சசி.

கிடைத்த இந்த வாய்ப்பில் அவனுக்கு உணவு பரிமாறி உண்ண வைக்க வேண்டும் என்று ஏதோ ஓர் ஆசை பெரும் அளவில் எழுந்து அவளை உந்தியது.

ஆனால் மனதின் உந்தல் காலுக்குப் புரியாமல் அது தன்பாட்டில் தடுமாறியது.

சவுக்குத் தோப்பில் சரியான ஓட்டம் ஓடிய கால்கள் அல்லவா?

அவளாகச் சமாளிக்குமுன் அவன் கையை நீட்டி அவளைப் பற்றி நிறுத்தினான்.

விநாடிக்குள் முகம் சிவந்து குழம்பிப் போனாள் சசி.

நின்று சுதாரித்துக் கொண்டு நன்றி என்று அவன் பிடியிலிருந்து விலகினாள்.

நிதானத்துடன் அறை வாயில்வரை சென்றவன், தயங்கி, ''சமையல் அறை, சாப்பாட்டு அறை எல்லாம் எந்தப் பக்கம்?'' என்று விசாரித்தாள்.

முகத்தில் மகிழ்ச்சி துள்ள, ''வா, காட்டுகிறேன்,'' என்று அழைத்துச் சென்றான் அவன்.

''சமையல் அறை பின் பக்கம் இருக்கிறது. இது சாப்பாட்டு அறை. ஆனால் என் வசதிக்காக இங்கேயே இதெல்லாம் வைத்துக் கொண்டேன்,'' என்று அங்கிருந்த ஃபிரிஜ், சின்ன சிலிண்டர் உள்ள காஸ் ஸ்டவ் முதலிய வற்றைக் காட்டிச் சொன்னான் சியாம்.

சாப்பாட்டு மேஜை மேல் சில பாக்கெட்கள், டின்கள், பக்கத்தில் ஃபிரிஜ்ஜில் பழங்கள், பால் பாக்கெட். ஃபிரிஜ் பக்கத்தில் ஒரு ஸ்டாண்டில் சில பாத்திரங்கள்.

முந்தானையை இழுத்துச் செருகிக் கொண்டு, ''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டாள் சசி.

''நோ, நீதான் என் விருந்தாளி. உட்கார்ந்து உனக்கு என்ன வேண்டும் என்று சொல்லு,'' என்றான் சியாம்.

''பெண்கள் வேலையில் ஆண்கள் மூக்கை நீட்டினால் ஊகூம், நன்றாயில்லையே!'' என்று முறுவலித்தாள் சசி.

''ஓகோ! அப்படியானால் என்ன சாப்பிடலாம் என் பதையும் எஜமானியாரே சொல்லி விடலாமே,'' என்றான் அவனும் விளையாட்டாக.

உள்ளம் துள்ள, ''உங்களுக்கு எது பிடிக்கும்? ரொட்டியும் சூப்புமா அல்லது புளியோதரையும் வறுவலுமா?'' என்று கேட்டாள்.

''இரவில் ரொட்டியும் சூப்பும்,''

சூப் டின்னைத் திறந்து கிண்ணத்தில் ஊற்றிச் சூடு படுத்தினாள் சசி. ரொட்டியைத் துண்டுகளாக வெட்டித் தட்டில் அடுக்கினாள். கண்ணாடித் தம்ளரைக் கழுவி ஃபிரிஜ் ஜிலிருந்து நீர் ஊற்றி வைத்தாள். ஃபிரிஜ்ஜில் முட்டை களைப் பார்த்ததும் இரண்டை எடுத்து உடைத்து அடித்தாள். சூடாகிவிட்ட சூப்பை இறக்கிவிட்டு முட்டையை ஆம்லெட் போட்டு எடுத்து வைத்தாள்.

அவள் வேலை செய்வதைப் பார்த்தபடி அவ்வப்போது உப்பு, மிளகுத் தூள் என்றெல்லாம் எடுத்துக் கொடுத்து உதவி செய்தான் சியாம்.

திடீரென்று, ''உன் முழுப் பெயர் என்ன?'' என்று விசாரித்தான்.

''சசிதான்.''

''சசிரேகா, சசிகலா.. என்று ஒரு வாலும் கிடையாதா?''

''ஊகூம்...'' என்று முறுவலித்தாள் சசி. ''சாப்பாடு ரெடி, சாப்பிடுங்கள்,'' என்றாள்.

''நீயும் உட்கார் அல்லது எனக்கும் வேண்டாம்.''

''என்ன, இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றாள் அவள் வியந்து.

''நீயும் சாப்பிடு என்றேன். புரியவில்லையா?'' என்று சிரித்தான் சியாம்.

''எனக்குப் பசியில்லை என்றேனே.''

''அப்படியானால் எனக்கும் வேண்டாம்,'' என்று எழுந்தான் சியாம்.

திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் சசி.

சிரித்த முகத்தினுள் உடும்பின் உறுதி தெரிந்தது.

'பிடிவாதம் பிடித்தால் உடும்பு!' என்று குணாளன் சொன்னது நினைவு வந்தது. அவன் சாப்பாட்டைக் கெடுப்பானேன் என்ற எண்ணத்தில் அமர்ந்தாள்.

''குட் கேர்ள்!'' என்று இன்னொரு தட்டில் பாதி முட்டையை வைத்து அதை அவள் அருகில் தள்ளினான் சியாம். ரொட்டியையும் எடுத்து வைத்தான்.

மேலே தயங்காமல் உண்ணத் தொடங்கினாள் சசி. தொடங்கிய பின்தான் தன் பசியையும் உணர்ந்தாள். அவளுக்கிருந்த நடுக்கத்தில் குணாளன் வீட்டிலும் அவள் சரியாக உண்ணவில்லை. நல்ல ஓட்டமும் அலைச்சலும் வேறு எல்லாம் சேர்த்து சரியான பசியைக் கிளப்பி விட்டிருந்தன.

அவள் உண்ண உண்ண, அதை உண்ண விடாமல் பேசிய படியே, அவள் தட்டில் ரொட்டி, பழம் என்று வைத்துக் கொண்டே இருந்தான் அவனும்.

மேஜை மேல் கிட்டத்தட்ட எல்லாம் காலியானபோது தான், அதில் பாதி தன் வயிற்றில் என்பதை உணர்ந்தாள் சசி. லேசான வெட்கத்துடன், ''நிறையச் சாப்பிட்டு விட்டேன்,'' என்று எழுந்தாள்.

பயன்படுத்திய பாத்திரங்களைக் கழுவி அடுக்கிவிட்டு அங்கேயே அமர்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்தனர். இருவரும்.

அவன் தன் தொழிலைப் பற்றிச் சொன்னான். வெளி நாடுகளில் எப்படி? இங்கே எப்படி? தொழிலாளர் பிரச்சினைகள் அங்கும் இங்கும் எப்படி என்றெல்லாம் சுவைபடச் சொன்னான்.

மணி மூன்று அடித்தது.

கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''மெய்யாகவே மணி மூன்றுதான் சசி! நேரம் போனதே தெரியவில்லை அல்லவா?'' என்று ஆச்சரியப்பட்டான் சியாம்.

சசிக்கு அது மட்டும் ஆச்சரியம் இல்லை. ஓர் ஆணுடன் இந்த நேரத்தில் தனிமையில் அரட்டை அடிப்பது இயல்பாகத் தோன்றியதே, அதுவும் ஆச்சரியம்தான்.

சியாம் எழுந்தான். ''போய்த் தூங்கு சசி! சும்மாவே களைத்துக் கிடந்தவளை இவ்வளவு நேரம் தூங்க விடாமல் 'போர்' அடித்து விட்டேன்!'' என்றான் ஒரு வருந்தும் புன்னகையுடன்.

''போர் இல்லை,'' என்று பதிலுக்குப் புன்னகை செய்தாள் சசி. ''குட்நைட்!'' என்று எழுந்தாள்.

''ஸ்வீட் ட்ரீம்ஸ்!'' என்றான் அவன் குறும்புடன்.

சிரிப்பை அடக்கியபடி சென்று படுக்கையில் விழுந்தாள் சசி.

ஆனால் உறக்கம் வரவில்லை.

காலையில் லில்லி வருவாளே; குணாளன் வருவானே... இவனை - இப்படிக் கபடமற்ற உள்ளம் படைத்தவனை இழிவு செய்வதா?

கூடாது! நிச்சயம் கூடவே கூடாது.

ஆனால் அப்பா?

கடவுள் இருக்கிறாரே, அவர் வேறு வழி காட்டுவார். காலையில் வெகுசீக்கிரமாகக் கண் விழித்து லில்லி வருமுன் கிளம்பிவிட வேண்டும் என்று முடிவு செய்தாள்.

எப்படியோ, சியாமுடன் அவ்வளவு நேரம் பேசியதில் சசியின் மனதில் ஓர் அமைதியும் தைரியமும் உருவாகி இருந்தன.

கூடவே கடவுளிடம் கொண்டிருந்த நம்பிக்கையும் மேலும் உறுதியடைந்திருந்தது.

முன்னொரு தரம், ஆரோக்கியமாக இருக்கையில் தந்தை சொன்னது நினைவு வந்தது. அது பகவான் ராமகிருஷ்ணரின் பொன்மொழி. 'ரியலைஸ் காம்லி தட் தி டிவைன் லா வொர்க்ஸ். இட் வில் பி மோர் பவர்ஃபுல் இஃப் யூ டூ நாட் மினிமைஸ் இட் வித் டவுட் ஆர் மிஸ்பிலீஃப் (கடவுள் சட்டம் எப்போதும் செயல் படுகிறது என்பதை அமைதி யோடு உணர்ந்து கொள். சந்தேகத்தாலும் அவ நம்பிக்கை யாலும் குன்றச் செய்யாது இருந்தால் அது அதிக வலு வுடையதாக இருக்கும்).

உண்மை என்று இறைவனிடம் பாரத்தை ஒப்படைத்து விட்டு உறங்கலானாள் சசி.

இரவு வெகு நேரம் விழித்திருந்ததாலோ என்னவோ, சசிக்குத் தூக்கம் கலைகையில் நேரமாகிப் போயிற்று.

கண்களைத் திறவாமலே வழக்கம் போலப் பத்துமுறை 'முருகா சரணம்' சொல்லிவிட்டு விழிகளைத் திறந்தாள்.

ஒரு கணம் என்ன ஏது என்று ஒன்றுமே புரியாமல் திகைத்தாள்.

மறுகணம் முந்தைய நாளின் நினைவுகள் வெள்ளம் போல் பாய்ந்து வந்தன.

லில்லி வருவாளே, அதற்குள் இங்கிருந்து வெளியேற வேண்டுமே.

அவசரமாகக் கட்டிலை விட்டு எழுகையில் வெளியே லில்லியின் குரல் கேட்டது.

சப்த நாடியும் ஒடுங்கியவளாகச் சசி பாறையாய் உறைந்தாள்.

## 7

லில்லியின் குரலில் எப்போதும் உற்சாகம் துள்ளும்.

பெற்றோரை இழந்தவள் எனினும், அறியாத வயதிலேயே அவர்கள் போய்விட்டபடியால், இழப்பின் மதிப்பை அறியாதவள். எனவே எந்த இழப்பும் அவளது மகிழ்ச்சியைக் குறைத்தது இல்லை.

துடிப்பும் ஆர்வமுமாகக் கலகலப்பாள்.

தன் வீட்டின் துன்பங்களிடையே லில்லியின் குரலைக் கேட்கும் போதே சசிக்கு மனம் இலகுவாகிப் போகும். உற்சாகம் உண்டாகி விடும்.

களிப்பை அள்ளிக் கொட்டும் அந்தக் குரலைக் கேட்பதற்காகவே சசி லில்லியின் வீட்டுக்குப் போவதுண்டு.

ஆனால் அந்தக் குரல் ஒருநாள் இவ்வளவு தூரம் கேட்க விரும்பாத குரல் ஆகக்கூடும் என்று சசி கனவிலும் கருதியது இல்லை.

உற்சாகத்தை ஊட்டும் அந்தக் குரல் இப்படி உடலில் உள்ளம் உயிர்ப்பு அத்தனையும் அழிக்கக் கூடும் என்றும் அவள் எண்ணியதே இல்லை.

அதிகாலையில் விழித்தெழாது தூங்கிவிட்ட தன்னை நோவதா அல்லது இவ்வளவு விரைவில் வந்துவிட்ட லில்லியை நொந்து கொள்வதா?

இரண்டும் பயனற்ற காரியங்கள்.

மற்றப் புலன்களைப் போலவே மூளையும் வேலை செய்ய மறுத்தது.

ஒருவேளை உண்மையைச் சியாமிடம் முழுவதும் ஒளிக்காமல் சொல்லி விட்டால் என்ன என்று தோன்றியது சசிக்கு. ஆனால் தனக்காக மௌனக்கெடும் லில்லி,

குணாளனின் முகத்தில் எப்படிக் கரி பூசுவது? மேலும் ஆர்வமும் அன்பும் மதிப்பும் கலந்து பார்க்கும் சியாமின் விழிகள் அடியோடு மாறிவிடுமே!

எப்படியும் சியாமின் பிரியம் அழியப் போகிறது.

அழிந்தே விடப்போகிறது.

இதற்கு மேல் எதையும் எண்ணத் தோன்றாமல் மரத்துப் போய் நின்றாள் சசி.

மேலே எதையும் எண்ண நேரமும் இல்லை.

கதவு தட்டப்பட்டது.

தொடர்ந்து, ''சசி! எழுந்து விட்டாயா? யாரோ உன் தோழி என்று சொல்லிக் கொண்டு ஒரு பெண் வந்திருக்கிறாள்,'' என்றது சியாமின் குரல்.

குரல் வறண்டு தெரிகிறதோ, வெறுப்பைக் காட்டுகிறதோ என்றெல்லாம் கலங்கியது சசியின் மனம்.

சியாமின் விழிகள் அவள் முகத்தைக் கூர்ந்தன. ''தூங்கவே இல்லையாம்மா? இன்னமும் முகம் வெளுத்துப் போய் இருக்கிறாயே!'' என்ற அவனது பரிவில் சசியின் கண்கள் பனித்தன.

''சசி...'' என்று அவனுடைய பேச்சில் குறுக்கிட்டு ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டாள் லில்லி.

'ஒரேயடியாய் பயந்து போனோமடி, உன்னைக் காணாமல். நல்ல வேளை யாரிடமும் மாட்டிக் கொள்ளாமல் இங்கே ஒரு வீட்டில் - குடும்பத்தில் வந்து சேர்ந்தாயே.''

''லில்லி! ப்ளீஸ்...'' என்ற சசியின் இடையீட்டைப் பொருட்படுத்தாமல் மேலே தொடர்ந்தாள் லில்லி.

''ஸார்! உங்கள் வீட்டு அம்மாவைக் கூப்பிடுகிறீர்களா? நன்றி சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டும்,'' என்றாள் மடமடவென்று.

''வீட்டு அம்மா என்று யாரும் இல்லை,'' என்றான் சியாம் சுருக்கமாக.

''பின்னே?...'' என்று வட்ட விழிகளை மேலும் அகலமாக விரித்தாள் லில்லி.

முகம் சிவக்கப் பார்வையால் கெஞ்சினாள் சசி.

ஆனால் லில்லி அவளைப் பார்த்தால் அல்லவோ?

சியாமை நேராகப் பார்த்து, ''பின்னே யார் பாதுகாப்பில் சசி இருந்தாள்?'' என்று அதட்டலாகக் கேட்டுக் கொண்டு இருந்தாள் அவள்.

கைகளைப் பின்னே கட்டிக் கொண்டு நிமிர்ந்து, ''என் பாதுகாப்பில்தான்!'' என்றான் சியாம் திடமான குரலில்.

''உங்கள் பாதுகாப்பில் என்றால் என்ன பொருள்? வீட்டில் வேறே யாருமே இல்லை என்பதா?'' என்று குணாளனின் குரல் கிண்டலாகக் கேட்டது.

கண்கள் பளிச்சிட, ''ஆமாம்,'' என்றான் சியாம் சுருக்கமாக.

காலில் கீழே தரை பிளந்து தன்னை இன்னமும் விழுங்கவில்லையே என்று ஏங்கினாள் சசி.

''சசி!'' என்று பின்னடைந்தாள் லில்லி. ''நீ... நீ... இவருடன் தனியாகவா இந்த வீட்டில் இருந்தாய்? அடி, வாசலில்தான் கார் நிற்கிறதே, பெட்ரோலுக்குக் காசு நான் தருகிறேன் என்று கொண்டுவிடச் சொல்வதற்கு என்னடி?'' என்று பொரிந்து தள்ளினாள்.

'தோழிக்கு உதவி செய்கிறோம், அருமையாக நடிக்கிறோம்!' என்று அவள் தனக்குத் தானே ஷொட்டுக் கொடுத்துக் கொள்வது சசிக்குப் புரிந்தது.

ஆனால் சசியின் தவிப்பு லில்லிக்குப் புரியவில்லையே!

''ப்ளீஸ் லில்லி! ஒன்றும் சொல்லாதே,'' என்று முணுமுணுத்தாள். ஆனால் அந்த முணுமுணுப்பு அவள் காதிலேயே விழுந்ததோ என்னமோ?

சசியின் திணறலைப் பார்த்து, ''கார் சக்கரத்தில் காற்று இல்லை,'' என்று உதவிக்கு வந்தான் சியாம்.

''ஆகா! என்ன வசதியான காரணம்! ஒன்றுக்கு இரண்டு சக்கரங்களில் காற்று இருந்திராதே!'' என்றாள் லில்லி ஏளனமாக.

''ஆமாம், அப்படித்தான்,'' என்றான் அவன் முகம் சிவக்க

லில்லி சசியிடம் திரும்பினாள். ''ஏண்டி, உனக்கு அறிவில்லை. இரவு முழுவதும் இந்த வீட்டில் இவருடன் தனியாக இருந்திருக்கிறாயே, நாலு பேர் அறிந்தால் என்ன சொல்வார்கள்? நாளை மாப்பிள்ளை வீட்டார் உன்னை ஒப்புவார்களா? ஒருத்தரைப் போலப் பத்தாயிரம் இருபதாயிரம் பணமா வைத்திருக்கிறாய், இந்தக் கோலத்தை மறைக்க? கர்த்தரே, இந்த அசட்டுப் பெண் இப்படி ஏமாந்து போனாளே! இவள் கதி என்ன ஆகும்?'' என்று புலம்பினாள்.

ஓரிரு முறை கன்றிய முகத்துடன் சசி குறுக்கிட முயன்றதை அவள் பொருட்படுத்தவே இல்லை.

''மேடம்! நீங்கள் நினைப்பது எதுவும் நடக்கவில்லை. உளறாதீர்கள்!'' என்று அதட்டினான் சியாம்.

''எதுவும் நடக்கவில்லை நடக்கவில்லை என்று எத்தனை பேரிடம் போய்ச் சொல்வது சியாம்? அப்படியே சொன்னாலும் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' கதையா என்று தானே எல்லாரும் கேட்பார்கள்? அதை யோசியுங்கள்,'' என்றான் குணாளன் லில்லிக்கு ஆதரவாக.

''அதற்காக?'' சியாமின் விழிகளில் பளபளப்பு ஏற, சசிக்கு உதறத் தொடங்கி விட்டது.

''ஓ... ஓ... ஒன்றுமில்லை. நான்... நான் போகிறேன். வா... வாடி'' என்று கிளம்பினாள் சசி.

''சற்றுப் பொறு சசி,'' என்று அவளைத் தடுத்தான் சியாம்.

''சொல்லுங்கள்,'' என்றாள் லில்லி குணாளனிடம்.

''ஒன்றுமில்லை சியாம். லில்லி சொல்வது போல சசியிடம் ஆயிரக் கணக்கில் பணம் இல்லை. தன்மானமும் அழகும் மட்டுமே அவளுடைய சொத்துக்கள். இந்த நிகழ்ச்சி வெளியே பரவினால் அவளது மானத்தின் மதிப்பு என்னவாக இருக்கும்?'' என்று நிதானமாக விளக்கிப் பேசினான் குணாளன்.

''ஒரு பத்து அல்லது பதினைந்து ஆயிரம் ரூபாயாக இருக்குமா?'' என்று ஏளனமாகக் கேட்டான் சியாம்.

''கிண்டலா?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் லில்லி.

உதட்டைப் பிதுக்கி, ''ஆமாம் மேடம்! இந்த அதிகாலை நேரத்தில் குணாளனுடன் தனியாக வந்திருக்கிறீர்களே, உங்கள் மானம் என்ன ஆகும்? ஒரு வேளை அதையெல்லாம் சமப்படுத்த உங்களிடம் பணம் ஏராளமாய் இருக்கிறதோ?'' என்று அதே குரலிலேயே கேட்டான் சியாம்.

''என் விஷயம் வேறு, நான் குணாளனை மணந்து கொள்ளப் போகிறவள்!'' என்று மிடுக்காகப் பதிலிறுத்தாள் லில்லி. உடனேயே தொடர்ந்து, ''நீங்கள் பணக்காரர், கிண்டலாகப் பேசலாம். எங்கள் சசி ஏழை. மிஸ்டர்! இந்த விஷயம் வெளியானால்...'' என்று இழுத்தாள்.

''ஏன் வெளியாக வேண்டும்? எப்படி வெளியாகும்? நீங்களாக வேண்டும் என்று வெளியிட்டால் தவிர?''

''எப்படி வெளியாகாமல் இருக்கும்? தலைவலி என்றாளே என்று, வெளிக் காற்றில் உலாவப் போனோம் நாங்கள் இருவரும். பேச்சு வாக்கில் முன்னால் போய் விட்டோமா? திடீரென்று திரும்பிப் பார்த்தால் இவளைக் காணவில்லை. இரவெல்லாம் தேடித் தேடி அலைந்தோம். யாரிடமும் விசாரிக்காமல் ஒளித்து மறைத்துத் தேட முடியுமா? இது பரவாமல் எப்படி இருக்கும்?'' என்று ஆணித்தரமாகக் கேட்டாள் லில்லி.

''லில்லி! ப்ளீஸ் வாயேன், போகலாம். சொன்னால் கேளேன்!'' சசி இறைஞ்சினாள்.

திட்டம் வெளியாகாமல், சியாமையும் ஏமாற்றாமல், இந்த இடத்தை விட்டு எப்படியாவது வெளியேறிவிட வேண்டும் என்று துடித்தாள் அவள். ஆனால் ஒருவரேனும் அவளுக்கு மதிப்புக் கொடுப்பதாகத் தெரியவில்லை - சியாம் உட்படவே.

லில்லிக்குப் பதிலாக, "அதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?" என்று சீறினான் அவன்.

குணாளன் குறுக்கிட்டு அமைதியோடு பேசினான். "சியாம்! தப்பாக நினைக்கா விட்டால் நான் ஒன்று சொல்கிறேன். இந்த விஷயம் வெளியானால் சசிக்கு மட்டும் அல்லாமல் உனக்கும் கேவலம்தானே? பெண்களையே வெறுப்பவன் போல வாய்க் கிழியப் பேசியவன் ஒரு பெண் தனிமையில் கிடைத்தவுடன் விசுவாமித்திரனாகி வைத்துக் கொண்டான் என்பார்கள். உன்னிடமோ பணத்துக்குப் பஞ்சமில்லை. ஒரு பத்து பதினைந்து ஆயிரம் கொடுத்தா யானால் காதும் காதும் வைத்தாற் போலச் சசிக்குத் திருமணம் கூடச் செய்து விடலாம்," என்றான்.

"குணாளன், வேண்டாம்!" என்று கெஞ்சினாள் சசி. அவள் முகம் சிவந்து குருதிக் குழம்பென ஆயிற்று. இந்த நாடகம் இவ்வளவு வேதனையையும், அவமானத்தையும் தரக்கூடும் என்று அவள் அனுமானிக்கவே இல்லையே... தடுமாறியபடியே, "இந்தக் காலத்தில் இதெல்லாம் பொருட் படுத்த மாட்டார்கள். நா...ன்..." என்றவள் மேலே பேச முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

சிறு வியப்புடன் அவளை நோக்கிவிட்டு, "இந்தக் காலத்தில் கதைகளில் மட்டுந்தான் இதையெல்லாம் யாரும் பார்ப்பதில்லை சசி! வாழ்வில் மன்னிப்பே கிடையாது. பணம் பேசினால் தவிர!" என்றாள் லில்லி.

"சசி! இங்கே வா," என்றான் சியாம்.

தரையைப் பார்த்தபடி அவன் அருகே சென்றாள் சசி.

"நிமிரு சசி! தலை குனிய நீ என்ன தப்பு செய்தாய்?" என்றான் சிறு கண்டிப்புடன் அவன்.

'செய்தேன் செய்தேன்! உன்னை ஏமாற்றத் திட்டம் போட்டேனே!' என்று கதறியது அவள் மனம். உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாது நின்றாள்.

''இதோ பார் சசி! உன் மானம், என் மானம், அதன் விலை பத்தாயிரம் பதினைந்தாயிரம் என்றெல்லாம் பேசுகிறார்கள். எனக்கு அது சம்மதம் இல்லை... பொறுங்கள்..!'' என்று இடையே ஏதோ பேச முயன்ற லில்லியைக் கையமர்த்தி அடக்கினான். மீண்டும் சசியிடம், ''உன் கௌரவம் என் பொறுப்பு. சசி! என்னைப் பார்த்துச் சொல், என்னிடம் உனக்கு எந்த விதமான வெறுப்பும் தோன்றவில்லையே?'' என்று வினவி முடித்தான்.

இவன் என்ன சொல்ல வருகிறான் என்பது சசிக்குப் புரியவில்லை. ஆனாலும் அவனது கேள்விக்கு உண்மையான பதில் அவளிடம் இருந்தது. அவனை நேராகப் பார்த்து, ''இல்லை,'' என்றாள். ''நல்லது,'' என்று லேசாக முறுவலித்து விட்டுக் குணாளனிடம் திரும்பினான் சியாம்.

''உங்களுக்கு லில்லி சுற்றித் திரியலாம். ஏனெனில் நீங்கள் மணந்து கொள்ளப் போகிறவர்கள். இல்லையா? சசியும்கூட ஓர் இரவு நேரம் அடைக்கலம் என்று என் வீட்டில் தங்கலாம்தான். ஏன், என் வீட்டில் மட்டும்தான் தங்கலாம். ஏனெனில் நாங்களும் மணந்து கொள்ளப் போகிறவர்கள்!'' என்றான் தெளிவாக.

''சியாம்!'' என்று கதறி விட்டாள் சசி.

சசியின் கையை மென்மலரைப் போல ஏந்தினான் சியாம். ''உண்மை சசி! ஆனால் நீ என்னை மணந்து கொள்வாயா?'' என்று மிருதுவான குரலில் கேட்டான்.

சசி மட்டுமல்ல, குணாளனும் லில்லியும் கூடப் பிரமித்துப் போயினர்.

ஒரு வழியாகத் தன்னிலைக்கு வந்த சசி முதலில் பேசினாள். ''இதற்கு அவசியம் இல்லை சியாம்! வந்து... இரவு முழுவதும் தேடி அலைந்த கவலையாலும் பரபரப்பாலும் லில்லியும் குணாளனும் ஏதோ பேசி விட்டார்கள். தயவு செய்து எனக்காக அதையெல்லாம் மன்னித்து... மறந்து விடுங்கள். இதற்காக... இதற்காக என்னை மணந்து கொள்ள

வேண்டிய அவசியம் இல்லை,'' என்று கூறித் தன் கையை மெல்ல விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

''அவசியம் இல்லாமல் இருக்கலாம் சசி! ஆனால் என் நெஞ்சு நிறைய ஆசை இருக்கிறதே!'' என்று அவள் கையை விடாமல் பிடித்துக் கொண்டு புன்னகை செய்தான் சியாம்.

வியப்பும் திகைப்புமாக நம்ப முடியாமல் விழித்தாள்.

## 8

சசி விழித்தாளே தவிர லில்லி சுதாரித்துக் கொண்டாள்.

''உங்களுக்கு ஆசை இருந்து என்ன செய்வது? எங்கள் சசி என்ன அநாதையா, நீங்கள் நினைத்ததும் மணந்து கொள்வதற்கு? அவளுடைய அப்பா இருக்கிறார். பாவம், நோயாளி மனிதர். அவரது சிகிச்சைக்கும் பராமரிப்புக்கும் சசிதான் பொறுப்பாய்ச் செய்து கொண்டு இருக்கிறாள். இப்போது உங்களை மணப்பதற்காக அவள் அதையெல் லாம் உதறிவிட்டு வந்துவிட முடியுமா?'' என்று சாமர்த்தியமாகப் பணப் பிரச்னையை உள்ளே நுழைத்துப் பேசினாள்.

சற்ற வெறுப்பாக லில்லியைப் பார்த்த சியாம், ''சசியின் உறவினர், இனி என் உறவினர். அவளுடைய பொறுப்பு களும் என்னுடையவையே. இனி உங்களிடம் பேசுவதைவிட நான் சசியின் தந்தையைப் பார்த்துப் பேசலாம் என்று இருக்கிறேன்,'' என்று சற்று விரைப்பாகவே முடித்து விட்டான்.

''ஓ.கே. உங்கள் இஷ்டம்! சசி, வருகிறாயா?'' என்று அழைத்தாள் லில்லி.

''இல்லை. அவளை நானே அவள் வீட்டில் கொண்டு விட்டு விடுகிறேன். நீங்கள் போகலாம்,'' என்று சசிக்குப் பதிலாகத் தானே பதிலிறுத்தான் சியாம்.

''ம்ம்....'' என்று யோசித்தாள் லில்லி.

''இவ்வளவு நேரம் செய்யாத எந்தத் தவறை நாங்கள் செய்து விடுவோம் என்று பயப்படுகிறீர்கள்?'' என்று நேரடியாகக் கேட்டான் சியாம்.

''அப்படியில்லை...'' என்று திரும்பினாள் லில்லி.

குணாளன் சியாமிடம் வந்தான்.

அவனது இரு கைகளையும் ஆர்வத்துடன் பற்றிக் குலுக்கினான். ''மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் சியாம். சசி எனக்கு ஒரு சகோதரி போல. நீங்கள் இருவரும் நெடுங் காலம் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்!'' என்று வாழ்த்தினான்.

''நன்றி, குணாளன்!'' என்றான் சியாம் அமைதியுடன்.

இருவரும் புறப்பட்டுச் சென்று கார் ஓசை மறையும் மட்டும் சசி எதுவுமே பேசவில்லை. சியாம் சொன்ன 'நெஞ்சு நிறைய ஆசை'யில் அவளுக்கு நம்பிக்கை பிறக்க வில்லை. பின்னே? அதே நினைவில் மனம் குன்றி நின்றாள்.

''சசி!'' என்று சியாம் அழைத்த பின்னரும், தவிப் புடனேயே திரும்பினாள்.

முக வெளுப்பு மாறாமலே, ''நீங்கள் என்னை மணந்து தான் ஆக வேண்டும் என்பது இல்லை... வந்த லில்லி சொல்வது போல ஒன்றும் மா... மானம் போய்விடாது. நான் சமாளித்துக் கொள்வேன். நீங்கள் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டு இதைச் செய்ய வேண்டாம்,'' என்று எழும்பாத குரலிலும் அவசரமாய்ச் சொல்லி முடித்தாள்.

''ஏன் சசி, உன்னை மணந்து கொள்ளும் விருப்பம் எனக்கு இருக்க முடியாதா?'' என்றான் அவன் கனிவுடன்.

''எ... எப்படி இருக்க முடியும்? நாம் இரண்டாவது தடவையாகப் பார்ப்பது இப்போதுதான். முதலில் பார்த்தபோது ஒரு வார்த்தைகூட... பேசக்கூட இல்லை. அதுவும் அரை இருட்டில் பார்த்ததே. என்னை... என்னை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டதே அதிசயம். இந்த மாதிரி மீண்டும் சந்திக்கவில்லை என்றால், ம... மறந்துகூடப் போயிருப்பீர்கள்,'' என்றாள் சசி.

''மறப்பதா? உன்னையா மறப்பது? சசி, என்னோடு வா,'' என்று அவளை மாடியில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான் சியாம்.

பலவகைத் தாள்கள் தாங்கிகளில் வீற்றிருந்தன. சிலவற்றின் மீது திரைகளும் இருந்தன.

கடைசியாக இருந்த ஒரு திரையை அகற்றினான் சியாம்.

சசியின் விழிகள் விரிவடைந்தன. ''நான்!'' என்றாள் மிகுந்த ஆச்சரியத்துடன்.

''ஆம்,'' என்று புன்னகை செய்தான் அவன்.

அது சசியின் படம்தான். சரிகைப் பூப் போட்ட வெண்பட்டுச் சேலையில், விரித்த பட்டுக் கூந்தலில், அகன்ற நீண்ட கண்களில் சசி பளபளத்தாள். எப்படியோ அவள் முகம் பிரகாசமாய்த் தெரியுமாறு அவன் வரைந் திருந்தான்.

மேலே ஒரு மூலையில் ஏதோ எழுதியிருந்தது.

அருகில் சென்று பார்த்தாள் சசி.

''தேவதை!'' என்று எழுதியிருக்கவே, சசி மேலும் திகைத்தாள்.

ஆர்வத்துடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண் டிருந்த சியாம், ''என் தேவதை!'' என்றான்.

''இருந்திருந்து என்னைப் போய்த் தேவதை என்கிறீர் களே!'' என்றாள் கண்களில் நீர் மல்க.

''அந்தப் பெயர் உன்னையன்றி யாருக்குப் பொருந்தும்?'' என்றான் சியாம். ''கள்ளம் கபடமற்ற என் தேவதை.''

சசியின் முகம் வாடிப் போயிற்று. அவள் கள்ளம் கபடம் அற்றவளா? அவனிடமே கபட நாடகம் ஆட வந்தவள் ஆயிற்றே.

''ஏன் சசி முகவாட்டம்? உன் அப்பா நினைவா? உடம்பு சரியில்லை என்று அந்தப் பெண் வேறு சொன்னாளே! வா, முதலில் கொஞ்சம் காபி ஏதேனும் குடி. பிறகு நான்.. ஓ... கார் டயரில் வேறு காற்றில்லையே. நீ ரெஸ்ட் எடு. நான் போய் ஏதாவது ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன்,'' என்று கிளம்பினான் அவன்.

''நானும் வரட்டுமா?''

''ஊகூம், வேண்டாம். குறைந்தது ஒரு கிலோ மீட்டராவது நடக்க வேண்டியிருக்கும். உன்னால் முடியாது,'' என்று கரிசனத்துடன் மறுத்தான் அவன்.

முதல் தடவையாகச் சபேசனைப் பார்த்தபோது சியாம் மிகவும் அதிர்ச்சியடைந்தான்.

''இப்படிக் கிடக்கிறாரே! சரியாக டாக்டரிடம் பார்த்தாயா? ஸ்பெஷலிஸ்டிடம் காட்டினாயா?'' என்றான் சியாம்.

வைத்தியர்கள் சொன்ன சிகிச்சை பற்றிச் சசி கூறவும், ''குன்னூர்தானே, சேர்த்து விடுவோம். நாம் கோயமுத்தூர்க் கிளையைச் 'செக்' பண்ணச் செல்லும்போதெல்லாம் அப்படியே மாமாவையும் பார்...'' என்று சற்று நிறுத்திச் சிரித்துவிட்டு, ''உன் அப்பாவையும் அப்படியே பார்த்து விட்டு வரலாம்,'' என்று சொன்னான்.

சியாம் சென்ற பிறகு வெகு நேரம் சசிக்கு மனது நிலைப்படவில்லை.

நல்லவன், இளைஞன், அழகன், இத்தனைக்கும் மேல் இப்போதைக்கு அத்தியாவசியமான பணத்தைப் பெட்டி பெட்டியாக வைத்திருப்பவன் - அவன் விரும்பி அவளை மணக்க வருகிறான் என்றால் சசி ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்க வேண்டும்.

ஆனால் முடியவில்லை.

பல் வலி போல நெஞ்சுக்குள் ஒரு பகுதியில் முணு முணுவென்று வலித்துக் கொண்டே இருந்தது.

அவனை ஏமாற்றி மிரட்டிப் பணம் பறிக்கத் திட்டம் போட்டுச் செயலாக்கவும் தொடங்கியதை அவளால் மறக்க முடியவில்லை.

எண்ண எண்ணக் கடுகு மலையாகி மனதை வாட்டியது.

சசி சின்ன வயதிலேயே காந்தியடிகளின் 'சத்திய சோதனை'யை விரும்பிப் படித்தவள்.

உண்மையின் அடிப்படையில் அமையும் வாழ்வுதான் நிலைக்கும் என்பது அவளது எண்ணம்.

இங்கே பொய்ம்மையில் தொடங்கும் இந்த வாழ்வு நீடிக்குமா என்று நம்பிக்கை அற்றுக் கலங்கினாள்.

பழைய சேதியை அவனிடம் சொல்லி விடலாமா என்று கூட நினைத்தாள்.

ஆனால் அவனுடைய தேவதை அழகிழந்து போவாள்.

அந்த உடும்புப் பிடிக்காரன் முற்றிலும் ஒதுக்கி விடுவான்.

அவனை இழக்கக் கூடும் என்ற எண்ணமே வேதனையாக இருக்க, அதற்கு மேலாக அப்பாவின் நிலைமை என்ன ஆகும்?

தன்னியல்பாய்த் தானாக அவரது மருத்துவச் செலவை ஏற்பதாகச் சொன்னானே.

அந்த விலை உயர்ந்த வைத்தியத்துக்காகத்தானே முதலில் தப்பு செய்ய நினைத்ததுகூட.

இப்போது தானாக வெண்ணெய் திரளுகையில் தாழியைத் தூக்கிப் போட்டு அவள் உடைப்பது என்ன நியாயம்?

'எல்லாம் தந்தைக்காக!' என்று தறிகெட்டு ஓடிய மனதைப் பிடிவாதமாக அடக்கினாள்.

லில்லியின் சித்தப்பாவும் இந்தத் திருமணத்தில் வெகு உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டார். ''சசியுடைய தகப்பனாருக்கு ஒன்றும் முடியாது அல்லவா?'' என்று கூறிக் கொண்டார்.

ஏற்கெனவே தொழில் முறையில் லேசாகச் சியாமுடன் இருந்த தொடர்பைப் பலப்படுத்திக் கொண்டு பேசிப் பேசிக் குழையடித்து அவனுடன் ஒரு வியாபார ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

லில்லி முகத்தைச் சுளுக்கினாள். ''எங்கே போனாலும் பணம்தான் குறி இவருக்கு!'' என்றாள் சசியிடம்.

திருமணத்திற்காக அழகிய ரோஜா நிறச் சேலை ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள் லில்லி. உடல் எல்லாம் தங்கச் சரிகையும் வெள்ளிச் சரிகையுமாகப் பின்னல்கள். சேலை வெகு அழகாக இருந்தது. சசிக்கும் மிகவும் பிடித்துப் போயிற்று.

மாலையில் சசியைப் பார்க்க வந்த சியாமிடம் ஆர்வத்துடன் காட்டினாள்.

பார்த்துவிட்டு அவன் ஒன்றும் சொல்லாதிருக்கவே, ''உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கவலையுடன் வினவினாள்.

''சேலை நன்றாகவே இருக்கிறது. ஆனால் வெண் ணிறத்தில் இருந்தால்... என்ன சசி?''

''வெள்ளையா?'' என்று கேட்கும்போதே அவள் முகம் கலங்கிப் போயிற்று.

ஒரு கணம் புருவங்களைச் சுருக்கியவன் உடனே ஓகோ என்று சிரித்தான். ''உனக்கு இந்த மாதிரி அசட்டு நம்பிக் கைகள் எல்லாம் உண்டா சசி? பார், மேற்கத்தியர் எல்லாம் வெள்ளைதானே அணிகிறார்கள்? நன்றாக இல்லையா?'' என்றான்.

அவன் சிரிப்பதைத் தன்னை மறந்து பார்த்திருந்தாள் சசி. பிறகு, ''இருக்கிறார்கள், நாளொரு விவாகரத்தும் பொழு தொரு ஸெப்பரேஷனுமாக....'' என்று சொல்லி வரும் போதே பேச்சு தவறு என்று தோன்றி விட்டது அவளுக்கு.

''அப்படிச் சொல்வது தவறுதான். உடையின் நிறத் துக்கும் வாழ்வின் அமைப்புக்கும் தொடர்பு இல்லைதான். ஆனால் காலம் காலமாய் வளர்ந்து இரத்தத்தில் ஊறி விட்ட நம்பிக்கைகளைக் களைவது என்றால் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. தயவு செய்து வெண்ணிறச் சேலைகள் எனக்கு வேண்டாம்,'' என்றாள் கொஞ்சுதலாக.

அவன் முகம் உடனே கனிந்தது. ''உனக்குப் பிரியம் இல்லாத எதையும் நீ செய்யத் தேவையில்லை சசி. உன் உடையின் நிறம் எதுவானாலும் உன் உள்ளம் வெள்ளை. அதிலும் மாசு மருவற்ற வெண்மை என்பது எனக்குத் தெரியும் சசி! அந்த ஒரு நிறம் எனக்குப் போதும்,'' என்றான்.

''ஏங்கள் வெண்மையே ஏழு நிறங்களின் சேர்க்கைதானே சியாம்! மனிதனும் அதைப் போலத்தான். அவனிடமும் பலப்பல வண்ணங்கள்!'' என்றாள் சசி ஓர் அவசரத்துடன்.

''எப்படி?'' என்றாள், அவன் புன்னகையுடன்.

''வந்து... வந்து... கோபத்தில் சிவப்பு, காதலில் இளஞ்சிவப்பு, கருணையில் பச்சை, மயக்கத்தில் மஞ்சள் என்றெல்லாம் பல வண்ணங்கள்,'' என்றாள் சசி.

''ஆனால் உன் பேச்சுப்படியே வைத்துக் கொண்டாலும் ஏழு நிறங்களுமே தத்தமது தனித் தன்மை என்பதை விடுத்துத் தூய்மை பெற்று இணையும் போதுதானே வெண்மை என்று ஆகிறது? அதுபோலவே மனிதனிடமும் தப்புகள் எல்லாம் மறைந்து நல்ல குணங்கள் மிகுந்து தூய்மை பெறுகிறபோது உன் மனம் போல வெள்ளை மனம் ஆகிவிடும்,'' என்றான் வெற்றி முறுவலுடன் சியாம்.

சசிக்குச் சுருக்கென்றது. ''நான் ஒன்றும் தப்புத் தவறுகளே செய்தறியாத உத்தமி அல்ல சியாம். எத்தனை எத்தனையோ குற்றம் குறைகளை உடைய ஆயிரம் ஆயிரம் சாதாரணப் பெண்களில் ஒருத்திதான்.''

''அப்படிப்பட்ட ஆயிரம் ஆயிரம் சாதாரணப் பெண்கள் எல்லோரும் தன்னை விட்டால் உத்தமியே கிடையாது என் பார்கள். உன்னுடைய பேச்சே உன் தூய்மையைக் காட்டு கிறதே. சசி நீ என்னதான் சொன்னாலும் நீ என் தேவதையே தான்!'' என்று பிடிவாதத்துடன் கூறினான் சியாம்.

பிறகு வருங்கால மாமனாரின் உடல்நிலை பற்றி விசாரித்தான்.

அவள் இப்போதைய தீவிர சிகிச்சையினால் கொஞ்சம் பரவாயில்லை என்றாள்.

''இன்னமும் நாலே நாலு நாள். பிறகு குன்னூரின் சூழ்நிலையில் அவர் நன்றாக ஆகிவிடுவார் பாரேன்,'' என்றான் சியாம் அவளுக்கு ஆறுதலாக.

''நீங்கள் அப்பாவுக்காகச் செய்வதற்கெல்லாம் நான் எந்த வகையில் ஈடு கட்டப் போகிறேனோ!'' என்றாள் சசி நன்றியுடன்.

''என் தேவதைக்கு இந்தச் சின்ன உதவி செய்ய வாய்ப்புக் கிடைத்ததற்காக நான்தான் நன்றி செலுத்த வேண்டும்,'' என்று முறுவலித்து விட்டுப் போனான் அவன்.

தேவதை தேவதை என்கிறானே, இவனிடம் உண்மையை மறைத்து ஏமாற்றுகிறேனே என்று குமைந்தாள் சசி.

லில்லியிடம் சொல்லவும் செய்தாள். "கொஞ்சம்கூடச் சந்தேகப்படாமல் இப்படி நம்புகிறாரே லில்லி! நம் பொய்களைக்கூட ஓர் அணுக் குறையாமல் முழுக்க முழுக்க நம்புகிறாரே! இந்த நம்பிக்கையே என்னைச் சுட்டுப் பொசுக்குவது போல இருக்கிறது," என்று சொல்லிச் சொல்லி மாய்ந்தாள்.

"பைத்தியம் போல உளறுகிறாயே சசி! அவர் நம்பினால் நல்லதுதானே. அது இது என்று தூண்டித் துருவாமல் இருக்கிறாரே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். நீயானால் அதற்கு வேறு மூக்கால் அழுகிறாயே! அவர் சந்தேகப்பட வேண்டும்; துளைத்து வளைத்துக் கேட்க வேண்டும்; நீ மாட்டிக் கொண்டு விழிக்க வேண்டும் என்கிறாயா?" என்று பொரிந்து தள்ளினாள் லில்லி.

"ஐயோ, அதில்லையடி. இப்படி நம்புகிறவரை ஏமாற்றுகிறேனே என்று வேதனையாக இருக்கிறது."

"ஓகோ! அப்படியானால் ஒன்று செய்யேன், சசி! நேராகச் சியாமிடம் போய் உள்ளதை யெல்லாம் பிட்டு வைத்து விட்டு வந்துவிடேன்," என்று இரக்கமில்லாமல் சொன்னாள் லில்லி.

"என்னடி நீ கொஞ்சமும் புரியாமல் பேசுகிறாயே!" என்று குறைப்பட்டாள் சசி.

ஓடிவந்து தோழியின் தோளைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள் லில்லி. "சசி! எனக்கு உன் திண்டாட்டம் புரியாமல் இல்லை. ஆனால் உனக்கு இப்போது எதுவுமே புரியவில்லை பார். உன் வழியில் நல்ல விஷயங்கள் அதிகமாய் வந்தது இல்லை. வந்திருக்கும் ஒன்றையும் அனுபவிக்காமல் ஏதேதோ குருட்டு எண்ணங்களில் வீணாக்குகிறாயே என்பதுதான் எனக்கு எரிச்சலாக இருக்கிறது. பொறு. நம்புகிறவரை ஏமாற்றுவது வருத்தமாக இருக்கிறது என்கிறாய். கஷ்டம்தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் பரிகாரம் இல்லாத ஒன்றை நினைத்து வருத்தப்படுவதால்

யாருக்கு என்ன லாபம்? மேலும் நீ சொல்லி விடுவதால் மட்டும் சியாம் மகிழ்ந்துவிடப் போகிறாரா? வேதனைப்படுவார்; முன்னையும் விடப் பெண்களை அதிகமாக வெறுப்பார். மேலும் உன் அப்பா நிலை என்ன ஆகும்? ஏன், நீதான் என்ன ஆவாய்? ஏய், எனக்குத் தெரியாது என்று நினைக்காதே. சியாம் உன் மனதில் குடியேறி விட்டார் என்பது நன்றாகவே எனக்குத் தெரியும். இப்போது அவரையும் வேதனைப்படுத்தி உன்னையும் வருத்திக் கொள்ளப் போகிறாயா? அதைவிட, இந்தத் தவறுக்கு ஈடு செய்வதற்காகக் காலம் முழுமையும் அவருக்கு மகிழ்ச்சியை அளிக்க உறுதி செய்து கொண்டால் என்ன? அதை விட்டுச் செல்லாத ஊருக்கு ஓராயிரம் வழிகளை எண்ணி எண்ணிப் பார்த்து ஒன்றும் சரியில்லையே என்று சோர்வானேன்?'' என்று ஒரு பெரிய சொற்பொழிவே ஆற்றி முடித்தாள்.

சற்று யோசித்துவிட்டு, ''நீ சொல்வது சரியாகத்தான் படுகிறது லில்லி! ஆனால்...'' என்று இழுத்தாள் சசி.

''படுவதோடு நிறுத்து. ஆனாலை விடு,'' என்றாள் லில்லி மகிழ்ச்சியோடு.

''ஆம் லில்லி! அதுதான் சரி. இனி அவருடைய ஆனந்தத்தையே என் வாழ்வின் முக்கியமான குறிக்கோளாய்க் கருதிச் செயல்படப் போகிறான். அவருக்கு மகிழ்ச்சி அளிப்பதில் நான் ஊதுபத்தியாய் எரிந்து மறைந்தாலும் சரிதான்,'' என்றாள் சசி உறுதியோடு.

''சபாஷ்!'' என்று கை தட்டினாள் லில்லி.

## 9

திருமணத்தன்று இரவு ரயிலிலேயே சபேசனை அழைத்துக் கொண்டு மணமக்கள் இருவரும் கிளம்பினர்.

''இன்றே கிளம்புவார்களா? முதல்... முதலிரவு!'' என்று முகம் சிவக்க முணுமுணுத்தாள் லில்லி.

''குன்னூர் அருமையான ஹனிமூன் ஸ்பாட்!'' என்று நகைத்துவிட்டுப் போனான் சியாம்.

குணாளன் விழிப்புடன் விழிகளை உருட்டினான்.

''சியாமா சிரித்தது? அவன் இப்படிக் கூடச் சிரிப்பானா? உன் திறமையா சசி? வாழ்த்துக்கள். இந்தச் சிரிப்பு இப்படியே நிலைப்பதாக!'' என்று ஆசீர்வதித்தான்.

''நன்றி!'' என்று முறுவல் செய்தாள் சசி. ''இனி லில்லிக்கு மூக்கணாங்கயிறு மாட்டுவதுதான் பாக்கி.''

''கட்டியிருக்கும் கயிற்றின் சுகம் இப்படிப் பேசச் சொல்கிறதாக்கும்!'' என்று சிரித்தாள் லில்லி.

முதல் வகுப்புப் பெட்டியில் நான்கு படுக்கைகளையும் ரிசர்வ் செய்திருந்தான் சியாம்.

''வேறு யாரும் வந்து போய்க் கொண்டிருந்தால் மாமா வுக்குத் தொந்தரவாக இருக்கக் கூடும்,'' என்று சசியிடம் விளக்கம் கூறினான்.

ஆனால் சபேசன் மருந்தின் மயக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

சசி கலக்கத்துடன் அடிக்கடி தந்தையைப் பார்ப்பதைக் கவனித்து, ''ஒன்றும் இல்லை சசி! ஊசி மயக்கம்தான். காலையில்தான் தெளியும் என்று டாக்டர் சொன்னாரே. காலையில் கோவையில் வந்து பார்க்க ஒரு டாக்டரை அங்கே ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை அவர் பார்த்துக் கொள்வார். பயப்படாதே,'' என்று அவளைத் தேற்றினான்.

அவளது கவலையை மாற்ற என்னென்னவோ பேசினான். அவளும் மெல்ல மெல்ல முகம் தெளிந்தாள்.

பேச்சு கடைசியில் லில்லியிடம் வந்து நின்றது.

''அவள் ராபர்ட்டின் அண்ணன் மகள் என்று நான் நினைக்கவே இல்லை. அவளும் குணாளனும் சீக்கிரமே மணந்து கொள்ளப் போகிறார்களா?'' என்று விசாரித்தான்.

''அவர்கள் இருவருக்கும் ஆசைதான். ஆனால், அவளுடைய சித்தப்பா ஓ.கே. பண்ண வேண்டும். மறுத்துவிடக் கூடாதே என்று இருவருக்கும் கொஞ்சம் பயம்,'' என்றாள் சசி.

''இவர்கள் இருவரும் மனம் ஒத்து விட்டால் பிறகு ராபர்ட்டைப் பற்றி என்ன பயம்? லில்லி வயது வந்தவள் தானே.''

''ஆமாம். ஆனால் லில்லியின் சொத்துக்கள் எல்லா வற்றுக்கும் அவர்தான் கார்டியன். பொறுப்பு உரிமை எல்லாமே அவருக்குக் கொடுத்து எழுதி வைத்திருக்கிறார் லில்லியின் அப்பா. அவருடைய விருப்பத்துக்கு மாறாக மணந்து கொண்டால் சொத்து முழுவதையும் அவர் தருமத்துக்கு எழுதி வைத்துவிட முடியும். பணத்துக்காக வரக் கூடியவர்களைத் தடுக்க என்று இப்படி எழுதி வைத்தாராம். லில்லியின் சித்தப்பாவும் ஒரு மாதிரி மனிதர். செய்தாலும் செய்து விடுவார் என்று பயப்படுகிறாள் லில்லி,'' என்று விளக்கினாள் சசி.

சியாமின் இதழ்களில் அவள் கண்ட ஏளனப் புன்னகை படர்ந்தது. ''ஓகோ. பணமும் வேண்டும். காதலும் வேண்டுமாக்கும். காசு இல்லாவிட்டால் காதல் அம்போ! எவ்வளவு ஆழமான காதல்!'' என்றான் ஏளனமாக.

''அப்படியில்லை!'' என்று அவசரமாக மறுத்தாள் சசி. ''உரிமை உள்ள பணத்தை அனாவசியமாக ஏன் விட வேண்டும் என்று பார்க்கிறார்கள். ஆனாலும் பணம் காசு எல்லாவற்றையும் உதறிவிட லில்லி தயார்தான். ஆனால் நடுத்தரக் குடும்பத்து வாழ்க்கையை அவள் தாங்குவாளா என்பதில் குணாளனுக்கும் அவருடைய தாயாருக்கும் சந்தேகம். 'கற்றுக் கொள்வேன்!' என்று அவள் நம்பிக்கை யாக இருக்கிறாள். 'நன்கு யோசி!' என்கிறார் குணாளன்.''

அவளுடைய எதிர்காலம் பற்றி அவ்வளவாக அக்கறை இல்லாதவன் போலத் தோளைக் குலுக்கினான் சியாம்.

பிறகு, ''குணாளன் நம் திருமணத்தில் இவ்வளவு ஒத் துழைத்தது எனக்கு மிகவும் ஆச்சர்யம் சசி! நம் திருமணத்தை முடிந்த அளவு தடுப்பான் என்று நினைத்தேன். ஏனென்றால் கல்லூரி நாள்களில் எங்கள் இருவருக்கும் இடையே எப்போதும் தகராறுதான்,'' என்றான் யோசனையோடு.

''ஏனோ? என்ன தகராறு?'' என்று விசாரித்தாள் சசி.

''அது உனக்கும் சொல்லியிருக்கிறேன் - அல்லவா? சசி! முன்பெல்லாம் பெண்களைக் கண்டாலே எனக்கு வெறுப்பு.

இந்தப் பெண்மை தாய்மை தூய்மை என்றாலே எனக்குப் பற்றிக் கொண்டு வரும். குணாளன் நேர் விரோதம். அபிராமி பட்டர் போலப் பெண்களைப் பார்த்தாலே நமஸ்காரம் செய்ய அவன் தயார். என்னவோ அவன் தகப்பனார் இறந்த பின்னால் தாயாரே கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தாராம். அதனால் பெண்கள் என்றாலே தெய்வ அவதாரங்கள் என்பான். எப்போதும் சண்டைதான். அதை மனதில் வைத்திருப்பான் என்று நினைத்தேன். மறந்தே விட்டிருக்கிறான். எல்லாம் உன் மகிமைதான் சசி! உன்னால் நானே எப்படி மாறிப் போனேன் பார்.''

பேச்சு அபாயகரமான திசையை நோக்கிச் செல்வதைக் கண்டதும், பேச்சை மாற்றினாள்.

தூக்கம் வந்தாற் போலக் கண்ணைக் கசக்கிக் கொட்டாவி விட்டாள்.

எதிர்பார்த்தது போலவே படுக்கச் சொன்னான் அவன்.

கண்களை இறுக மூடிக் கொண்டு வெகு நேரம் யோசித்தாள் சசி.

இந்த மாதிரி நழுவல்களை நினைத்தால் அவளுக்குப் பயமாக இருந்தது.

மேலும் மேலும் தப்பு செய்துகொண்டே போவது போல மனம் கனத்தது.

அவன் காட்டும் பிரியமும் கனிவும் கனத்தை இருமடங்காக்கின.

ஒருவேளை - எப்படியோ ஒரு சமயம் அவனுக்கு உண்மை தெரிந்து போனால் இந்தப் பிரியமெல்லாம் மாறி விடுமே என்று கலங்கினாள்.

ஆனால் வேறு யார் மூலமாகவும் தெரிய வாய்ப்பே இல்லையே என்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

இந்தக் குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக முழுக்க முழுக்க அவனுக்கு அடிமையாக வாழ்வது என்று உறுதி கொண்டாள்.

ஆனால் மறுநாள் முழுவதுமே அந்த உறுதி அவளுக்கு அடியோடு மறந்து போனது.

ரயிலின் அசைவோ, தட்ப வெப்ப மாறுதலோ ஏதுவோ சபேசனுக்குத் தாங்கவில்லை.

கோவையை அடையுமுன் வெகுவாக மூச்சுத் திணறத் தொடங்கி விட்டது.

மேட்டுப் பாளையத்துக்குப் பதிலாகக் கோவையிலேயே இறங்கி விடும்படி ஆயிற்று.

அங்கே சில உடனடிச் சிகிச்சைகளைச் செய்து கொண்டு ஆக்சிஜன் சிலிண்டருடன் டாக்டரும் உடன்வரக் காரில் மெல்லப் பயணம் செய்து குன்னூரை அடைகையில் கிட்டத்தட்ட இரவாகி விட்டது.

மருத்துவ மனையின் ஹாலில் சசி கவலையுடன் உட்கார்ந்து விட்டாள். அவள் செய்வதற்கும் ஒன்றும் இல்லை.

சியாம்தான் டாக்டருடன் ஏதோ பேசுவதும் அடிக்கடி அவளிடம் வந்து, ''ஒன்றும் பயம் இல்லை சசி!'' என்பதுமாக இருந்தான். கடைசியாகச் சபேசனுடைய உடல்நிலை சற்றுத் திடமாகி அவர் அமைதியாக உறங்கத் தொடங்கினார்.

சசியும் சியாமும் அவர்களுக்கு என்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஓட்டலுக்குச் சென்று சேர்கையில் பின்னிரவு ஆகிவிட்டிருந்தது.

அப்போதும் சசியின் நினைவு இங்கே மீளவில்லை.

சூடான பால் வரவழைத்தான் சியாம்.

ஒரு கப்பை அவளிடம் நீட்டினான்.

''இதைக் குடித்துவிட்டுப் படுத்துக் கொள் சசி,'' என்று அவன் கூறியபோது திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

திகைப்பும் ஒரு பயமுமாகக் கணவனைப் பார்த்தாள்.

மிருதுவான புன்னகையுடன் தலையசைத்தான் சியாம். ''நம் காலம் நீண்டு கிடக்கிறது சசி,'' என்று மெல்ல அவள் கன்னத்தில் தட்டிவிட்டு அடுத்த கப் பாலுடன் அந்த 'சூட்'டின் மறு அறைக்குள் சென்று விட்டான்.

காலையிலும் சியாம் அழைத்த பின்தான் சசி விழித்தாள்.

பெரிய 'ட்ரே'யில் ஜக், காஃபி கப் இத்யாதியுடன் உள்ளே வந்தான் அவன்.

''திருப்பள்ளி எழுச்சி பாடவா? சீக்கிரம் பல் துலக்கி வந்தால் குளிருக்கு இதமாகக் காஃபி குடிக்கலாம்,'' என்று லேசாகச் சிரித்தான்.

சசி வெட்கத்துடன் அவசரமாக எழுந்தாள். வேக வேகமாய்ப் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு ஓடி வந்தாள்.

அவன் ஜக்கை எடுத்து கப்பில் டிகாக்ஷனை ஊற்றத் தொடங்கினான்.

''நான் செய்கிறேன்,'' என்றாள் சசி அவசரமாக.

''வெள்ளைக்காரன் நாகரிகம்!'' என்றான் சியாம் காரியத்தில் கவனமாய்.

''அது அங்கேயே இருக்கட்டுமே!'' என்றாள் சசியும் அவன் பாணியிலேயே.

''ஹே, அந்த மாதிரி காஃபி குடிக்கையில் நாமும் அதையே கடைப்பிடிப்போமே!'' என்று இன்குரலிலேயே கூறிவிட்டு, ''சர்க்கரை எத்தனை ஸ்பூன்?'' என்று வினவினான்.

அவ்வளவு கனிவிலும் அவன் விட்டுக் கொடுப்பதாக இல்லை என்பதை உணர்ந்து, 'ஒன்று,' என்றாள் சசி.

''குட்!'' சர்க்கரையைக் கலக்கி கப்பை சாஸரில் வைத்து நீட்டினான் அவன்.

''அப்பாவை எப்போது பார்க்கலாம்?''

''குளித்துச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு பத்து மணிக்குப் போகலாம்...''

''அதற்கு முன் முடியாதா?'' என்று காலியான கப்பைக் கீழே வைத்தாள், சசி.

''முடியும்! ஆனால் இப்போது மணி ஒன்பது.''

''ஆங்...'' மெய்யாகவே மணி ஒன்பதுதான். இவ்வளவு நேரமா தூங்கினோம் என்று வெட்கிப் போனாள் சசி.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''வெட்கப்பட ஒன்றும் இல்லை சசி! இங்கே இப்போதுதான் ஆறு மணி போல இருக்கிறது பார். இங்கெல்லாம் அதிகாலை விழிப்பு குளிப்பு எல்லாம் வசதிப்படாது. இப்போது கிளம்பு. மாமாவைப் பார்த்து விட்டு அப்படியே கொஞ்ச தூரம் வாக்கிங் போய் வரலாம்,'' என்றான் அவன்.

தந்தைக்கு எப்படியிருக்கிறதோ என்று அரிக்கத் தொடங்கி விட்டது சசிக்கு. ஆனால் அவனிடம் வாய் ஓயாது, 'அப்பா அப்பா' எனவும் சங்கடமாகவும் இருந்தது. பேசாமல் எழுந்தாள்.

உணர்ந்தவன் போல அவன், ''காலையில் நர்சிங் ஹோமுக்குப் போன் செய்தேன். மாமாவுக்குக் கொஞ்சம் பெட்டராக இருப்பதாகச் சொன்னார்கள்,'' என்றான்.

நன்றியுடன் கூடிய புன்னகையைப் பதிலாகத் தந்தாள் அவள்.

மருத்துவமனையில் சபேசனைப் பார்த்ததும் சசிக்கு ஒரே மகிழ்ச்சி. அவர் உட்கார்ந்திருந்தார். மருமகனைப் பார்த்து உட்காரும்படி உபசாரம் கூடச் செய்தார்.

திரும்பி வரும்போது, ''ஒரே நாளில் இவ்வளவு மாற்றம் தெரிகிறதே சியாம்,'' என்றாள் உவகையுடன். உடனே நாக்கைக் கடித்துக் கொண்டு, ''ஸாரி! பெயரைச் சொல்லி விட்டேன்,'' என்றாள் வெட்கத்துடன்.

''பெயரைத்தான் சொல்ல வேண்டும். எனக்கு இங்கு உள்ள இந்த அத்தான் பொத்தான் எல்லாம் பிடிக்கவில்லை சசி! மேல் நாடுகளில் போல நீயும் என்னைப் பெயர் சொல்லித்தானே சொந்தமாக அழைக்க வேண்டும். இது என் விருப்பம்,'' என்றான் உறுதியோடு.

அங்கே வால்பேரி விற்றுக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனிடம் நாலு வால்பேரிக் காய்களை வாங்கினான்.

குழாயில் கழுவி அவளிடம் இரண்டை நீட்டினான்.

''வால்பேரிக் காய்கள் இங்கு போல எங்கும் ருசிப்பதில்லை சசி! ப்ளம்ஸ்கூட அப்படித்தான்,'' என்று ஒன்றைக் கடித்தான்.

''நீங்கள் இங்கே அடிக்கடி வருவீர்களா?'' என்று விசாரித்தாள் சசி.

''ஊகூம்! ஆனால் ஏதாவது இயற்கை அழகைப் பற்றிப் படம் வரைய வேண்டும்போல் தோன்றினால் கோயமுத் தூருக்கு வரும்போது இங்கேயும் வருவேன்... இதுதான் மெயின் ரோடு. இங்கேதான் எல்லாமே. அந்தப் பக்கம் ரயில் நிலை யம், பொதுவாக பஸ் ஸ்டாண்டில்தான் கூட்டம் அதிகம்...'

இயற்கையின் எழிலுடன் சியாமின் கம்பீரமான குரல் மென்மையுடன் இணை சேரச் சசிக்கு நேரம் போவதே தெரியவில்லை.

மதிய உணவின் பின்னர் ஒரு டாக்சியை எடுத்துக் கொண்டு சற்று தூரம் சென்று திரும்பினர்.

மாலையில் சபேசனைக் காணச் சென்றனர்.

அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கவே திரும்பி வந்தனர்.

மீண்டும் தங்கியிருந்த ஓட்டலுக்குத் திரும்புகையில் ஒரு சம்பவம் நடந்தது.

சாதாரணமான சம்பவம்தான்.

ஆனால் சசிக்கு உயிர் நிலையே உதறத் தொடங்கி விட்டது.

ஒரு சிறுவன். பத்து வயதிருக்கும். கண் தெரியவில்லை என்று பிச்சை கேட்டான்.

பார்க்கப் பரிதாபமாக இருக்கவே, சசி ஒரு பத்துப் பைசாவைப் போடப் போனாள்.

சட்டென முரட்டுத்தனமாக அவள் கையைப் பற்றி மடக்கித் தடுத்தான் சியாம்.

ஏன் என்று புரியாமல் திகைத்தாள் சசி.

''திருட்டுப் பயல்கள். இதெல்லாம் ஏமாற்றாக்கும் சசி! இவர்களுக்கு ஒன்றுமே கொடுக்கக் கூடாது'' என்றான் அவன் கடுமையாக.

''ஒருவேளை மெய்யாகவும் இருக்கலாமே,'' என்றாள் சசி மெதுவாக.

''நூற்றுக்குத் தொண்ணூறு பிச்சைக்காரக் குருடர்கள் வேஷக்காரர்கள்தான். பத்து நிஜக் குருடர்கள் சம்பாதிப் பதைப் பார்த்து வேடம் போட்டு ஏமாற்றும் சோம்பேறிகள். ஒருவருக்குமே கொடுக்காவிட்டால் இந்த ஏமாற்று வேலை நின்றுவிடும் அல்லவா?''

''ஆனால் அந்தப் பத்துப் பேரும்கூடப் பட்டினி கிடக்க நேருமே, சியாம்!'' என்று வாதாடினாள் சசி. அந்தப் பையனின் பரிதாபமான முகம் அவள் மனதைக் குடைந்தது.

''ஓர் ஏமாற்றுப் பிழைப்பு நடவாமல் இருக்க அந்தப் பத்துப் பேரும் பட்டினி கிடந்து செத்தால்தான் என்ன?'' என்றான் சியாம் கடுமையாகவே.

திடுக்கிட்டுப் போனாள் சசி. ''பத்துக் குற்றவாளிகள் தப்பி விட்டாலும் பரவாயில்லை. ஒரு நிரபராதி தண்டிக்கப் பட்டுவிடக் கூடாது என்கிறது நமது நீதித்துறை!'' என்றாள் வெடுக்கென்று.

''நானாயிருந்தால் சட்டத்தை மாற்றியிருப்பேன். பத்து நிரபராதிகள் தண்டிக்கப் பட்டாலும் பரவாயில்லை. ஒரு குற்றவாளி தப்பிவிடக் கூடாது என்று அமைத்திருப்பேன். இப்படி யெல்லாம் இரக்கம் காட்டிக் காட்டித்தான் இந்த நாட்டில் குற்றவாளிகள் பெருத்துப் போனார்கள். எல்லாரையும் நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்ல வேண்டும்,'' என்றான் அவன் சினத்துடன்.

''சியாம்!'' என்று அதிர்ச்சியுடன் கூவினாள் சசி.

''உண்மை சசி! உண்மையைச் சொல்லிப் பசி என்று கேட் டால் ஒரு ரூபாய் கொடுக்கவும் நான் தயங்க மாட்டேன். ஆனால் என்னிடம் ஏமாற்று வேலை செய்பவனை ஒரு நாளும் மன்னிக்க மாட்டேன். தண்டனை கொடுக்காமலும் விடமாட்டேன்,'' என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக.

கூடவே செல்லாத செக்கைக் கொடுத்து அவனை ஏய்க்க முயன்ற ஒருவனை எப்படி அவன் பணம் கொடுத்த பிறகும் கம்பியெண்ண வைத்தான் என்பதைச் சற்றுப் பெருமையோடு தானே விளக்கினான். ''அதன் பிறகு என்னை ஏய்க்க எவனும் முயன்றதுகூடக் கிடையாது, தெரியுமா?'' என்று அவன் அதே தோரணையில் மேலே பேசியபோது சசிக்குப் பாதி உயிர் செத்துவிட்டது.

அவள் அவனிடம் மெய்யை மட்டுமாகச் சொல்லி யிருக்கவில்லையே!

இப்போது சொன்னால் என்ன ஆகும்?

என்னதான் ஆனாலும் இப்படி நடுங்கி நடுங்கி அரை உயிர் ஆவது நின்றுவிடும் அல்லவா!

தைரியத்தைக் கூட்டிக் கொண்டு அவள் மெல்லத் தொடங்குமுன் ஓட்டல் கட்டடம் கண்ணில் பட்டது.

உணவு முடிந்து பணியாள் சென்ற பின், மீண்டும் தொண்டையைச் செருமினாள்.

''சியாம்... நான்... நான் உங்களிடம் ஒ ஒ...ன்று சொல்ல வேண்டும்,'' என்றாள் உதடு நடுங்க.

அவள் முகத்தைக் கவனித்துவிட்டு, ''நீ சொல்லத் தேவையில்லை,'' என்றான் அவன்.

''ஏன்?'' என்று விழித்தாள் சசி.

''நீ சொல்ல வருவது என்னவென்று எனக்குத் தெரியும்,'' என்றான் அவன் நிதானமாக.

''..........''

சசி பிரமித்தாள்.

## 10

சசியின் வெளுத்த முகத்தைப் பார்த்த சியாம் எழுந்து அவள் அருகில் வந்தான்.

அவள் கையைப் பற்றி எழுப்பி ஒரு சோபாவில் அமரச் செய்து தானும் அருகே அமர்ந்து கொண்டான்.

''சசி! இங்கே இருக்கும் வரையில் உன் மனம் மாமாவை எண்ணித் தவித்துக் கொண்டேதான் இருக்கும். அதோடு பார்த்துப் பத்து நாள்களுக்குள், உன் கழுத்தில் தாலி கட்டி விட்ட ஒரே காரணத்துக்காக உன்னிடம் நான் உரிமை கோருவதும் சரியில்லை. மெல்ல மெல்ல உன் மனம் என்னிடம் பதியட்டும்; பிறகு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு எதையும் எண்ணிக் கலங்காமல் தூங்கு,'' என்றான் கனிவாக.

பேச முடியாமல் ஏதோ தொண்டையை அடைத்தது அவளுக்கு. சமாளித்துக் கொண்டு, ''அ... அதில்லை சியாம், நான்...'' என்னுமுன் அவன் குறுக்கிட்டான்

அவள் உதட்டில் விரலை வைத்துப் பேச்சைத் தடுத்து நிறுத்தினான்.

''இனி எதுவுமே பேசக்கூடாது,'' என்று அவள் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி நெற்றியில் லேசாக இதழ் பதித்து விட்டு எழுந்து போனான் அவன்.

இந்த மென்மையும் அந்த முரட்டுத்தனமும் -

இந்த விட்டுக் கொடுக்கும் தன்மையும் அந்தப் பிடிவாதமும் -

இதெல்லாம் அவனிடம் ஒருங்கு இணைந்து இருப்பது எப்படிச் சாத்தியம்!

இந்த இரண்டிற்கும் நடுவில் சசியின் வாழ்வு மலருமா அன்றிக் கருகுமா?

வெயிலும் மழையும் மாறி மாறிப் பட்டுப் பாறைகள் உடைந்து மணல் தோன்றியதாகச் சிறு வயதில் படித்த பாடம் ஏனோ அப்போது நினைவு வந்தது அவளுக்கு.

இருவரும் மேலும் நான்கு நாள்கள் அங்கே தங்கி யிருந்தனர்.

சபேசனின் உடம்பு சற்றுத் தேறி அவரே சென்று வருமாறு கூறிய பின்னர்தான் இருவருமாகச் சென்னைக்குத் திரும்பினர்.

திரும்பு முன் கோவையில் அவனுக்கு ஏதோ வேலை என்று இரண்டு நாள்கள் தங்க நேர்ந்தது.

முதல் நாள் மாலையில் அலுவலகத்திலிருந்து திரும்பு கையில் இரு டிக்கெட்களுடன் வந்தான் சியாம்.

''இங்கே நாடக விழா நடக்கிறது சசி! இரு டிக்கெட் வாங்கும்படி ஆயிற்று. அநேகமாக நன்றாகவே இருக்கும். பார்த்துவிட்டு வரலாம். வா,'' என்று சசியை அழைத்தான்.

அந்த நாடகம் சசியின் தலைவிதியைத் தலைகீழாக மாற்றி எழுதியது.

முன் பகுதியில் 'பேட்ரன்' பிரிவில் இருவரும் அமர்ந் திருந்தனர்.

நாடகம் சுவாரசியமாகச் சென்றது.

இரண்டாம் கதாநாயகிபோல வந்துபோன ஒரு பெண்ணைப் பார்க்கையில் ஏதோ அறிமுகமான முகம் போலச் சசிக்குத் தோன்றியது.

ஆனால் முக்கியப் பாத்திரங்களின் நடிப்பையும் அவர்களைச் சுற்றிச் சுழன்ற கதையையும் கவனிக்கும் தீவிரத்தில் அந்த முகம் சசியின் மனதில் பதியவில்லை.

ஆனால் கிரீன் ரூமில் அடுத்த காட்சிக்காக உடை மாற்றிக் கொண்டு வந்த அந்தப் பெண் ஸ்டேஜ் இடுக்கிலிருந்து சசியையே குரோதத்துடன் முறைத்துக் கொண்டிருந்தாள்.

சசியை என்பதைவிட சசியின் விலை உயர்ந்த ஜப்பான் சில்க் சேலையையும் பளிச்சிட்ட நகைகளையும் என்பது சரியாகும்.

'இவளுக்கு ஏது இந்த வாழ்வு' என்று வயிறு எரிந்தது அந்த நடிகைக்கு.

சசியின் அருகில் அவளுக்குப் பொருத்தமான அழகுடன் தூய வெண்ணிற ஆடையில் எடுப்பாக அமர்ந்து இருந்தவனைக் கண்டதும் எரிச்சல் இரு மடங்காயிற்று.

பேட்ரன் பகுதி வேறு.

அருகில் இருந்த ஸ்கிரீன் தூக்கும் பையனை அழைத்துச் சசியையும் சியாமையும் காட்டி ஏதோ சொன்னாள்.

சொன்னதைச் செய்தால் ஐந்து ரூபாய் தருவதாக ஆசை காட்டினாள்.

அவனும் தலையாட்டினான்.

நாடகம் முடிந்து கிளம்புகையில் அந்தப் பையன் சசியை வழிமறித்தான்.

''அம்மா ரொம்ப அவசரமாக உங்களைப் பார்க்கணுமாம்மா,'' என்றான்.

யார் என்று சசிக்குப் புரியவில்லை.

''டிராமாலே நடிச்ச அம்மாம்மா. வந்தீங்கன்னாக்க ஒரு நிமிட்ல திரும்பிடலாம்,'' என்று அழைத்தான்.

சசி தயங்கவும், ''இன்னா பயம்மா? வேணும்னா ஐயாவும் கூட வரட்டும். வாங்கம்மா,'' என்று வருந்தி அழைத்தான்.

''நானும் வருகிறேன் சசி!'' என்று அவளுடன் சென்றான் சியாம்.

பக்க வழியாக கிரீன் ரூமுக்குச் செல்லும்போது இடையிலேயே வந்து சேர்ந்தாள் அந்த நடிகை.

''சசி, என்னைத் தெரிகிறதா? நான்தான் சிந்தாமணி,'' என்றாள் கண்ணில் ஒரு பளபளப்புடன்.

''ஓ... சிந்தாவா? நான் நினைக்கவே இல்லையடி. ஆனால் பார்த்த முகமாய் இருக்கிறதே என்று தோன்றியது. இந்த உடையில் சரியாக அடையாளம் தெரியவில்லை. ஸாரிடி, ஆனால் உன் ஆசைப்படி நடிகை ஆகிவிட்டாய் போல் இருக்கிறதே! சுகமாக இருக்கிறாயா? உன் அம்மா நலமா?'' என்று விசாரித்தாள் சசி.

''அம்மா?'' என்று பெருமூச்செறிந்தாள் சிந்தாமணி.

''என்ன சிந்தா?''

''அம்மா இறந்து எவ்வளவோ காலம் ஆயிற்று சசி! என் கதை கிடக்கட்டும். உன் விஷயம் எப்படி? லில்லி எப்படி இருக்கிறாள்? உங்கள் பிளான்படி எல்லாம் சரியாக நடந்ததா?'' என்று அக்கறையாக வினவினாள் நடிகை.

எங்கோ எச்சரிக்கை மணி அடித்தது.

சசிக்குப் புரியாமல் மனம் கலங்கியது.

''எ... என்ன சொல்கிறாய்?''

''அதுதான்டி, யாரோ சியாம் என்று ஓர் இளிச்சவாயனின் தலையைத் தடவப் போவதாகப் பிளான் போட்டீர்களே, அதுதான்டி. இராத்திரியில் அவன் வீட்டிற்கு நீ தனியாகப் போய்க் காரில் காற்றைத் திறந்து விட்டு அடைக்கலம் கேட்டு அங்கே தங்குவது என்று. காலையில் லில்லி வந்து மானம் ஈனம் என்று மிரட்டி அவனிடம் பணம் கேட்கப் போவதாகவும் திட்டம் போடவில்லை? அதுதான் கேட்கிறேன். ஒரு பத்தாயிரமாவது கிடைத்ததாடி?'' என்று வேகமாகவும் தெளிவாகவும் பேசி முடித்தாள் சிந்தாமணி.

சிந்தாமணி தன்னை எதற்கு அழைத்தாள் என்பது சசிக்கு அப்போது புரிந்தது.

படிக்கும் காலத்தில் இருந்த அந்தப் பொறாமையும் குரோதமும் அணுவளவும் குறையவில்லை என்பது புரிந்தது.

பிறரை இக்கட்டில் மாட்டி வைத்து மகிழும் குரோதமும் குறையவில்லை. பல மடங்கு பெருகியிருக்கிறது என்பதும் நன்றாகவே புலப்பட்டது.

இதெல்லாம் புரிந்ததே தவிர, அந்தக் கணத்தில் என்ன செய்வதென்று மட்டுமே அறவே புரியவில்லை.

பேச்சு வராமல், செய்கை வராமல், ''நீ... நீ...ஊ...' என்று திணறினாள்.

''ஓ! எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? அந்தப் படகின் மறுபக்கம்தானே நான் இருந்தேன்,'' என்று இனிமையான குரலில் கூறினாள் சிந்தாமணி. உடனேயே சசியின் கழுத்தில் இருந்த மஞ்சள் கயிற்றை அப்போதுதான் கவனித்தவள் போல், ''அடடே... உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதாடீ! 'அந்த'ப் பணத்தில்தான் செய்து கொண்டாயா? இவர்தானா உன் அவர்?'' கண்ணைச் சிமிட்டினாள்.

பெரு முயற்சி செய்து குரலை வெளிக் கொணர்ந்து, ''ஆமாம். இவர்.. இவர்கள்தான் என் கணவர். பெயர் சியாம். இவள் என்னோடு படித்தவள். பெயர் சிந்தாமணி!'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

''அச்சச்சோ?'' என்று கையால் வாயை நாசூக்காகப் பொத்தி விழிகளை அகல விரித்தாள் சிந்தாமணி. ''நீங்கள் அதே சியாம்தானா? தெரியக் கூடாததை எல்லாம் உளறி விட்டேன் போல இருக்கிறதே! தெரிந்து கொள்ளும் ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டு விட்டேன். ஐயோ சசி! நாடகத்தில் நடிக்கும் எனக்கு வாழ்க்கையில் நடிக்கத் தெரியவில்லை பார். சார்! எங்கள் சசி சிறு வயதிலிருந்து நல்ல பேர் எடுத்தவள். கெட்டிக்காரி. ஒரு தப்பு தண்டாவில் கூட இதுவரை மாட்டிக் கொண்டவள் இல்லை. இப்போது என் அவசரத்தால் மாட்ட வேண்டாம். தயவு செய்து நான் சொன்னதை மறந்து விடுங்கள் சார்!'' என்று வெகுவாகக் கெஞ்சினாள்.

''என்ன சாகசம் செய்கிறாள்' என்று மனதினுள் பதைத்தாள் சசி.

முகத்தில் மாறுபாடு இன்றி, ''நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என்று சாவதானமாகக் கேட்டான் சியாம்.

ஆச்சரிய மிகுதியால் சசியினது மட்டுமல்ல; சிந்தாமணியின் வாய்கூட அடைத்து விட்டது.

அதையும் உணராதவன் போல, ''நேரமாகிவிட்டது சசி! போகலாம். உன் தோழியிடம் விடை பெற்றுக் கொள். நாங்கள் வருகிறோம், மிஸ் சிந்தாமணி,'' என்று திரும்பி வந்தான் அவன்.

சிந்தாமணியின் முகத்தில் இருந்த ஏமாற்றத்தைக் கண்டதும் சசிக்குச் சிரிப்புக்கூட வந்தது.

சிந்தாமணி பேசியது அவன் காதில் விழவில்லை போல் இருக்கிறதே என்று குதூகலத்துடன் கணவன் பின் தொடர்ந்தாள்.

ஆனாலும் உள்ளூர உதைத்தது.

அது எப்படி அவனுக்குக் கேளாமல் இருக்கும்?

வேகமாக என்றாலும் சிந்தாமணி தெளிவாக உச்சரித்துப் பேசினாளே. 'ஸ்டேஜ் விஷ்பர்' என்பார்களே, அதே தெளிவு அவள் பேச்சில் இருந்ததே.

ஆனால் சியாம் அந்தப் பையனிடம் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தான்.

ஓரக்கண்ணால் அடிக்கடி கணவன் முகத்தைப் பார்த்தாள் சசி.

அங்கே ஒன்றும் - அதுதான் பயமாகவும் இருந்தது - ஒன்றுமே தெரியவில்லை.

ஒருவகை உணர்ச்சியுமே இல்லாமல் துடைத்து விட்டது போல இந்த முகம் அவள் அறிந்தவரையில் அவனிடம் பார்த்தறியாத ஒன்று.

இரவில் உணவு முடிந்த பின் சற்று உலவி விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு வெளியே போனான் சியாம்.

''நீ படுத்துக் கொள்,'' என்று சொல்லிவிட்டு அவள் பதில் பேசுமுன் போய் விட்டான்.

உடைகளை லேசாகத் தளர்த்திக் கொண்டு சசி படுத்தாள். உறக்கம் வரவில்லை.

ஒருவேளை அவன் கேட்டிருந்தால்... மனம் குழம்பியது.

படுக்கையின் பக்கத்திலிருந்த விளக்கைப் போட்டுக் கொண்டு ஒரு புத்தகத்தைப் பிரித்தாள்.

கண்ணும் மனமும் எழுத்தில் பதிய மறுத்தன.

தன் போக்கில் பக்கங்களை மடக்கி விரித்து நோண்டியது கை.

தற்செயலாய்க் கையைப் பார்த்தவள் 'சே' என்று கசங்கிய பக்கங்களை மீண்டும் ஒழுங்குற நீவி விட்டுப் புத்தகத்தை மூடினாள்.

புத்தகத்தை மேஜை மேல் வைத்துவிட்டுத் திரும்பிப் படுத்தவள் துணுக்குற்றாள்.

மீண்டும் தலையைத் திருப்பி நன்றாகப் பார்த்தாள்.

விளக்கின் ஷேட் அளித்த நிழலில் இருவரின் அறைகளுக்கும் இடையே இருந்த கதவு திறந்திருக்க, அதன் பிரேமை அடைத்தபடி... சியாம் நின்று கொண்டிருந்தான்.

கதவைத் தட்டாமல் அவன் வந்ததே இல்லை என்பது அந்தக் கணத்தில் அவளுக்கு உறைத்தது.

திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

நிழலில் நின்றதால் அவனது முக பாவம் அவளுக்குப் புரியவில்லை. ஆயினும் கண்கள் மட்டும் அந்த அரைகுறை இருளிலும் பளபளவென்று ஜொலித்தன.

இரவில் இரை தேடி வரும் புலியின் கண்கள் ஜொலிக்கும் என்று படித்த நினைவு வந்தது சசிக்கு.

அந்த நினைவில் உடம்பு அதிர்ந்தது.

செயலற்றுக் கிடந்தபடி அவனையே பார்த்த பின் மெல்லச் சுதாரித்துக் கொண்டு எழுந்து அமர்ந்து, ''சியாம்!'' என்றாள்.

சத்தம் காற்றாகிப் போயிற்று.

அவள் அசையவும் அவனும் அசைந்தான்.

மெல்ல நிதானமாக, அழுத்தமான காலடிகளுடன் உள்ளே வந்தான்.

அவள் மீது வைத்த பார்வையை விலக்காமலே அவள் இருந்த கட்டிலை ஒரு முறை வலம் வந்தான்.

நெஞ்சு படபடக்க, ''என்ன சியாம்! ஏதாவ... துவே... வேண்... டுமா?'' என்று திக்கினாள் சசி.

அவன் சட்டென உரக்கச் சிரித்தான்.

தொடங்கிய வேகத்திலேயே சிரிப்பு மறைந்தது.

''பரவாயில்லை. நான் செலவு செய்திருக்கும் பணத்துக்கான பெறுமதி உள்ளதுதான் உன் உடம்பு!'' என்றான் நிதானமாக.

அடிபட்டாற்போல முதலில் அலறிவிட்டாள் சசி.

சிந்தாமணி சொன்னதை அவன் கேட்டு விட்டாலும் கூட அவன் கோபத்தால் குமுறக் கூடும் அல்லது வெறுத்து ஒதுக்கக் கூடும் என்றுதான் சசி நினைத்திருந்தாள்.

ஆனால் அவன் ஒரு வேசியின் உடம்பை எடைபோடுவது போலப் பார்த்து உடம்பின் பெறுமதியைப் பற்றிப் பேசியதும் தலையிலேயே இடி விழுந்தாற் போல அதிர்ந்து போனாள்.

அவன் அவளது அதிர்ச்சியை எந்தவிதப் பாதிப்பும் இன்றி வெறித்தான். ''ஆம் சசி! பணத்தை என்னமோ கொடுத்தாயிற்று. பொருளை மட்டும் அனுபவியாமல் ஏன் விட்டு வைக்க வேண்டும்?'' என்று அதே அழுத்தத்துடன் கட்டிலை நெருங்கினான்.

''நீங்கள்.... நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்?'' என்றாள் சசி பதட்டத்துடன்.

''என் காதுகள் இன்றுவரை குறைபாடு இல்லாதவைதான்.''

மிகவும் நெருக்கத்தில் வந்துவிட்ட அவனை மிகுந்த பயத்துடன் பார்த்தாள் சசி. ''சியாம்... சியாம்! நான்... என்னால் விளக்கம் கூற முடியும் சியாம்! அப்பா... அப்பாவுக்காக நான்...''

அருவருப்புடன் ஒரு கையை உயர்த்தி அவளது பேச்சை நிறுத்தினான் சியாம். ''தேவையில்லை. சாவு என்னமோ நேர்ந்தாயிற்று. பிரியமாகப் போற்றிப் பாதுகாத்ததைக் குழி

தோண்டி மூடியாயிற்று. இனி அதை எடுத்துப் போஸ்ட் மார்ட்டமா? சை, அருவருப்பான காரியம்!'' என்று தோளைக் குலுக்கினான்.

கட்டிலில் ஓர் அதிகாரத்துடன் அமர்ந்தபடி, ''அதை விடப் பரவாயில்லாத காரியங்கள்கூட இருக்கின்றன சசி,'' என இதழ்களில் ஏளன முறுவலுடன் அவளைத் தொட்டான்.

சசியின் உடல் கூசிச் சிலிர்த்தது. துடித்து விலகியது.

''சியாம், வேண்டாம். வேண்டாம்,'' என்று பின்னே நகர்ந்தாள்.

சியாம் மீண்டும் சிரித்தான்.

சசியின் நெஞ்சுக் கூட்டினுள் குளிர் ஏற்றியது அந்தச் சிரிப்பு.

''மாட்டை வாங்கியவன் மாட்டிடம் அனுமதி கேட்டுக் கொண்டா பால் கறக்கிறான்?''

''சியாம்' நீங்களா... நீ...ங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?''

''எப்போதும் ஏமாளியாக இருப்பேன் என்று நினைத்தாயா?'' என்று அவளை மீண்டும் தொட்டான்.

விரல்கள் வெளிப்படையாக நடுங்க அவன் கையைக் கெஞ்சுதலோடு பற்றினாள் சசி. ''சியாம்! தயவு செய்து பொறுங்கள் சியாம்! நான்... எந்த மாதிரிச் சூழ்நிலையில் அப்படியெல்லாம் செய்ய நேர்ந்தது என்று தெரிந்தால்... சியாம், வேண்டாம். நியாயத்தைப் பற்றிப் பேச ஒரு... ஒ.. ஒரு... வாய்ப்புக் கொடுங்கள் சியாம்! சியாம்... ப்ளீஸ்...'' கடைசி வார்த்தை ஒரு கேவலில் முடிய, அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

அவன் பிடி இரும்பாய் இருந்தது.

அவனை விலக்கச் சக்தியற்று, ''சியாம்! இந்த... இந்த மாதிரி வேண்டாம் சியாம்! ப்ளீஸ் சியாம்! ஐயோ! தயவு செய்து இப்படி வேண்டாம்!'' என்று மன்றாடினாள்.

அவனிடம் இரக்கமே தோன்றாததைக் கண்டு நம்பிக்கை இழந்து, ''கடவுளே! நான் என்ன மாதிரி எல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தேன்!'' என்று விம்மினாள்.

ஒரு கணம் அவன் முகம் இளகியது.

எல்லையற்ற சோகம் கண்களில் பிரதிபலித்தது.

தாளமாட்டாதவன் போலக் கண்களை இறுக மூடி, ''நான் மட்டும் கற்பனை பண்ணவில்லையா?'' என்றான் வேதனையுடன்.

திகைப்பும் துன்பமுமாய், ''சியாம்!'' என்றாள் சசி, குரல் தழுதழுக்க.

மீண்டும் கண்களைத் திறந்தான் சியாம்.

விழிகளில் பளபளப்பு ஏறி விட்டிருந்தது.

புலிக் கண்களின் பிரதிபலிப்பு.

மானின் மிரட்சியுடன் செயலற்றுப் போனாள் சசி.

## 11

காலையில் சசியின் துயில் கலைந்து அவள் எழுந்தபோது சியாம் அங்கே இல்லை.

நடந்தது எல்லாம் கனவா என்றுகூட ஒரு கணம் மயங்கினாள்.

ஆனால் அப்படியல்ல என்பதை மிகுந்த வேதனையுடன் உணர்ந்தாள்.

திரும்பிக் கணவன் அறையைப் பார்த்தாள்.

சாத்தியிருந்தது. உட்புறமாய்ப் பூட்டியும் இருந்ததோ!

விழிகளில் நீர் மல்கியது.

கண்ணைத் துடைத்துக் கொண்டே, பல் துலக்கி, நீராடி உடையணிந்து... அதன் பின்னும் சியாமிடமிருந்து அரவம் ஏதும் இல்லை.

உரிமையுடன் கதவைத் தட்டி அழைக்கும் துணிவு இல்லாமல் மலங்க விழித்தபடி அறை நடுவே நின்றாள் சசி.

திடுமெனச் சியாமின் அறைக் கதவு திறந்தது.

முந்தின இரவைப் போலவே அவன் கதவைத் தட்டாமல் திறந்ததைக் கண்டாள் சசி. அந்த அளவு மதிப்பும் கவனிப்பும் இனி அவளுக்குக் கிடையாது என்பதை அவன் செயலால் உணர்த்துவதைப் புரிந்து கொண்டாள்.

உதட்டைப் பற்களால் அழுத்தியபடி அசைவற்று நின்றாள்.

அவன் குரல் உணர்ச்சியற்று ஒலித்தது. ''இன்று இரவு ரயிலில் கிளம்ப வேண்டும். ஒரு மணிக்கு ரயில். தயாராக இரு. எனக்குப் பகலில் வெளியே வேலை இருக்கிறது. அங்கேயே சாப்பிட்டு விடுவேன். உனக்கு உணவு வரும். சாப்பிடு,'' என்று மொட்டையாகச் சொல்லிவிட்டுத் திரும்பினான்.

''சியாம்...'' என்று அவசரமாக அழைத்தாள் சசி. ''நான் உங்களிடம் பேச வேண்டும்,'' என்றாள்.

''நாளை சென்னையில் பேசிக் கொள்ளலாம். தவிர...'' சற்றுத் திரும்பி அவளைத் தன் உணர்ச்சியற்ற பார்வையால் அளந்து, ''பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' என்றான் ஈரமற்ற குரலில்.

''சியாம்!'' என்று பதற்றத்துடன் ஓர் எட்டு எடுத்து வைத்தாள் சசி.

அதற்குள் கதவு பட்டென்று மூடப்பட்டு விட்டது.

பொங்கிப் பெருகிய கண்ணீருடன் போராடினாள் சசி.

இரவு ரயிலில் மற்ற இரு பிரயாணிகளுக்கு எதிரில் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

அவன் பத்திரிகைகள் வாங்கிப் போட்டான். உணவு வரவழைத்தான். தன் பொறுப்பு எதையும் விட்டுவிடவில்லை.

ஆனால் அவன் மனம் சற்றும் இளகவில்லை என்பது சசிக்குப் புரிந்தது.

புரிய வேண்டும் என்றே அவனும் நடந்து கொண்டான்.

சென்னையில் வீட்டைச் சென்றடைந்தவுடன் உடனேயே குளிக்கப் போய்விட்டான்.

உடனேயே அலுவலகம்.

இரவுதான் திரும்பினான்.

உணவு முடிந்து அவன் சென்ற பின் சற்று நேரம் கலக்கத்துடன் கீழே அமர்ந்திருந்தாள் சசி. மெல்ல எழுந்து தன் அறைக்குள் சென்றவள் திடுக்கிட்டாள். அவள் அறையில் கட்டிலில் அவன் கிடந்த விதத்தைப் பார்த்ததும் விக்கித்துப் போய் அறை வாசலிலேயே நின்றாள்.

''வா,'' என்றான் ஒற்றைச் சொல்லாக அவன்.

அவன் கருத்தை உணர்ந்த சசி கலங்கி நின்றாள்.

''வா சசி!'' என்றான் அவன் சற்று அதட்டலாக.

மெல்ல நடந்து கட்டில் அருகே சென்றவள், அப்படியே மண்டியிட்டாள். கையேந்தி, ''ஒரு முறை நான் சொல்வதையும் கேளுங்கள் சியாம்! விசாரணை இல்லாமல் தண்டனை கொடுக்காதீர்கள்,'' என்றாள் வேதனையுடன்.

''தண்டனை?'' என்று புருவங்களை வெகுவாக உயர்த்தினான் சியாம். ''இந்தத் தண்டனை அப்படி ஒன்றும் உனக்குக் கசப்பாக இருந்ததாகத் தெரியவில்லையே!'' என்றான் ஏளனமாக.

சசியின் முகம் சிவந்து கவிழ்ந்தது.

அந்தச் சிவப்பைக் கண்டதும் ஒரு கணம் அவன் முகம் மிருதுவாயிற்று. உடனே கடுகடுப்புடன், ''இன்று என்ன புதிதாகக் கஷ்டம் வந்துவிட்டது?'' என்று கேட்டான்.

''...........''

''கேட்கிறேன்.''

''என்னைத் தப்பாக நினைக்கிறீர்களா சியாம்?'' என்றாள் சசி ஏக்கத்துடன்.

''தப்...பாகவா?'' என்றான் அவன், கோணல் சிரிப்புடன்.

இப்போது சசியின் முகம் அவமானத்தால் சிவந்தது.

அவன் மேலும் குத்தினான். ''அந்த நாடக நடிகை சொன்னது போல நீ திட்டமிடவில்லை? என்னை ஏமாற்றவில்லை? மறுநாள் மானத்துக்குப் பதிலாகப் பணத்தைத் தரும்படி அந்தப் பெண் லில்லி வந்து உங்கள் திட்டப்படி கேட்கவில்லை?''

இப்போது தோழிக்காக முகம் சிவந்தாள் சசி. ''லில்லி மானத்தை விட்டவள் இல்லை,'' என்றாள் ரோஷத்துடன்.

''அவள் விட்டாலும் விடாவிட்டாலும் அதைப்பற்றி எனக்குக் கொஞ்சமும் அக்கறை இல்லை,'' என்றான் அவன் வெகு அலட்சியமாக. ''ஆனால் நான் சொன்னது எல்லாம்

சரிதானே? காரின் டயர்களில் அதுவும் இரண்டில் காற்றைத் திறந்துவிட்டது... முரடர்கள் துரத்தியதாகச் சொல்லி மயங்கி விழுந்தது... ஆகா! என்ன நடிப்பு! அந்த நடிகைப் பெண் உன் கால் தூசு பெற மாட்டாள்,'' என்றான் இகழ்ச்சியாக.

''அது நடிப்பு இல்லை சியாம்! மெய்யாகவே நடந்தது தான்,'' என்றாள் சசி விடாமல்.

அவன் இளக்காரமாகச் சிரித்தான்.

''சியாம்! தயவு செய்து ஒரு தடவை கேளுங்கள் சியாம்! பிறகு நான் குற்றவாளிதான் என்று நீங்கள் கருதினால்... எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் சியாம்.''

அவன் பதில் கூறாமல் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

ஆனால் அவள் அதையே அனுமதியாக எடுத்துக் கொண்டு தொடங்கி விட்டாள்.

தந்தையின் சுகவீனம், அணு அணுவாக அவர் செத்து வந்தது, டாக்டர் சொன்னது, பணத்துக்காக முடிந்த வகையில் எல்லாம் முயன்று பார்த்துப் பலனின்றித் தவித்தது...

''உன் சிநேகிதிக்குத்தான் மானத்தை ஈடு செய்யும் அளவுக்குப் பணம் இருக்கிறதே... அவள் உதவியிருக்கக் கூடாதா?''

அவன் கேட்டுக் கொண்டு இருப்பதற்கு அறிகுறியாக முதல் கேள்வி தெறித்தது.

''அவள் மானத்தைவிடப் பணத்தை மதிப்பவள் இல்லை சியாம்! எனக்காக... எனக்கு உதவுவதற்காக அப்படியெல்லாம் பேசினாள்,'' என்றாள் சசி வருத்தத்துடன்.

''ஆனாலும் உனக்குப் பணம் தர அவள் முயலவில்லையே.''

''அவளால் இயலாது சியாம்! அவள் பணம் எல்லாம் அவள் சித்தப்பாவிடம் இருக்கிறது. அவளது திருமணம் முடிந்த பின்தான், அதுவும் அவர் ஒப்புக் கொள்ளும்

மாப்பிள்ளையை மணம் செய்தால்தான் அந்தப் பணம் அவள் கைக்கு வந்து சேரும். அவர் எதற்காகவும் அந்தப் பணத்தைத் தொடுவது இல்லை; வேறு யாரையும் தொட விடுவதும் இல்லை.''

''ஒழுங்கான ஆண் மகன். ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை ஒழுங்காகச் செய்கிறார். உங்கள் இனம் போல ஏமாற்று வேலை கிடையாது.''

ஒரு பெருமூச்சுடன் மேலே தொடர்ந்தாள் சசி. தான் எதற்கும் தயார் என்று சொன்னது, லில்லி ஆத்திரப்பட்டது, குணாளன் ஐடியா சொன்னது, மேலே மூவருமாகத் திட்டமிட்டது... எதையுமே மறைக்கவில்லை. அனுப் பிசகாமல் அத்தனையும் சொன்னாள்.

மெய்யாகவே முரடர்கள் துரத்தியது, சவுக்குத் தோப்பில் ஒளிய முயன்றது, பிறகு ஓடி வந்து விழுந்தது...

அதன் பின்னர் பேசுவது சசிக்குக் கடினமாக இருந்தது. ஆனால் பின் நடப்புகளின்போது பிரசன்னமாக இருந்த அவன் பேச்சில்கூட இவளுக்குக் கொஞ்சமும் உதவுவதாக இல்லை.

சிரமத்துடன் மீண்டும் தொடர்ந்தாள். ''அப்பாவைக் காப்பாற்ற மீந்திருக்கும் ஒரே வழி என்று நினைத்துச் செய்தேன் சியாம்!'' என்றாள் விழிகளில் நீர்திரையிட.

''ஒரே வழி அது மட்டுமாக இருக்கவில்லை. ஆனால் மேலே சொல்.''

''லில்லியை வெளிப்படுத்தாமல் திட்டத்தை மறைத்துப் போய்விடத்தான் நினைத்தேன்... நீங்கள் திருமணம் என்றதும் மெய்யாகவே திகைத்துப் போனேன் சியாம்!''

''அப்போதும் உண்மையைச் சொல்ல எண்ணவில்லை.''

''உண்மையைச் சொன்னால் அந்த இடத்தில் லில்லியையும் குணாளனையும் நான் அவமானப்படுத்த வேண்டியிருந்திருக்கும் அல்லவா சியாம்? மேலும் அப்பாவின் நிலைமை வேறு. என்னால் தைரியமாகப் பேச முடியவில்லை.'' தன

தவிப்பையும் வேதனையையும் வீணாக அவனுக்கு விளக்க முயன்றாள் சசி.

''அப்படித்தானோ அல்லது உத்தமி வேடத்தைக் குறை வராமல் நடித்துக் காட்டினாயோ? மேடையில் விட்டால் அந்தப் பெண்ணைவிடப் பத்து மடங்கு நன்றாகவே நடிப்பாய்.''

சசி நீரோடும் கண்களாலேயே இறைஞ்சினாள்.

சிகரெட்டை ஆஷ் ட்ரேயில் போட்டுவிட்டு மல்லாந்து படுத்தான் சியாம்.

''முடித்து விட்டாயா?''

சசி மவுனமாக இருந்தாள்.

''ஆல்ரைட். இனி அந்தக் கதையின் மறுபுறத்தை என்னிடம் கேள். அதுவே மெய்யானதாகவும் இருக்கலாம். திட்டமிட்டது எல்லாம் உன் கதையேதான். நேரே வந்தாய். கார் டயரில் காற்றைத் திறந்து விட்டாய். அதில் ஒரு நியாயத்தைச் சொல்லியாக வேண்டும். ஒரு டயர் தானாகவே பஞ்சர். வீட்டில் மயங்கி விழுவதாக நடித்தாய்.''

''இல்லை சியாம்!'' கேவினாள் சசி.

அவளது குறுக்கீடு காதில் விழாதது போலப் பாவித்து அவன் தொடர்ந்தான். ''தங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டாய். அன்றைய தனிமையைப் பயன்படுத்தி நான் உன்னை நெருங்கியிருந்தால் அதையும் தடுத்திருக்க மாட்டாய்.''

''சியாம்! இல்லவே இல்லை...''

அவள் குறுக்கிடவே இல்லாதது போல அவன் தொடர்ந்தான். ''உன் குறிக்கோளை அடைய அது இன்னமும் நல்லது என்று இடம் கொடுத்திருப்பாய்.''

''மாட்டேன், மாட்டவே மாட்டேன் சியாம்!'' என்று கதறினாள் சசி ''நீங்கள் அப்படிப்பட்டவர் அல்ல என்று குணா சொன்னதால்தான்...'' என்று விம்மினாள்.

அவளது கண்ணீரைக் கல்லாயிருந்து கண்டான் அவன். ''நான் அந்த மாதிரி இல்லை என்பது தெரிந்தது... ...மி

ரோலை எடுத்துக் கொண்டாய். மறுநாள் உன் தோழி முன் நான் திருமணம் என்றபோது, சத்தியவதி போல, 'வேண்டாம். தேவையில்லை,' என்று மாய்மாலம் செய்து என் மதிப்பில் உன்னை உயர்த்திக் கொண்டாய்.''

''மாய்மாலம் இல்லை சியாம்,'' என்று அழுதுகொண்டே கூறினாள் சசி.

''உஷ்...'' என்று அடக்கினான் அவன். ''உன்னை மணந்து கொள்ளும் அளவுக்கு என்னை மறைமுகமாய் ஊக்கினாய். உன் எதிர்காலத்தை உறுதி செய்து கொண்டாய். என்னை ஏய்த்துக் கொண்டே போனாய். நானும் ஏமாளிதான். அந்த வேளையில் தன்னந்தனியே என் வீட்டில் தங்கத் துணிந்த நீ எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று யோசியாத முட்டாள்!'' சுய வெறுப்புடன் அவன் பேசவும் சசியால் அடியோடு தாள முடியவில்லை.

''நீங்கள் சொல்லிக் கேட்கும்போது பயங்கரமாக இருக்கிறது சியாம்! ஆனால் நிஜம் அப்படியில்லை. முதலில் அப்பாவுக்காகத் தப்பு முயற்சி செய்யத் துணிந்தது மெய்தான். ஆனால் உங்களை ஏய்க்க மனம் இல்லாமல் பல தடவை தடுக்கவே முயன்றேன். பிறகும் உங்களிடம் உண்மையைச் சொல்லிவிட நினைத்தேன். ஆனால்...''

''ஏன் சொல்லவில்லை? ஏன்? ஏன் சொல்லவில்லை?'' என்றான் ஆத்திரத்துடன்.

''அப்பா... அப்பாவுக்காக மட்டும் இல்லை. உங்களை அடியோடு இழந்துவிட நேரிடுமோ என்ற ப...யமும் சேர்ந்து கொண்டது சியாம்!'' என்று பரிதாபமாகச் சொன்னாள் சசி.

அவன் உதட்டைப் பிதுக்கினான். ''ஆகாகா! என்ன காதல்! அவ்வளவு காதலில் உருகி நின்றவளுக்கு இப்போது நான் தொட்டால் கசப்பானேன்?'' என்றான் கிண்டலாக.

ஆண் - பெண் உறவு பற்றி யெல்லாம் பேசி அறியாத கூச்சத்தை முயன்று உதறினாள் சசி. ''பணத்துக்குப் பெறுமதியாக என்றால் வேசித் தொழில் போலக் கேவலமாக இருக்கிறது சியாம்!'' என்று கண்ணீர் வடித்தாள்.

''அதற்கும் தயாராக இருந்ததாகச் சொன்னாயே!'' என்று குரூரத்துடன் குத்தினான் அவன்.

துடித்துப் போய், ''சியாம், சியாம்! தயவு செய்து அதைச் சொல்லாதீர்கள் சியாம்! என்னால் தாங்க முடியவில்லையே! அம்மா, அம்மா...'' என்று தவித்தாள் சசி.

''பேச்சை நான் விழையவும் இல்லை; தொடங்கவும் இல்லை,'' என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். ''சரி சரி, போதும் உன் பேச்சும் அழுகையும். நேரம் ஆகிறது. எழுந்து வா,'' என்று அதட்டலாக உத்தரவிட்டான்.

சசி மீறத் துணியவில்லை.

மறுநாள் லில்லி வந்தாள்.

''என்னடி, என்னடி... எப்படி இருந்தது தேனிலவு?'' என்று துளைத்தாள்.

சசி மெல்லியதாகப் புன்னகை செய்தாளே தவிர, பேசவில்லை.

''சிரிக்கிறாய். ஆனால்... ஓகோ! அங்கிள் எப்படியடி இருக்கிறார்? அதை நான் கேட்கவே இல்லை பார்.''

''பரவாயில்லையடி, பேசுகிறார். அவரேதான் அங்கே காத்துக் கிடக்க வேண்டாம் என்று எங்களை அனுப்பி வைத்தார்,'' என்றாள் சசி.

முகம் மலர, ''வெரி குட்... இங்கே கட்டையாகக் கிடந்தாரே, அன்று பார்த்தபோது எனக்கு ஒரே பயமாகிப் போயிற்று. சசி! உன்னிடம் சொன்னால் நீ அழுவாயோ என்று மறைத்தேன். நல்ல காலம். எல்லாம் நல்லபடியாக முடிந்தது. அதிருக்கட்டும் சசி. கிட்ட வாயேன். சொல்லு. முதல் இரவு குன்னூரில்தானே?'' என்று குறும்பாகச் சிரித்தாள்.

தலை குனிந்தபடி, 'இல்லை' என்று தலையசைத்தாள் சசி.

''ஏன்டி?'' என்றாள் லில்லி ஆச்சரியத்துடன்.

''அப்பாவைப் பற்றிய கவலையில் இருப்பேன் என்பதால் அவர் வேண்டாம் என்றார்,'' என்றாள் சசி மெல்லிய குரலில்.

''அடேயப்பா! பெண்டாட்டியிடம் அதற்குள் அவ்வளவு கரிசனமா? பின்னே இங்கே வந்த பிறகா?''

மீண்டும் தலையசைத்தாள் சசி.

''பின்னே எங்கேடி? ச்சு, சொல்லேன். வரும்போது கோவையில் தங்கினீர்களா? அங்கேதானா?'' பொறுமை யற்று அவசரமாகக் கேட்டாள் லில்லி.

ஒவ்வொரு கேள்விக்கும் சசி தலையாட்டினாள். பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது. சமாளித்துக் கொண்டு எழுந்து, ''உனக்கு ஜூஸ் கொண்டு வருகிறேன்,'' என்று உள்ளே சென்றாள்.

''வெட்கமாடி? அதுவும் என்னிடம் கூடவா?'' என்று கைகொட்டிச் சிரித்தாள் லில்லி.

விழிகளில் நீர்க்கசிவை அடக்கி முகத்தைச் சீர் செய்து கொண்டு பழச்சாறுடன் சசி வந்தபோது அங்கே சியாமும் வந்து சேர்ந்தான்.

பொதுப்படையாக லில்லியிடம் குசலம் விசாரித்தான்.

லில்லி சற்றுக் குடித்து முடியும்வரை காத்திருந்தான். பிறகு, ''தப்பாக நினைக்க மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன் மிஸ் லில்லி! சசி புது மணப்பெண். நான் நினைத்தால் வருவேன். அதனால் நீங்கள் இங்கே வந்து போவதை விட நேரம் கிடைக்கையில் சசி உங்களைப் பார்க்க வருவது மேல் அல்லவா? தவறுதலாக எண்ண வேண்டாம்,'' என்றான் நிதானமாக.

வெள்ளை மனதுடன் கை தட்டினாள் லில்லி. ''ஹியர் ஹியர்... சசி! பரவாயில்லையே உன் இவர். என்ன மரியாதை யாக என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறார் பார். பரவாயில்லை மிஸ்டர் சியாம்! நான் தப்பாக எண்ணப் போவது இல்லை. எங்கள் சசி மீது நீங்கள் இவ்வளவு ஆசையாக இருப்பதே எனக்கு மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது,'' என்றாள் குதூகலத்துடன்

''[illegible]யானால்...'' என்று இழுத்தான் சியாம்.

''குறிப்பறிய மாட்டாதான் நன்மரம். நான் கிளம்புகிறேன். சசி, நீ சீக்கிரம் வரவேண்டும். சரிதானா?'' என்று எழுந்தாள் லில்லி.

மீண்டும் சசியிடம் ஒரு தலையசைவையே பதிலாகப் பெற்றுக் கொண்டு மின்னலாய் மறைந்தாள்.

சிறு அருவருப்புடன் உதட்டைச் சுழித்தான் சியாம்.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு, சசியிடம் திரும்பினான். 'அந்தப் பெண் என் வீட்டிற்குள் வருவது எனக்குப் பிரியம் இல்லை சசி! நினைவில் வைத்துக் கொள். அதோடு நீ அங்கே போவதைப் பற்றி நான் வாய்விட்டு ஏதும் சொல்ல வேண்டியது இல்லை என்று நினைக்கிறேன்,'' என்றான் அமர்த்தலாக.

மீண்டும் தலையசைத்தாள் சசி.

புகையை வெளிவிட்டபடி ஓர் அலட்சியமான பார்வையுடன் மாடிக்குப் போனான் சியாம்.

சசி அசைவற்று நின்றாள்.

மனம் விட்டுப் பேசக்கூடிய ஒரே பிறவியும் பிரிக்கப் படுகிறது.

ஆனால் அதுவும் நல்லதுதான் என்றே சசிக்குத் தோன்றியது. ஏனெனில் இந்தத் துக்கம் பகிர்ந்து கொள்ளக் கூடியது அல்லவே. தெரிந்தால் பாவம், லில்லி வேறு வருத்தப்படுவாள்.

இது சசி மட்டும் தனியாகவே ஜீரணிக்க வேண்டியது தானே தவிர, பங்கிடக் கூடியது இல்லை.

ஆனால் ஜீரணிக்குமா?

விழுங்கியது கடப்பாரையாக இருக்கையில் ஜீரணம் எவ்வாறு ஆகும்?

அதுவும் ஜீரணமாகி விடக் கூடாது என்பதில் சியாம் அவ்வளவு கவனமாக இருக்கும்போது.

ஒவ்வோர் இரவிலும் பணத்திற்காக அந்த இடத்திற்கு வந்தவள் அவள் என்பதைத் திரும்பத் திரும்பக் குத்திக் காட்டினான்.

ஒவ்வொரு சின்ன அசைவிலும் ஸ்பரிசத்திலும் அவளை அவமதித்தான்.

இனிமையாகப் பயில வேண்டிய புதிய மண வாழ்க்கைப் பாடத்தை நெஞ்சு கசக்கக் கசக்கக் கற்றுக் கொடுத்தான்.

அவளது தவிப்பும் வேதனையும் அவனுக்குத் திருப்தியைத் தந்தனவோ?

ஆனால் அப்படியும் சசிக்குத் தோன்றவில்லை.

அவளைத் துடிக்க வைத்துவிட்டு அவன் நிம்மதியோடு உறங்கவில்லை.

மாறாக மாடி வராந்தாவுக்குச் சென்று ஒரு பெட்டி சிகரெட்டுகளையும் தொடர்ந்து பிடித்தபடி குறுக்கும் நெடுக்குமாக அவன் நடப்பதை ஓசையற்ற கண்ணீருடன் சசி பலமுறை கண்டாள்.

மணமான முதல் மூன்று நாள்களில் அவன் அநேகமாக சிகரெட் பிடித்ததே இல்லை என்பது அவளுக்கு நினைவு வந்தது. 'மனம் சரியில்லை என்றால் சிகரெட் தேவைப் படும்,' என்று அவன் அப்போது ஒருமுறை சொன்னதையும் பலமுறை நினைத்தாள்.

அவனுடைய வாழ்வையும் நிம்மதியற்றதாகச் செய்து விட்டேனே என்ற எண்ணத்தில் சசி மேலும் துயரமுற்றாள்.

அவனிடம் முயன்று பேசிப் பார்த்தாள்.

''வெள்ளையும் கறுப்பும்தான் நிறங்களா சியாம்? ஆயிரம் ஆயிரம் வண்ணங்கள் இருக்கின்றனவே!'' என்றாள் ஒரு நாள் மாலையில்.

கணத்தில் அவளது பேச்சைப் புரிந்து கொண்டு, ''என்னைப் பொறுத்தவரை எனக்கு வெண்மையில் பிரியம். கறுப்பில் வெறுப்பு உண்டு. வெண்மை தவிர மற்ற நிறங்களும் அப்படித்தான்,'' என்றான் தீர்மானமாக.

''வெண்மை வெண்மை என்கிறீர்களே, ஒரே வெண்மையாக இருந்தால் சலித்து விடாதா?'' அணுகும் முறை தவறோ என்று தோன்றியது.

அதற்கு ஏற்றாற் போல, ''ஒரே கணவன் என்றால் சலிக்கிறதா?'' என்று முகத்தில் அடித்தான் அவன்.

''ஐயோ, அப்படியில்லை சியாம்! அந்த மாதிரி அர்த்தத்தில் நான் பேசவில்லை. மற்ற நிறங்களிலும் அழகு இருக்கிறது என்று சொல்ல வந்தேன்... சிவப்பு ரோஜா, மஞ்சள் சம்பங்கி, நீலக் குவளை...''

''எனக்கு வெண்ணிற மல்லிகைதான் பிடிக்கும்,'' என்றான் அவன் சுருக்கமாக.

கடைசியாகப் பொறுக்க முடியாமல், ''பால் - சுண்ணாம்பு இரண்டுமே வெண்மைதான் சியாம்?'' என வெடுக்கென்று சொல்லி விட்டாள் சசி.

''திறமையான பேச்சால் கறுப்பை வெள்ளையாக்கி விடலாம் என்று பார்க்கிறாயா, சசி? ஒன்றை ஒப்புக் கொள்கிறேன். நடிப்புத் திறமையோடு பேச்சுத் திறமையும் உனக்கு நன்றாகவே இருக்கிறது. பாராட்ட வேண்டியதுதான்,'' என்றான் அவன் குத்தலாக. தொடர்ந்து, ''நடிப்பு என்றதும் நினைவு வருகிறது. வரும் ஞாயிறன்று லயன்ஸ் க்ளப்பி லிருந்து நமக்கு ஒரு விருந்து கொடுக்கப் போகிறார்களாம். ஒரு நாடகம் வேறாம். வேடிக்கையைப் பாரேன். நம் வாழ்வே ஒரு நாடகம். நீயோ ஈடு இணையற்ற மிகப் பெரிய நடிகை. உன்னை மகிழ வைக்க நாடகம் நடத்து கிறார்களாம்,'' என்று கடகடவென்று நகைத்தான்.

உதட்டைக் கடித்துக்கொண்டு சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள் சசி.

மீண்டும் நிமிர்ந்தாள். ''எல்லாம் அப்பாவுக்காகத்தான் சியாம்! அதுவும் யோசித்து யோசித்து, முயன்று முயன்று தோற்று, வேறு வழியே இல்லை என்று கண்ட பிறகுதான்...''

''உனக்கு ஒன்று தெரியுமா?'' என்று குறுக்கிட்டான் அவன். ''அன்று மட்டும் நீ உண்மையைச் சொல்லி என்னிடம் பணம் கேட்டிருந்தால் என் சொத்து முழுமையும் உன்னிடம் தூக்கித் தந்திருப்பேன். அவ்வளவு தூரம் என்

மனதைக் கவர்ந்திருந்தாய். அப்போது என்னைப் பார்க்கு முன் உன் திட்டம் எதுவானாலும் போகிறது, விடு. ஆனால் என்னைப் பார்த்த பிறகும் தொடர்ந்து என்னை ஏமாற்றத் தானே நினைத்தாய்? உண்மையைச் சொல்லி உதவி பெற எண்ணவில்லையே,'' என்றான்.

''உதவி செய்வீர்கள் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும் சியாம்? நான் உங்களை இரண்டாவது தடவையாக அப்போதுதான் சந்தித்தேன். யோசியுங்கள் சியாம்! அவ்வளவு பணத்தை ஒரு காரணம் இல்லாமல் நீங்கள் எனக்குத் தருவீர்கள் என்று நான் எப்படி நம்ப முடியும்?'' என்று கேட்டாள் சசி.

''ஏன், நான் நம்பினேனே!'' என்றான் அவன்.

''உன்னை முழுக்க முழுக்க நம்பினேனே சசி! என் எதிர்காலத்தையே உன்னுடன் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு உன்னை நம்பினேனே. உன்னை மணந்து கொள்ள முடிவு செய்தேனே. நானும் உன்னை இரண்டாவது முறையாக அப்போதுதானே சந்தித்தேன்?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

வரம்போல் கையில் அள்ளித் தந்த சுவர்க்கத்தை நழுவ விட்டதும் அல்லாமல், நரகத்தில் வேறு விழுந்து விட்டாள். அவள் மட்டுமா விழுந்தாள். அவனையும் இழுத்துக் கொண்டல்லவா விழுந்திருக்கிறாள்.

மனம் தாளாமல் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள் சசி.

முடிந்து வரும் சிகரெட்டிலேயே அடுத்ததைப் பற்ற வைத்தான் சியாம்.

முன்னதை 'ஆஷ்ட்ரே'யில் போட்டுவிட்டு சிகரெட் புகையை உறிஞ்சியபடியே மீண்டும் சசியிடம் திரும்பினான்.

''உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் சசி! எனக்குக் கண்ணீரைக் கண்டால் அறவே பிடிக்காது. அதிலும்

பெண்களின் கண்ணீர் என்றால் மிகுந்த அருவருப்பும்கூட. பெண்கள் தங்கள் எண்ணத்தைச் சாதிக்கப் புரியும் ஜாலம் அல்லவா அது? அதனால்தான். எனவே நீ அழுதுதான் ஆக வேண்டும் என்றால் நான் வீட்டில் இல்லாத நேரம் ஆசை தீரும் மட்டும் அழுது கொள். ஆனால் நான் இருக்கும்போது கண்ணீர், விம்மல், விசும்பல் என்று இந்த நீலித்தனங்கள் ஒன்றுகூடத் தலையைக் காட்டக் கூடாது, கவனம்!'' என்று எச்சரித்தான்.

ஆசைப்பட்டு யாரும் அழுவது இல்லை என்று அவனிடம் யார் எடுத்துச் சொல்வது?

## 12

விருந்தன்று காலையிலேயே சசிக்குச் சரியாக விடியவில்லை.

தூக்க மயக்கத்திலோ என்னவோ, சியாம் சசியைக் கனிவாகவே தழுவியிருந்தான்.

அந்த சுகத்தில் மெய்ம்மறந்து மேலும் அவனிடம் ஒண்டிக் கொண்டாள் சசி.

அந்த அசைவில் விழித்த சியாம் சசியின் முகத்தில் இருந்த முறுவலைக் கண்டதும் முகம் மாறினான்.

நிதானமாக அவளை விலக்கியபடி, ''இந்த மாதிரி மெத்தையில் இதற்கு முன் இப்படிப் படுத்திருக்கிறாயா சசி?'' என்று சாவதானமாகக் கேட்டான்.

''சியாம்!'' என்று அதிர்ந்து போய்க் கூவினாள் சசி.

''ஓ! இல்லையா?'' என்று கேலியாக நகைத்தபடி எழுந்து சென்றான் அவன்.

சசிக்குக் குமுறிக் கொண்டு வந்தது.

என்ன வார்த்தை கேட்டு விட்டான்.

ஆனால் அந்த வீட்டில் அவளுடைய ஸ்தானமும் அதுதானே.

அவளுக்குத் தாங்க மாட்டாமல் அழுகை வந்தது.

அவனது எச்சரிக்கையையும் மறந்து விம்மி அழுதாள்.

ஆனால் எவ்வளவு நேரம் அழ முடியும்?

எழுந்து குளித்துவிட்டுச் சமையல் அறையில் சமையற்கார மீனம்மாளிடம், ''காஃபி குடித்தீர்களா?'' என்று புன்னகையைக் காட்டி வினவிவிட்டு, சியாமுக்குக் காஃபி எடுத்துச் சென்றாள்.

பத்திரிகையை முடித்து விட்டுக் காத்திருந்தான் அவன்.

''கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது,'' என்று மன்னிப்புக் கோரியபடி காஃபியை நீட்டினாள் அவள்.

காஃபியை வாங்கிக் கொண்டு, தலையைச் சரித்து, அவளைப் பார்த்தான் சியாம். போலியான பரிவுடன், ''ஏன் சசி! இரவில் அதிகம் வேலை வாங்கிவிட்டேனா? பாவம், அதனால் அதிக நேரம் அயர்ந்து விட்டாயா?'' என்றான்.

எப்படி? எப்படிக் குத்துகிறான்!

அவனை நேராக வெறித்துப் பார்த்தாள் சசி.

அவன் பார்வை சற்றேனும் சலனப்பட வேண்டுமே!

விழிகள் கரித்து நீர் சேரத் தொடங்கியதும், குனிந்து பத்திரிகையை எடுத்தாள் சசி.

எழுத்துகள் விழிநீரில் நர்த்தனம் ஆடின.

''என்ன பதிலையே காணோம்?'' என்று அவள் கன்னத்தைப் பலமாக நிமிண்டிவிட்டுப் போனான் அவன்.

இன்னமும் பலமாக அடித்து விட்டால் கூட மனம் தாங்கிக் கொள்ளும்போல இருந்தது சசிக்கு.

சர்வ சதா வார்த்தைகளால் குத்துவதைவிட அது எவ்வளவோ மேல்.

செய்கைகளால் சீண்டுவதைவிட நிச்சயமாக அது மேல்தான்.

குளித்து முடித்துவிட்டுச் சியாம் அழைத்த குரல் கேட்டதும், பெருமூச்சுடன் எழுந்தாள் சசி.

பேச்சின்றி ஷூவை எடுத்து வந்தாள்.

அவன் போட்டதும் லேஸ் கட்டினாள்.

அப்புறம் டை.

அதெல்லாம் சசிக்கு அவன் அளித்திருந்த வேலைகள்தான்.

பணம், உடல் என்ற அவனுடைய வார்த்தைகளின் வேகம் தாளாமல் அவள் ஒதுங்கக் கண்டதும், வேண்டுமென்றே இழுத்து வைத்துச் செய்ய வைத்த வேலைகள்.

அவனைத் தொடுவதே நெருப்பைத் தொடுவதுபோல் நெஞ்சில் எரிய அவள் நுனி விரலால் 'நாட்' போட்டு ஓட முயன்றாள். பிடித்து நிறுத்தி, ''என்னைத் தொடுவது அவ்வளவு அருவருப்பாகவா இருக்கிறது சசி? ஆனால் பணம் வேண்டுமானால் இந்த அசூயை எல்லாம் பார்க்க முடியாதே!'' என்றான்.

சசி தன்னை அடியோடு வெறுக்க வேண்டும் என்று சியாம் விரும்பியது சசிக்குப் புரிந்தது. நெஞ்சு நிறைய வெறுப்பு இருந்தபோது வேறு வழியின்றி அவளை இம்சித்துத் துன்புறுத்த வேண்டும், அதுவே அவளுக்குச் சரியான தண்டனை என்று அவன் கருதியதையும் சசி உணர்ந்து கொண்டாள்.

ஆனால் அவளால் அவனை வெறுக்க முடியுமா?

அவன் என்னதான் வார்த்தைகளால் கொட்டினாலும் கூட நடக்கக் கூடிய காரியமா?

அன்று டை கட்டுகையில் குனிந்து அவள் முகத்தையே பார்த்து, வெகு சாதாரணமாக, ''அப்படியே முடிச்சு இழுத்துக் கழுத்தை இறுக்கி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாயா சசி?'' என்று வினவினான்.

''ஆ..!'' சசி ஒரேயடியாய் அதிர்ந்து போனாள்.

அவன் பெயரைச் சொல்லக்கூட முடியாமல் பேச்சிழந்து மூச்சிழந்து விக்கித்து நின்றாள்.

உடன் தற்செயலாய் மீண்டும் மூச்செடுத்தபோது அது ஒரு பெரிய கேவலாய் வந்தது.

கண் கலங்கிச் சிவந்து நீர் சொரிய அங்கிருந்து விலக முயன்றாள்.. கடவுளே! அம்மாடி! எப்படிக் கொட்டி விட்டான். எப்படி... எப்படி...

அவன் அவள் தோளைப் பற்றி நிறுத்தித் தன் பக்கம் திருப்பினான்.

விலகவும் முடியாமல், நிற்கவும் இயலாமல் தள்ளாடியவள் கடைசியில் அவன் மார்பிலே முகம் புதைத்துக் கதறித் துடித்தாள்.

சட்டென அவளை இறுக அணைத்துக் கொண்டான், சியாம். "சசி, சசி! நீ ஏன் நல்லவளாகவே இருந்திருக்கவில்லை? என் தேவதையாக இல்லாமல் ஏன் மாறினாய்? ஏன் கெட்டவள் ஆகிப் போனாய்?" என்று குமுறினான்.

ஏன்? ஏன்? ஏன்?

"கடவுளே, அந்த ஒரு சமயம் மட்டும் என்னைத் தடுத்துக் காத்திருக்கக் கூடாது?" என்று கலங்கிக் கடவுளிடம் கேட்டாள் சசி.

அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்திப் பார்த்தான் அவன். "கபடமற்ற பால் முகம்தான், ஆனால் ஒருமுறை பொய்த்துப் போனதாயிற்று. மறுபடி நம்புவது எப்படி?" என்றான்.

முரட்டுத்தனமாக அவளை விலக்கித் தள்ளிவிட்டு வெளியேறிச் சென்றான்.

மாலையில் வருகையில் விருந்துக்கு அணிவதற்காக என்று ஒரு சேலை வாங்கி வந்தான் சியாம்.

கறுப்பில் வெகு அழகாகச் சரிகை வேலைப்பாடு அமைந்த மென்மையான சேலை.

ஆனால் சேலையின் அழகு அவள் கண்ணில் படவில்லை.

அதன் நிறம் அவளைத் தாக்கிற்று.

"க... கறுப்பாக இருக்கிறதே!" என்றாள் கலக்கத்துடன்.

"ஆமாம், உனக்கு ஏற்ற நிறம், உள்ளும் புறமும் ஒத்தாற்போல!" என்றான் அவன் குத்தலாக.

அடிபட்ட மானென நிமிர்ந்து அவனை வெறித்தாள் சசி. "நான் உங்களை வெறுக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இல்லையா சியாம்? அதற்காகத்தானே இப்படி எல்லாம் வார்த்தைகளால் புண்படுத்துகிறீர்கள்?" என்று நேராகக் கேட்டாள்.

அவன் முகம் லேசாகச் சிவந்தது. எங்கோ பார்த்தபடி, ''புண்படுவானேன்? நான் உண்மையைத்தானே சொன்னேன்!'' என்றான்.

சோர்ந்து போய், ''அது சரிதான்,'' என்று நகர்ந்தாள் சசி.

உண்மையாம் உண்மை. அவனளவில் அது உண்மை, சொல்லட்டும். ஆனால் அவளை நடத்தும் முறை?

கேட்டால் உன் தகுதி இதுதானே என்பான்.

அதைக் கேட்டு இன்னொரு முறை துடிக்க வேண்டும்.

துடிப்பு நிற்க வேண்டுமானால் மனமேனும் சுரணையற்று இருக்க வேண்டும். அல்லது உடம்பேனும் சூடு இழக்க வேண்டும். இரண்டும் இல்லையே!

சேலையை அணிந்து கொண்டு நின்றபோது, அவன் நகைப் பெட்டியுடன் வந்தான்.

''இதில் வைர நகைகள் ஒரு செட் இருக்கின்றன. குடும்ப நகைகள். மனைவி என்ற முறையில் வருவதால் அணிந்து வா!'' என்று வைத்துவிட்டுப் போனான்.

வீட்டில் வேசி என்ற அளவில் ஒன்றும் அவசியம் இல்லையாக்கும்.

முடியாது, ஒன்றும் முடியாது என்று இந்தச் சேலையை அவிழ்த்து எறிந்து விட்டுக் கத்தினால் என்ன என்றுகூடச் சசிக்கு ஒரு கணம் தோன்றியது.

ஆனால் என்ன பயன்? இருக்கும் வேதனைகள் இன்னமும் அதிகம் ஆகலாம். மற்றப்படி?

மனமின்றியே அந்த நகைகளை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்தாள்.

குடும்ப நகைகள். இவற்றைச் சியாமின் அன்னை அணிந்து பார்த்திருப்பாள். ஆனால் இப்போது இந்த வைரங்களுக்குப் போட்டியாக அவளுடைய கண்ணீர் ஜொலித்திராது. புன்னகையில் பற்கள் பளபளத்திருக்கும்.

பெருமூச்சுடன் வெளியே வந்தாள் சசி.

அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''முகத்தைச் சற்று சிரித்தாற் போல வைத்துக் கொள்,'' என்று உத்தரவிட்டான் அவன்.

எல்லாரும் முகம் அறியாத அந்நியர்கள். அவர்கள் நடுவே எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று பயந்து கொண்டே சென்றாள் சசி.

ஆனால் அஞ்சிக் கொண்டே சென்றவளுக்கு அங்கே எல்லாம் எளிதாக இருந்தது.

பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் அங்கே 'பீப்பீ', 'டும்டும்' என்று வாயாலே இசைத்தபடி இவர்களை வரவேற்றனர்.

ஒருவர் தனது பெரிய தொந்தியிலேயே மிருதங்கம் வாசித்தபடி வரவும், சசி பளிச்சென்று சிரித்தாள்.

அறிமுகப் படலம் அதைவிட வேடிக்கையாக இருந்தது.

'லயன் ராம்நாத்' என்றதும் ஒருவர் சிம்ம கர்ஜனையோடு வருவார்.

அடுத்து 'லயன் லேடி ராம்நாத்' என்றதும் பூனைக்குட்டி போல 'மியாவ்' என்று கைகட்டி நிற்பார். மனைவியைக் கண்டதும் அப்படி அடங்கி ஒடுங்கி விடுகிறாராம்.

வேடிக்கை விளையாட்டின் இடையே வாழ்த்திப் பேசினர்.

பல நாள்களுக்குப் பிறகு சசி மனம் விட்டுச் சிரித்தாள்.

'வயதில் இளைய 'லயன்' ஆன சியாம் சீக்கிரமே பல சிங்கக் குட்டிகளைப் பெற்றெடுத்து ஆலமரம் போலக் கப்பும் கிளையுமாகத் தழைத்து ஓங்க வேண்டும்!' என்று வாழ்த்தி வெள்ளியில் எனாமல் வேலைப்பாடு செய்த ஒரு ஆலமரத்தைப் பரிசாக வழங்கினர்.

மனிதர்கள் எவ்வளவு பிரியமாக இருக்கிறார்கள்! சசிக்கு நெஞ்சு நெகிழ்ந்தது.

''பாவம்! இந்த ஆலமரத்தின் ஆணி வேரையே பூச்சி அரித்துச் சொத்தையாக்கி விட்டது என்று தெரியாமல் பேசுகிறார்கள். இல்லையா சசி?'' என்று அவள் காதில் கிசுகிசுத்தான் சியாம்.

முகம் செத்து விடாமல் சிரமப்பட்டுச் சிரித்தாள் சசி.

''இங்கும் ரகசியமா? வீட்டில் மாமியார், நாத்தனார் தொல்லை கிடையாதே!'' என்று சிரித்தார்கள்.

''அதனால்தான் காலையில் காதல், மாலையில் காதல், இரவில் காதல் என்று முழுநாளும் காதலிலேயே கழிக்கிறார் களாம்!'' என்று வியந்தார் ஒரு பெண்மணி.

''இனி முடியுமா? சசியை லேடீஸ் கிளப்பிற்குப் பிடித்துப் போய் விடுவோம். மாலைக் காதல் ஹோகயா.''

''புதுப் பெண்ணுக்குக் குடித்தனம் கற்றுத் தர நான் காலையில் போவேனாம்.''

''ஐயோ பாவம்! தனிமை.''

''நான் டெலிபோனிலேயே ரம்பமாய் அறுப்பேன்.''

எல்லாவற்றுக்கும் இடையே அசட்டுச் சிரிப்புகள்.

சிரித்த முகமாகவே சியாமும் பதில் சொன்னான். ''நாளையே நாங்கள் தோப்பு வீட்டுக்குப் போகிறோம். அங்கே எனக்குத் தடையேது?'' என்று சசியைப் பார்த்து நகைத்தான்.

யாருடனும் பழக விடாமல் அவளைத் தனிமைப்படுத்த நினைக்கிறான் என்பது சசிக்குப் புரிந்தது.

ஆனால் ஏன்?

இவர்களோடு சேர்ந்து சிரித்து விடக் கூடாதே என்ற எண்ணமா? அல்லது யாரிடமும் தன்னைப் பற்றிச் சொல்லி விடுவாள் என்ற பயமா?

ஆனால் சசி சொன்னாளா? லில்லியிடமே சொல்ல வில்லையே!

''உங்கள் சேலை பிரமாதம் மிஸஸ் சியாம்! அதிலும் உங்கள் நிறத்துக்கும் கொடிபோல உடல் அமைப்புக்கும் சேலை நிறத்துக்கும் தூக்கி அடிக்கிறது!'' என்றார் ஒரு பெண்மணி.

''என் தேர்வு. நினைத்து நினைத்துப் பொருத்தம் பார்த்துக் கடை கடையாக ஏறி இறங்கி வாங்கினேன்!'' என்று பெருமையோடு சிரித்தான் சியாம்.

''பாரேன் பாரேன்!'' என்று எல்லாரும் சிரித்தனர்.

நெஞ்சில் சுருக் சுருக்கெனத் தைக்க, சமாளிக்க முடியாமல் சசி தலை கவிழ்ந்தாள்.

''ஓகோ! வெட்கம் டோய்!'' என்று மீண்டும் சிரிப்பு அதிர்ந்தது.

''நாடகத்தை மறந்தே போனோமே!'' என்றார் யாரோ.

''முழு நாடகமா; யார் பொறுமையாகப் பார்ப்பது?'' என்றது ஒரு குரல்.

''இல்லை இல்லை. முக்கியமான சில காட்சிகள் மட்டுமே. மற்றவை பின்னணியில் சொல்வார்கள்,'' என்றார் விழாவைப் பொறுப்பேற்று நடத்தியவர்.

நாடகம் தொடங்கியது.

முக்கிய பாத்திரம் ஏற்று வந்த நடிகையைக் கண்டதும் சசிக்கு வயிறு கலங்கியது.

சிந்தாமணி!

அவள் இன்னமும் ஏன் வந்தாள்?

சியாமின் பார்வை தன் மீது கூர்மையுடன் படிவதை உணர்ந்தாள் சசி. அவசரமாகக் கலக்கத்தை மறைக்க முயன்று தோற்றாள்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு மெல்லச் சியாமைத் திரும்பிப் பார்த்தாள்.

உணர்ச்சிகளை ஒட்டத் துடைத்த முகம் கோவையை நினைவூட்டியது.

அந்த முகத்துடன் அவன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து இருப்பதைக் காணவும் அவளுக்கு நெஞ்சு உறைந்தது.

இன்னமும் என்ன நடக்கப் போகிறது?

எதுவானாலும் நல்லதுக்கு அல்ல என்பதைச் சசி சர்வ நிச்சயத்துடன் உணர்ந்தாள்.

நாடகக் கலைஞர்களுக்குப் பரிசு கொடுத்தார்கள்.

தன் பரிசை வாங்கிய சிந்தாமணி மணமக்களை நோக்கி வந்து வினயத்துடன் வழங்கினாள்.

''அன்று நான் ஒரு பெருந்தவறு செய்து விட்டேன். அறியாமல் செய்தது என்றாலும் தவறு தவறுதானே. உங்களிடம் மன்னிப்புக் கேட்கவென்றே வந்தேன். தயவு செய்து மன்னித்து, மன்னித்ததன் அடையாளமாக இந்தச் சிறு பரிசை ஏற்றுக்கொள்ள வேண்டும்,'' என்று இனிய குரலில் கூறி அந்தச் சிறு வெண்கலச் சிலையைச் சியாமிடம் நீட்டினாள்.

சியாம் ஒரு கணம் அசையாமல் இருந்தான்.

மறந்துவிட வேண்டுமே என்று மனதிற்குள் வேண்டினாள் சசி.

ஆனால், ''தயவு செய்து...'' என்று கெஞ்சலே உருவெடுத்தாற்போல நின்றாள் சிந்தாமணி.

''வாங்கிக் கொள் சசி,'' என்றான் சியாம்.

விழிகள் பளபளக்க நன்றிகூறி விடைபெற்றாள் சிந்தா.

''இந்தப் பெண்ணின் 'ட்ரூப்'தானாம் இது. தானாகவே வந்து பணம் வாங்காமல் நடித்தாள்,'' என்று விழா அமைப்பாளர் சொன்னார். ''ஆனால் அது உங்களிடம் மன்னிப்புப் பெற என்று இப்போதுதான் புரிகிறது,'' என்றார் தொடர்ந்து.

சியாம் லேசாக முறுவல் செய்தான். ''சில பேர் அறியாது செய்த பிழைக்காகக்கூட ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்கிறார்கள். வேறு சிலரோ திட்டமிட்டுத் தப்பு செய்துவிட்டு அதை மூடி மறைக்கவும் முயல்கிறார்கள். நான் சொல்வது சரிதானே, சசி?'' என்று வெகு முக்கியம்போலச் சசியின் அபிப்ராயத்தைக் கேட்டான்.

''அவள் மன்னிப்புக் கேட்க வரவில்லை. ஒருவேளை மெய்யாகவே அன்று நீங்கள் கவனியாது இருந்திருந்தாலும் மீண்டும் உங்களை மூட்டி விடலாம் என்று வந்திருக்கிறாள்,'' என்று கத்திவிட வேண்டும் போல் இருந்தது சசிக்கு.

முடியாமல் உதட்டைக் கடித்துக் கால் மெட்டியைச் சரி செய்வது போலக் குனிந்தாள்.

தோப்பு வீட்டுக்குச் செல்லுமுன் லில்லிக்கு மட்டும் டெலிபோன் செய்தாள் சசி.

''என்னடி, தனிமையே இனிமையாக்கும்!'' என்று கேலியாக நகைத்தாள் லில்லி. ''ஒரேயடியாக என்னை மறந்து விடாதே சசி! எனக்குத்தான் சியாம் தடை உத்தரவு போட்டு விட்டாரே. இல்லாவிட்டால் தடையை உடைத்து விடுவேன், ஜாக்கிரதை,'' என்று மிரட்டினாள்.

சிரித்து மழுப்பிவிட்டு டெலிபோனை வைத்தாள் சசி.

தோப்பு வீட்டுக்குத் திரும்பும் முனை வந்ததுமே சசிக்கு வயிற்றைப் பிசைந்தது.

காம்பவுண்டுச் சுவர், முரடர்கள் வளைத்த இடம், சவுக்குத் தோப்பு, கடைசியில்... கடைசியில்...

காரில் இருந்து இறங்கிச் செல்கையில் சியாம் கேட்டான். ''ஐரோப்பியர் வழக்கம் போலத் தூக்கிச் செல்ல வேண்டுமா, சசி? ஏற்கெனவே ஒருமுறை தூக்கி விட்டேனே... அதுவே போதும் அல்லவா?'' என்று நினைவு படுத்தினான்.

''அன்றைய இரவை வீணடித்து விட்டேன். என்னை ஆண்மகன் இல்லையோ என்றுகூடச் சந்தேகப்பட்டிருப்பாய். இல்லையா சசி? பாவம்...'' என்று போலியாகப் பரிதாபப்பட்டான்.

அடிபட்ட வலியால் கண்கள் அகலக் கணவனை வெறித்துப் பார்த்தாள் சசி.

''எதற்காக சியாம்?'' என்றாள் மெல்லிய குரலில். ஆனால் தெளிவாகக் கேட்டாள்.

''எது எதற்காக?'' என்று புரியாதவன் போலக் கேட்டான் சியாம்.

''இந்த வீட்டிற்கு என்னை அழைத்து வந்ததன் காரணம்?''

''புது மணமகன் தனது மனைவியை இடையூறின்றிக் காதலிக்க விரும்ப மாட்டானா!''

அவனை நேராகப் பார்த்தாள் சசி. ''நம் வாழ்க்கையைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி விடுவேன் என்று நினைத்தீர்களா?''

''அதுவும் ஒரு காரணம்.''

''மற்றது?'' என்றாள் நெஞ்சு நடுங்க.

''செய்கிற தப்பெல்லாம் செய்துவிட்டு, 'ஓ! வருந்து கிறேன்!' என்று தளுக்காகச் சொல்லித் தப்பித்து விட முடியாது சசி,'' என்றான் அவன் குரலில் கடுமை தெறிக்க.

## 13

அவன் பேச்சைக் கேட்டதும் சசிக்கு வேகமாகச் சிரிப்பு வந்தது.

இப்போது அவள் தளுக்காகத் தப்பித்துக் கொண்டு சுக போகத்தில் சந்தோஷ ஊஞ்சல் ஆடிக் கொண்டு இருப்பதாக அவன் எண்ணுகிறானா?

கண் விழிக்கும்போதே நெஞ்சு கனப்பதும், விழித் திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எத்தகைய சுவர்க்கத்தை நாசமாக்கி விட்டேன் என்று ஆற்றாமையோடு நரக வேதனைப்படுவதும், செய்துவிட்ட தவறைச் சீர்படுத்த ஒரு வழியும் இல்லாது தவிப்பதும், தப்பித்துக் கொண்டவள் அனுபவிக்கும் உல்லாசங்கள் என்று நினைத்தான் போலும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவன் குத்தலும் குதறலும்.

இதைவிடப் பெரிய தண்டனை என்னவாக இருக்க முடியும் என்று நினைத்தாள் சசி.

பெரிதோ அல்லவோ, புதிய தண்டனை என்ன என்பதை அந்த ஞாயிறன்று புரிந்து கொண்டாள்.

காலையிலேயே தன் ஸ்டுடியோவுக்கு வருமாறு அவன் கூறி அழைத்தபோது அவள் எதுவும் எண்ணவில்லை.

''புதிதாக உன் படம் ஒன்று வரையப் போகிறேன். போஸ் தர வேண்டும்,'' என்ற போது, சற்றே மகிழ்ச்சி தோன்றிய போதும், யோசனையுடனே அவனைப் பார்த்தாள் சசி.

''பழைய படம் பிடிக்கவில்லை,'' என்று சுட்டிக்காட்டினான்

அவன் காட்டிய திசையில் பார்த்த அவளுக்குத் திக் கென்றது. அங்கே அந்த 'தேவதை' படத்தின் மேல் கறுப் பாகப் பட்டையாகப் பெருக்கல் குறி போடப்பட்டிருந்தது

''அது சரியில்லை பார்! அதனால் புதிதாக ஒன்று - உன்னை அப்படியே பிரதிபலிப்பது போல் பெண் என்ற தலைப்பில் வரையப் போகிறேன். முதல் 'ஸ்கெட்ச்' எடுக்க மட்டும் நீ போஸ் கொடுத்தால் போதும். இங்கே வந்து நில்,'' என்றான்.

அடிபட்ட வேதனை கண்ணில் தெரிந்து விடாமல் தரையைப் பார்த்தபடி அவன் சொன்ன இடத்தில் வந்து நின்றாள் சசி.

''நிமிரு சசி! சற்று ஓரக்கண்ணால் அந்த மேஜையைப் பார்க்க வேண்டும். 'எக்ஸ்ப்ரஷன்' நான் சொல்வது போல இருக்க வேண்டும். அங்கு கொஞ்சம் - அல்லது நிறையப் பணம் இருக்கிறது என்று நினைத்துக் கொள். அந்தப் பணத்தின்மீது உனக்கு உள்ள ஆசையையும், அதே சமயம் பணத்தின் உரிமையாளனை எப்படி ஏமாளியாக்கி அந்தப் பணத்தை எடுத்துக் கொள்வது என்று திட்டம் போடுவதையும் உன் முகத்தில் காட்ட...''

''சியாம்!'' என்றாள் சசி பொறுக்க மாட்டாமல்.

''என்ன சசி? என்ன விஷயம்? ஏன் அழுகை? நான் இல்லாததைச் சொல்லவில்லையே. யதார்த்தத்தைத்தானே சொல்கிறேன். உன் குணத்தை அப்படியே பிரதிபலிக்கச் சொல்கிறேன். அவ்வளவுதானே? இதில் என்ன கஷ்டம்?'' என்று ஒன்றுமே புரியாதவன் போலப் புருவங்களை வெகுவாக உயர்த்திக் கேட்டான் சியாம்.

''இல்லை இல்லை. என் குணம் அது இல்லை. நிஜமாக இல்லை சியாம்!'' என்று கேவினாள் அவள்.

அவன் வெறுப்புடன் முகத்தைச் சுழித்தான்.

''இந்தக் கண்ணீர், விம்மல், விக்கல் எல்லாம் வேண்டாம் என்று முன்பே சொல்லியிருக்கிறேன்,'' என்றான் அவன் அதட்டலாக.

பெருமுயற்சி செய்து கண்ணீரை நிறுத்தினாள் சசி. கண்ணைத் துடைத்துக் கொண்டு அவன் சொன்ன இடத்தில் நின்று அவன் முகத்தைப் பார்த்தாள்.

''குட்!'' என்று மெச்சினான் அவன். ''உனக்குத் திடமான மனம் உண்டு என்று எனக்குத் தெரியும். இனிப் பார்வையில் ஆசையும் தந்திரமும் பிரதிபலிக்க வேண்டும். அவ்வளவு தான்,'' என்றான் ஏளனமாக.

சசி முயன்றாள். ஆனால் சொல்லொணாத ஏக்கம்தான் கண்ணில் பிரதிபலித்தது.

''சரியில்லை,'' என்றான் எரிச்சலுடன். பையிலிருந்து ஒரு கத்தை நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்தான். அவன் குறிப்பிட்ட மேஜை மேல் வைத்தான். ''இதைப் பார்த்துக் கொண்டே போஸ் கொடு. பாவமும் இயற்கையாக வந்து விடும். சரியாகப் போஸ் கொடுத்தாயானால் மெய்யாகவே பணம் முழுமையையும் உனக்கே தந்து விடுகிறேன். இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது! ப... த்... தாயிரம் ரூபாய்.''

சசி பணத்தின் பக்கம் திரும்பவே இல்லை. ஆனால் அவன் திருப்திக்காக அந்த மாதிரி பாவத்தை முகத்தில் கொண்டு வர மெய்யாகவே முயன்றாள். ஆனால் முடியவில்லை.

என்றுமே அவள் பணத்தின் மேல் அதிகப் பற்று உடையவள் இல்லை. மேலும் பணம் என்று நினைக்கும் போதே இதனால் வந்த வேதனை அல்லவா என்ற வெறுப்பில் நெஞ்சைக் குமட்டியதால் உள்ளூரப் பணத்தின் மீது வெறுப்பே மூண்டது. இதில் அவன் கோரிய 'எக்ஸ்ப்ரஷன்' கண்ணில் வர மறுத்தது.

சியாம் பொறுமையிழந்தான். ''ஏன், நீ காட்டாவிட்டால் மட்டும் நீ அறியாதவள் என்று நம்பிவிடுவேனா? போ போ! நான் என் கற்பனையினாலேயே வரைந்து கொள்வேன், போ!'' என்று விரட்டினான்.

கண்கள் அகல அவனை ஒரு தரம் பார்த்துவிட்டுப் பேச்சின்றி வெளியே போனாள் அவள்.

தான் நினைத்த பாவத்தைச் சசியின் முகத்தில் கொண்டு வர முயன்று பல ஸ்கெட்ச் பேப்பர்களை வீணாக்கினான் சியாம்.

ஆனால் சசி அவன் என்ன செய்கிறான், ஏது செய்கிறான் என்று எட்டிப் பார்க்கவே இல்லை.

தன் போக்கில் தோட்டத்தில் புகுந்தாள்.

தோட்டக்காரன் வந்து செடிகளைக் காட்டவும் அவனுடன் பேசியபடியே தோட்டத்தைச் சுற்றினாள்.

அவன் இருப்பிடம் தோட்டத்தின் பின் கடைசியில் ஒரு குடிசை.

அங்கே ஒரு கோழிக் கூடும் வைத்திருந்தான்.

புதிதாக வெளிவந்திருந்த பன்னிரண்டு குஞ்சுகள் பஞ்சாரத்தினுள் கீச்சிட்டதை ஆர்வத்துடன் பார்த்தாள் சசி. என்ன அழகு! என்ன அழகு!

''முன்பெல்லாம் வாரம் ஒரு நாள் போயிரணுமேன்னு வைக்கலைம்மா. ஐயாவுக்குக் கண்ணாலம்ன அப்புறம்தான் அடை வைச்சேன். முன்ன மாதிரி ஐயா தனியாகக் கெடைக்க மாட்டாருன்ற நெனப்புல. குஞ்சு வந்து இன்னிக்கு ரெண்டா நாளுதான்.''

வெகு நேரம் அந்தக் குஞ்சுகளைப் பார்த்தபடி இருந்து விட்டு எழுந்து மெல்ல உள்ளே போனாள் சசி.

சென்னை பங்களாவில் இருந்த சமையல்கார அம்மாளே வந்திருந்தாள்.

சமையல் அறையில் எட்டிப் பார்த்தாள் சசி. வெட்டுவதற்குத் தயாராகக் காய்கறிகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

''ஏதாவது செய்யட்டுமா?'' என்ற சசியின் கேள்விக்கு, ''உங்கள் இஷ்டம்!'' என்ற சுருக்கமான பதில் அந்த அம்மாளிடம் இருந்து வந்தது.

தன் போக்கில் சில காய்கறிகளை வெட்டி வைத்தாள் சசி. ''நீங்கள் இங்கே ரொம்ப நாள்களாக இருக்கிறீர்களா?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஆமாம்,'' என்று மீண்டும் சுருக்கமான பதிலே கிடைத்தது.

''அவருடைய அப்பா எப்படி இருப்பார்?''

''மீசையும் கண்ணுமாகக் கெம்பீரமாய் இருப்பார்!''

''அவருடைய அம்மா?''

''அந்தம்மா இருக்காளோ போய்ட்டாளோ, யாருக்குத் தெரியும்?''

''என்னது?'' என்று சசி திடுக்கிட்டுக் கேட்டாள்.

''நான் வரும்போது அந்தம்மா இல்லை. அவ்வளவுதான் தெரியும்?''

சமையற்காரிக்கு அவளிடம் பேச விருப்பம் இல்லை என்பதோடு, தானும் வேலைக்காரியிடம் ஊர்வம்பு பேசப் பார்ப்பதும் புரிந்தது சசிக்கு. கையில் இருந்த காயை மட்டும் வெட்டிவிட்டு எழுந்து சென்றாள்.

சாப்பிடும் நேரத்துக்குச் சியாமை அழைத்து வர மீண்டும் ஸ்டுடியோவுக்குப் போனாள் சசி.

பின்னிழுத்த கால்களை வலுக்கட்டாயமாக முன்னே வைத்துச் சென்று மெல்ல எட்டிப் பார்த்தாள்.

கைகளைப் பின்னே விரைப்பாகக் கட்டிக் கொண்டு சன்ன லுக்கு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அச்சத்துடன் ஸ்டாண்டின் பக்கம் பார்வையைத் திருப்பினாள். கடவுளே! அங்கே வழக்கமான இயல்பில் தான் சசி தொங்கினாள்.

படத்தில் இருந்த சசியின் கண்களில் அவன் சொன்ன ஆசையோ தந்திரமோ அணுவளவும் இல்லை. மாறாக... சோகமோ... அல்லது வெறுப்போ... எதுவாக இருந்தாலும் வஞ்சகம் இல்லை.

சசியின் மனம் லேசாகிப் போயிற்று.

''சாப்பிட வருகிறீர்களா?''

அவன் மெல்லத் திரும்பினான்.

ஓவியத்தைச் சசி பார்த்துவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

''இங்கே வா சசி,'' என்றான்.

சசி உள்ளே வந்ததும், ''நான் சொன்னபடி ஒரே ஒரு முறை போஸ் கொடேன்,'' என்றான் நயமான குரலில்.

சசி பின்னடையலானாள்.

சட்டெனக் கையை நீட்டி அவளைப் பிடித்து நிறுத்தினான் சியாம். ''ஐ ஸே, சசி! நீ அந்தப் பணத்தை விரும்பிப் பார்த்துத்தான் ஆக வேண்டும். கற்பனை செய். அங்கே இருப்பது பத்தாயிரம் ரூபாய். உனக்கோ மிகமிகத் தேவை. எப்படியாவது அதைக் கைப்பற்ற நினைக்கிறாய். மனத்திற்குள் வேகமாகத் திட்டம் போடுகிறாய். எப்படி...? எப்படி எடுப்பது...?'' என்றபடி மனைவியின் முகத்தைப் பார்த்தவனுக்கு ஆத்திரம் பொங்கியது. ''நான் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறேன். நீ எதை நினைத்துக் கொண்டு இருக்கிறாய்?'' என்றான் கோபமாக.

'நான் தலை குப்புற விழுந்த கதையை...' என்று சொல்ல முடியாமல், ''எனக்கு முடியவில்லையே சியாம்! நீங்கள் சொன்ன மாதிரிச் செய்ய முயன்றுதான் பார்க்கிறேன். ஆனால் உரிமையற்ற பணத்தின்மேல் ஆசை கொள்வது எப்படி என்று சரியாக வரவில்லை,'' என்றாள் மன்னிப்புக் கோருவது போல.

அவன் இகழ்ச்சியுடன் சிரித்தான். ''ஆகா! உரிமையற்ற பணத்தின் மேல் ஆசை கொண்டதே இல்லை அல்லவா! தனதாக்கிக் கொள்ளத் திட்டம் போட்டதே இல்லை அல்லவா?'' என்றான் இளக்காரமாக.

சசியின் முகம் சிவந்தது.

''இப்போது கேட்பதுதானே, அடுத்தவர் பணத்துக்கு ஆசைப்படுவது எப்படி என்று.''

''.............'

''திட்டம் போட்டாய் அல்லவா? செயல்படுத்தினாய் அல்லவா?'' இரக்கமற்றுக் குதறினான் அவன்.

மெல்ல நிமிர்ந்தாள் சசி. ''திட்டம் போட்டது நான் இல்லை சியாம்! ஆனால் அதனாலேயே நான் உயர்வு என்று சொல்லிக் கொள்ளவில்லை. அதைச் செயலாற்றத் துணிந்ததாலேயே நான்... நான் தாழ்ந்து விட்டேன்தான். அன்று... அப்பாவுக்காக எதையும் சகிப்பேன் என்று நினைத்தேன்... இன்று உங்களுடைய அவமதிப்புகளையும்

சகித்துத்தான் ஆக வேண்டும். செய்வேன்!'' கலங்கிய பார்வை என்றாலும், அவனை நேராகச் சந்தித்தது. ஒரு பெருமூச்சுடன் அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள்.

ஆனால் அவன் விடாமல் அவளைப் பற்றிக் குலுக்கி நிறுத்தினான். ''என் படம்?'' என்றான் சினத்துடன்.

மீண்டும் சசியின் நேர் பார்வை அவனைச் சந்தித்தது. வருத்தம் கலந்த புன்னகையுடன், ''நீங்களே சொன்ன மாதிரி உங்கள் கற்பனைத் திறத்தாலேயே வரைந்து கொள்ள வேண்டியதுதான்,'' என்று முடித்தாள்.

இப்போது உணவு அருந்த அழைத்தால் வருவானா? சந்தேகம் உண்டாயிற்று.

கெஞ்சும் பார்வையுடன், ''ஸாரி சியாம்! மெய்யாகவே என்னால் முடியவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள். இப்போது சாப்பிட வருகிறீர்களா?'' என்றாள் நயமாக.

எதிர்பார்த்தது போலவே, ''இப்போது வேண்டாம்,'' என்றான் அவன்.

''பின்னே?''

''வேண்டியபோது சாப்பிட்டுக் கொள்வேன்,'' என்று விரைப்புடன் மீண்டும் ஜன்னல் பக்கம் திரும்பினான் அவன்.

''பாவம், நீங்கள் சாப்பிடுவதற்காகச் சமையல்கார அம்மாளும் சாப்பிடாமல் காத்திருக்கிறாள்.''

''சாப்பிடச் சொல்லு!''

''நாம் சாப்பிடாமல் அந்தம்மா எப்படிச் சாப்பிடுவாள்?''

திடுக்கிட்டாற்போல, ''நாம்? நீயும் சாப்பிடவில்லையா சசி? ஏன்?'' என்று வினவினான் சியாம்.

சசி பேசாது நின்றாள்.

கண நேர அமைதிக்குப் பின், ''ஒன்று கேட்டுக் கொள் சசி! அலுவலக நாள்களானாலும் சரி, விடுமுறை தினங்கள் ஆயினும் சரி, எனக்காக என்று காத்திராமல் நேரத்துக்கு உணவருந்திவிட வேண்டும். பட்டினி கிடக்கக்கூடாது,'' என்றான்.

சசியின் முகம் விகசித்தது.

''சாப்பாடு எடுத்து வைக்கிறேன்,'' என்று வானில் மிதந்து சென்றாள்.

மனைவியின் உற்சாகத்தைக் கண்டு கண்கள் இடுங்கின அவனுக்கு.

சசியின் ஆனந்தம் அவளது ஒவ்வோர் அசைவிலும் பீறிட்டது. அவள் பட்டினி கிடந்து விடக் கூடாது என்பதில் அவனுக்கு அக்கறை இருக்கிறதே! அன்பு இல்லாத மனதில் அக்கறை எப்படி வரும்? அவளது தவறால் அந்த அன்பு... எப்படியும் ஒருநாள் எல்லாம் சரியாகிவிடத்தான் போகிறது.

பார்த்துப் பார்த்துப் பரிமாறினாள்.

கண்கள் பளபளக்க அவளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் அவன்.

''சாப்பிடுங்கள் சியாம்,'' என்று புன்னகையோடு கூறினாள் அவள்.

''நீ? உனக்கும் ஒரு தட்டு வைத்துப் பரிமாறு. சேர்ந்து சாப்பிடலாம்.''

''உங்களுக்குப் பரிமாற...'' என்று இழுத்தாள் சசி.

''பரவாயில்லை! நாம் இருவர்தானே? எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடலாம், வா. நீயும் என்னோடு சாப்பிட்டால்தான் ஒழுங்காகச் சாப்பிடுகிறாயா என்று தெரியும். சரியாகச் சாப்பிடாமல் உடம்பு கெட்டுவிடக் கூடாதே,'' என்றான் ஒரு மாதிரிச் சிரிப்புடன்.

ஏதோ எச்சரிக்கை மணி அடித்தாற் போலத் தோன்றியது சசிக்கு. ஆனால் அவன் உடன் சேர்ந்து உண்ண அழைத்த மகிழ்ச்சியால் மறந்துவிட, தட்டை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

''நெய் ஊற்றிக் கொள்ளவில்லையே சசி! முட்டை கூட எடுத்துக் கொள்ளவில்லையே! சாப்பிடு. இல்லாவிட்டால் உடம்பு சத்துக் கெட்டு உலர்ந்து போகும்,'' என்று தானாகவே ஒரு முட்டையை எடுத்து அவளுக்கு வைத்தான்.

மீண்டும் உடம்பு.

இப்போது உற்சாகம் அடியோடு மறைந்து விடக் கலக்கத்துடன் கணவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் சசி.

''சாப்பிடாமல் என் முகத்தைப் பார்க்கிறாயே, சசி! சாப்பிட்டு உடம்பை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால்...''

''இல்லாவிட்டால்...?'' என்றாள் சசி மூச்சைப் பிடித்துக் கொண்டு.

''இல்லாவிட்டால் இரவில் என் பணத்தின் பெறுமானம் குறைந்து விடும் பார். உடம்பைப் பேணிப் பாதுகாத்து...'' என்று உதட்டில் கேலிப் புன்னகையோடு கூறினான் சியாம்.

''போதும்!'' என்று கதறி விட்டாள் சசி.

கடைசியில்... கடைசியில் எல்லாம் இதற்காகத்தானா? அவள் என்னென்ன கதைகள் கண்டு கற்பனையில் மிதந்தாள்!

''ஏன், சசி...'' என்று வியப்பைக் காட்டிக் கண்களை உருட்டினான் அவன். ''எவ்வளவு பணம் போட்டிருக்கிறேன், எல்லாவற்றுக்கும் ஈடு உன் உடம்புதானே. ஒரு நாள் நீ படுத்தால் எனக்கு எவ்வளவு இழப்பு.''

நெஞ்சு வரையிலும் குமட்ட, எழப் போனாள் சசி.

அவன் கை இரும்பென அவளைப் பற்றி அமர்த்தியது. ''எங்கே ஓடுகிறாய்? உட்கார்ந்து சாப்பிடு. எத்தனை ஜாலங்கள் செய்து பெற்ற வாழ்வு? அனுபவியாமல் விடுவதா? சாப்பிடு.''

ஒவ்வொரு கவளமும் நெருஞ்சி முள்ளாய்த் தொண்டையில் சிக்கி விக்கியபோதும் சியாம் விடவில்லை. தட்டு முழுமையும் காலியான பிறகே அவளை எழ அனுமதித்தான்.

அன்று மட்டுமல்ல, அதன் பின் சேர்ந்து உண்ண நேர்ந்த ஒவ்வொரு வேளை உணவுமே சசிக்கு விஷமாயிற்று.

உடையும் அப்படித்தான். எளிமையாகக் கட்டினால், ''எத்தனை மாய்மாலம் செய்து பணக்கார வாழ்வு கிடைத்திருக்கிறது! வேலைக்காரி கட்டுகிற துணியைக் கட்டுகிறாயே! உனக்காக விலை உயர்ந்த ரகத்தில் கறுப்பு, கருநீலம், கருஞ்சிவப்பு என்று எத்தனை வாங்கிப் போட்டிருக்கிறேன், கட்டு!'' என்பான்.

தானாகவே சற்று நல்லதாகக் கட்டினால், ''இதற்காகத் தானே இவ்வளவு வேஷம் போட்டாய்? அனுபவிக்கா விட்டால் எப்படி?'' என்பான்.

'வேண்டாத மருமகள் கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்!' என்று ஒரு பழமொழி உண்டே, அது எப்படி என்பது சசிக்கு இப்போது புரிந்தது.

எந்த வகையில் அவனை அணுக முயன்றாலும், பார்வை யாலும் வார்த்தையாலும் சுட்டுப் பொசுக்கினான்.

தோற்றுத் துவண்டு அவள் ஏங்கி நிற்கையில் இன்னமும் சீண்டினான். ''பணம் பணம் என்றால் சும்மா கிடைக்காது சசி! சினிமாக்களில் காட்டுவதுபோல் வேசி வாழ்வு என்றால் இரவில் ஒவ்வொருத்தனோடு பஞ்சணையில் புரள்வது மட்டும்தான் என்று நினைத்தாயா? பணம் கொடுத்தவன் ஒவ்வொருத்தன் எப்படி மிருகமாய் இருப்பான் தெரியுமா? நரக வேதனைப் படுத்தி விடுவான். அதை யெல்லாம் சகித்துத்தான் பெட்டியை நிரப்ப வேண்டும்!''

உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்து எல்லாவற்றையும் அவனிடம் சொன்னது தவறோ என்று கூடத் தோன்றியது அவளுக்கு. வருத்தமான புன்னகையுடன், ''நானே சொல்லியிருக்கா விட்டால் அந்த அளவுக்கு நான் துணிந்தது உங்களுக்குத் தெரியாதே சியாம்,'' என்றாள் மெல்லிய குரலில்.

''இருக்கலாம். ஆனால் பணத்துக்காகத்தான் நீ என்னிடம் வந்தாய் என்பது சரிதானே!''

பணத்துக்காக, பணத்துக்காக என்று அவன் குத்துவது சகி யாமல், ஒரு நாள் சசி வேலையாட்கள் எல்லாருக்கும் லீவு கொடுத்துச் சென்னை பங்களாவுக்கு அனுப்பினாள். சமையல் கார மீனம்மாள், மேல் வேலைக்காரி, தோட்டக்கார வேல்சாமி.

எல்லா வேலைகளையும் உடல் நோக நோகச் செய்தாள். முன்னே செய்ததுதானே என்ற அலட்சியத்தில் தொடங்கிய வளுக்குச் செய்தபோது வியர்த்து விறுவிறுத்து விட்டது.

இரண்டு அறைகளைச் சுத்தம் செய்து எளிய சமையலை முடிப்பது எப்படி? இந்தப் பெரிய வீட்டைச் சுத்தம் செய்து தோட்டம் பார்த்து நாலு வகைக் கறிகளோடு, சமையல் செய்வது எப்படி?

ஆயினும் விடாமல் பிடிவாதமாகச் செய்து முடித்தாள்.

மாலை வருமுன் உடல் அயர்ந்து போயிற்று.

ஆறரை மணிக்குச் சியாம் வரும் நேரத்தில் முகத்தைக் கழுவிய பிறகுதான் கண்களைத் திறக்க முடிந்தது.

உண்டு முடித்து அவன் 'பேப்பர் வொர்க்' பார்க்கும்போது உட்கார்ந்த நிலையிலேயே உறங்கிப் போனாள் சசி.

''சசி,'' என்று உலுக்கி எழுப்பிப் படுக்கையில் கொண்டு விட்டான் அவன்.

இதுவே அடுத்தடுத்துத் தொடரவும் காரணத்தை விசாரித்தான்.

''வேலை...''

''ஏன்? வேலையாட்கள் என்ன ஆனார்கள்?''

அவளாக லீவு கொடுத்து அனுப்பியது தெரிந்ததும், ''ஏனோ?'' என்றான் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி.

''நான் பணத்துக்காக உங்களிடம் வரவில்லை,'' என்றாள், அவனை நேராகப் பார்த்து.

''பணத்துக்காக இல்லை?'' என்று ஆச்சரியம் காட்டினான் அவன்.

அவளுக்கு முகம் சிவந்தது. ''அதாவது என் சுகத்துக்காக நான் பணத்தை நாடவில்லை சியாம்,'' என்றாள் சமாளித்துக் கொண்டு.

அவன் பெரு நிதானத்துடன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, அவளிடம் திரும்பினான். ''நாம் இருவரும் வெவ்வேறு சுருதியில் பாடுகிறோம் சசி! இரண்டும் இணைவது ஒரு போதும் இல்லை,'' என்றான் தீர்மானமாக.

''சியாம்,'' என்றாள் சசி பதற்றத்துடன்.

''யெஸ், உண்மை. அதனால் இந்த வீண் முயற்சிகளை எல்லாம் விட்டுவிடு,'' என்றான் அவன் முடிவாக.

14

யாசிப்பவள் போலக் கையேந்தி, "கொஞ்சம் யோசியுங்கள் சியாம்!" என்று கெஞ்சிக் கேட்டாள் சசி.

சலனமற்று அவளைப் பார்த்தான் அவன். "இந்த ஒரே ஒருமுறை தெளிவாகச் சொல்கிறேன். கேட்டுக் கொள் சசி! உன்னிடம் என்னைக் கவர்ந்த முக்கியமான அம்சம் என்ன தெரியுமா? உன் நேர்மை... அதாவது அன்று நான் தவறுதலாக உன்னிடம் இருப்பதாக எண்ணிய நேர்மை. பெண்களிடம் அதெல்லாம் அடியோடு கிடையாது என்று எண்ணியிருந்தேன்..."

"உங்கள் தாயாரும் ஒரு பெண்தான் என்பதை மறந்து பேசாதீர்கள் சியாம்!" உடல் களைப்பில் பொறுமையிழந்து கூறினாள் சசி.

அவன் முகம் கன்ற, "அதனால்தான் எனக்குப் பெண்ணினத்திடம் அடியோடு நம்பிக்கை இல்லை," என்று சிகரெட்டை ஜன்னல் வழியே விட்டெறிந்தான்.

"சியாம்..." என்று திகைத்தாள் அவள்.

இந்த இடைப் பேச்சைக் கவனியாதவன் போல அவன் தொடர்ந்தான். "உன்னைப் பார்த்ததும், அதிலும் உன் பேச்சைக் கேட்டதும், அந்த நினைவு மாறியது. நீ வேறு விதம் என்று நினைத்தேன். ஆனால்... சை!" அவள் அருகில் வந்து அவளது தோளை முரட்டுத் தனமாகப் பற்றித் திருப்பினான். "நீ உன் வசதிக்காக என்னை ஏமாற்றினாயா அல்லது உன் தந்தைக்காக என்னை முட்டாளடித்தாயா என்பது பிரச்சினை அல்ல. ஏமாற்றினாய். ஆம் உன்னைத் தேவதை என்று நம்ப வைத்து, நம்பிய என்னை ஏமாளி ஆக்கினாய். அது மட்டும்தான் விஷயம். நீ ஏமாற்றினாய். நான் ஏமாந்தேன். போகட்டும். நீ வேண்டிய பணம் உனக்குக் கிடைத்தது. நான் கொடுத்த பணத்துக்கு நீ... ஊகூம்... உன் உடல் எனக்குக் கிடைத்தது. பணமும் உடலும்தான் பரிவர்த்தனை. கிடைத்தவரை இருவருக்கும் போதுமானது. அதற்கு மேல் ஆசைப்படாதே!" என்று முடித்தான்.

மடியில் தானாக வந்து விழுந்த சொர்க்கம்! கண்டு கொள்ளாமல் காலால் உதைத்துத் தள்ளி விட்டானே.

ஆற்றாமையில் கண்கள் கசிய அவன் முன்னே மண்டி யிட்டாள். கையேந்தி, ''தயவு செய்து மன்னியுங்கள்!'' எனுமுன் இடைமறித்தான் சியாம்.

''எனக்கு மன்னிக்கத் தெரியாது!'' என்றான் சற்றும் இளகாமல்.

விம்மலுடன் எழுந்தாள் சசி. ''சியாம்! நான் செய்த தப்புக்குப் பிராயச்சித்தமே கிடையாதா? எதுவானாலும் செய்கிறேன். சியாம்! சொல்லுங்கள் சியாம்!'' என்றாள் சொல்லொணாத துயரத்துடன்.

இரக்கத்தின் சாயல்போல் ஒன்று ஒரு விநாடிக்குள் அவன் கண்களில் தோன்றி மறைந்தும் போயிற்று.

பழையபடி கண்கள் கடினமாயின. ''எதுவும் கிடையாது. விட்டுவிடு!'' என்றான் முடிவாக. ''வேலையாட்களை வரச் சொல்லிவிடு. உன் உடல் உழைப்பால் இரவில் என் விலை நஷ்டப்படுகிறது பார்,'' என்று மேலும் ஓர் அம்பை விடுத்து விட்டுப் போனான்.

என்ன செய்தாலும் பாறைமேல் மோதுவது போல ஒரு பலனுமின்றி அலுத்துக் களைத்துச் சலித்து ஓய்ந்து போனாள் சசி.

வேலையாட்கள் எல்லாரும் மீண்டும் வரப் பழைய படியே வாழ்வு தொடர்ந்தது.

சசி நத்தையாய் ஒடுங்கலானாள்.

ஒரு நாள் காலையில் அலுவலகம் சென்றவன் விரைவிலேயே திரும்பி வந்தான்.

முதலில் திகைத்தாள் சசி.

ஆனால் சற்று நேரத்தில் லில்லி வரவும் விஷயம் புரிந்தது.

லில்லியுடன் அவளைத் தனியே பேசவே விடவில்லை அவன். ''சசி! சசி!'' என்று தன் அருகிலேயே அமர்த்திக் கொண்டான்.

''நான் போன் செய்தபோது நீங்கள் அலுவலகத்தில் இருந்தீர்களே,'' என்றாள் லில்லி சற்றுக் குழப்பத்துடன்.

''கொஞ்சம் இவளை மறந்து வேலையைப் பார்க்கத் தொடங்கினால் நீங்கள் கிளறிவிட்டு விட்டீர்கள். நினைவு வந்து விட்ட பின் நேரில் பாராமல் அங்கே இருக்க முடியவில்லை,'' என்று சசியின் தோளில் உரிமையுடன் ஒரு கையைப் பதித்தான் சியாம்.

சசிக்கு உடம்பெல்லாம் கூசியது.

எதையுமே புரிந்து கொள்ளாத லில்லி கலகலவென்று சிரித்தாள். ''நான் வந்ததுகூட இடைஞ்சல்தானோ?''

''நிச்சயமாக!'' என்று அழுத்தத்துடன் ஆமோதித்தான் அவன்.

லில்லியின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது சசிக்கு. ஆனால் என்ன செய்வது? என்ன செய்வதற்கு அவளுக்கு உரிமை இருந்தது? செயலற்ற பரிவுடன் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

சில நிமிட அமைதிக்குப் பின் லில்லி எழுந்தாள். ''நான்...!'' என்று தயங்கினாள்.

''மன்னியுங்கள் மிஸ் லில்லி! உங்களிடம் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளுங்கள்,'' என்றான் சியாம்.

மேகம் விலகிய மாதிரிப் பளீர் என்று சிரித்தாள் லில்லி. ''எங்கள் சசியிடம் உங்களுக்கு உள்ள ஆசைதானே! பரவாயில்லை. அடுத்த மாதமாவது எங்கள் வீட்டுக்கு வா, சசி!'' என்று விடைபெற்றுச் சென்றாள் லில்லி.

அவளை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டு இருந்து விட்டுக் கணவனிடம் திரும்பினாள் சசி. ''திருப்தி ஆயிற்றா?'' என்றாள் வெறுப்புடன்.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

சசிக்கு அடக்க முடியவில்லை. ''பொய் ஏமாற்று எல்லாம் எங்கள் உரிமை என்றீர்கள். இப்போது லில்லியிடம் உண்மையைச் சொல்வதுதானே! ஏமாற்றியதைக் கண்டு

கொண்டதால், இயன்றவரை வதைக்கிறேன் என்று உண்மை பேசுவதுதானே!'' என்றாள் சினத்துடன்.

''நான் ஏமாந்ததை நானே தண்டோராப் போட முடியாது.''

''இப்படிச் சொல்லி வேஷம் போட்டு ஏய்க்கிறீர்களா?'' என்று மடக்கினாள் சசி.

''அதாவது உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் என்கிறாய்?''

''ஆமாம். அப்படித்தான்,'' என்றாள் சசி விடாமல். லில்லியின் உள்ளத்தை வேதனைப்படுத்தியது அவளுக்கு மனது ஆற மறுத்தது.

''என் வேஷத்தால் யாரும் வஞ்சிக்கப்படவில்லை. யாரும் நட்டப் படவும் இல்லை.''

''லில்லியின் மன வேதனை?''

''அது அவளுக்கு உரிய தண்டனை!'' என்றான் சியாம், வெகு அமர்த்தலாக.

''அவளுக்குத் தண்டனை கொடுக்க நீங்கள் யார்? உங் களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று வெடித்தாள் சசி.

''உரிமையா? அன்று என்னைப் பலியாடு ஆக்கினாளே, உன் தோழி. அந்தச் சதி தந்த உரிமை!'' என்றான் அவன் அசையாமல்.

சசி மவுனமானாள். இவனைப் பேச்சில் வெல்ல முடியாது என்பது அவளுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும்.

அவளது பதிலுக்காகச் சில கணங்கள் காத்திருந்துவிட்டு, ஏளனச் சிரிப்புடன் காரை நோக்கிச் சென்றான்.

திடீரென்று ஒரு நாள், ''சனிக் கிழமை தயாராயிரு. குன்னூர் போய் உன் அப்பாவைப் பார்த்துவிட்டு வரலாம்,'' என்றான்.

சசி மனதிற்குள் தந்தையைப் பற்றிய அரிப்பு எடுத்துக் கொண்டேதான் இருந்தது. ஆனால் கணவனிடம் தானாகக் கேட்கத் தயங்கிக்கொண்டு பேசாதிருந்தாள். இப்போது அவனாகவே கூறவும் விழிகள் மலர நன்றி சொன்னாள்.

''பாவம்! அவர் வேறு மகளைக் காணோமே என்று கலங்குவானேன்! எனக்கும் திங்களன்று கோவையில் ஒரு மீட்டிங் இருக்கிறது,'' என்றான் அவன் அசிரத்தையாக.

சாதகப் பட்சி என்று ஒரு பறவை முன்னாளில் இருந்ததாம். அது மழை நீர் தவிர வேறு நீர் அருந்தாதாம். எத்தனை தாகம் என்றாலும் சரிதான். ஒரு மழைத்துளிக்காக அந்த சாதகப் பட்சி ஏங்கியது போலக் கணவனின் ஓர் அன்பான சொல்லுக்காக, ஒரு பிரியமான பார்வைக்காகச் சசி தவம் கிடந்தாள். எதுவும் கிட்டாமல் வாடினாள்.

கோவைப் பயணம் மவுனத்திலேயே கழிந்தது.

'ப்ரீஃப்கேஸி'ல் கொணர்ந்திருந்த சில பேப்பர்களில் ஆழ்ந்து போனான் அவன்.

பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டு இருந்த சசியின் கண்கள் முந்தையப் பயணத்தின் நினைவில் பனித்தன.

'அப்பாவைப் பற்றிப் பயப்படாதே!' என்று எவ்வளவு பரிவுடன் ஆறுதல் சொன்னான்.

இப்போதும் தந்தையின் நினைவில் அவள் கலங்கித்தான் இருந்தாள். எப்படி இருக்கிறாரோ என்ற பயம்.

ஒரு வார்த்தை. ஒரே ஒரு வார்த்தை - 'பயப்படாதே!' என்று அவன் ஒரு வார்த்தை சொன்னால்கூடப் போதுமே. மனதில் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்!

ஏக்கத்துடன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் சசி.

இரும்பில் வடித்த சிலை போலக் கடினமான பாவத்துடன் அவன் தோற்றம் அவளைப் பயமுறுத்தியது. கண்களை இறுக மூடிக்கொண்டு சன்னல் மேல் சாய்ந்து கொண்டாள்.

ஸ்விட்ச் போடும் சத்தம் கேட்டுக் கண்களைத் திறந்தாள்.

தன் பக்க விளக்கைப் போட்டிருந்தான் சியாம். ''பெரிய விளக்கை நிறுத்திவிட்டுப் படுத்துக் கொள்!'' கையிலிருந்த பேப்பரில் பார்வையைப் பிரிக்காமலேயே சொல்லி விட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தான் சியாம்.

அவன் சொன்னது போலவே விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டாள் சசி. துக்கம் தொண்டையை அடைத்தது. வெகு அருகிலேயே கணவன் இருந்தும் அனாதை போல உணர்ந்தாள். கண்களில் ஈரக் கசிவுடனேயே உறங்கி விட்டாள்.

சற்றுப் பொறுத்து எழுந்த சியாம் அவளையே பார்த்துக் கொண்டு அருகில் பல நிமிடங்கள் நின்றதை அவள் அறியாள்.

ஒரு மெல்லிய போர்வையால் அவளை மூடிவிட்டு அவன் தன் படுக்கையில் பெருமூச்சுடன் விழுந்ததும் அவளுக்குத் தெரியாது.

குன்னூரில் சபேசன் உற்சாகமாக இருந்தது போலத்தான் சசிக்குத் தோன்றியது. ஆனால் உடம்பு தேறினாற் போல அவளுக்குத் தோன்றவில்லை.

மகளைப் பார்த்ததும் புன்னகை செய்தார்.

பேசிக்கொண்டு இருக்கையில் நர்ஸ் வந்தாள்.

''ஓ! மிஸ்டர் சபேசனுடைய மகளும் மருமகனுமா? ஹலோ, மிஸஸ் சியாம்! மெலிந்திருக்கிறீர்களே, என்ன விஷயம்?'' என்று கண் சிமிட்டினாள்.

''உறக்கமற்ற இரவுகள்!'' என்று பதிலுக்குச் சசியிடம் கண் சிமிட்டிச் சிரித்தான் சியாம்.

''லேட் அன்ட் ஸ்வீட் நைட்ஸ்!'' என்று உரக்கச் சிரித்துவிட்டு, சபேசனுக்கு பல்ஸ் டெம்பரேச்சர் எல்லாம் பார்த்துவிட்டுப் போனாள்.

போகையிலேயே மற்றவர் அறியாவண்ணம் சியாமிடம் ஜாடை காட்டிவிட்டுப் போனாள் நர்ஸ்.

''நீ மாமாவிடம் பேசிக் கொண்டு இரு. நான் அப்படியே நடந்துவிட்டு வருகிறேன்,'' என்று எழுந்து போனான் சியாம்.

வெளியே நர்ஸ் காத்திருந்தாள்.

''உங்களைப் பெரிய டாக்டர் பார்க்க வேண்டும் என்றார்,'' என்று அவரிடம் அழைத்துச் சென்றாள்.

வளவளக்காமல், ''இது லூஸிங் கேம், மிஸ்டர் சியாம்,'' என்றார் பெரிய டாக்டர்.

''எவ்வளவு காலம் டைம்?'' என்றான் சியாம் சுருக்கமாக.

''சொல்வதற்கு இல்லை. இங்குள்ள சீதோஷ்ணத்தில் அவர் ஓராண்டு காலத்துக்கு மேலாக வாழவும் கூடும். அன்றி இரண்டே மாதங்களில் முடியவும் கூடும்,'' என்று மேசை மேல் இருந்த பேப்பர் வெயிட்டை ஒற்றை விரலால் உருட்டி நகர்த்தினார்.

மீண்டும் சியாமை நோக்கி, ''நான் கேட்பது முடிவு தோல்வி என்ற நிலையில் இவ்வளவு செலவு செய்து அவரை இங்கேயே வைத்துப் பார்க்கப் போகிறீர்களா என்பதுதான்,'' என்றார்.

''ஆமாம்,'' என்றான் அவன் தயக்கம் இன்றி. ''உங்களிடம் 'டெபாசிட்' இருக்கிறதில்லையா? மாதா மாதம் பில்லை கம்பெனிக்கே அனுப்புங்கள்,'' என்று அவரோடு கைகுலுக்கி விட்டு வெளியேறினான்.

திடீரென்று நின்று, ''மகளை அதிகம் தேடுகிறாரா?'' என்று விசாரித்தான்.

''இல்லை. அவர் அதிகம் பேசுவதே இல்லை. இந்த நோயும் அப்படிப்பட்டதுதான். புலன்களின் விழைவுகள் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டே போகும். நினைவும் குறைந்துவிடும். உடல் வேதனையைக் குறைப்பதற்காகக் கொடுக்கப்படும் மருந்துகளின் 'ரியாக்ஷன்' வேறு.''

''அப்படியானால் அவர் இங்கேயேதானே இருக்கட்டும். இருக்கும்வரை நோயின் வேதனை இல்லாமல் வாழட்டும்!'' என்று சொல்லிவிட்டுப் போனான் அவன்.

அவன் உள்ளே வரவும், சசி கவலையுடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

புன்னகையுடன் அவள் அருகில் வந்து அமர்ந்தான் சியாம்.

'அப்பாவுக்காக வந்த புன்னகையா?' என்று நகைப்புடன் நினைத்தாள் சசி.

திரும்புகையில் மீண்டும் கவலையுடன் கேட்டாள்.

"டாக்டரிடம்தானே போனீர்கள்? நர்ஸ் ஜாடை செய்ததைக் கவனித்தேன். டாக்டரிடம்தானே? என்ன சொன்னார்? அப்பாவுக்கு உடம்பு மோசமாகி விடவில்லையே?" என்றாள் பயத்துடன்.

"ஷ்... எத்தனை கேள்விகள் சசி?" என்று முறுவலித்தான் அவன். "மாமாவுக்கு மெதுவாகத்தான் குணமாகுமாம். கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதாம். ஆனால் டாக்டர் அழைத்தது முக்கியமாகப் பண விஷயம் பேச," என்றான்.

"ஓ, சியாம்? ரொம்ப... ரொம்பவும் அதிகமாகச் செலவாகிறதா?" என்றாள் கலக்கத்துடன் சசி.

இவன் முகம் சட்டென மாறியது. "ஏன், பெறுமானமாக இருக்கிறோமா என்னவோ என்ற சந்தேகம் வந்து விட்டதா? கவலைப்படாதே. நான் திருப்தியாகத்தான் இருக்கிறேன்," என்று சாடினான்.

முகம் வாட, 'ஏன் பேசினேன்?' என்று தன்னையே நொந்து கொண்டாள் சசி.

குன்னூர்ப் பயணத்தின் தொடர்பாகத் தோப்பு வீட்டிற்கு 'டெலிபோன்' வந்தது.

"தேவைப்பட்டால் உன் தந்தை பற்றி அறிந்து கொள் உன் தோழியோடு அரட்டை அடிக்க அல்ல!" ... சியாம்.

ஒரு முழு நிலவு நாளில் மொட்டை மாடியில் நிலவைப் பார்த்தபடி நின்றிருந்தாள் சசி.

நிலவு வெகு அருகில் இருப்பதுபோலத் தோன்றியது. ஓர் ஏணி வைத்து ஏறினால் தொட்டுப் பிடித்து விடலாம் போல அவ்வளவு அருகில். சசியின் ஆனந்தம்கூட அவ்வளவு அருகில் இருப்பது போலத் தோன்றியது.

மனைவியைத் தேடிக் கொண்டு வந்த சியாம் நிலவின் அரை ஒளியில் அவள் பதுமையென நிற்பதைப் பார்த்தான்.

முதல் நாள் தியேட்டரில் அரை இருளில் அவளைப் பார்த்த நினைவு அழைக்காமலே வந்தது.

கண்கள் கனிய அருகில் சென்றான். ''என்ன யோசிக்கிறாய் சசி?'' என்றான் மெல்ல.

''ஒன்றும் இல்லை,'' என்றாள் அவளும் மெல்லவே. ஆனந்தம் பற்றிய அவளது நினைவுகளை அவனிடம் சொல்ல முடியுமா?

ஆனால் அவன் முகம் சட்டெனக் கறுத்தது. ''இதில் கூடவா பொய்!'' என்றான் காரமாக.

இந்தக் குண்டூசிக் குத்தல்கள் இத்தனை நாளில் பழக்கப்பட்டு விட்டாலும் வலியில் குறைவில்லையே. ஆனால் ஒன்று, வேதனையை வெளிக்காட்டாமல் தன்னுள் அடக்கப் பயின்று கொண்டாள் சசி.

வழக்கம் போலவே வலியை மறைத்து, ''நிலவு வெகு அருகில் இருப்பதுபோல் தோன்றுகிறதே என்று பார்த்துக் கொண்டு இருந்தேன்,'' என்றாள்.

அவன் கவனமும் நிலவில் பதிந்தது ''தோற்றம் அப்படித்தான். ஆனால் உண்மையில் எத்தனை ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது... எட்டாத தூரம். எல்லாமே அப்படித்தான். தோற்றமும் தன்மையும் வேறு வேறுதான்,'' என்றான் இரண்டு அர்த்தத்தில்.

''எட்டா நிலவைக்கூட... எட்டிப் பிடித்து விட்டார் களே!'' என்றாள் சசி ஒரு திருப்தியுடன்.

ஆனால் அவனா விடுகிறவன்! ''எட்டிப் பிடித்தவர்கள் உண்மையான உழைப்பால் பிடித்தார்கள் சசி. ஏமாற்று வேலையால் அல்ல!'' என்று பதிலுக்குக் கொடுத்தான்.

சிறிய மவுனத்தின் பின்னே, ''ஒரே ஒரு தவறினாலேயே ஒருவர் முழுக்க முழுக்கக் கெட்டவர் ஆகி விடுவாரா சியாம்? அவர் நல்லவராகவும் இருக்கலாமே!'' என்றாள் சசி வேதனையுடன்.

அவன் சிரித்தான். ''சசி! கிணற்றைத் தாண்டும்போது முக்கால் கிணறு தாண்டி விட்டேன் என்று பெருமையடித்துக்

கொள்ள முடியுமா? தவறு செய்யும் தூண்டுதலை அடியோடு தடுக்கும் சக்தி உண்டு. அது இருந்தால் முழுக் கிணறு தாண்டி வரலாம். மற்றப்படி ஒரே ஒரு கொலைதானே, என்பதெல்லாம் முக்கால் கிணறு தாண்டியவன் கதைதான்,'' என்றான் தீர்மானமாக.

சுற்றிச் சுற்றிச் செக்கு மாடாக மீண்டும் மீண்டும் அந்தத் தவறிலேயே வந்து நின்றது.

ஓய்ந்து போய், ''என்னை மதிக்க முடியாதுதான். ஆனால் மன்னிக்கவும் இயலாதா சியாம்?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள் சசி.

''மன்னிப்பதாகவும் இல்லை; எதையும் மறப்பதாகவும் இல்லை!'' என்றான் அவன் கருணையற்று.

அடியோடு நம்பிக்கை இழந்து போய் ஒரு நாள் அவனிடம் விடுதலை கேட்டாள் சசி. ''நானும் மகிழ்ச்சியாக இல்லை. நீங்களும் நிம்மதியாக இல்லை. எதற்காக இந்த வேதனை? என்னை விவாகரத்து செய்து விடுங்கள் சியாம்,'' என்றாள்.

''ஏன்? தொல்லையற்ற பணமாக வேண்டுமா அல்லது மொத்தமாகத் தேவையா?'' என்று அவன் கேட்கவும் புரியாமல் திகைத்தாள்.

அவன் கை தட்டினான். ''நடிப்பு பிரமாதம் எப்போதும் போலவேதான்.''

''மெய்யாகவே புரியவில்லை.''

''நம்ப முடியவில்லை. ஆனால் சொல்கிறேன். விவாக ரத்து என்றால் ஒன்று மொத்தமாக உனக்கு நான் பணம் தர வேண்டியிருக்கும் - அல்லது ஜீவனாம்சத் தொகையை மாதா மாதம் தரும்படி தீர்ப்பாகும். என்னுடைய தொல்லை யில்லாமல் என் பணத்தை மட்டும் நிம்மதியாக அனுபவிக்கலாம். அதுதானே உன் திட்டமும்?'' என உதட்டைச் சுழித்தான் அவன்.

''ஐயோ, அப்படியெல்லாம் இல்லவே இல்லை சியாம்,'' என்றாள் சசி பதறிப் போய்.

''பின்னே?'' என்றான் அவன் சிகரெட்டைப் பற்ற வைத்தபடி.

''நீங்களும்... நீங்களும் நிம்மதியற்று அலை பாய்கிறீர்களே... உங்களுக்கும் வேதனைதானே... வேதனையாகத்தானே இருக்கிறது. அதுதான் எனக்கு மிகவும்...''

அவளைத் தன் அருகே இழுத்து நிறுத்தி ஏற இறங்கப் பார்த்தான் சியாம். விழிகள் பளபளபக்க, ''என்னைப் பற்றி அதிகம் உருக வேண்டாம் சசி! என்னைப் பொறுத்த வரையில் எதற்கும்... ஆம், எதற்குமே ஈடாக உன்னிடம் பட்டுப்போல மேனி இருக்கிறது. வழவழப்பான கன்னம் இருக்கிறது. சதைப் பற்றான உதடுகள் இருக்கின்றன... இன்னும் சொல்லட்டுமா?'' என்று கிண்டலாகக் கேட்டான்.

நெற்றிப் பொட்டை அழுத்தியபடி, 'வேண்டாம்!' என்று தலையசைத்தாள் சசி. பிறகு, ''ஆனால் மனம்?'' என்றாள் வருத்தத்துடன்.

அவன் சிரித்தான். ''மனதைப் பற்றிய கவலை எனக்கு வரும்போது பார்த்துக் கொள்ளலாம்,'' என்றான் உதாசீனமாக.

விதி வழி அமைந்த வாழ்க்கை இது. இதை இப்படியே தான் நடத்தியாக வேண்டும் என்ற முடிவை ஏற்று மனதை அமைதிப் படுத்திக் கொண்டு வாழ்க்கையை நடத்த முனைந்தாள் சசி.

அப்போது சியாம் ஒரு நாள் டெலிபோன் செய்தான். ''இரவு நான் வர நேரம் ஆகும். நீ சாப்பிட்டுவிடு,'' என்றான் சசியிடம்.

தொடர்ந்து, ''அந்தப் பெண் சிந்தாமணி கதாநாயகியாகவே நடிக்கிறாளாம். கட்டாயம் வர வேண்டும் என்றாள். போகப் போகிறேன்,'' என்று பேசி முடித்துவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் டெலிபோனை வைத்தான்.

காத்திருந்தாலும் பதில் கிட்டியிராது. ஏனெனில் சிந்தாமணி என்ற சொல்லிலேயே சில்லிட்டுப் போனாள் சசி.

## 15

சிந்தாமணி என்ற பெயர் கேட்டதுமே சசிக்குக் கதி கலங்கிப் போயிற்று.

பள்ளிப் பருவத்தில் இருந்தே அவளுக்குச் சசியிடம் ஒரு வகைப் பொறாமை, வெறுப்பு, குரோதம்...

படிப்பில் மக்காக இருந்த அவளை முதல் மார்க் வாங்கிய சசியுடன் ஒப்பிட்டுப் பேசி ஆசிரியைகள் அடிக்கடி மட்டம் தட்டியதாலோ -

பள்ளி விழாவில் அவள் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டும் சசிதான் பார்வைக்கு அழகாக இருக்கிறாள் என்று சசியை ஆட வைத்ததாலோ -

எப்போதும் இன்முகமும், அன்பு மொழிகளுமாக இருந்த சசியை மற்ற மாணவிகள் சுற்றிச் சுற்றி வந்ததாலோ -

பக்கத்து வீட்டில் வசித்து வந்ததால் சசியைக் கவனிக்க நேர்ந்த சிந்தாமணியின் தாயாரே சசியை உயர்வாகப் பேசியதாலோ -

என்ன காரணத்தினாலோ சிந்தாமணிக்குச் சசி என்றாலே வெறுப்பு.

வெளிப்படையாக அவளை மட்டம் தட்ட முயன்றும் முடியாததால் ரகசியமாக யாரும் அறியாமல் சசியின் பேனாவை உடைத்து வைப்பாள். ட்ராயிங் நோட்டில் கிறுக்கி வைப்பாள். தற்செயலாகப் பட்டது போல் வெண்ணிற யூனிஃபார்மில் மையை உதறிவிட்டு அப்போது தான் கவனிப்பது போல, "அச்சச்சோ, ஸாரி!" என்பாள்.

சசி புத்திசாலிப் பெண் என்பதால், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தூரம் சிந்தாமணியிடமிருந்து விலகி ஒதுங்கிப் போய் விடுவாள்.

திக்கித் திணறிப் பத்தாவது வரை வந்த சிந்தாவுக்கு எஸ்.எஸ்.எல்.சி.யைத் தாண்ட முடியாததால் அதற்கு மேல் சசிக்குத் தொல்லை விட்டது.

சிறு சிறு தொந்தரவுகள் தீர்ந்தன என்று இருந்தவளுக்குப் பெருந் தலை வேதனையாக வந்து சேர்ந்தாள்.

வையில் வைத்த வெடியினாலேயே ஆரம்பமாகியிருந்தது சசியின் வாழ்க்கை.

சென்னையில் அடியோடு அழிக்கப் போகிறாளா?

ஏற்கெனவே ஓட்டை விழுந்த படகு, இப்போது முழுவதாக மூழ்கி விடுமோ?

இரவில் கவலையுடன் கணவனுக்காகக் காத்திருந்தாள் சசி.

அவளை உண்ணச் சொல்லியிருந்தானே தவிர, தனது உணவைப் பற்றி அவன் ஒன்றுமே சொல்லவில்லையே.

சுமார் பதினோரு மணியளவில் அவன் வந்ததும், வேறு எதையும் கேளாமல், ''உணவு எடுத்து வைக்கட்டுமா?'' என்று மட்டும் கேட்டாள் சசி.

''வேண்டாம். அந்த நாடகப் பெண்ணோடு தாஜில் சாப்பிட்டு விட்டேன். எனக்கு ஒன்றும் வேண்டாம். நீ போய்த் தூங்கு,'' என்று தன் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

சசி திகைத்து நின்றாள்.

கோணலாக என்றாலும் அவர்கள் உறவு தொடங்கி இத்தனை நாளில் சியாமின் அறைக் கதவு சாத்தியிருந்தது கிடையாது.

இரவை அவன் அந்த அறைக்குள் கழித்ததும் கிடையாது.

இன்று, அதிலும் சிந்தாமணியைச் சந்தித்து விட்டு வந்திருக்கும் இன்று, அவன் அந்த மாதிரிப் பிரிந்து சென்றது சசிக்குக் கலக்கத்தை மூட்டியது.

அன்று ஒரு நாள் மட்டும் அல்ல.

பலப்பல நாள்கள் சியாம் இது போல நாடகம் பார்க்கப் போனான்.

பிறகு நாடகம் இல்லா விட்டாலும் சும்மாவே சிந்தாமணியைச் சந்திக்கப் போனான்.

வீடு திரும்பும் நேரமும் பிந்திக்கொண்டே போயிற்று.

மறுநாள் முழுவதும் சிந்தாமணியின் புகழ் ஆரங்களை அவன் பாடுவதும் கூடத்தான் பழமையாயிற்று.

''உஷா . தோழி, அந்தப் பெண் சிந்தாமணி வெகு இனிமையாகப் பழகுகிறாள். மிகவும் நல்ல பெண்!'' என்ற சொற்கள் அடிக்கடி சசியின் காதுகளில் விழலாயின.

சில சமயங்களில் கலங்கினாலும் சியாமிடம் சசிக்கு அசையாத நம்பிக்கை இருந்தது. அவன் ஒழுக்கம் தவறக் கூடியவன் அல்ல என்பதில் நிச்சயமாய் இருந்தாள்.

ஆயினும் அவன் திரும்பத் திரும்பச் சிந்தாமணி புகழ் பாடியது மனதை வேதனைப்படுத்தவே செய்தது.

''நடிப்புத் தொழிலில் இறங்கிய பெண். ஆயினும் மனிதர்களிடம் வேடமிடத் தெரியவில்லை அவளுக்கு. மீண்டும் மீண்டும் கோவையில் வாய் விட்டதையே எண்ணி எண்ணி வருந்துகிறாள், பாவம்!'' என்று அவன் பலமாகவே பரிதாபப்பட்டான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, ''சிந்தா நல்லவள் அல்ல சியாம்!'' என்றாள் சசி.

கண்கள் பளபளக்க ஒரு கோணல் சிரிப்புடன் சசியிடம், ''பாம்பின் கால் பாம்பு அறியுமாமே, அவளும் உன் மாதிரி தான் என்கிறாயா?'' என்றான் சியாம்.

ஆனால் அடங்காமல், ''அவள் ஒழுக்கம் சரியில்லாதவள் சியாம்,'' என்றாள் சசி. ''தவறான தொடர்புகள் இருப்பதாக அவளுடைய தாயாரே வருத்தப்பட்டார்.''

''பிழைக்க வேறு வழியில்லாமல் நடிப்புத் தொழிலில் இறங்கியவள். பாவம், எத்தனை பேருக்கு வளைந்து கொடுக்க வேண்டியிருந்ததோ?'' என்று வெகுவாகப் பரிதாபப்பட்டான் அவன்.

சிந்தா தன் கதையைச் சியாமின் உள்ளம் உருகும் வண்ணம் புனைந்து கூறியிருக்கிறாள் என்பது சசிக்குப் புலனாயிற்று.

ஆனால் சியாமுக்கு அது பொய்க்கதை என்பதை எப்படி நிரூபிப்பது?

சசியின் வார்த்தைகளை அவன் நம்ப மாட்டான்.

லில்லி..ய வரவழைத்துச் சொல்லச் சொல்லலா...
ஆனால் அவளையும் அவன் நம்பப் போவது இல்லை.

பின்னே?

ஆனால் சசிக்கு இன்னொரு சந்தேகம் இருந்தது.

சி...ம் சாதாரணமாக மற்ற ஆண்களைப் போன்றவ அல்ல. ஒரு பெண்ணின், அதுவும் சிந்தாவைப் போன்ற ஒ பெண்ணின் பழக்கத்தில் காலத்தைச் செலவிடக் கூடியவ அல்ல. ஆனால் சசிக்குச் சிந்தாவைப் பிடிக்கவில்லை என்பதால் சசியை மேலும் பழி வாங்குவதற்காகவே சிந்தாவுடன் பழகுகிறானோ என்று ஐயம் கொண்டாள் சசி.

இந்த மாதிரிச் சந்தேகம் வந்த பிறகு மேலும் சிந்தாவைப் பற்றிச் சொல்லவும் அவளால் முடியவில்லை.

அவளைப் பழி வாங்கவென்று சிந்தாவிடம் நெருங்கி நெருங்கி அவளது கணவன் படுகுழியில் விழுந்து விடக் கூடாதே.

குழப்பங்கள், சந்தேகங்கள், மன வேதனைகள் என்று இத்தனையும் மறக்கடிக்கும் சந்தேகம் ஒன்று சசிக்கு உண்டாயிற்று. நாளுக்கு நாள் ஐயம் உறுதிப் பட்டது.

கடைசியில் அவள் அளவில் அது நிவர்த்தி ஆனதும் உடம்பெல்லாம் பரவசமாகி இந்தச் சிந்தாவால் இனி என்ன செய்ய முடியும் என்று இறுமாப்புடன் எண்ணலானாள்.

சிந்தாவைப் பற்றி எதிர்ப் பேச்சைச் சசி நிறுத்திக் கொள்ளவும் அவள் கணவன் முகத்தில் முடிச்சு விழுந்தது.

அடிக்கடி யோசனையுடன் சசியை நோக்கலானான்.

அன்று குன்னூர் சென்று சபேசனைப் பார்த்துவிட்டு இருவரும் திரும்பினர்.

''அடிக்கடி வேலையைப் போட்டுவிட்டு உன்னைக் குன்னூருக்கு அழைத்துச் சென்று திரும்புவது கஷ்ட... இருக்கிறது சசி! அடுத்த தடவையிலிருந்து டிரைவ... ஏற்பாடு செய்து விடுகிறேன். காரிலேயே போய் வந்து விடு,'' என்றான் சியாம்.

பின்னர் ஓரப் பார்வையாக மனைவியைப் பார்த்து, ''என்னென்ன நடந்தாலும் உன் தந்தையின் பொறுப்பு என்னுடையது. அதைப் பற்றிக் கவலை உனக்கு அறவே வேண்டாம்,'' என்றான் விட்டேற்றியாக.

சட்டென மூண்ட பீதியால் முகம் வெளுக்க, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று அச்சத்துடன் கேட்டாள் சசி.

சியாமின் பார்வை சசியின் முகத்தில் வெகு கூர்மையுடன் பதிந்தது. தோளை மட்டும் அலட்சியமாகக் குலுக்கி, ''ஏன்! நீ முன்பே சொன்ன வழிதான் சசி! உண்மையாகத்தான் சொன்னாய் என்று நினைத்தேன்,'' என்றான்.

''எ... எதைப் பற்றி?''

''விவாகரத்து பற்றித்தான். வேறென்ன?'' என்று அவன் மீண்டும் தோளைக் குலுக்கினான்.

நெஞ்சு துடிதுடிக்கச் சசி பேசாது இருந்தாள்.

''அப்போது நீ சொன்னது மெய்யாகத்தானே?''

பேச முடியாமல் ஆம் என்று தலையாட்டினாள் அவள்.

''ம்... அப்போது நான் வேறு நினைத்தேன். இப்போது எனக்கும் அதுவே சரியென்று படுகிறது. சரி!''

''ஏன்... ஏன்?''

''சிந்தாவை மணப்பதற்காக இருக்கலாம்!'' என்றான் அவன் விட்டேற்றியாக.

''வேண்டாம்!'' என்று கதறி விட்டாள் சசி.

சியாமின் முகத்தில் ஓர் ஏமாற்றம் பரவியது. சட்டென முகம் கடினமுற, ''ஏன் வேண்டாம்?'' என்று அதட்டினான்.

''சிந்தா... சிந்தாமணி, சியாம்!'' என்றாள் சசி வேதனையோடு.

''அவள் வேண்டாம் என்றால் நீ வேறு பெண் பார்த்து வைத்திருக்கிறாயா?'' என்று அவன் குரூரத்துடன் குத்தினான்.

''அவள்... அவள் உங்களை அழித்து விடுவாள் சியாம்!''

''உன்னை விடவா?''

'.....'

''ஆக, அன்று பேசியது எல்லாம் பொய். என்னை ஏய்ப்பதற்காக நடத்திய இன்னொரு நாடகம்!''

''இல்லை. நிச்சயமாக இல்லை சியாம்!'' என்றாள் சசி. தன்னை மறந்து கத்தினாள்.

''மெல்லப் பேசு. எனக்கு மட்டும்தானே கேட்க வேண்டும்!'' என்று அதட்டினான் அவன். ''அப்போது சிந்தாவை மணக்கவில்லை என்றால் விவாகரத்துக்குச் சம்மதிக்கிறாயா?''

எப்படிச் சம்மதிப்பது? அவள் இருக்கும் நிலையில் காரணத்தை எப்படிச் சொல்வது? ஏக்கத்துடன் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, 'மாட்டேன்!' என்று தலையை அசைத்தாள்.

அவன் வெறுப்புடன் நகைத்தான். ''நீ சம்மதிக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். இந்தப் பணத்தை எல்லாம் விட்டுவிட உனக்கு மனம் வராது. என் நிம்மதியைப் பற்றி நீ பேசுவது எல்லாம் வெறும் ஜாலம்.''

''இல்லை சியாம்! அப்படி இல்லை, இப்போது நான் மறுக்க வேறு காரணம் இருக்கிறது. நிஜமாக சியாம்... அது சியாம், நமக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது சியாம். அதனால்தான்.''

''வா..ட்!''

நம்பிக்கையும் அவ நம்பிக்கையும் போட்டி போடப் பயந்துகொண்டே அவன் முகத்தைப் பார்த்தாள் சசி.

பார்த்த அளவில் நம்பிக்கை அழிந்தது.

முகத்தில் அருவருப்பு படர, ''ஏமாற்றுவதற்கு வாரிசா அல்லது ஏமாற்று வாரிசா? சீச்சி!'' என்றான்.

பிறகு அங்கே நிற்கப் பிடிக்காதவன் போல அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

சசி திகைப்பும் வேதனையுமாக அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

இந்த அருவருப்பை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையே!

என்னதான் அவளிடம் வெறுப்பு என்றாலும் குழந்தையை எப்படி வெறுக்கலாம்?

அந்தக் குழந்தைக்கு அவன் பொறுப்பு இல்லையா?

ஆயிரம் கேள்விகளையும் சசி தனக்குள்ளேதான் கேட்டுக் கொள்ள முடிந்ததே தவிர, கணவனை அணுகவில்லை.

அன்றிலிருந்து சியாம் அவள் அருகே வருவது கிடையாது. ஒரேயடியாய் ஒதுங்கிப் போனான்.

எதிர் பாராமல் தோற்று விட்ட ஆத்திரத்தைச் சில சமயங்களில் அவன் முகத்தில் பார்க்கையில் சசி காரணம் புரியாமல் திகைத்தாள்.

ஆனால் பிறகு சந்தேகம் உண்டாயிற்று. ஒரு வேளை அவன் மெய்யாகவே சிந்தாவிடம் மயங்கி விட்டானோ?

சிந்தா இணங்கினால் கூடச் சியாம் திரை மறைவு வாழ்வு நடத்தக் கூடியவன் அல்ல. அதனால் நேர் வழியில் விவாக ரத்து மூலம் சசியை விலக்கிவிட்டுச் சிந்தாமணியை ஒழுங்காக மணம் புரிந்து கொள்ளத்தான் திட்டமிட்டானோ?

'சிந்தாமணியை மணப்பதற்காக இருக்கலாம்!' என்று சொன்னானே.

அதற்கு இடையூறாகக் குழந்தை வந்து விட்டதே என்றுதான் இவ்வளவு வெறுப்பும் ஆத்திரமுமோ?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்குச் சசி வருத்தத்துடன் வந்தாள்.

மற்றப்படி அவன் இப்படி ஒதுங்குவானேன்?

அதுவும் அவள் அவனுடைய ஆதரவுக்காக ஏங்கி நிற்கும் இந்த நேரத்தில்?

தலைச் சுற்றலும் வாந்தியுமாகத் தடுமாறி அவள் நின்ற போது ஆதரவாகத் தலை சாய்க்க அவளுக்குக் கணவனின் தோள் கிடைக்கவில்லை; கடினமான சுவர்தான் கிடைத்தது.

வாஷ் பேஸின் அருகே துவண்டு போய்ச் சுவரில் தலையை அழுத்திக் கொண்டு நிற்கையில் பழைய பாறை மேல் மோதிக் கொள்ளும் நினைவுகள் வந்து மேலும் தெம்பிழக்கச் செய்தன.

துணையற்ற தனிமையில் மனம் வரண்டு விடும் போல ..ிந்த போதெல்லாம், 'எவ்வளவு நாள் இப்படிப் பாரா . கமாக இருப்பார்? குழந்தை பிறந்து சிரிக்கத் தொடங் ..ால் தானாக மாறி விடுவார்!' என்று பிடிவாதமாகக் கற்பனைகள் செய்து தைரியத்தைக் கூட்டிக் கொள்வாள்.

ஆனால் கணவரிடமிருந்து கிட்டாது போன ஆதரவு எதிர்பாராத இடத்தில் இருந்து பல மடங்காகக் கிடைத்தது.

அன்று வரை 'எஜமானி ஸ்தானத்துக்கு எப்படியோ வந்தவள்' என்பது போலக் கல்லாக உறைந்திருந்த சமையற் கார மீனம்மா பெற்ற அன்னையாக மாறினாள்.

''இன்று மோர்க்கூழ் கிளறுகிறேன். பிடிக்கிறதா என்று பார். இன்று நெல்லிக்காய்த் தொக்கு செய்தேன். தொட்டுக் கொண்டு இரண்டு வாய் சாப்பிடம்மா,'' என்று விழுந்து விழுந்து உபசரித்தாள்.

காலமற்ற காலத்தில் அவளுக்காக என்று எங்கிருந்தோ மாங்காய் கொண்டு வந்தான் தோட்டக்கார வேல்சாமி.

புளியங்காய் கொண்டு வந்து நீட்டினாள் மேல் வேலைக் காரி. சசிக்குக் கண்கள் பனித்தன.

அவளும் தன் கவனத்தை வேறு திசைகளில் வலுக் கட்டாயமாகத் திருப்பினாள்.

ஒருநாள் டாக்டரிடம் சென்று திரும்புகையில் ஒரு மீன் தொட்டி, மூன்று ஜோடி தங்க மீன்களோடு வாங்கி வந்தாள். அவை பெருகுவதை, குட்டி போடுவதை ஆவலுடன் கண்டு மகிழ்ந்தாள்.

நர்சரி ஒன்றிலிருந்து விதை வாங்கி வந்து தன் கையால் விதைத்து அவை முளைத்து வருவதை ஆசையாகப் பார்த்தாள்.

விதையிலிருந்து முளை வந்து தளிர் ஆகும்போது தனக் குள்ளே இப்படித்தான் குழந்தை வளரும் என்று எண்ணிக் களித்தாள்.

தோட்டக்காரனின் கோழிக் குஞ்சுகளைப் பார்த்துக் கொண்டே வெகு நேரம் அமர்ந்திருப்பாள்.

மரத்தடியில் அப்படி ஒரு நாள் சாய்ந்திருக்கையில் திடீரென்று வயிற்றினுள் 'விலுக்'கென்றது.

திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்து உட்கார்ந்தாள் சசி.

மீண்டும்... மீண்டும்... அதே 'விலுக்.'

பீதியுடன் எழுந்து மிரள விழித்தாள்.

''என்னாங்கம்மா?'' என்று வேல்சாமியின் மனைவி தங்கம் ஓடி வந்தரள்.

''ஓ... ஒன்றுமில்லை, தங்கம்! கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கிறது,'' அவளிடம் சொல்லிவிட்டு வயிறு அதிகம் அசையாமல் வீட்டிற்குள் விரைந்தாள்.

டெலிபோனில் டாக்டரை அழைத்தாள். ''டாக்டர், டாக் டர்...'' என்றவளுக்குப் பயத்தில் பேசக்கூட முடியவில்லை.

''என்னம்மா, என்ன?'' என்றார் டாக்டரும் அவசரமாக.

''வயிற்றில்... வயிற்றில் என்னமோ செய்கிறது.''

''வலிக்கிறதா?''

''ஊகூம்.''

''என்ன சாப்பிட்டாய்? அஜீரணமா?'' என்று விசாரித்தார் டாக்டர் சற்று அமைதியற்றவராக.

''அது இல்லை டாக்டர்! என்னவோ வயிற்றில் இங்கும் அங்கும் 'களுக் களுக்' என்கிறது. தானாக உள்ளே என்னமோ அசைகிற மாதிரி... என்ன டாக்டர்? ஏன் சிரிக்கிறீர்கள்?'' டாக்டரின் சிரிப்பில் கவலை நீங்கப் பெற்றவளாய் ஆர்வத் துடன் வினவினாள் சசி.

''இது எத்தனாவது மாதம் சசி? நாலு முடிந்து ஐந்து ஆகிறது இல்லையா?''

''ஆமாம்.''

''உன் பிள்ளை பொல்லாத சுட்டி. அதற்குள் அசையத் தொடங்கி விட்டான்.''

''டாக்டர்?'' என்றாள் சசி பரவசத்துடன்.

''ஆமாம்மா. இப்போது முழு வடிவம் வளர்ந்திருக்கும். சும்மா இருக்க முடியாமல் கையைக் காலை அசைக்கும்.

அதுதான் அந்தக் 'களுக் களுக்' எல்லாம். வேறு ஒன்றும் இல்லையே?''

''இல்லை டாக்டர். டாக்டர்! தொந்தரவு செய்ததற்கு ஸாரி டாக்டர்! இதெல்லாம் எனக்குத் தெரியாது,'' என்றாள் சசி வெட்கத்துடன்.

''பரவாயில்லை,'' என்று புன்னகையுடன் போனை வைத்தார் அந்த லேடி டாக்டர். 'கற்றுத் தர அன்னையற்ற பெண், பாவம்!' என்று எண்ணிக் கொண்டார்.

அன்றிலிருந்து சசியின் புதிய பொழுதுபோக்கு வயிற்றுக் குழந்தையின் அசைவு.

ஒவ்வோர் அசைவையும் ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்து மகிழ்வாள்.

'என் கதிர்க் குட்டி (கதிரவன் என்பது சசி கருவில் இருக்கும் தன் பிள்ளைக்கு ஆசையாய்ச் சூட்டிய பெயர். வாழ்வின் இருளை அந்த வானத்துக் கதிரவன் போல அகற்றி விடுவானாம்) இப்போது தன் பிஞ்சுக் கால்களால் அம்மாவின் தோள் மேலே ஏறப் பார்க்கிறானாம்.'

'இப்போது கையை நீட்டி அம்மாவைக் கட்டிப்பிடிக்க முயற்சிக்கிறானாம்.'

'இப்போது அம்மாவை முத்தமிட அண்ணாந்து பார்க்கிறான்.'

ஆயிரம் ஆயிரம் ஆசைக் கற்பனைகள்.

பகிர்ந்து கொள்ள ஆளில்லாமல் ஒன்றியாக நின்று ரசித்தவை.

ஒரு நாள் தன்னையும் மீறிக் கணவனிடம், ''பேபி அசைகிறது சியாம்,'' என்றாள் ஆவலோடு.

அவன் தோளைக் குலுக்கி விட்டுக் கையிலிருந்த பேப்பரில் வெகு தீவிரத்துடன் மூழ்கினான்.

அதிலிருந்து அவனிடம் சசி ஏதும் சொல்வது இல்லை.

அவன் அருகிலிருப்பதை மனம் மிகவும் நாடும்போது பகலானால் மீன் தொட்டி, கோழிக் குஞ்சு என்று போவாள்.

இரவானால் தன் அறையில் உள்ள சியாமின் ஃபோட்டோவை மடியில் வைத்துக் கொண்டு அதனுடன் பேசுவாள்.

ஒரு நாள், ''பார்த்தீர்களா, உங்கள் பையன் அவன் பாட்டில் புரளுகிறான். எனக்கு 'விண்' என்கிறது. அம்மாவுக்கு வலிக்கும் என்று உங்கள் பிள்ளைக்குத் தெரிய வேண்டாமா?'' என்று நீட்டி முழக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது அறைக் கதவு திடீர் என்று திறந்தது.

''யாருடன் பேசுகிறாய்?'' என்று கேட்டபடி சியாம் நின்றான்.

## 16

வெகு நாள்களாகச் சியாம் அவளது அறைக்குள் அடியெடுத்து வைத்ததே இல்லை என்பதால் இப்போது அவன் வரக்கூடும் என்று சசி எண்ணவே இல்லை.

குழந்தையின் நினைவில் ஆழ்ந்து இருந்ததால் தன் குரல் அடுத்த அறைவரை எட்டிவிடக் கூடும் என்றும் அவள் நினைக்கவில்லை.

ஆனால் திடுமென்று அவன் வந்து நின்று விசாரிக்கவும் திணறிப் போனாள்.

அவசரமாகப் படத்தைப் படுக்கை மேல் கவிழ்த்து வைத்துவிட்டுக் கட்டிலைவிட்டு இறங்கினாள்.

இவனிடம் நிஜத்தை எப்படிச் சொல்வது என்று வெட்கத்துடன் குழம்பியவள் முகம் சிவக்க, ''ஒருவருடனும் இல்லை,'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் விசித்திரப் பார்வையுடன் அருகில் வந்து படத்தை எடுத்துப் பார்த்தான்.

''என் படம்!''

சசியின் தலை மேலும் கவிழ்ந்தது.

சியாமின் முகம் மிருதுவாயிற்று. ''உனக்கு ஏதாவது வேண்டுமா சசி?'' என்றான் மெதுவாக.

''என்னது?'' என்று ஒன்றும் புரியாமல் கணவன் முகத்தைப் பார்த்தாள் சசி.

அவன் முகம் லேசாகச் சிவந்தது. பின் கழுத்தைத் தடவியபடி எங்கோ பார்த்து, ''இந்த... இந்த மாதிரிச் சமயங்களில் பெண்களுக்கு ஏதாவது ஆசை வரும் என்று

கேள்விப்பட்டிருக்கிறேன். உனக்கு ஏதாவது ஆசையிருக்கிறதா? இருந்தால் சொல், வாங்கித் தருகிறேன்,'' என்றான்.

பல நாள்கள் கழித்து அவன் இவ்வளவு அருகில் நிற்பது கூடச் சசிக்கு எவ்வளவோ இதமாக இருந்தது. அதே சுகம் என்று அனுபவித்து நின்றவளுக்கு அவனது வார்த்தைகள் இன்னமும் இன்பமாக இருந்தன. கண்மூடி மவுனமாக நின்றாள்.

அவள் கையைத் தொட்டு, ''கேட்டேனே...'' என்றான் அவன் மென்மையாக.

அவளுக்கு என்ன வேண்டும்?

மெல்ல அவன் கையைத் தன் கன்னத்தில் பதித்து, ''உங்கள் அன்புதான் வேண்டும்,'' என்றாள்.

தீச் சுட்டவன் போலக் கையை உதறி விலகினான் அவன்.

அவள் திகைத்தாள்.

முகத்தில் சினப் பளபளப்புடன், ''ஏன்? மற்றதெல்லாம் தேவைக்கு மிஞ்சியே கிடைக்கிறதோ? ஓகோ! போனேன் பார். ஒன்றும் இல்லாமல் திண்டாடியவளுக்கு இதே சுவர்க்க போகம். இதற்குமேல் ஆசைப்பட வேறு இருக்கிறதா என்று கூடத் தெரிந்திராது!'' தேளாய்க் கொட்டினான் அவன்.

அவன் வினாடிக்குள் மாறியதே புரியாமல் விழித்த சசி திகைப்புடன் அவனையே பார்த்தாள்.

அவன் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அன்பு வேண்டுமாம் அன்பு. பணத்தாசையே இல்லாத பத்தினித் தங்கம். இன்னமுமா நாடகம்!'' என்று அருவருத்தபடி தன் அறைக்குப் போனான்.

சசி வேதனையோடு சற்று நேரம் அப்படியே நின்றாள்.

பிறகு மெல்ல டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன் சென்று பார்த்தாள்.

வயிறு நன்றாகவே பெருத்து இடுப்பே இல்லாதது போல மாற்றியிருந்தது.

கம்ப இராமாயணத்தில் கம்பர் ஓர் இடத்தில் சீதையைப் 'பொய்யோ எனும் இடையாள்' என்று வர்ணித்திருந்தது நினைவு வந்தது. உடனே புன்னகையும் வந்தது.

ஆனால் உடனே அந்த நினைவை ஒதுக்கி விட்டுத் தன்னையே கவனமாக வெகு துல்லியமாக மதிப்பிடுவது போலப் பார்த்தாள்.

பழையபடி ஒடிந்தாடும் பூங்கொடி போன்ற அழகு இப்போது இல்லைதான். ஆனால் முன்னைவிடவும் தனக்கு அழகு பெருகியிருந்ததாகவே சசிக்குத் தோன்றியது.

ஒருவேளை ஆண்களின் கண்கள் வேறு விதமோ?

தாய்மையின் எழிலை அவை ஏற்பது இல்லையோ?

சியாமுக்குச் சசியிடம் இருந்த உறவு உள்ளத்தை எட்டியது இல்லை. உடல் அளவில் மட்டுமே நின்ற ஒன்று. அவன் விரும்பிய உடல் வாகு மறைந்துவிட்டது என்பதால் அதிலும் வெறுப்பு வந்து விட்டதோ?

புருவங்களைச் சுழித்துக் கொண்டு வெகுவாக யோசித்தாள் அவள். அந்த மாதிரி சியாமைப் பற்றி அவளால் எண்ண முடியவில்லை.

ஊகூம், இல்லை. நிச்சயமாக அவன் அப்படிப்பட்டவன் அல்ல. பின்னே?

பணத்திற்காக மட்டும் வந்தவள் - இன்று அன்பு கின்பு என்று மீண்டும் அவனை ஏய்ப்பதாக எண்ணி விட்டானா?

அப்படித்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வருத்தத்துடன் வந்தாள் சசி.

பழைய தவிப்பு மீண்டும் நெஞ்சில் கிளறிவிட்ட தணலாய்ப் பெருகியது.

அவன் கையைத் தொட்டதும் மனம் அவனுக்காகப் பெரிதும் ஏங்கலாயிற்று.

இந்த அவநம்பிக்கை அருவருப்பு எல்லாம் எப்போது மாறும்? எப்படி மாறும்? குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தாள். அதென்ன மாஜிக் வேலையா - இம் என்று 'ஸீன்' மாறியதும் மனம் மாறி விட?

மாறாவிட்டால் என்ன ஆகும்? இந்த அன்பற்ற சூழ்நிலையில் வளர்ந்தால் குழந்தை பாதிக்கப்படுமே. அவன் எதிர்காலம் என்ன ஆகும்?

ஆயிரம் ஆயிரம் சந்தேகங்கள், பயங்கள் எழுந்தன. பதில் ஒன்றும் காணாமல் தவித்தாள்.

இந்தத் தவிப்பு மூள்கையில் ஆறுதலுக்காக அவன் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு உட்காருவது பழைய மருந்து.

ஆனால் இன்று அசலின் தொடுகைக்குப் பின் அந்தப் பழைய மந்திரம் வேலை செய்ய மறுத்தது.

நெஞ்சின் தவிப்பு உடம்பையும் பாதித்ததோ?

அன்றிரவே அவளுக்கு நல்ல காய்ச்சல் வந்தது.

மறுநாள் காலையில் அவள் கண்ணில் படாததால் யோசனையோடு வந்து பார்த்தான் சியாம். அவள் நிலைமையைக் கண்டதும் உடனே டாக்டரை வரவழைத்தான்.

டாக்டர் வந்து பார்த்துவிட்டு, ''காரணம் இல்லாமல் ஜுரம் உனக்கு ஏன் வந்தது? மனதை அலட்டாமல் நிம்மதியாக இருக்க வேண்டும். அப்படி உனக்கு என்ன குறை? வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே,'' என்று அதட்டி விட்டுப் போனார்.

என்ன குறை? என்ன குறை? சசிக்குச் சிரிப்பு வந்தது. பாதியிலேயே சிரிப்பு மாறி அழுகை வந்தது. முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு விசும்பினாள்.

டாக்டரின் கவனிப்பும் மருந்துகளுமாய் விரைவிலேயே சசியின் நோய் தீர்ந்தது.

உடலும் தேறி வெளிப் பார்வைக்கும் பழைய நிலையை அடைந்தாள்.

ஆனால் உள்ளே இடைக்காலத்தில் கிட்டியிருந்த மன அமைதி அடியோடு இல்லாது போயிற்று.

அன்று பகல் இரண்டு மணியிருக்கும். தோட்டத்தில் கோழிக் குஞ்சுகளைப் பார்த்தபடி வேல்சாமியின் மனைவி தங்கத்துடன் பேசிக் கொண்டிருந்தாள் சசி.

கேட் அருகில் கார் வந்து நின்ற ஓசை கேட்கவும், ஆச்சரியத்துடன் திரும்பி எட்டிப் பார்த்தாள்.

லில்லி!

அவசரமாக எழுந்து லில்லியை எதிர்கொள்ள வேகமாக நடந்தாள்.

சசி வருவதைக் கவனியாமல் லில்லி வீட்டின் புறமாகச் செல்லவும், ''இங்கேடி லில்லி,'' என்று 'உரக்கக் குரல் கொடுத்தாள்.

திரும்பித் தோழியைப் பார்த்த லில்லியின் கண்கள் வட்டமாக விரிந்தன. ''ஹேய் சசி, இதென்னடி?'' என்று ஓடி வந்தாள்.

சசியைச் சுற்றிச் சுற்றி வந்து, ''பொல்லாதவள்டி நீ. என்னிடம் சொல்லவே இல்லையே. எத்தனை மாதம்? நிறைய இருக்கும்போலத் தெரிகிறதே!'' என்று மேடாக நின்ற வயிற்றைக் குறும்புடன் தொட்டாள்.

கூச்சத்துடன் சிலிர்த்து, ''போடி!'' என்று சிணுங்கினாள் சசி.

''சிணுங்கல் எல்லாம் இருக்கட்டும். எத்தனை மாதம்? அதைச் சொல்லு...'' என்று அதிகாரம் செய்தாள் லில்லி.

''இப்போதுதான் ஆ...று...'' என முகம் சிவந்தாள் சசி.

''ஆ... று! ஏன்டி எனக்குச் சொல்லவில்லை?'' என்று அதட்டினாள் லில்லி.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்தாள் சசி.

தோழியின் முகவாட்டம் காணப் பொறுக்காமல், ''சரி சரி, பரவாயில்லை. விடு. உங்கள் தேனிலவு இன்னமும் முடியவில்லை என்று சியாம் சொல்கிறாராக்கும். போகிறது போ. அதற்குள் முகம் வாட வேண்டுமா? ஒரு வகைக்கு நீங்கள் இருவரும் இப்படி இழைவதும் எனக்கு நல்லதுதான். என் காரியம் எளிதாக நிறைவேறி விடும்...'' என்றாள் லில்லி, சசியின் தோளை அணைத்து.

''புதிர் போடுகிறாயே லில்லி? முதலில் உள்ளே வா. ஏதாவது ஜூஸ் குடித்துக் கொண்டே பேசலாம். [illegible]க்கு

கிரேப் ஜூஸ் உயிராயிற்றே!'' என்று தோழியை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள் சசி.

மீனம்மாவிடம் பழச்சாறு அனுப்பும்படி சொல்லிவிட்டுத் தன் அறைக்கு லில்லியைக் கூட்டிச் சென்றாள்.

சுற்றிலும் ஒரு முறை ஆராய்ச்சிப் பார்வையை ஓட விட்டு, ''அழகாக இருக்கிறதடி, உன் அறை...'' என்ற லில்லியின் கவனம் சுவரின் மூலையில் பதிந்திருந்த கால் வட்டப் பலகை மேல் அமர்ந்திருந்த தந்த நிற டெலிபோனில் வந்து நிலைத்தது. குற்றம் சாட்டும் பாவனையுடன், ''டெலிபோன்! எனக்கு ஒரு கால் போட்டு நம்பர் கூடச் சொல்லவில்லையே! எப்போது வந்தது?'' என்று விசாரித்தாள்.

சசிக்குக் குரலே எழும்பவில்லை. ''ரொம்ப நாள் ஆயிற்று லில்லி! ஓர் ஐந்து ஆறு மாதம் இருக்கும்,'' என்றாள் மெல்ல.

''ஐந்து... ஆறு மாதங்கள்! இவ்வளவு நாளில் ஒரு போன் கூடவா எனக்குப் பண்ணக் கூடாது?'' என்று மெய்யான வருத்தத்துடன் குறைபட்டாள் லில்லி. ''அவ்வளவு தூரம் நான் அந்நியள் ஆகிப் போனேனா?''

கெஞ்சுவது போல் லில்லியைப் பார்த்தாள் சசி. அதிலேயே உருகி, ''சரி சரி, ஒரு போன் செய்தால் உன்னோடு ஒட்டுப் புல் மாதிரி நான் வந்துடுவேன்னு உங்களவர் பயந்து போனாராக்கும்! இருக்கட்டும் இருக்கட்டும். அவர் உன் னிடம் இவ்வளவு ஆசையாக இருப்பதுகூட எனக்கு நல்லது தான்,'' என்றாள் மீண்டும் மர்மக் கதை ''மன்னி'' போல.

''ஏய், சீக்கிரம் சஸ்பென்சைப் போட்டு உடையடி.''

''சொல்லுகிறேன், கேள். எங்கள் விஷயம் எல்லாம் சித்தப்பாவுக்குத் தெரிந்து போயிற்று.''

''டீ!'' என்று விழிகளை விரித்தாள் சசி.

''ஆமாடி, போன மாதமே நடந்தது இது. நான் செய்த மடத்தனம்தான். சித்தப்பா வரும் நேரம் என்பதை மறந்து குணாவிடம் குறும்பு செயதேன். கேலியாகக் கழுத்தைக்

கட்டிக்கொண்டு தொங்கினேன் பார், அவரும் ஒரு கணம் தன்னை மறந்து போனார்,'' என்றாள் ஓர் இரகசிய முறுவலுடன். லேசாகச் சிரித்துவிட்டு, ''சமயம் பார்த்துச் சித்தப்பா கரடி மாதிரி வந்து சேர்ந்தார். இரண்டு பேருக்கும் அட்வைஸ் குடம் குடமாக. எனக்கு ஒரே எரிச்சலாக வந்தது. உன்னிடம் வந்து விடலாமா என்று கூட நினைத்தேன். ஆனால்...'' என்றாள் மலர் முகம் வாட.

நெஞ்சு கசிய, ''அன்று மிகவும் மனதுக்குக் கஷ்டமாக இருந்ததா லில்லி?'' என்று இரங்கிய குரலில் வினவினாள் சசி.

என்ன், ஏது என்று லில்லி கேட்கவில்லை... லேசாக முறுவலித்தபடி, ''அன்றைக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. 'நம்ம சசிக்கும் நமக்கும் இடையிலே ஒருத்தரா? அவர் இவ்வளவு உரிமையோடு என்னை விரட்டுவதா?' என்று ரொம்பக் கோபம் வந்தது. வீட்டுக்குப் போய் இரவெல்லாம் நன்றாக அழுதேன். பிறகுதான் வேறு ஒன்று தோன்றியது. என் குறுக்கீட்டைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அவர் உன்னிடம் ஆசை வைத்திருந்தால் அது மிகவும் பெருமைப்படத் தகுந்த விஷயம் அல்லவா? அதற்குப் போய் அசடு போல அழுகிறோமே என்று நினைத்தேன். உடனே அழுகை நின்று சிரிப்பு வந்து விட்டது,'' என்று சிரித்தாள்.

வெள்ளைச் சிரிப்பு, பிள்ளை போலக் கள்ளமற்றுச் சிரிக்கிறாளே என்று சசிக்கு மனதிற்குள் ஆற்றாமையாக இருந்தது.

பழச்சாறுடன் மீனம்மாளே ஏறி வந்தாள்.

''இந்தப் பொண்ணு நாள் முழுக்கவும் தனியாகவே இருக்குது. அப்பப்போ வந்து போம்மா,'' என்று பழச் சாற்றைக் கொடுத்துவிட்டுப் போனாள்.

''நானா மாட்டேன் என்கிறேன்?'' என்று சசியிடம் கண்ணடித்தாள் லில்லி.

''குணாளன் எப்படி இருக்கிறார்?'' என்று பேச்சைத் திசை திருப்பினாள் சசி.

''அன்று பார்த்த மேனிக்கு அப்படியேதான்டி இருக்கிறார். ஒரு முடி நரைக்கவில்லை. ஒரு தாடை மடிப்பு விழவில்லை. ஒரு தொப்பைகூட வைக்கவில்லை. ஆனாலும் ஆ...ச் சரியம்டி!'' விழிகளை மலர்த்தினாள் லில்லி.

''போடி!'' என்று சிரித்தாள். ''ஆறு மாதத்திற்குள் அப்படி என்ன வித்தியாசம் வந்து விடுமாம்?''

''உனக்கு வந்திருக்கிறதே!'' என்று சசியின் கருவுற்ற வயிற்றைக் காட்டிப் பொங்கிச் சிரித்தாள் லில்லி.

சசியின் முகத்தில் நாணச் சிவப்புப் படர்ந்தது.

''என்ன அழகாக இருக்கிறாய் சசி!'' என்று வியந்து வாஞ்சையுடன் பார்த்துச் சிரித்தாள் லில்லி. ''இதைப் பார்த்துத்தான் சியாம் ஒரே மயக்கத்தில் கிடக்கிறாரோ?''

மயக்கமா? சசியின் முகம் வாடியது. சமாளித்துக் கொண்டு, ''உன் விஷயத்துக்கு வா, லில்லி!'' என்றாள் பொய்ச் சிரிப்புடன். ''அவரை வேலையை விட்டு நிறுத்தி விட்டார்ரா உன் சித்தப்பா?''

''ஊகூம். அதெப்படி விடுவார்? திறமையுள்ளவர், ஒரு காசு திருடத் தெரியாத நம்பிக்கையான அசடு. விடுவாரா? அலுவலகத்துக்கு மாற்றி விட்டார். இரவு வரை வேலை வாங்குகிறார். மாலையில் நாங்கள் சந்திக்க விடாமல் தடுக்கிறாராம். மணி ஆறானாலும் டாணென்று எனக்குக் காவலுக்கு வீட்டுக்கு வந்து விடுகிறார். இதனால் எல்லாம் நான் குணாவை மறந்து விடுவேனாம்!'' என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள் லில்லி.

''கடைசியாக என்னதான் சொல்லுகிறார்?''

''வேறு என்ன சொல்லுவார்! குணாவை மறந்துவிட வேண்டுமாம். முடியாது என்றேன். அப்படியானால் சொத்தை யெல்லாம் சர்ச்சுக்கு எழுதி வைத்துவிடப் போகிறேன் என்றார். நான் கொஞ்சம் வாதாடிப் பார்த்தேன். அங்கேயே ஒரே பிடியாய் நின்றார். 'சரிதான், கொடுத்து

விடுங்கள். நான் குணாவைத்தான் மணப்பேன்!' என்று, அடித்துச் சொல்லி விட்டேன். அதன் பிறகு கொம்பேறி மூக்கன் உச்சாணிக் கிளையிலிருந்து கொஞ்சம் இறங்கி வந்திருக்கிறார்,'' என்று கொட்டித் தீர்த்தாள் லில்லி.

''அப்போது சம்மதித்து விட்டாரா?'' என்றாள் சசி குதூகலத்துடன்.

''சம்மதித்த மாதிரிதான்,'' என்றாள் லில்லியும் மகிழ்ச்சியோடு. ''இப்போதைக்கு முக்கால் கிணறு தாண்டிவிட்ட மாதிரிதான்,'' என்றாள் தொடர்ந்து.

முக்கால் கிணறு! சசிக்குத் திக்கென்றது. முக்கால் கிணறு தாண்டியவள் பற்றி சியாம் சொன்னது இன்று நினைவில் வந்து கலங்கச் செய்தது.

''என்னடி?'' என்றாள் பலவீனப்பட்டுவிட்ட குரலில்.

''பயப்பட ஒன்றும் இல்லை சசி! குணா என் சொத்துக்காக என்னைக் காதலிக்கவில்லை என்பதற்குச் சித்தப்பாவுக்கு நிரூபணம் வேண்டுமாம்.''

''எப்படி நிரூபிப்பது? சினிமாவில் போலவா?''

''அப்படி இல்லைடி. என் சித்தப்பாவின் மதிப்பைப் பெற்ற ஒருவர் குணாவுக்கு சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். அவர் குணாவையும் தெரிந்தவராக இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர் ஒருவர் குணாவைப் பற்றி நல்ல வார்த்தை சொன்னால் திருமணத்துக்கு ஒப்புக் கொள்வதாகச் சித்தப்பா சொல்கிறார்.''

''அப்படி யாரடி இருக்கிறார்கள்?''என்றாள் சசி கவலையுடன்.

''மக்கு! மக்கு! உன் கணவர் இருக்கிறாரே!'' என்றாள் லில்லி உற்சாகமாக.

''லில்லி?'' என்று அதிர்ந்தாள் சசி.

''என்னடி? ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா? கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த மாதிரி நானும் இப்படித்தான் முதலில் ரொம்பவும் கவலைப்பட்டேன். இன்றைக்குக் காலையில்

தான் சியாம் நினைவு வந்தது. அதுவும் சித்தப்பாவாகச் சொன்ன பிறகுதான். குணாளனும் சியாமும் சேர்ந்து படித்தவர்கள் என்று சொன்ன ஞாபகம் வருகிறது. அதனால் மற்றவர்களைவிட மிஸ்டர் சியாமுக்குக் குணாளனைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. அதோடு நான் அறிந்தவரையில் சியாம் நேர்மையான மனிதர். அதனால் அவரிடமே குணாளனைப் பற்றி விசாரிக்கிறேன். அதன் பிறகு மற்றதைப் பார்க்கலாம் என்று சித்தப்பா சொன்னாரடி. அதன் பிறகுதான் எனக்கே அந்த நினைவு வந்தது. அப்பாடி என்று நிம்மதியாகிப் போயிற்று. ஆனால் எதற்கும் உன்னிடம் ஒரு வார்த்தை போட்டு வைக்கலாம் என்று ஓடி வந்தேன். இனி சியாமிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அப்புறம் ஜாம் ஜாம் என்று எங்கள் திருமணம்!'' என்று அடக்க மாட்டாத ஆனந்தத்தோடு தட்டாமாலை சுற்றினாள் லில்லி.

எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாள்!

சியாமின் பழிவாங்கும் வெறி பற்றி அறியாத பேதை.

சியாமுக்கு விஷயம் தெரிந்தால் வரிந்து கட்டிக் கொண்டு திருமணத்தை நிறுத்துவானா? உதவி செய்து நடத்துவானா?

என்ன மகிழ்ச்சியுடன் தட்டாமாலை சுற்றுகிறாள்!

இறைவா, என் வாழ்வோடு மட்டுமே விளையாடி அலுத்து விட்டதா? இந்தப் பெண்ணின் வாழ்வுடனுமா விளையாடப் போகிறாய்? வேண்டாம். வேண்டாம். கஷ்ட நஷ்டம் தெரியாத குழந்தை மனம் கொண்டவள்! அவளை விட்டுவிடு... அவளை விட்டுவிடு...

ஆடிக் கொண்டு இருந்த லில்லிக்குத் தன்னுள்ளே புலம்பிக் கொண்டிருந்த சசியின் மனம் உறுத்தியது.

ஆட்டத்தை நிறுத்திவிட்டு ஓடிவந்து சசியின் அருகில் அமர்ந்து கொண்டாள். ''ஏண்டி ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறாய்?'' என அவள் தோளில் சாய்ந்து வினவினாள்.

சிரமத்துடன் புன்னகை செய்துவிட்டு, ''ஒன்றும் இல்லை லில்லி! இங்கே சியாமுக்குக் கொஞ்சம் அதிக வேலை.

சாப்பிடக்கூட நேரம் இல்லாமல் பறக்கிறார். இப்போது 'உன் சித்தப்பாவைப் பார்த்துப் பேசுங்கள்,' என்று எப்படிக் கேட்பது என்று யோசித்துக் கொண்டு இருந்தேன். வேறே ஒருத்தரும் இல்லையா?'' என்றாள் தவிப்பை வெளிக்காட்டாமல்.

''வேற யாருடி இருக்கிறார்கள்? அதோடு சித்தப்பாவே உன் சியாம் பேரைச் சொல்லிவிட்டார். அவருடைய ஒன்வே டிராஃபிக்தான் உனக்குத் தெரியுமே. இனி சியாம் தவிர வேறு யார் சொல்லையும் ஒப்புக் கொள்ளவே மாட்டார். நேரம் பற்றி யெல்லாம் கவலைப் படாதே. ஓர் ஐந்தே நிமிடம், சித்தப்பாவே நேரில் பார்த்துப் பேசி முடித்து விடுவார். இப்போதுகூட உன்னிடம் வந்தே இருக்க மாட்டேன். சசியின் கணவர் எனக்குக் கெடுதல் செய்துவிட மாட்டார் என்று எனக்குத் தெரியும். ஆனால், சித்தப்பாவோ நிஜக் காரணத்தைக் காட்டாமல் விசாரிப்பார். குணா வேறு படிக்கிற காலத்தில் இருவருக்கும் பிடிக்காது என்று சொல்லியிருக்கிறாரா, அந்த நாள் நினைவில் ஏதாவது உளறிவிடக் கூடாதே என்ற பயத்தில்தான் ஓடி வந்தேன். வந்து பார்த்தால் நீ வேறு எனக்கு ஒரு 'பிளஸ் பாயிண்ட்.' இந்த நிலையில் நீ ஒன்று கேட்டால் அதை அவர் தலையால் ஏந்திச் செய்ய மாட்டாரா?'' என்று கேலி பேசியபடி வாஞ்சையுடன் தோழியை அணைத்துக் கொண்டாள் லில்லி.

சசிக்குச் சட்டென ஒன்று மனதில் பட்டது.

அன்றே இந்த நேர ஆசை என்ன என்று கேட்டானே!

அன்பை அளிப்பதற்குத்தான் அவனுக்கு மனம் இல்லை.

இது வேறுதானே, கேட்டால்... கெஞ்சிக் கேட்டால் செய்யாமல் இருக்க மாட்டான் என்று தோன்றியது.

முக மலர்ச்சியுடன், ''சியாமிடம் சொல்லுகிறேன்,'' என்றாள் லில்லியிடம்.

## 17

அதன் பின் லில்லி அதிக நேரம் தங்கவில்லை.

''மூன்றரைக்குக் குணாவைச் சந்திக்கப் போக வேண்டும். நேரம் ஆயிற்று,'' என்று அவசரமாகக் கிளம்பினாள்.

வியப்பும் கேலியும் குறுகுறுப்புமாகப் பார்த்தாள் சசி. ''உன் சித்தப்பாவின் காவல் என்ன ஆயிற்று?'' என்றாள் கேலியாக.

அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் லில்லி.

கற்றைக் கூந்தல் துள்ளி விழுவதை ரசித்துப் பார்த்த சசியிடம், ''இருபத்து நாலு மணி நேரமும் காவல் இருக்க முடியுமா சசி? அவர் தடுக்கில் புகுந்தால் நான் கோலத்துள் புகுவேன்,'' என்று சிரித்தாள்.

பிறகு பறந்து விட்டாள்.

அன்று இரவு உணவு முடிந்தபின் நாதசுர இசை கேஸட் ஒன்றைப் போட்டுவிட்டு, ஏதோ பேப்பர்களில் அலுவலக சம்பந்தமான 'ஸ்கெட்ச்' போட்டுக் கொண்டு இருந்தான் சியாம். முழுக் கவனத்தையும் குவித்துச் செய்யும் தீவிரமான வேலை அல்ல. பிற்காலத்தில் செய்யலாம் என்று சும்மா ஒரு ஐடியா அளவில் எழுந்த படங்கள்தான்.

தன் காரியத்தை எல்லாம் கூட்டிக் கொண்டு மெல்ல அவன் அருகில் வந்து நின்றாள் சசி.

புருவங்களில் சிறு நெரிப்புடன், ''என்ன?'' என்றான் சியாம்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''சியாம்... அன்று... அன்று... கேட்டீர்களே. ஏ... ஏதாவது வேண்டுமா என்று?'' என்று நினைவூட்டினாள்.

''அன்றா...? ஓ அதுவா? எதுவும் வேண்டுமா? ப்ரீஃப் கேஸில் செக்புக் இருக்கும். எடுத்து வா, கையெழுத்திட்டுத் தருகிறேன். வேண்டியதை வாங்கிக் கொள்,'' என்றான் சிரத்தையற்று.

''அதெல்லாம் வேண்டாம்,'' என்று அவன் அருகில் மொஸைக் தரையில் அமர்ந்தாள் சசி.

அவன் கண்களில் ஐயம் படிந்தது. ''வேறு என்ன வேண்டும்? என் அன்பா?'' என்றான் கடுமையான குரலில்.

வேதனையை விழுங்கிக் கொண்டு, "இப்படிச் சொல்ல வேண்டுமா" என்பது போல விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள் அவள். பிறகு மெல்ல, "அதில்லை சியாம்...! சியாம்! நான் கேட்பதைச் செய்யாவிட்டாலும் அதற்கு எதிராக எதுவும் செய்வது இல்லை என்று வாக்குத் தருவீர்களா?" என்று கேட்டாள்.

"பீடிகை பலமாக இருக்கிறதே!" என்றான் அவன் மொட்டையாக.

"ப்ளீஸ் சியாம்..." என்றாள் அவள் கெஞ்சுதலாக.

"விஷயம் தெரியாமல் நான் வாக்குக் கொடுப்பது இல்லை!" என்றான் அவன்.

"இது... சியாம்! இதனால் உங்களுக்கு ஒரு கெடுதலும் கிடையாது சியாம்! யாருக்குமே கிடையாது. ஏமாற்று, பொய் என்று ஒரு தவறுமே கிடையாது சியாம்! ப்ளீஸ்... நான் இன்றுவரை உங்களிடம் வேறு ஒன்றுமே கேட்டது இல்லை... அது சரிதான். கேட்டுப் பெற்றுக் கொள்ளும்படியாக எனக்கு எதுவுமே தேவைப்படும் நிலையில் நீங்கள் என்னை வைக்கவில்லைதான். அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இது வேறு விஷயம். ப்ளீஸ் சியாம்! வாக்குத் தருவீர்களா?" என்று மிகவும் இறைஞ்சிக் கேட்டாள் சசி.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, "பொஸ்," என்றான் அவன்.

"நன்றி சியாம்!" என்றாள் சசி முகம் மலர. பின்னர் விஷயத்தைச் சொன்னாள். "நீங்கள் ஒரு வார்த்தை நல்லதாகக் குணாளனைப் பற்றி ராபர்ட் அங்க்கிளிடம் சொன்னால் போதும் சியாம்! அவர் லில்லியின் திருமணத்துக்கு ஓகே சொல்லி விடுவார். அதனால்... சியாம் ப்ளீஸ்..."

சியாமின் விழிகள் அடிக்கடி அவள் அறிந்த விதமாகப் பளபளக்கத் தொடங்கவும் அச்சத்துடன் ஒரு கெஞ்சலுடன் பேச்சை நிறுத்தினாள் அவள்.

திடுமெனச் சியாம் உரக்க நகைத்தான். ''கடவுள் எப்படிப்பட்ட அருமையான சந்தர்ப்பத்தை என் கையில் தந்திருக்கிறார், பார்த்தாயா? 'அவர்களைப் பழிவாங்கு' என்று சொல்லாமல் சொல்வது போல இல்லை?'' என்றான் ரசனையோடு.

''சியாம், ப்ளீஸ்... அவர்கள் வாழ்வைக் கெடுத்து விடாதீர்கள். இந்த ஓர் உதவி பண்ணுங்கள் சியாம்! தயவு செய்து..'' என்று பயத்துடன் மன்றாடினாள் சசி.

''அந்த இருவருக்காக நான் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? தலையைத் தடவுவதற்கு என்று என்னைத் தேர்ந்து எடுத்ததற்காகவா? என்னை ஏமாற்றியதற்காகவா? உன்னை என் தலையில் கட்டியதற்காகவா? குணாளன், லில்லி இந்த இருவரும் எனக்குச் செய்த எந்த நன்மைக்காக நான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்?'' என்று குத்திப் பேசினான் அவன்.

எந்த விதத்தில் அவனை இளகச் செய்வது என்று புரியாமல் சற்றுத் திகைத்தாள் சசி. பிறகு சொன்னாள்: ''அவர்கள் செய்தது தவறுதான் சியாம்! ஆனால் எனக்கு உதவுவதாக எண்ணி அப்படிச் செய்து விட்டார்கள்.'' அவன் முகம் சுழிப்பதைக் கண்டதும் அவசரமாகத் தொடர்ந்தாள். ''உங்களுக்குக் கெடுதல்தான். ஒப்புக் கொள்கிறேன் சியாம்! ஆனால் தப்பே செய்திருந்தபோதும் அவர்கள் இருவரும் உண்மையாகக் காதலிப்பவர்கள். அந்தக் காதல் வெற்றி பெற வேணும்.''

''உண்மையான காதல் இருந்தால் மண் குடிசையிலும் மகிழ்ச்சியோடு இருக்கலாம்,'' என்று 'ஸ்கெட்ச்' வரைந்த பேப்பர்களை அடுக்கத் தொடங்கினான் சியாம். ''ராபர்ட்டிடம் ஒரே ஒரு வார்த்தை... குணாளன் குணம் கெட்டவன் என்ற ஒரே வாக்கியம் போதும், உன் தோழியின் திருமணம் அம்பேல்!'' என்று குரூரமாகச் சிரித்தான்.

சசி பதறிப் போனாள். ''சியாம்! பிராமிஸ் செய்திருக்கிறீர்கள். கெடுதலாக ஒன்றும் செய்வதில்லை என்றீர்களே!'' என்று பீதியுடன் நினைவுபடுத்தினாள்.

''ஆமாம். சொன்னேன் இல்லையா? ஆனால் நான் எண் ணாத நல்லதைச் சொல்வதாகவும் கூறவில்லை இல்லையா? வேறு ஒன்றும் இல்லையே!'' என்று எழுந்தான்.

பேசாது தலையசைத்தாள் சசி.

''ஆல் ரைட். குட் நைட்!'' என்று போய்விட்டான் அவன்.

சசி வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

கிட்டத்தட்ட அவள் எதிர்பார்த்தபடிதான் முடிந்திருக்கிறது.

வாக்கு என்று கொடுத்த பின் சியாம் அதை மீற மாட்டான் என்பதில் சசிக்கு நம்பிக்கை இருந்தது. குறைந்த பட்சம் குணாளனைப் பற்றிக் கெடுதலாக ஒன்றும் சொல்ல மாட்டான். ஆனால் அதில் முழுப் பலன் கிடைக்குமா? லில்லி வீட்டு அங்கிள் அதை மட்டும் ஏற்று அவர்கள் திருமணத்தை நடத்தி வைப்பாரா? சசிக்குச் சந்தேகமாகவே இருந்தது.

லில்லி எவ்வளவு அருமையான தோழி! அவளது வாழ்வைச் சிரிப்பும் செழிப்புமாக நீரோட்டம் போல ஓடச் செய்யும் வல்லமை சசிக்கு எவ்வளவு அருகில் வந்திருக்கிறது! ஆனால் இவ்வளவு அருகிலேயே இருப்பதைக் கூட எட்டிப் பிடிக்க முடியாத தன் இயலாமையை எண்ணிச் சசியின் உள்ளம் சோர்வுற்றது.

தோழிக்கு உதவியாக ஒரு துரும்பைக் கிள்ளிப் போடவும் சக்தியற்று இருக்கும் தன் மீது வெறுப்பும் உண்டாயிற்று.

லில்லியின் வாழ்வில் துன்பம் சூழத் தன் கணவனே காரணம் ஆகிவிடக் கூடாதே என்று வேண்டிக் கொண்டாள்.

அன்பைக் கொடுக்கவில்லை. வெறுப்பைத் தாராளமாகக் காட்டிக் கொண்டான் என்றாலும், சசிக்கு வேண்டிய பொருள் கள் எதையும் மறுத்தது இல்லை. இப்போது சசி அன்பைக் கேட்கவில்லையே, வேறுதானே கேட்டாள் என்று சியாம் அவள் வேண்டியதைச் செய்துவிட மாட்டானா என்று ஏங்கினாள்.

என்ன ஆயிற்றோ என்ற தவிப்பில் இரண்டு தினங்கள் சென்றன.

இரண்டு தினங்கள் மட்டும்தான்.

மூன்றாம் நாள் புயலைப் போலச் சீறிக் கொண்டு லில்லி வந்து விட்டாள். ''ஏண்டி, ஏண்டி, நான்... நான் உனக்கு என்னடி கெடுதல் செய்தேன்? ஏண்டி இப்படிச் செய்து விட்டாய்? குணாவும் நானுமாக உனக்காக எவ்வளவு செய் தோம்? உனக்காகப் பொய் சொல்லி நாடகம் நடித்தது எல்லாமாடி மறந்துவிடும்? சும்மா என்று இல்லை. இதற் கெல்லாம் கைம்மாறாக உன்னால் ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தைகூட எனக்காகச் சொல்ல முடியவில்லையா? என்னால் நம்பக்கூட முடியவில்லையே!'' என்று குமுறினாள்.

சசியின் குனிந்த தலை நிமிரவே இல்லை. தாங்கமாட்டாத வேதனையில் அவள் நெஞ்சு பிளந்து கொண்டு இருந்தது.

மூச்சு வாங்கிக் கொண்டு லில்லியே தொடர்ந்தாள்.

''இத்தனை நாள் பழகிய சசி இப்படிப்பட்டவள் இல்லையே! ஏண்டி, கல்யாணம் ஆனால் குணம்கூட மாறி விடுமா? பிரியமான தோழிகூட வெறுத்து விடுமா? சொல் லேன்டி, வாயில் கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்? கழுத்தில் பிடிப்பாடி? குனிந்து கொண்டேதான் இருப் பாயா? நிமிர்ந்துதான் பாரேன்,'' என்று ஆத்திரத்துடன் வெடுக்கென்று தோழியின் முகத்தை நிமிர்த்தினாள்.

உடனே திடுக்கிட்டாள்.

உலகத்தின் துக்கத்தை எல்லாம் தனக்குள் கொண்டிருந்த அந்தத் துயர மிகுந்த விழிகளைப் பார்த்த அளவில் லில்லி திகைத்துப் போனாள்.

''சசி, என்னடி?'' என்றாள் பிரமிப்பும் ஒரு பயமுமாய்.

அவ்வளவில் சசி உடைந்தாள். லில்லியின் தோளில் சாய்ந்து விசித்து விசித்து அழத் தொடங்கினாள்.

அவளை நிமிர்த்தி அவள் முகத்தைப் பார்க்க முயன்றாள் லில்லி.

ஆனால் சசியின் அழுகை அதிகரிக்கவே, அப்படியே சசியைத் தன் மேல் சாய்த்துக் கொண்டாள். ''என்னடி,

என்னடி சசி, ஏன் அழுகிறாய்? நீ நன்றாக இருக்கிறாய் என்று நினைத்தேனேடி. ஏன், என்னடி ஆயிற்று? சசி, நீ... நீ வீட்டுக்கு வரவே இல்லை; டெலிபோன் கூடப் பண்ணவில்லை. அன்று சியாம் ஒரு விதமான வெறுப்புடன் என்னை விரட்டினார். சசீ! என் சசியம்மா, உனக்கு என்னதான் ஆயிற்று? சியாம் உன்னை நன்றாக வைத்துக் கொள்ள வில்லையாம்மா? ஏன்?'' தன் கவலையை மறந்து கேள்விகளை அடுக்கினாள்.

சசி எதற்கும் பதிலே சொல்லவில்லை. விழுங்கி விழுங்கி அடக்கி அடக்கி வைத்த கண்ணீருக்கெல்லாம் வடிகால் ஏற்பட்டாற் போல் லில்லியின் தோளிலேயே முகத்தைப் பதித்து விக்கி விக்கி அழுதாள்.

முட்டி மோதிக் கொண்டு வெளியேறிய கண்ணீரின் வேகத்தைக் கண்டு லில்லி பேச்சு அடங்கிப் போனாள். சசியைத் தோளோடு அணைத்துக் கொண்டு பேசாதிருந்தாள்.

சசியின் விம்மலும், விசும்பலும் சற்றே அடங்கியபின் அவளை மெல்ல நிமிர்த்தி, ''என்ன சசியம்மா?'' என்றாள்.

உதடு துடிக்க, ''அவருக்கு எல்லாம் தெரிந்து விட்டது,'' என்றாள் சசி.

''எப்போது?''

''முதலிலேயே... கோவையில் வைத்தே...''

''எப்படித் தெரிந்தது? நீயே உளறினாயா? முட்டாள்!''

''இல்லை,'' என்று தலையசைத்தாள் சசி. ''சிந்தா இல்லை...? நம்மோடு படித்தாளே... அவள் அன்று கடற்கரையில் நம் பேச்சைப் படகுக்கு மறுபக்கம் இருந்து கேட்டாளாம். அவர் முன்னால் சொல்லி... சொல்லி...'' மீண்டும் விசித்தாள் சசி.

தோழியை ஏற இறங்கப் பார்த்தாள் லில்லி. சூலில் நிலைத்தது பார்வை. ''பின்னே?'' என்றாள் கேலியாக.

சசியின் உதடு மீண்டும் துடிக்கலாயிற்று. ''தண்டனை. செலவு செய்த பணத்துக்காக விலை என் உடல் என்று...'' என்றவள் மீண்டும் கதறிக் கதறி அழத் தொடங்கினாள்.

''சசி!'' என்று அவ்ளை இறுக அணைத்துக் கொண்டாள் லில்லி. ''நீ ஒன்றுமே சொல்லவில்லையேடி பாவி! எல்லா வற்றையும் உள்ளுக்குள்ளேயே வைத்துக் குமைந்தாயா? நான் வேறு கேலி என்று என்னென்ன பேசி உன்னை வருத்தி விட்டேனே!'' என்றாள் வேதனையுடன்.

பிறகு, ''இப்போதுகூட அப்படியேதான் உன்னை நடத்துகிறாரா? குழந்தை என்று கனிவு இல்லையா?'' என்று விசாரித்தாள்.

தோழியின் தலையசைப்பைக் கண்டதும், ஆத்திரத்துடன் எழுந்தாள். ''வரட்டும் சியாம். நான் கேட்கிறேன். எங்கள் சசியை நீங்கள் எப்படி அவமானப்படுத்தலாம் என்று. கேட்பதற்கு ஆள் இல்லை என்று நினைத்தாரோ? சும்மா கிடைத்த சந்தனம் என்பதால் சாக்கடையில் கொட்டு கிறாரா? நன்றாகக் கேட்கிறேன் பார். வரட்டும்,'' என்று கோபத்துடன் கறுவினாள்.

''வேண்டாம் லில்லி,'' என்று அவளுக்கு அணை போட முயன்றாள் சசி.

''ஏண்டி, பதி பக்தியா?'' என்று சீற்றத்துடன் சிரித்தாள் லில்லி.

''அதில்லை லில்லி! அவரிடம் பேசி ஜெயிக்க முடியாது. பிறகு உனக்கும் எனக்கும் வேதனைதான் மிஞ்சும்,'' என்றாள் அனுபவப்பட்ட சசி.

''அதற்காகச் சும்மா விட்டு விடுவதா? எப்பேர்ப்பட்ட மாணிக்கம் அவருக்குக் கிடைத்திருக்கிறது என்று புரியாமல்... சும்மா வைரம் கிடைத்தால் கண்ணாடிக் கல் ஆகிவிடுமா? என்ன மடத்தனம்! நானும் சொல்லுகிறேன்.''

''வேண்டாம் லில்லி! ஆனால் எனக்கு ஒரு நம்பிக்கையடி. குழந்தை பிறந்து விட்டால் அவர் எப்படியும் மாறிவிடுவார் என்று நிச்சயமாய் இருக்கிறது. பொறுத்துத்தான் பார்ப்போமே, பொறுத்தார்...''

''....பூமிக்குள் போன பிறகுதான் ஆள முடியும். சசி! நீ இவ்வளவு நல்லவளாக இல்லாமல்தான் கொஞ்சம் இருந்து

பாரேன். அத்தனை மன வேதனையையும் தன்னந்தனியே அனுபவித்துக் கொண்டு இருக்கிறாயே, பைத்தியம். சினேகிதி என்று நான் எதற்கடி மூன்று வேளை மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டுக் கொண்டு உயிரோடு இருக்கிறேன்!'' என்று தன் காரியத்தை அறவே மறந்தவளாகத் தோழியைக் கடிந்து கொண்டாள் லில்லி.

அவளை நன்றியுடன் நோக்கினாள் சசி. எத்தனை பிரியமான பெண்! லில்லியிடம் சொன்னதாலேயே மனத் துயரம் பெருமளவு குறைந்தாற் போல உணர்ந்தாள் சசி. ஆனால் லில்லியின் துன்பம் மனதை அழுத்தலாயிற்று.

பெருமூச்சுடன், ''உன் வாழ்வும் கெடுகிறதே என்பதுதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது லில்லி,'' என்று வருந்தினாள்.

''அதெப்படி என் வாழ்க்கை கெட்டுப் போகும்?'' என்றாள் அலட்சியமாக. ''சித்தப்பா சம்மதித்தாலும் சரி, சம்மதிக்கா விட்டாலும் சரி, நான் மணக்கப் போவது குணாளனைத் தான். அப்படி இருக்க என் வாழ்வு எப்படிக் கெடும்? முன்பாவது சமயம் பார்த்துச் சித்தப்பாவிடம் சொல்ல வேண்டும் என்று தள்ளிப் போட்டோம். இனி அதற்கு அவசியம் இல்லையே. சீக்கிரமே குணாவை மணந்து கொண்டு ஜாம் ஜாம் என்று குடும்பம் நடத்தப் போகிறேன், பாரேன்,'' என்று சவால் விட்டாள்.

லில்லியைத் தடுத்து, ''லில்லி! சியாம் உன் சித்தப்பா விடம் என்ன சொன்னார்?'' என்று கேட்டாள்.

''ஏன் கேட்கிறாய்?''

''கெடுதலாகச் சொல்வதில்லை என்று வாக்குக் கொடுத்தார். சொன்ன வார்த்தை மீறுகிறவர் இல்லை அவர். அதனால்தான்...'' என்றாள் சசி வேதனையுடன்.

''உன் கணவர் கெட்டிக்காரரடி. உன்னிடம் கொடுத்த வாக்கையும் மீறவில்லை. பழியும் வாங்கிவிட்டார். எப்படி என்று கேட்கிறாயா? சித்தப்பாவாக உன் சியாமிடம் குணாவைப் பற்றிப் பேச்செடுத்தாராம். சரியாகக் கவனியாத மாதிரி வேறே உப்புச் சப்பில்லாததைப் பற்றியெல்லாம்

பேசினாராம் சியாம். சித்தப்பா மூன்று தடவை முயன் றாராம். மூன்று தடவையும் சியாம் இதேபோல் செய்திருக் கிறார். உடனே இவர் கொம்பேறி மூக்கனாகி விட்டார். குணா நல்லவர் என்றால் சியாம் இப்படித் தட்டிக் கழித்திருக்க மாட்டாராம். அதனால் அவரை மறந்து விட வேண்டுமாம்,'' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

வேதனையுடன் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருந்தாள் சசி.

அவள் முகத்தைக் கவனித்துவிட்டு, ''அட, போகிறது விடு சசி,'' என்று தலையை ஒரு வெட்டு வெட்டினாள் லில்லி. ''சியாமின் குணம் தெரிந்தும் அவரிடம் நீ கேட்டுக் கொண்டதே முட்டாள்தனம். ஆனால் அதனால் என்ன ஆகிவிடும்? சித்தப்பாவால் என்னைத் தடுக்க முடியாது. சசி! நான் வீட்டை விட்டு வெளியேறப் போகிறேன்,'' என்றாள் பிடிவாதக் குரலில் தொடர்ந்து.

''லில்லி, அது தப்பு''

''என்னடி தப்பு? என்ன தப்பு?'' என்று பாய்ந்தாள் அவள். ''குணாவை மறந்துவிட்டுச் சித்தப்பா சொல்லுகிற மாப் பிள்ளையை மணந்து கொள்ளச் சொல்லுகிறாயா?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''சேச்சே. அப்படி யல்லடி. பொறுமையாக.''

''பொறுமையாக இருக்க வழியில்லை சசி! சீக்கிரமாகத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிக் குணாவை அவர் வீட்டில் வற்புறுத்துகிறார்கள். குணாவின் அம்மாதான். நான் குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டேனாம். ஒத்து வருவேன் என்று காட்டப் போகிறேன். அவர் வீட்டில் அந்த வேலை களை எல்லாம் செய்து கொண்டே வாழ்ந்து காட்டப் போகிறேன். சித்தப்பாவும் சொத்தும் எப்படி வேண்டு மானாலும் நாசமாகப் போகட்டும்!'' பொரிந்து கொட்டினாள்.

''குணாளன் என்ன சொல்கிறார்?'' என்றாள் சசி யோசனையாக.

''அவருக்கும் என்னிடம் ஒரே சந்தேகம். இப்போது உள்ள வசதிகளை விட்டுவிட்டு அவர் வீட்டில் எப்படி இருப்பேன் என்று யோசிக்கிறார். ஆசை வேகத்தில் நாலு நாள் அமிர்தமாக இருக்கும். பிறகு வேதனைப் படுவாய், கடைசியாக இவனால்தானே என்று என்னையே வெறுக்கத் தொடங்கிவிடுவாய். பேசாமல் என்னை மறந்துவிட்டு உன் சித்தப்பா சொல்வதைக் கேள் என்றார். மறந்து விடுவதாம் மறந்து! எவ்வளவு தைரியமாகச் சொல்லுகிறார் பார்...'' என்று கோபத்துடன் படபடத்தவள் சட்டென அழுது விட்டாள்.

''ஏய் லில்லி! சீச்சீ, இதென்னடி! நீ எவ்வளவோ தைரியசாலி. உன் போல மனோதிடத்துடன் இருக்க வேண்டும் என்று எத்தனை தடவை நினைத்திருக்கிறேன். நீயே அழுவதா?'' என்று லில்லிக்குத் தேறுதல் சொன்னாள் சசி.

சிறு எரிச்சலுடன் கண்ணைத் துடைத்துவிட்டு, ''மெய் தானடி, நான் கிட்டத்தட்ட அழுததே இல்லைதான். ஆனால் இப்போது குணாவே இப்படிச் சொன்னதும் எனக்கு அழுகை அழுகையாக வந்துவிட்டது. அவரிடமே அழுது விட்டேன். பேசாமல் என்னைக் கடலில் கொண்டு தள்ளிக் கொன்று விடுங்கள் என்று கத்தினேன். பிறகுதான் திருமணத் திற்குச் சம்மதித்தார்,'' என்று குறுநகையுடன் முடித்தாள்.

''எப்போதடி திருமணம்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் சசி.

''அடுத்த வாரமே, ஞாயிற்றுக் கிழமை. கோயிலில்தான் சசி. நீ... ஓ! வர வேண்டாம். காலை பத்து மணிக்குத் திருமணம். நீ மனதால் என்னை நினைத்துக் கொண்டே இருடி. சரிதானா?'' என்று கிளம்பினாள் லில்லி.

''நீ நன்றாக வாழ வேண்டும்!'' என்று வாழ்த்தி அனுப்பினாள் சசி.

லில்லியின் கார் கண் மறையும் மட்டும் பார்த்துவிட்டுத் திரும்பியவளுக்கு நெஞ்சில் வேதனை மண்டியது. சியாமின் ஒரு வார்த்தை அவள் வாழ்வைக் கவலையற்றதாக்கி

இருக்கும். ஆனால் அவன் பழி வாங்கி விட்டானே. செல்லாத செக் தந்தவனை ஜெயிலுக்கு அனுப்பியதாக அவன் சொன்னது நினைவுக்கு வந்தது.

ஆனால் மனிதன் என்றால் மன்னிக்கத் தெரிய வேண்டாமா?

லில்லியின் நினைவில், சியாம் வந்ததும், குத்தலாகக் கேட்டே விட்டாள். ''இப்போது மகிழ்ச்சியாக இருக் கிறதா?'' என்று.

''எது?'' என்றான் சியாம் அலட்சியமாக. ஒரு சிக ரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, ''ஓ! அந்த லில்லி விஷயமா? அதில் இப்போதைக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் நாளைக்கு மண் குடிசையில் சாப்பாட்டுக்கு வழி யில்லாதபோது இந்தக் காதல் எல்லாம் ஆவியாகி நாயும் பூனையுமாக நிற்பார்கள் பார். அப்போது நிஜமான சந்தோ ஷம் உண்டாகும் என்று நினைக்கிறேன்,'' என்று நகைத்தான்.

இதென்ன குரூரம்! சசி கண்கள் அகலக் கணவனை வெறித்துப் பார்த்தாள்.

பிறகு திரும்பிச் செல்ல முயன்றவளைத் தடுத்து, ''இன்னொரு விஷயம் சசி! அந்தப் பெண் லில்லி நம் வீட்டுக்கு வந்தது இதுவே கடைசி முறையாக இருக்கட்டும். சொல்லிவிடு!'' டெலிபோனைப் பார்த்தான். ''அவளோடு நீ எந்த விதமான தொடர்பு கொள்வதும் எனக்குப் பிரிய மில்லை,'' என்றான் குரலில் அதிகாரத்தைக் காட்டி.

''எனக்குக்கூட நீங்கள் சிந்தாமணியுடன் பழகுவது பிரியமில்லைதான்!'' சரேலெனத் தன்னையும் அறியாமல் கூறிவிட்டாள் சசி. சொற்கள் வெளிவந்த பின் நாக்கைக் கடித்து என்ன பிரயோசனம்!

சியாமின் விழிகள் பளிச்சிட்டன. ''பிடிக்கவில்லை? பிடிக்கவில்லை அல்லவா? நல்லது. மிகவும் நல்லது!'' என்றான் சிறுநகையுடன்.

மறுநாள் சிந்தாமணியை வீட்டிற்கே அழைத்து வந்து வெகுவாக உபசரித்தான்.

ஓரக் கண்ணால் சசியைப் பார்த்தபடி, சிந்தாவைத் தோளில் தட்டித் தொட்டுப் பேசிச் சிரித்தான்.

## 18

சியாம் சிந்தாமணியை வீட்டிற்கே அழைத்து வந்து தன் கண் முன்னே சிரித்தும் பேசியதன் காரணம் சசிக்கு நன்றாகவே புரிந்தது.

பொருள் புரிந்து விட்டதால் அவ்வளவாகப் பொருட்படுத்திக்கூட இருக்க மாட்டாள்.

ஆனால் இங்கே மறுமுனை சிந்தாமணி ஆயிற்றே.

வருத்தத்துடன் அவளுடைய தாயார் சொன்ன அருவருப்பான கதைகள் சசிக்கு நினைவு வந்தன.

அவற்றை நிரூபிப்பது போலச் சியாமின் ஒரு தொடுகைக்குப் பதிலாக அவனோடு உராய்ந்து உராய்ந்து அவள் பேசியது சசிக்கு அச்சத்தை ஊட்டியது.

தடுத்து ஒன்றும் செய்ய முடியாமல் உள்ளம் நொந்து நைந்தது. ஆனால் குழந்தை? குழந்தை பிறந்து விட்டால் எல்லாம் சரியாகிப் போகும்! குழந்தைக்கு ஒரு மோசமான எடுத்துக் காட்டாகச் சியாம் நிச்சயமாக இருக்க மாட்டான் என்று பிடிவாதமாக நினைத்துச் சிதறிய மனோ தைரியத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஒன்றுமே நடவாதது போல ஒதுங்கிப் போனாள்.

அந்த பாவனையோடு லில்லியின் திருமணத்திலும் கலந்து கொண்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சியாம் வீட்டிலேயே இருந்தான்.

ஒன்பது மணிக்குச் சற்று முன்னதாக வெளியே செல்வதற்குத் தயாராகிச் சியாமிடம் சென்றாள் சசி.

நெற்றியில் பாதிவரை உயர்ந்த புருவங்களைக் கவனியாதவள் போல, "இன்று பத்து மணிக்கு லில்லிக்குத் திருமணம், போய்விட்டு வருகிறேன்," என்று சொல்லி விட்டுத் திரும்பினாள்.

"எனக்குப் பிடிக்காது அது என்பது உனக்குத் தெரியும்." என்றான் சியாம் அழுத்தத்துடன்.

"ஆமாம்," என்றாள் சசி சலனமற்று.

''தெரிந்தும் செய்யப் போகிறாய்!''

''ஆமாம்,'' என்றாள் அமைதியாகவே.

''சசி!'' என்றான் அவன் அதட்டலாக.

திரும்பி மீண்டும் அவன் அருகே வந்தாள் சசி. ''நான் எதைச் செய்தால் உங்களுக்குப் பிடிக்கும் என்று எனக்குத் தெரியவில்லை சியாம்! தெரிந்திருந்தால் இதை விடுத்து அதையே செய்திருப்பேன். ஆனால்... ஒரு வேளை அது உங்களுக்கேனும் தெரிந்தால் சொல்கிறீர்களா?'' என்று நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள்.

அவன் பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும், வருத்தத்துடன் லேசாகச் சிரித்துவிட்டுப் போனாள் சசி.

லில்லிக்குச் சசியைக் கண்டதும் மிகவும் ஆனந்தம்.

பிடிவாதமாகச் சிரிப்பை முகத்தில் பூசியபடி நின்று கொண்டிருந்தாலும், திருமணத்துக்கு வந்திருந்த குணாளனின் உறவினர் மத்தியில், அவர்களுடைய குறுகுறுத்த பார்வையில், தன்னுடையவர்கள் என்று யாரும் இல்லாத நிலைமையில், லில்லி சற்றுக் கலங்கித்தான் போயிருந்தாள்.

சசியின் வருகை அதை மாற்றிவிடவே, அவள் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

அந்த மலர்ச்சி சசியின் மனதிற்கும் ஆறுதலைத் தந்தது. கூடவே அவளது பரிசையும் கொடுத்தாள்.

கவரைப் பிரித்து உள்ளிருந்த நூறு ரூபாய் நோட்டுகளைப் பார்த்ததும், சட்டென லில்லியின் கண்கள் ஜொலித்தன.

''சசி! இந்தப் பணம்...'' என்று கோபத்துடன் தொடங்கினாள்.

லேசான முறுவலுடன், ''என் பணம். பி.எஃப், கிராசுட்டி எல்லாமாக வந்தது,'' என்று தோழியை அமைதிப்படுத்தினாள் சசி.

மெய்யாகவே அது அப்படித்தான். சியாமை மணந்த பிறகு அந்தப் பணத்துக்கு அன்று வரையிலும் எந்தச் செலவும் வராதிருந்தது.

லில்லியின் திருமணத்துக்குப் பரிசு பற்றி அவள் எண்ணமிடும்போது பொருளைவிடப் பணமாகக் கொடுத்தால் நல்லது என்று தோன்றியது. ஆனால் சியாமின் பணத்தை எடுத்துக் கொடுக்க மனம் இடம் தரவில்லை. மனம் ஒத்து வந்திருந்தால் வித்தியாசம் தோன்றியிராதோ என்னவோ? ஆனால் இன்றைய நிலையில் அவன் பணத்தை எடுத்து லில்லிக்குப் பரிசளிப்பது தவறு என்றே அவள் நினைத்தாள்.

ஆனால் இது அவளது சொந்தப் பணம். உடல் வருத்தி உழைத்து ஈட்டியது; பைசா விடாமல் அந்த ஆயிரத்து இருநூற்று இருபது ரூபாயையும் லில்லியிடம் கொடுத்த போது, அவள் மனதில் ஒரு நிறைவு தோன்றியது.

அந்த நிறைவு தந்த உந்துதலில் இன்னொரு காரியமும் செய்ய முனைந்தாள் சசி.

திருமணம் முடிந்து தோழியிடம் பிரியாவிடை பெற்றுத் திரும்புகையில் ராபர்ட்டைப் போய்ப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. ஆயினும் அவசரப்பட்டு எந்த வித நடவடிக்கையும் எடுக்கப் போவது இல்லை என்ற வாக்குறுதியை மட்டும் பெற்றுக் கொண்டு திரும்பினாள்.

வீட்டுக்குத் திரும்பி வரும்போது அவளுக்குள் சற்றுப் பயம் தலை தூக்கியது.

சியாமின் மனைவியான பிறகு முதல் முதலாக அவனை எதிர்த்து ஒரு காரியம் செய்திருக்கிறாள்... விவாகரத்தை மறுத்தபோதும் கருவுற்று இருப்பதை அறிந்தபின் அவள் அது பற்றி மேலே பேசவில்லை. ஆனால் இன்று 'பிடிக்காத காரியம்' என்று அவன் சொன்ன பிறகு மீறிச் செய்திருக்கிறாள்.

அவன் என்ன சொல்லக்கூடும்? குத்தலாக... கோபமாக... யோசனை ஓடும்போதே ஓர் அலுப்புடன் தோளைக் குலுக்கினாள் சசி. இன்றுவரை அனுபவித்து அறியாத புதிய கோபமும் குத்தலுமா வந்துவிடப் போகிறது?

காரை ஷெட்டில் விடுமாறு டிரைவரைப் பணித்து விட்டுப் படியேறி உள்ளே செல்லும்போது சியாம் வாயிலில் தான் நின்றிருந்தான்.

லேசான வியப்புடன் மனைவியைப் பார்த்துவிட்டு ஒதுங்கி அவளுக்கு வழிவிட்டான்.

அதன் பிறகு அச்சம்பவம் பற்றி அவர்களுக்குள் எந்தப் பேச்சும் எழவில்லை.

அதற்கு அடுத்த மாதம் குன்னூர் சென்று திரும்பும் போது சசியின் நெஞ்சு பெரிதும் பீதி வசப்பட்டிருந்தது.

அங்கேயே டாக்டரிடம் அவளாக விசாரித்தபோது அவர் தெளிவாக ஏதும் சொல்லவில்லை.

அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, சசிக்குச் சற்றுத் தெம்பு உண்டாயிற்று. ஆனால் பிறகு என்னென்னவோ பொல்லாத பயங்கள் தோன்றி அவளை வதைத்தன.

வீடு திரும்பியதும் நேராகச் சியாமின் அறையை அடைந்து கதவைத் தட்டி உள்ளே சென்றாள்.

லேசாகச் சுழித்த புருவங்களை லட்சியம் செய்யாமல், "அப்பாவைப் பற்றிப் பேச வந்தேன்," என்றாள் மொட்டையாக.

"எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. கொஞ்சம் ஆதரவாக என்னை அணைத்துக் கொள்ளுங்களேன்!" என்று கதறியது அவள் மனம்.

அவனோ முகம் அறியாத அந்நியருடன் வியாபார முறையில் பேசுவது போல, "உட்கார்," என்றதும் எதிர் சோபாவில் அமர்ந்தாள்.

ஒதுங்கிச் செல்ல முயன்றபோதும், வேண்டுமென்றே இழுத்து அருகில் அமர வைத்து அவளை வருத்திய நாள்கள் நினைவு வந்தன சசிக்கு. அந்த உடல் கவர்ச்சியும் அற்றுப் போயிற்று போலும்! பெருத்திருந்த இடையைக் குனிந்து பார்த்தாள். 'இதுவும் அழகுதான் என்று இவருக்குத் தெரியவில்லை. அல்லது சிந்தா...' யோசித்தபடி அமர்ந்தாள்.

"என்ன விஷயம்?" என்றது அவன் குரல்.

வந்த விஷயம் நினைவு வர, அவள் முகம் மீண்டும் கலங்கியது. ''அப்பாவைப் பார்த்தால் பயமாக இருக்கிறது...''

அவன் பேசாமல் இருக்கவும், அவளே தொடர்ந்தாள். ''ஒரு மாதிரிச் சுற்றுப்புறம் எல்லாம் மறைந்தது போல இருக்கிறார். உடம்பு... ஒரு மாதிரி உணர்வுகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருவது போல... சியாம்! அப்பாவைப் பார்க்கும்போது தடவைக்குத் தடவை அவரிடம் உயிர்ப்புக் குறைந்து கொண்டே போவது போல... சியாம்! எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவர் நிலைமை மோசமாக...'' கைகளை விரித்து ஓர் அசைவுடன் அவள் மவுனமானாள்.

''பயப்படாதே!'' என்ற ஒரு சொல்லைச் சசியின் அகன்ற விழிகள் அவனிடம் யாசித்தன.

அவளை ஒரு கணம் கூர்ந்து நோக்கிவிட்டுச் சியாம் சொன்னான்: ''சசி! மாமாவை அங்கே சேர்க்கும் போதே அவருக்குக் குணமாகும் வாய்ப்பு ஐம்பது சதவிகிதம்தான் என்று டாக்டர் சொன்னார் இல்லையா?''

''சியாம்!'' என்று பதறினாள் சசி.

''இது லூஸிங் கேம் சசி! இரண்டாவது தடவையே டாக்டர் சொன்னார். ஆனால் ஒன்று. அவர் உடல் வேதனை ஏதும் அனுபவியாமல் பார்த்துக் கொள்வதாக டாக்டர் சொன்னார். அந்த அளவில் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.''

திருப்தி! திருப்தி! ஓ!

சசி சட்டென எழுந்து நின்றாள்.

''வேறே செய்வதற்கு ஒன்றும் இல்லையா?''

அவன் தலையசைத்தான்.

''மேலே... மேலே சொல்வதற்கும் ஏதும் இல்லை... இல்லையல்லவா?''

மீண்டும் ஒரு தலையசைப்பு.

கனவில் நடப்பவள் போலத் தன்னையறியாமல் திரும்பி நடந்து வெளியேறினாள் சசி.

சசி என்று அவன் அழைத்தானோ என்னவோ? அவளது கவனத்தில் ஒன்றும் பதியவில்லை.

அப்பாவின் முடிவு நெருங்குகிறது. இந்த முடிவைத் தடுக்கவென்று செய்த முயற்சிகள் எல்லாம் பலனின்றி வீணாகப் போகின்றன. என்னென்ன நாடகங்கள் ஆடி, எப்படி எப்படி வேதனைப்பட்டுக் கடைசியில் ஒன்றுமே இல்லாமல் போகப் போகிறது.

ஒன்றுமே இல்லாமலா?

'நான் இருக்கிறேன்!' என்பது போல வயிற்றினுள் பலமாக உதைத்தது குழந்தை.

திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள் சசி. கால்கள் தன் போக்கில் அவளது அறையினுள்ளேயே கொண்டு வந்து விட்டிருப்பதைக் கண்டாள். மெல்லப் படுக்கையில் அமர்ந்தாள்.

இங்கே நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வலுப்பெற்று அசையும் குழந்தை.

அங்கே வலிமை ஒடுங்கி நாளுக்கு நாள் அசைவுகளை இழந்து ஒடுங்கும் தந்தை.

அங்கே ஒடுங்குவதும் இங்கே வளருவதும்... இது என்ன தொடர்பு.

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பார்களே, அந்த இயற்கைத் தத்துவமா?

சசிக்கு ஒன்றும் புரியாமல் மனம் தளர்ந்தது.

அமைதியற்று எழுந்து தோட்டத்திற்குச் சென்றாள்.

வண்ண வண்ண மலர்கள், குளிர்ந்த தென்றல்.

கொஞ்சம் அமைதியடைந்தவளாய் மேலே நடந்தாள்.

''உக்காருங்கம்மா,'' என்று பாயை விரித்துக் கோழிக் குஞ்சுகளைத் திறந்து விட்டாள் தங்கம்.

மஞ்சள் நிறப் பந்து உருண்டைகள்.

சின்னக் கண்களை உருட்டிப் பெரிய மருவு (கோழி)த் தனமாக மண்ணைக் கிளறுவதும் குடுகுடுவென்று ஓடுவது மாகச் சசியின் முகத்தில் முறுவலை வரவழைத்தன அந்தக் கோழிக் குஞ்சுகள்.

தங்கம் தந்த தலையணையை மரத்தில் சாத்தி அதில் சாய்ந்தபடி அமர்ந்தாள் சசி.

தங்கத்தையும் வேல்சாமியையும் நினைத்துப் பார்த்தாள். சியாமிடம் சம்பளம் பெற்று வாழ்கிறவர்கள். வாங்கும் சம்பளத்துக்கு உழைத்துத் தீர்க்கிறவர்கள்.

இவர்களுக்குச் சசியிடம் என்ன பாசம்!

இந்தக் கோழிக் குஞ்சுகளைக் காண்பதில் அவளுக்கு உள்ள ஆர்வத்தைக் கண்டு மாதா மாதம் புதிதாக முட்டைகளை அடையிட்டுக் குஞ்சு எடுத்து விடுகிறார்கள்.

சசி அங்கே வந்ததும் அமர்வதற்குப் பாய் விரித்துச் சாய்ந்து கொள்ளத் தலையணை ஒன்றைக் கொணர்ந்து எல்லா வசதிகளையும் செய்துவிட்டு நின்று, வளவளக்காமல் ஓசையின்றி ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

சசியின் மனம் மெல்ல அமைதியுறலாயிற்று.

மறுமுறை குன்னூர் சென்றபோது, ''யார் சசியா?'' என்று கூர்ந்து பார்த்தார் சபேசன்.

தொண்டையில் விழுங்கிக் கொண்டு, ''ஆமாப்பா!'' என்றாள் சசி... ''வந்து... அவருக்கு வர முடியவில்லை அப்பா.''

புருவங்களை நெருக்கி யோசித்தபடி, ''யாருக்கு வர முடியவில்லை?'' என்று விசாரித்தார் அவர்.

விக்கித்துப் போய், ''உங்... உங்கள் மருமகன் அப்பா!'' என்றாள் சசி.

''மருமகனா?'' என்று மீண்டும் யோசிக்கத் தொடங்கி, அந்த முயற்சியையும் கைவிட்டு வெறுமையாகப் பார்த்தார் சபேசன்.

சசிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. டாக்டரிடம் சென்று, ''நினைவெல்லாம் மழுங்குகிறதே,'' என்றாள் வேதனையுடன்.

''ஓயாத 'டிரக்ஸ்!' இல்லையாம்மா. முடிந்ததெல்லாம் செய்து கொண்டுதான் வருகிறோம். பார்க்கலாம். ஆனால் நீங்கள் இந்த மாதிரி நேரத்தில் அமைதியாக இருக்க வேண்டும். அதுதான் குழந்தைக்கு நல்லது,'' என்று முறுவலித்தார்.

நெஞ்சு நிறையக் கனத்துடன் சென்னைக்குத் திரும்பி வந்தாள் சசி.

அங்கும் சுமையைப் பகிர்ந்து கொள்ள ஆளில்லாமல் குமைந்தாள்.

அந்நியனாய் விலகி நின்ற கணவன்.

போதாக் குறைக்கு அவனாகவே ஒரு தடவை அழைத்து வந்து விட்டதால், அந்தத் திமிருடன் சிந்தாமணி அவ்வப் போது தலைகாட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். அதில்லாவிட்டாலும் அடிக்கடி டெலிபோன் செய்து, ''அவர் இருக்கிறாரா?'' என்று அறுக்கத் தொடங்கியிருந்தாள்.

சியாமும் இதில் எதையுமே தடுப்பதாகத் தெரியவில்லை.

எல்லாமாகச் சசிக்கு வீடே சிறையாக மூச்சு முட்டியது. பெரும்பாலும் தோட்டத்திலேயே பொழுதைக் கழித்தாள்.

உணவு, உறக்கம் போன்றவை தவிர, மற்ற நேரம் எல்லாம் மரத்தடிதான் வாசம்.

காலை உணவு முடிந்ததுமே பிறக்கப் போகும் குழந்தைக்கான நிட்டிங்கை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவாள்.

மதிய உணவுக்குத்தான் திரும்புவாள்.

ஆனால் இடையே மீனம்மாள் கவனமாக ஹார்லிக்ஸ் ஆரஞ்சு ஜூஸ் என்று அனுப்புவாள்.

ஒவ்வொரு பணியாளின் கவனமும் சசிக்கு வியப்பை உண்டு பண்ணும். லில்லி பார்த்தால், 'மரத்தடி மகாராணியார் வனவாசமா?' என்று கேலி செய்வாள். எப்படி இருக்கிறாளோ என்று நினைத்தபடி மரத்தடிக்குச் சென்றாள் சசி.

அன்று ஒரு புதிய விருந்து.

புதிதாகப் பொரித்த பதினைந்து 'வொய்ட் லெக்ஹார்ன்' குஞ்சுகளைப் பஞ்சாரத்தினுள் காட்டினாள் தங்கம்.

சற்று நேரம் நின்று குனிந்து பார்த்தாள் சசி.

முதுகு வலிக்கவே கூடையை அகற்றி விட்டு மரத்தடியில் உட்கார்ந்து கவனிக்கலானாள்.

விடுதலை பெற்றாற் போலக் குஞ்சுகளும் தாயும் இங்கும் அங்குமாய் ஓடின.

குப்பையைக் கிளறவும் கொத்தித் தின்னவும் தாய் கற்றுக் கொடுப்பதையும் குஞ்சுகள் பின்பற்ற முயல்வதையும் இடையிடையே கண்ணை மூடிச் சில கணங்கள் தூக்கம் (கோழித் தூக்கம்) போடுவதையும் கண்டு தன்னை மறந்து சிரித்தாள் சசி.

அவற்றுள் ஒரு சிறு குஞ்சு மீண்டும் மீண்டும் தாயின் அழைப்பை லட்சியம் பண்ணாமல் தனியாக ஓடியது. ரொம்பவும் துறுதுறுப்பான குஞ்சு. இது போலத்தான் என் குழந்தை துறுதுறுப்பாய் இருப்பான் என்று கனவுகளில் ஆழ்ந்தாள் சசி.

திடீரென்று தாய்க் கோழி ஒரு விதமாகக் கத்திற்று.

சசி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

எல்லாக் குஞ்சுகளும் தாயின் பரந்தணைக்கும் இறக்கைக்குள் ஓடிப் பதுங்கின.

தனியே சென்ற குஞ்சும்கூட ஓடோடியும் வந்தது.

அதற்குள் கள்ளப் பருந்து ஒன்று சரிந்து இறங்கித் தரையைத் தொட்டு மீண்டும் ஜிவ்வென்று உயரே கிளம்பிற்று.

அதன் கால்களில் தனியே சென்ற அந்தத் துறுதுறுப்பான குஞ்சு!

''ஐயோ!'' என்ற கதறலுடன் எழுந்தாள் சசி.

அவளது கதறலைக் கேட்டு வேல்சாமியும் தங்கமும் ஓடோடி வந்தனர்.

நிலைமையைப் புரிந்து கொண்ட வேல்சாமி ஒரு கல்லைக் குறி தவறாமல் விட்டெறிந்தான்.

கல் பருந்தைத் தாக்கக் குஞ்சு கீழே விழுந்தது.

ஆனால் அவன் சென்று குஞ்சைக் கைப்பற்று முன் பருந்து முந்திக் கொண்டு மீண்டும் குஞ்சைக் கவர்ந்து சென்று விட்டது.

ரத்தம் வடியும் உடலுடன் பருந்தின் கால் நகங்களின் பிடியில் தொங்கக் குஞ்சைப் பார்த்த சசி அடக்க முடியாமல் வீறிடலானாள்.

'அம்மா! அம்மா!' என்ற தங்கத்தின் குரல் அவளை எட்டவே இல்லை.

லீவு நாள் என்று வீட்டில் இருந்த சியாம், சசியின் குரல் கேட்டு ஓடி வந்தான்.

''சசி! சசி! இதோ பார்,'' என்று அவளைப் பிடித்து இழுத்துத் தலையைத் தன் மார்பில் அணைத்து அவளைச் சமாதானப் படுத்த அவன் செய்த எந்த முயற்சிகளையும் உணர்ந்து கொள்ளக் கூட முடியாமல் வீறிட்டபடியே மயங்கிச் சாய்ந்தாள் சசி.

## 19

அன்று இரவு சுமார் இரண்டு மணியளவில் மீண்டும் 'ஐயோ' என்ற கதறலுடன் விம்மித் தவித்தாள் சசி.

''சசி! சசி!'' என்று அழைத்த கணவனின் குரல் எட்டினாற் போலவே இல்லாதது எட்டு மாத வயிறு இடம் கொடுத்த அளவில் துடித்துப் புரண்டாள்.

''சசி! இதோ பார். அமைதியாய் இரு!'' என்று ஒரு கையால் அவள் தோளை அழுத்தி, மறு கரத்தால் தலையை வருடினான் அவன்.

அவனது தொடுகையில் அமைதி யடைந்து அதன் பின்னரே கண் விழித்து அவனை மலங்கப் பார்த்தாள் சசி.

''பயப்படாமல் தூங்கு,'' என்று கட்டிலின் ஒருபுறமாக அவளது ஒரு கையைப் பற்றியவாறே அமர்ந்தான் அவன்.

மறு கையால் அவன் கையை அழுந்த மூடிப் பிடித்துக் கொண்டு அசையாமல் கிடந்தாள் சசி.

மனைவி என்ற சொந்தமான பாவனை இல்லாமல், யாரோ போல உணர்ச்சியற்ற குரலில் பேசினாலும், அவன் அருகில் இருப்பதே அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

'பயப்படாதே!' என்றானே, என்ன பயம் என்று நினைவு ஓடியது. என்ன பயம் என்பது நினைவு வந்ததும் உடம்பு நடுங்கிச் சிலிர்த்தது.

அதை உணர்ந்து. ''ஏய் சசி! ஏதேனும் கனவு கண்டாயா?'' என்று விசாரித்தான் அவன்.

''ம்... கனவு... கனவுதான்...'' என்று நடுக்கம் தீராமலே பெருமூச்சு விட்டாள் சசி. ''அந்தப் பருந்து வந்தது... சியாம்! அது என் குழந்தையைக் கொத்திக் கொத்தி...'' உடல் நடுங்க, ''என் குழந்தைக்கு ஏதேனும் ஆகிவிடுமா சியாம்? எனக்குப் பயமாக இருக்கிறதே!'' என்று மீண்டும் நடுங்கினாள் சசி.

''சேச்சே! அதெல்லாம் ஒன்றும் ஆகாது. தூங்கு,'' என்றான் அவன் ஆறுதலாக.

அந்தச் சிறு பரிவில் தானும் ஒரு குழந்தையாகிப் பயம் அகன்று உறங்கிப் போனாள் சசி.

மறுநாள் காலையில் சற்றுத் தயக்கத்துடனேயே தன் கணவனை நாடிப் போனாள் சசி.

''என்ன?'' கையிலிருந்த பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு அவளிடம் திரும்பிக் கேட்டான் அவன்.

''வந்து... சியாம்! நீங்கள்...'' என்று மேலே பேச அஞ்சி அவன் முகத்தைப் பார்த்தாள் அவள்.

''சொல்லு.''

''இன்று... இன்று இரவில் என் அறையில்... படுத்துக் கொள்ள முடியுமா? ஏதேனும் ஒரு பக்கம்.''

அவன் பேசாதிருக்கவும், அவசரமாக, ''வந்து... எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது சியாம்! ஒரு... இரண்டே இரண்டு நாள்கள் போதும் சியாம்! அந்தக் கனவு... அது மீண்டும் வருமோ என்று நடுக்கமாக இருக்கிறது...'' நடுங்கிய உதட்டைப் பற்களால் அழுத்தியபடி அவள் தலை குனிந்து நின்றாள். இவ்வளவு பயங்கொள்ளியாக எப்படி ஆனோம் என்று அவளுக்குத் தோன்றியது.

அவன் பதில் கூறுமுன் டெலிபோன் மணி அடித்தது.

கையை நீட்டி எடுத்து, பட்டனை அமுக்கிவிட்டு, ''சியாம் சுந்தர் ஸ்பீக்கிங்...'' என்றான் சியாம்.

பிந்தாவின் குரல் சற்றுத் தள்ளி நின்ற சசிக்குக்கூடக் கேட்டது.

பேச்சு முடியாமல், 'போகவா நிற்கவா' என்று புரியாது நின்றாள் சசி.

''ஓ, சிந்தாவா? இன்று நான் வருவதற்கு இல்லை சிந்தா,'' என்றான் அவன்.

''ஏனாம்?'' என்று சிணுங்கியது சிந்தாவின் குரல்.

''அதுவா? நேற்றுச் சரியாகத் தூங்கவே இல்லை. சசி ஏதோ கனவு கண்டு பயந்து விட்டாள். அதனால் அங்கே...''

''மெய்யாகவே கனவுதானா அல்லது...'' என்று சிந்தாமணி கேலியாகச் சிரித்தது சசிக்கும் கேட்கவே செய்தது. கலக்கத்துடன் கணவரைப் பார்த்தாள்.

அவன் அவளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''மெய்யென்றுதான் நினைத்தேன்,'' என்று இழுத்தான்.

கூடை நெருப்பை அள்ளித் தலையில் கொட்டியது போல என்று கதைகளில் படிக்கும்போது எப்படி என்று நினைத்துக் கொள்வாள் சசி.

இப்போது அது எப்படி என்பது புரிந்தது.

வேதனையோடு சியாமை நேராகப் பார்த்தாள். பொய்ம்மையின் சலனம் அற்ற பார்வை.

உணர்ச்சியற்ற அவனது பார்வையில் அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

கண்ணீரைக் கண்டால் ஜாலம் என்று வெறுப்பானே, குத்தலாகப் பேசுவானே என்று தோன்றவும், வேறு ஒன்றும் பேசாமல் அறையை விட்டு வெளியேறினாள்.

மாலையில் அவன் வந்தபோதும், இரவு உணவு முடிந்த போதும், எப்போதுமே சசி அவனிடம் வேறே பேசவில்லை.

பகலைப் போலவே மொட்டை மாடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அன்று முழுமையுமே அவளுக்கு அங்கேதான் வாசம்.

முன்தின நிகழ்ச்சிக்குப் பிறகு தோட்டத்துப் பக்கம் செல்லக் கால் எழும்பவில்லை.

இரவு கனவுக்குப் பிறகு கண்ணை மூடவே நடுக்கமாக இருந்தது.

தலையைச் சாய்க்கக்கூடப் பயந்து போய்க் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள்.

இன்றும் அந்தக் கனவு வந்தால்...?

ரத்தம் வழிய அந்தக் கோழிக் குஞ்சு கண் முன்னே வந்தது. அதைப் போல மொட்டை மாடியின் குளிர் காற்றிலும் உடல் வியர்த்து முகம் வெளுத்தாள் சசி.

பதினொன்று... பன்னிரண்டு... எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க முடியும்?

பிள்ளைச் சுமையின் அசதி வேறு அவளது உடம்பைத் தள்ளிற்று.

முடிந்த அளவு நேரம் உட்கார்ந்து பார்த்ததும், கடைசியில் முடியாமல், எழுந்து உள்ளே சென்றாள்.

சியாமின் போட்டோவை எடுத்து அருகே வைத்துக் கொண்டு, ஒரு கையால் அதைத் தொட்டபடியே படுத்தாள்.

எண்ணி எண்ணி அஞ்சியபடியே படுத்ததாலோ என்னவோ, அன்றும் அதே கனவு வந்தது.

இரண்டு மணி சுமாருக்கு வீறிட்டுக் கொண்டே புரண்டாள். "சியாம்... சியாம்... குழந்தை..."

அரைகுறையான விழிப்பில் படம் கையில் படவே, அதை எடுத்து நெஞ்சோடு அணைத்துப் பார்த்தாள். தவிப்பு அடங்க மறுத்தது.

படத்தைத் தலையணை மேல் வைத்து அதன் மேல் சரிந்து விம்மி அழத் தொடங்கினாள்.

ஒரு கை படத்தை அகற்ற முயலவும், வெறி கொண்டவளைப் போலப் படத்தை விடாமல் பற்றினாள்.

"நான்தான். விடு சசி!" என்று கணவன் குரல் கேட்கவும், அப்படியே தொய்ந்தாள்.

ஒரு சோபாவை அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து, அவள் கையைப் பற்றி, "இனித் தூங்கு," என்றான் அவன் அமைதியாக.

அன்றும் அதன் பின் சசி ஆழ்ந்து உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் ஒரு டாக்சி வாயிலில் வந்து நின்றது. வந்தவள் சிந்தாமணி.

''வா சிந்தா!'' என்றான் சியாம். ''சிந்தாவுக்கு ஏதாவது கொண்டு வா சசி!'' என்று மனைவியை ஏவினான்.

''எனக்கு ஒன்றும் வேண்டாம்,'' என்று உதட்டைக் குவித்தாள் சிந்தாமணி. ''இன்று மாலையேனும் சினிமாவுக்கு வருவீர்களா? அதைக் கேட்கத்தான் வந்தேன்,'' என்றாள் கொஞ்சலாக.

ஒரு ட்ரேயில் பிஸ்கட்டுகளும் கப்பில் காப்பியும் கொண்டு வந்து வைத்தாள் சசி.

பெரிதான வயிற்றை அருவருப்புடன் பார்த்துவிட்டுப் பெருமையுடன் தன் உடலை நெளித்துப் பார்த்தாள் சிந்தாமணி.

ஒரு பிஸ்கட்டை எடுத்து, நாசூக்காகக் கடித்தபடி, ''நேற்றும் கனவு வந்து தூக்கத்தைக் கெடுக்கவில்லையே!'' என்றாள் கடைக்கண்ணால் சசியை நோக்கி.

''கனவு வந்தது. ஆனால் நான் அங்கேயே இருந்ததால் தூக்கத்தைப் பற்றி ஒன்றும் இல்லை,'' என்றான் சியாம்.

அவனது குரலில் சிந்தாவிடம் மயக்கமோ நெருக்கமோ இருந்ததாகச் சசிக்குத் தோன்றவில்லை. ஆனால் சிந்தாவின் பேச்சைக் கேட்கையில் அவளுக்கு வீட்டு விவகாரங்கள் எல்லாமே தெரிந்தது போலத்தான் தோன்றியது. அவன் சொல்லாமல் எப்படித் தெரியும்? அல்லது தன் பங்குக்குச் சிந்தா வேறு சசியை வருத்தட்டும் என்று சொல்லியும் இருப்பானோ? பழி வாங்கும் வெறியில்தானே சிந்தா போன்ற பெண்ணிடம் பொது இடங்களுக்கெல்லாம் போகிறான்?

சசி யோசிக்கும்போதே சிந்தாவின் விழிகள் பளிச்சிடக் கண்டாள்.

கலீர் என்று சிரித்துவிட்டு, ''ஏதோ, உங்களை இழுப்பதற்கு ஒரு சாக்கு. சசியால் உங்களை எவ்வளவு காலமாக ஏமாற்ற முடிகிறது!'' என்று ஆச்சரியப்பட்டாள் சிந்தா.

''இல்லை. மெய்...'' என்று சசி தொடங்கியதைக் கவனி யாதவள் போல, ''இரவு சினிமாவை மறந்து விடாதீர்கள்,'' என்று கிளம்பிப் போய் விட்டாள்.

'ஏமாளி' என்ற ஒரு சீண்டலில் சியாமின் இரண்டு நாள் இரக்கம் ஆவியாகப் போனதைச் சசி உணர்ந்தாள்.

சிந்தா என்ற பின் கணவன் ஏற இறங்கப் பார்த்த ஒரு பார்வையில் அவன் இன்னொருத்தியுடன் சினிமாவுக்குப் போகிறானே என்பதுகூட அவளுக்கு மறந்து விட்டது.

அன்றிரவு வெகு நேரம் கழித்துத்தான் சியாம் திரும்பி வந்தான்.

உணவை மறுத்துத் தன் அறைக்குள் சென்றவன், கதவை உட்புறமாகத் தாழிடுவது கேட்டது.

பழக்கம் ஆகிவிட்ட ஒன்றுதான் என்றாலும் சசிக்கு நெஞ்சு வலிக்கத்தான் செய்தது.

'இதயக் கதவு இடைவெளியின்றி மூடிவிட்டது. இந்த மரக் கதவை மூடுவதை எண்ணியா வருந்துவது?' என்று தன்னையே அதட்டிக் கொண்டாள் சசி.

'கடவுளே! இன்று கனவு வரக்கூடாது!' என்று ஆயிரம் தடவை வேண்டிக் கொண்டு படுத்தாள் சசி.

ஆனால் குரங்கை நினையாது மருந்து குடித்தவன் கதையாக, வரக் கூடாதே என்று பயந்த பயத்தில் சரியாக அதே நேரத்தில் அந்தக் கனவு வரவே செய்தது.

கனவில் பயந்து அலறி விழித்தவள் வாய் விட்டு விம்மவும் முடியாமல் வாயைப் பொத்திக் கொண்டு எழலானாள்.

ஆனால் அச்சத்தினால் உடல் துடித்த துடிப்பில் இடையில் சுரீரென்று ஒரு வலி ஏற்படவும் ஒரேயடியாகப் பயந்து போனாள்.

கூர்மையான நகங்களாலும் அலகாலும் அந்தப் பறவை தன் சிசுவைக் கொத்தித் தாக்குவது போன்ற பிரமையில் அரண்டு போய்ச் சியாமின் அறைக் கதவைத் தட்டினாள்.

பதிலின்றித் தவிப்புடன் திரும்பிக் கட்டிலை நோக்கி நடக்க முயன்றாள்.

திடுமென அக்கினிப் பிழம்பாய் இடுப்பினுள் பிரவேசித்த வலியால் கால் தடுமாறி விழுந்தாள்.

விழுந்த வேகத்தில் வலி மிகுதியாகி எழ முயன்றும் முடியாமல் போகவே மீண்டும் கணவனையே அழைத்தாள்.

மீண்டும் பதிலின்றிப் போகவும் மெல்ல நகர்ந்து டெலிபோன் அருகே செல்ல முயன்றாள்.

ஆனால் உடலின் லேசான அசைவும்கூட ஏற்கெனவே உடலைப் பிளந்து கொண்டிருந்த வலியை அதிகரிக்கவும், என்னவோ என்று மிகவும் பயந்து போய், ''மீனம்மா...'' என்று இயன்ற மட்டும் உரக்க அழைத்தபோதே, வலி அதிகமானதால் உணர்வு மயங்கி விட்டது அவளுக்கு.

மீண்டும் அவளுக்குத் தன் நினைவு வந்தபோது படுக்கையில் கிடப்பது புரிந்தது.

ஆனால் மேலும் மேலும் அலை அலையாகப் பொங்கி வந்த வலியில் சுற்றுப்புறம் மறந்தது.

வலியை மிஞ்சிய பயத்துடன் திரும்பினாள்.

'பொறுத்துக் கொள்ளம்மா சசி!'' என்றது டாக்டர் அனுவின் இனிய குரல்.

டாக்டர் எப்போது வந்தார்? எப்படி வந்தார்...?

கண நேரத்தில் இந்தக் கேள்விகள் மனதில் தோன்றி மறைய, பதற்றத்துடன் ''டாக்டர்! இன்னும் ஒரு மாதம் இருக்கிறதே டாக்டர்! என் குழந்தைக்கு ஒன்றுமில்லையே... ஒன்றும் இல்லையே... அம்மா ஆ...!'' திக்கித் திணறி அவள் பேசும் போதே மீண்டும் வலி மிகுதியில் உணர்வு மயங்கியது சசிக்கு.

நினைவும் மயக்கமும் மாறி மாறி வர, வலியுடன் போராடிக் களைத்து ஓய்ந்து மீண்டும் முழு நினைவுடன் கண் திறக்கும் போது அவளது வயிற்றுச் சுமை இறங்கி விட்டிருந்தது.

ஆவலும் அச்சமுமாக விழிகளால் இருபுறமும் தொட்டிலைத் தேடினாள்..

அருகிலேயே இருந்த டாக்டர் அவள் கையைப் பற்றி அழுத்தி, ''சசி! நீ இப்போது தைரியமாக இருக்க வேண்டும்,'' என்றார்.

## 20

**தை**ரியம்!

தைரியம்!

எல்லாம், எல்...லாமே கை நழுவிப் போய்விட்ட பிறகு எங்கேயிருந்து வரும் தைரியம் என்று நினைத்தாள் சசி.

முழுக்க முழுக்கத் தோற்றுப் போனவளாய், நிராசையே உருவாகி, ''எல்லாம் முடிந்து போயிற்று!'' என்று முணுமுணுத்தாள்.

''அசடுபோலப் பேசக்கூடாது,'' என்று அன்போடு கடிந்தபடி அவள் தலையை வருடினார் டாக்டர். ''உனக்கு என்ன, இளம் வயது! ஒன்றிலேயே எல்லாம் முடிவது இல்லை. உடம்பைக் கொஞ்சம் பாதுகாத்துத் தேற்றிக் கொண்டால் உடனேயே இன்னொன்று...'' என்றார்.

''இல்லையே! இல்லையே!'' என்று கதற வேண்டும் போல மனம் பதறியது சசிக்கு. ஆனால் வாடிச் சோர்ந்து போன விழிகளில் கண்ணீர்தான் முட்டிக் கொண்டு வந்தது.

ஒன்று தோன்றவே, ''டாக்டர், என் குழந்தை எங்கே? நான் ஒரு தடவை பார்க்க வேண்டுமே டாக்டர். ஒரே ஒரு முறை... டாக்டர், டாக்டர்...'' என்று பரிதவித்தாள்.

''வேண்டாம் சசி. பார்த்தால் உன்னால் உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது,'' என்றார் அந்த அம்மாள்.

''இல்லை டாக்டர். வேண்டாம் என்று சொல்லாதீர்கள். ப்ளீஸ் டாக்டர். ஒரே ஒரு முறை. இந்தத் தடவை இல்லை யானால்... டாக்டர், உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா டாக்டர்?'' சசியின் குரல் உயர்ந்து கொண்டே போயிற்று.

''சொன்னால் கேட்க வேண்டும் சசி.''

அவசரமாகத் தலையை இருபுறமும் உருட்டினாள் சசி. ''ம்ஹூம்... டாக்டர், ப்ளீஸ் டாக்டர், டாக்டர்.''

''மிஸ்டர் சியாம், நீங்கள் சொல்லுங்கள், உங்கள் மனைவிக்கு... இப்போது தன்னைக் கட்டுப்படுத்திக்

கொள்ளா விட்டால், அவளுக்கு நல்லதில்லை,'' என்று முறையிட்டார் டாக்டர்.

டாக்டர் பின்னே சொன்னதைச் சசி கவனிக்கவில்லை. 'சியாம்!' என்று டாக்டர் அழைக்கவும் அண்ணாந்து பார்த்தாள்.

தலைப் பக்கமாக அவன் நின்றிருந்தான்.

''சியா...ம்!'' அவள் கைகள் தவிப்புடன் அலைந்து அவனை எட்டின. ''சியாம், ஒரு தடவை பார்க்கிறேன். இது கடைசித் தடவையும்கூட சியாம். உங்களுக்கும் தெரிய வில்லையா? இப்போது பார்க்கா விட்டால் என் செல் வத்தை நான் ஒரு போதுமே பார்க்க முடியாதே... சியாம்...'' என்று கதறினாள்.

சசியின் கையை லேசாகப் பற்றி, ''அதைக் கொண்டு வரச் சொல்லுங்களேன் டாக்டர்,'' என்றான் அவன்.

ஆவலோடு டாக்டரைப் பார்த்தாள் சசி.

டாக்டர் மவுனமாகத் தலையசைக்கவும் வெறி கொண் டவள் போல, ''நான்... நானே சென்று பார்க்கிறேன்,'' என்று படுக்கையிலிருந்து எழ முயன்றாள்.

சட்டெனச் சியாம் முன்னே வந்து அவளது தோளைப் பற்றி அழுத்திப் படுக்க வைத்தான். ''பேசாமல் படுத்திரு சசி. நான் கொண்டு வரச் சொல்கிறேன்,'' என்றான் அழுத்தத்துடன்.

பதிலாக அசைவற்றுக் கிடந்தாள் சசி.

''கொண்டு வரச் சொல்லுங்கள் டாக்டர்,'' என்றான் டாக்டரிடம் சற்று அதட்டலாகவே.

''சசிம்மா, நீ அமைதியாக இருந்தால்தான்...'' என்ற நிபந்தனையுடன் நர்சை அழைத்துக் குழந்தையைக் கொண்டு வரச் சொன்னார் டாக்டர்.

சசியின் பார்வை வாயிலில் பதிந்தது.

நர்சின் காலடி ஓசை... நர்சின் கையில் ஒரு துணிச் சுருள். சுருளுக்குள்...

தவிப்புடன் மூச்சிரைக்க, ''கிட்டே வாருங்களேன் நர்ஸ் இன்னும்... ஐயோ, ஒன்றும் தெரியவில்லையே. இன்னும் கொஞ்சம்... கொஞ்...சம்...'' என்று விழிநீரை வழித்து விட்டுக் கொண்டு ஆசையாகப் பார்த்தாள்.

சின்ன வடிவம்...

குஞ்சான கைகள்...

வெளேர் என்ற முகம்...

மூடிய இமைகள்... ஆம் மூடிவிட்டிருந்த இமைகள்...

பற்றியிருந்த கணவன் கையை உதறிவிட்டுக் கையை நீட்டினாள்.

''போதும் சசி!'' என்றான் சியாம்.

சசியின் குரல் கெஞ்சியது. ''போதாதே சியாம். டாக்டர், ப்ளீஸ், ஒரு தடவை, ஒரே ஒரு தடவை தொட்டு... தொட்டுப் பார்த்து விடுகிறேனே, நர்ஸ், ப்ளீஸ்...''

நர்ஸும் பெண்தானே.

விழிகளில் நீர் மல்க அருகில் வந்து குழந்தையைச் சசியின் கையருகே நீட்டினாள்.

விரல்கள் நடுங்கச் சசி குழந்தையை வருடினாள். பட்டான முடியிலிருந்து மிருதுவாகத் தோன்றத் தொடங்கியிருந்த கால் நகம் வரையிலும். ஆகா, என்ன மென்மை! என்ன மென்மை! பட்டோ வெல்வெட்டோ, பூவிதழோ!

ஆனால் குளிர்ந்து விட்டதே.

புண்ணியம் செய்த ஜீவனோ?

பாவியான இந்தத் தாயிடம் வாழப் பிடிக்காமல் போய் விட்டதோ?

நகர மறுத்த விரல்களைப் பிரித்தெடுத்தாள்.

தொண்டையில் பந்தாய் அடைத்ததை விழுங்கி விழிகளை இறுக மூடிக் கொண்டு தலையசைத்து நர்சை அனுப்பினாள்.

உதட்டில் பற்கள் அழுந்திய இடத்தில் ரத்தம் கசிந்தது.

சசியின் உடல் மெல்லத் தேறியது.

பெற்ற தாயைப் போலக் கவனித்துக் கொண்ட மீனம்மாளின் பராமரிப்பும் காரணமாக இருக்கலாம்.

எப்படியோ உடம்பு பழைய நிலைக்குத் திரும்பியது.

ஆனால் மனம்?

அது தேறுவதற்கு வழியில்லாது போயிற்று.

அதில் பட்ட காயம் பச்சை ரணமாகவே நின்று ஒரு வித எதிர்பார்ப்புக்கும் வழியற்று ஆசையெல்லாம் அழிந்து நிராசை மட்டும் எஞ்சியது.

வாழ்வின் ஒரே நம்பிக்கை. துருவ நட்சத்திரம் ஒளியேற்று முன் உதிர்ந்து போயிற்று.

அந்தகாரமாய்ச் சூழ்ந்த இருட்டில் அவள் தனித்து நின்றாள்.

இனிப் பட்ட மரமாய், பொட்டல் வெளியாய், வெறும் பாலைவனமான வாழ்க்கை விரிந்து கிடந்தது.

ஒரு பசுமையை எதிர்பார்க்கும் வலிவுகூட அவளது பலவீனமான நெஞ்சுக்கு இல்லாது போயிற்று.

எப்போது பார்த்தாலும் சன்னல் ஓரமாய்ச் சூனியத்தை வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

அந்த வெளியில்தான் எங்கோ கடவுள் இருக்கிறாரோ?

அவருடைய மடியில் அவளுடைய செல்வன் இருக்கிறானோ?

எப்படியோ விஷயம் தெரிந்து லில்லி ஓடோடி வந்தாள். குணாளனும் கூடத்தான்.

''சசி!'' என்று தோழியை அணைத்துக் கொண்டாள்.

''குழந்தை குழந்தை என்று ஒரே நம்பிக்கையில் இருந்தாயேடி? கடைசி... கடைசியில் இப்படி ஆகிவிட்டதே. கடவுளுக்கும் கண்ணில்லாது போயிற்றே!'' என்று கண்ணீர் விட்டாள்.

ஏதோ நினைத்தவளாய், ''ஏண்டி, சியாம் கொஞ்சமாவது மாறியிருக்கிறாரா? என்னது? இல்லையா? ஏண்டி? இரக்கமேனும் இருக்கும் அல்லவா? இல்லாவிட்டாலும் அவருக்கும் பிள்ளைதானே! அந்த வருத்தத்தில்... என்னடி தலையசைக்கிறாய்? சசி, சியாமைப் பற்றிக் குணா என்னென்னமோ சொல்லுகிறாரே. மெய்தானாடி. யாரோ ஒரு நாடகக்காரியோடு சுற்றுகிறாராம். உண்மைதானா?'' என்று விசாரித்தாள்.

''ஆம்!'' என்று தலையாட்டினாள் சசி.

"ஆமா? சும்மா விட்டுக் கொண்டு இருந்தால் எப்படி சசி? சியாமும் பிடிவாதக்காரர் என்றால் அந்த நடிகையை இரண்டு வாங்கு வாங்குவதுதானே? நாளை நானே பார்க்கிறேன் பார்," என்றாள் ஆத்திரத்துடன்.

"அந்த நாடகக்காரி சிந்தா!" என்றாள் சசி வறண்ட குரலில்.

"ஊ, அந்தச் சிந்தாவா! நம்மோடு படித்தாளே மினுக்கி. அவளா?" என்று அதிர்ந்தாள் லில்லி.

"ஆமாம். கோவையில் அவரிடம் விஷயம் எல்லாம் சொன்னவளும் அவள்தான். பிறகு அப்படியே... இங்கே வந்தும் ஒட்டிக் கொண்டாள்."

"உத்தம பத்தினியாய் நீயும் விட்டு விட்டாயாக்கும்!" லில்லி கோபமும் கேலியுமாகச் சாடினாள்.

துன்பச் சுமையில் சசியின் கண்கள் விரிந்து லில்லியை நோக்க, "வேறு என்ன செய்ய முடியும் லில்லி? உனக்கு இருவரையும் தெரியும். பழி வாங்கும் வெறியில் சியாம் மேலும் அவளிடம் நெருக்கம் காட்டினார்..." என்றாள் சன்னமான குரலில். சற்று நேரம் இருவரும் பேசவில்லை. பிறகு சசி நிமிர்ந்தாள். "என்னை விடு லில்லி! நீ எப்படி இருக்கிறாய்? அதைச் சொல்," என்றாள்.

சட்டெனக் கைகளில் முகம் புதைத்து லில்லி விசும்பி அழுதாள்.

திடுக்கிட்டுப் போய், "என்னடி, என்ன?" என்று விசாரித்தாள் சசி.

"ரொம்பக் கஷ்டமாகத்தான்டி இருக்கிறது. பகல் எல்லாம் வேலை வேலை வேலைதான். உடம்பெல்லாம் அயர்ந்து போகிறது. இரவானால் இவரது கொஞ்சலே தாங்க முடியாமல் வெறுத்துப் போய் விடுகிறது. என் கைகளைப் பார்த்தாயா?" என்று கைகளை விரித்து இருபுறமும் காட்டினாள். "அழகாகப் பார்த்துப் பார்த்து ஆசையா வளர்த்த நகம் எல்லாம் உடைந்து போயிற்று. உள்ளங்கை, விரல் எல்லாம் கரடு முரடாய் ஆகிவிட்டன. வாய் விட்டு யாரிடமும் சொல்லக்கூட முடியவில்லை. குணாவிடம் ஒரு

தடவை பேச்சு வாக்கில் சொன்னேனா, உடனே முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு, 'நீதானே இதைத் தேர்ந்து எடுத்தாய்? நானா கட்டாயப்படுத்தினேன்?' என்கிறார்,'' என்று கண்ணீர் விட்டாள் லில்லி.

பேசாமல் தோழியின் முதுகைத் தடவி விட்டாள் சசி.

லில்லியே மீண்டும் தொடர்ந்தாள். ''வீட்டிலே என்னடா என்றால் ஒரு சின்னத் தப்புச் செய்து விட்டாலும் போதும், மாமியார் கேலிப் பார்வையிலேயே சாகடித்து விடுவார். சித்தப்பா வேறு இவரை டிஸ்மிஸ் செய்து இப்போது வேறே வேலை பார்க்கிறாரா, வேலையும் அதிகம். திரும்ப வேலை கிடைக்குமுன் பட்ட கஷ்டம் வேறு. நீ கொடுத்த பணத்தில் தான் சாப்பிட்டோம். என் செலவு வேறு. எல்லாமாக அடிக்கடி முகத்தை எப்படியோ சுழித்துக் கொள்கிறார். சில சமயம் 'இந்த வாழ்க்கைக்கா இப்படி ஏங்கினோம்!' என்று கூடத் தோன்றி விடுகிறது,'' என்று மேலும் அழுதாள்.

லில்லியின் கைகளைப் பற்றித் தோளில் தட்டிக் கொடுத்தாள் சசி.

''உன் சித்தப்பா சொத்தை என்ன செய்யப் போகிறாராம்?''

''தர்மத்துக்கு என்று கொடுத்து விட்டாலும் தேவலை சசி! இப்போது என்ன ஆயிற்று தெரியுமா? நான் திருந்தி விடுவேனாம். குணாவை டைவர்ஸ் செய்து விட்டு அவர் விருப்பப்படி யாரையாவது மணந்து கொண்டால் சொத்தைத் தருவாராம். நன்றாக வாழலாமாம். சொல்லி அனுப்பி யிருக்கிறார், அவருடைய பி.ஏ.விடம்,'' என்றாள் லில்லி வெறுப்புடன்.

''சீ!'' என்றாள் சசி.

''சீதான்!'' என்றாள் லில்லியும் கூடவே. ''ஆனால் சித்தப்பா சொல்லி அனுப்பியதற்கு நான் என்னடி செய்ய முடியும்? அன்று முழுவதும் அம்மாவும் பிள்ளையும் என்னிடம் முகம் கொடுத்துப் பேசவே இல்லை. நானா

இப்படி யோசனை சொல்கிறேன் என்று கூடவா யோசித்துப் பார்க்கக் கூடாது,'' என்று ஆத்திரப்பட்டாள் லில்லி. ஆனால் அதற்கு முன் கண்ணீர் துருத்திக் கொண்டு வந்தது.

''எல்லாம் சரியாகிப் போகும். அழாதே!'' என்று சசி அவளைத் தேற்றும்படி ஆயிற்று.

கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''சசி! நான் கிளம்பட்டுமா? குணா லீவு போட்டு விட்டு என்னை அழைத்து வந்தார். பஸ்ஸில் வந்து அந்த மெயின் ரோடு கார்னரில் இறங்கி நடந்து வந்தோம். இனிப் போகுமுன் நேரமாகி விடும். மாலையாவது வேலைக்குப் போனால் அரை நாள் சம்பளத்துடன் போகும். வரட்டுமா, சசி! நான் அழுததால் முகம் எப்படி இருக்கிறதோ? அழுதேன் என்று தெரிந்தால் குணா கோபப்படுவாரே!'' என்று கவலையுடன் கேட்டாள் லில்லி.

''மாடியில் என் பாத்ரூமில் முகம் கழுவிப் பவுடர் எல்லாம் போட்டுக் கொண்டு வாடி,'' என்று லில்லியிடம் கூறி அனுப்பி விட்டு எழுந்து வெளியே சென்றாள் சசி.

தோழிகள் மனம் விட்டுப் பேச இடம் தந்து வெளியே தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான் குணாளன்.

கவலையற்றுச் சிரித்த அந்த இளைஞனின் முகம் முதிர்ந்திருப்பதை உள்ளூர வேதனையுடன் கவனித்தாள் சசி. ''என் கணவர் சற்றே இரங்கியிருந்தால்...'' என்று அவளால் எண்ணாதிருக்க முடியவில்லை.

மனதை அடக்கிக் கொண்டு, ''குணா அண்ணா!'' என்று மெல்ல அழைத்தாள்.

திடுக்கிட்டுத் திரும்பினான் குணாளன்.

பிரியமான குரலில் அன்பாகப் பேசிப் பழகியபோதும், சசி எளிதில் அண்ணா கிண்ணா என்றெல்லாம் உறவாடிப் பழகியவள் இல்லை. ஆனால் அதே உறவை மனதால் உணர்ந் தவள். இன்று அவளே உறவு முறையிட்டு அழைக்கவும் ஏதோ ஒருவிதமாய் மனம் நெகிழ்ந்து, ''என்னம்மா?'' என்றான்.

''குணா அண்ணா! லில்லி கஷ்டம் தெரியாமல் வளர்ந்த பெண். தண்டித்தோ தட்டிக் கொடுத்தோ கற்றுத் தரக்கூடிய தாயற்றவள். சின்னப் பெண். அவள் ஏதாவது தப்புச் செய்தாலும் நீங்கள்தான் அணைத்துச் செல்ல வேண்டும். அதை விடுத்து, 'நான்தான் அப்போதே சொன்னேனே...!' என்றால், அதைவிட வேதனை வேறே இல்லை... அண்ணா! அவள் உங்களைக் குறை சொன்னாள் என்றெண்ண வேண்டாம். ஆனால் அந்த மாதிரி நேரங்களில் நீங்கள் சற்றுக் கனிவாகப் பேசினால்கூடப் போதும் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''அதில்லை சசி! இம்மெனுமுன் அழுது விடுகிறாள். சும்மா சும்மா அழுதால் நான் என்னவென்று கொள்வது? 'இவனைக் கல்யாணம் செய்து கொண்டதால்தான் இவ்வளவு கஷ்டம்!' என்று அவள் நினைக்கிறாள். அதனால் தான் அழுகிறாள் என்று தோன்றி விடுகிறது. ஆத்திரத்தில் நினையாததை எல்லாம் பேசி விடுகிறேன்!'' என்றான் குணாளன்.

லில்லி சொல்லாமல் விட்டதும் இருக்கிறது என்று சசி உணர்ந்தாள். கணவனையும் காட்டிக் கொடுக்கவில்லை. தன் கண்ணீரையும் சொல்லாமல் சமாளித்துப் பேசியிருக்கிறாள்.

''அதே போல நீங்கள் ஆத்திரப்படும் போதெல்லாம் தன்னைக் கல்யாணம் செய்ததால் வந்த தொல்லை என்று சினம் கொள்வதாக அவளும் எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?'' என்று இதமாக எடுத்துச் சொன்னாள் சசி.

''ஓகோ!'' என்றான் குணாளன் யோசனையோடு. ''அதுதான் மீண்டும் பொங்கிப் பொங்கி அழுகிறாளாமா? சே, பாவம்!'' என்று இரங்கினான்.

''அதேதான் அண்ணா! குணா அண்ணா! லில்லியாவது சந்தோஷமாக இருந்தால் என் மனம் கொஞ்சமேனும் நிம்மதி அடையும்,'' என்றாள் சசி மெல்ல.

''இனிக் கட்டாயமாகக் கவனித்துப் பேசுகிறேன் சசி,'' என்று கூறினான் குணாளன். சசியின் முகத்தை ஒரு முறை

கூர்ந்து பார்த்துவிட்டு, "சரி, நீ... உன் வாழ்க்கையில்..." என்று முடிக்காமல் நிறுத்தினான்.

பொறுமையாக நகைத்தாள் சசி.

"நம்பிக்கையோடு இரு சசி."

"நம்பிக்கையா? என் நெஞ்சு நிறைய இருப்பதெல்லாம் நிராசையும் அவநம்பிக்கையும்தான்... ஆனால்... வேறு பேசலாமே... உள்ளே வாருங்கள்," என்று அழைத்துச் சென்றாள்.

ஒப்பனைகள் முடிந்து லில்லியும் வந்துவிடவே, மூவரும் ஓர் ஐந்து நிமிடங்கள் பொதுப்படையாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

லில்லியும் குணாளனும் விடைபெற்றுக் கிளம்பும்போது டெலிபோன் மணி அடித்தது.

சசி ரிசீவரை எடுக்கையில், "நின்றால் நேரமாகிவிடும். நாங்கள் கிளம்புகிறோம்," என்று குரல் கொடுத்துவிட்டு லில்லி படியிறங்கினாள்.

அவளுக்குக் கையை ஆட்டிக் காட்டியபடி, "ஹலோ..." என்றாள் சசி.

சியாம்தான். "இரவு வர நேரமாகும். சாப்பாடு வேண்டாம்," என்றான். "யாரேனும் வந்தார்களா?" மேலே வினவினான்.

"லில்லி!" என்றாள் சசி சுருக்கமாக.

"ஓகோ!" என்று அவனும் சுருக்கமாகவே கூறி முடித்துப் போனை வைத்து விட்டான்.

தனக்குச் சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிப் படுக்கப் போனாள் சசி.

சற்றுப் பொறுத்து ஒரு தம்ளரில் பாலுடனும் தட்டில் சப்பாத்தி, பருப்புடனும் மீனம்மாள் வந்தாள். "இதை யாவது சாப்பிடம்மா," என்றாள் சசியிடம்.

"பசியில்லை மீனம்மா," என்றாள் சசி.

"சொன்னால் கேளும்மா. பச்சை உடம்பு. இப்படிப் பட்டினி கிடந்தாத் தேவலையாம்மா? அந்தப் பி... ...த்

தான் தெரியலை. தெரிந்தவள் நானும் விட்டு விட முடியுமா? அதை இதைச் சாப்பிட்டு உடம்பைத் தேற்றிக் கொண் டாத்தானே அடுத்ததாவது தங்கும். இந்தாம்மா...'' என்று விடாது வற்புறுத்தினாள் சமையற்காரம்மாள்.

அடுத்தது அடுத்தது என்று சொல்லிச் சொல்லித் தன்னை வதைக்காமல் இருக்கக் கூடாதா என்றிருந்தது சசிக்கு.

அன்று டாக்டர் சொன்னது அந்த அடுத்தது.

கற்பனையில்கூட அவளால் எண்ணிப் பார்க்க இயலாத அடுத்தது.

துக்கம் தொண்டையை அடைக்க, ''வேண்டாம்,'' என்று முணுமுணுத்தாள் சசி.

''இதப் பாரம்மா, நான் ஒவ்வொரு விள்ளலாக வாயில் தருவேனாம். மெல்லச் சாப்பிடுடா ராஜா!'' என்று அருகில் அமர்ந்து ஒரு துண்டுச் சப்பாத்தியும், பருப்பும் காயும் சேர்த்து ஊட்டினாள் மீனம்மாள்.

அவளுடைய திருப்திக்காக வாயைத் திறந்து வாங்கினாள் சசி. ஆனால் துக்கம் இறுக்கிய தொண்டைக்குள் எப்படி இறங்கும்? உவட்டிக் கொண்டு வந்து விட்டது.

'அன்பில்லாச் சோறு என்பிலே குத்தியது' என்பார்கள். அன்பற்ற புருஷனை அடைந்தவர்களுக்கு அமுதமும் விஷமாகி விடுமோ?

''என்னடிம்மா கண்ணு...'' என்று பதறியபடி நெஞ்சை முதுகை நீவிவிட்டாள் மீனம்மா. ''வடபழனி ஆண்டவனே, இந்தப் பெண் நல்லபடியாகத் தேறித் தங்கச் சிலைபோல அடுத்து ஒண்ணைப் பெக்கட்டும். உன் சன்னதிக்கு அழைத்து வந்து ரோஜா ஹாரம் சாத்துகிறேன்டா அப்பா!'' என்று புலம்பிய வண்ணம் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சென்றாள்.

தங்கச் சிலைதான். ஆனால் பொத்திப் பொத்திப் பாதுகாத்தும் மொட்டமாகவே கருகிப் போயிற்றே! கண்ணீர் கூட வராமல் தலையணையில் சாய்ந்தாள்.

பல நாள்களுக்குப் பிறகு அன்று காலையில் தோட்டத் திற்குள் சென்றாள் சசி. அப்போதும் கோழிக் குஞ்சுகள் இருந்த பக்கம் திரும்பவில்லை. எதிர்த் திசையாகச் சென்றாள்.

ஓர் ஓரமாகச் சில ரோஜாப் பதியன்களை எடுத்து வைத்திருந்தாள் சசி.

அத்தனையும் காய்ந்திருந்தன.

இலை யெல்லாம் உதிர்ந்து மொட்டைக் குச்சியாய் நின்றன. 'என்னைப் போல!' என்றெண்ணினாள்.

தோட்டக்காரன் ஓடோடியும் வந்தான். "எப்படியோ தண்ணி ஊத்த மறந்து போச்சம்மா. அன்னிலேர்ந்து... பிடுங்கிட்டு வேறே வைக்கட்டுமாம்மா?" என்று கேட்டான்.

"வேண்டாம்," என்று தலையசைத்தாள்.

"அம்மா..." என்றான் கழிவிரக்கத்துடன்.

உதட்டளவில் லேசாகப் புன்னகை செய்துவிட்டு, "போகிறது வேலு. கொஞ்ச நாள் ஆகட்டும். பிறகு வேறே என்ன வைக்க லாம் என்று பார்க்கலாம்," என்றாள் எங்கோ நினைவாக.

குச்சிகளைப் பார்த்துவிட்டு, "காம்பிலே பச்சை இருக்கம்மா. தண்ணி விட்டாக்கத் துளூர் வரும்," என்றான் தோட்டக்காரன்.

நம்பிக்கையற்று மீண்டும் வெற்றுச் சிரிப்புச் சிரித்தாள் சசி.

வேல்சாமிக்கு என்ன தோன்றியதோ, "அம்மா, ரொம்ப வித்தியாசமா இருக்கீங்களேம்மா. ஏதோ ஒரு சமயம் கடவுளுக்கும் இப்படிக் கண்ணு சரியாத் தெரியாமப் போறதுதான். அதுக்காகவல்லாம் மனசு ஒடிஞ்சிரப் படாதும்மா. வேலைக்காரன் சொல்றேன்னு நெனைக்காதீங் கம்மா. மனசைத் தேத்திக்கிடுங்கம்மா!" என்று தன் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

அவனது வருத்தத்தையும் லில்லியுடையதைப் பார்த்தது போலவே எட்டி நின்று கண்டாள் சசி. இரக்கத்துடன், "வருத்தப்படாதே வேல்சாமி!" என்றாள்.

பின்புறமாகக் காலடி ஓசை கேட்டது.

அந்த நேரம், இந்த ஒரு மாத காலமாக அவள் எதிர்பார்த்திருந்த அந்த நேரம் வந்து விட்டதைப் புரிந்து கொண்டாள்.

அதைத் தடுக்கும் சக்தியற்ற தன் இயலாமையை உணர்ந்து வேறு வழியின்றி அதை ஏற்கும் துன்ப அமைதியுடன் மெல்லக் கணவனை நோக்கித் திரும்பினாள்.

## 21

அவளது ஊகம் சரி என்று நிரூபிப்பது போல சியாம் ஒரு கண்ணசைவால் தோட்டக்காரனை அனுப்பக் கண்டாள்.

நம்பிக்கை அறவே இழந்த அந்த நிலையிலும், 'சொல்லா தீர்களேன்!' என்பதுபோல விழிகளால் கெஞ்சினாள்.

அந்தப் பார்வை அவனையும் ஏதோ செய்ததோ? எதையோ சொல்ல வாயெடுத்தவன் சற்றுத் தயங்கினான். பிறகு தோளைக் குலுக்கிவிட்டு, ''லில்லி ஏன் வந்தாள்?'' என்று வேறு பேசினான்.

''வருத்தம் தெரிவிக்க வந்தாள்,'' என்று பதிலிறுத்தாள் சசி.

''அவளை அழைக்காதே என்றேன் இல்லையா?'' என்று சினம் காட்டினான் அவன்.

''நானாக அழைக்கவில்லை சியாம்! அவளாகவே...''

''நீ சொல்லாமல் அவளுக்கு எப்படி விஷயம் தெரியும்?'' என்றான் அவன் சினத்துடன்.

''விசாரித்திருக்கக் கூடாதா? என்றாலும் நான் எப்படிச் சொல்ல முடியும்? லில்லி தன் பிறந்த வீட்டில் இல்லை. குணாளனிடம் ஃபோன் கிடையாது. யோசியுங்கள் சியாம்,'' என்றாள் சசி நிதானமாகவே.

''ஏன், குணாளனுடைய அக்கம் பக்கத்தார் வீடுகளில் கூட டெலிபோன் கிடையாதாமா? ஃபோனில் அழைத்தால் கூப்பிட மாட்டார்களாமா?'' என்றான் அவன் கிண்டலாக.

அவனை நேர்பார்வை ஒன்று பார்த்து, ''நான் சொல்ல வில்லை சியாம்,'' என்று முடித்துவிட்டாள் சசி.

அவன் அவலை நினைத்து உரலை இடிப்பது புரிந்தது. இதில் மேலே வளர்க்க என்ன இருக்கிறது அல்லது வளர்ப்பதால் வரப்போவது நின்றுவிடப் போகிறதா?

''ம்...'' என்று சியாம் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். பேச்சின்றியே புகைத்து முடித்தான்.

மீண்டும் ஒரு சிகரெட்டை எடுத்து முன்னதிலேயே பற்ற வைத்தான்.

'சிகரெட் அதிகம் பிடிக்கிறீர்களே!' என்று சொல்ல வாய்த்துச் சொல்லாமல் அடக்கிக் கொண்டாள் சசி. மற்றொரு தடவை இதே போலச் சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்ட அனுபவம் மறந்து விடவில்லை.

இரண்டாவது சிகரெட் பாதி ஆனதும், ''உன்னிடம் நான் வேறே ஒன்று பேச வந்தேன்,'' என்றான் அவன்.

''வேண்டாம் சியாம்,'' என்றாள் சசி கெஞ்சுதலாக. ஆனால் இந்தக் கெஞ்சல் பயனற்றது என்பதை உணர்ந்திருந்த படியால் விழிகளில் நிராசை நிறைந்தது.

ஒரு கூர்மையுடன் மனைவியை நோக்கினான் அவன். ''எதைப் பற்றிப் பேச வருகிறேனென்று தெரிகிறதா?'' என்று கேட்டான்.

பேச்சின்றிச் சசி தலையாட்டினாள்.

''குழந்தை என்ற சாக்கை வைத்து முன்பு மறுத்தாய். அதில் எனக்கும் பொறுப்பு இருந்ததால் நான் மேலே வற்புறுத்தவில்லை. ஆனால் இப்போது அந்த மந்திரம் அறுந்து விட்டதே! என்ன சொல்கிறாய்?''

குழந்தை இழப்பு இரு மடங்காக நெஞ்சில் தைத்தது சசிக்கு! இப்படி ஒரு மனதை வருத்துவதுகூடப் பாவம்தானே...

''சசி!'' என்றான் அதட்டலாக. ''வாய் பேசாது நின்றால் தப்பிவிட முடியாது. இப்போது விவாகரத்துக்குச் சம்மதிக் கிறாயா... இல்லையா?''

''வேண்டாம் சியாம், ப்ளீஸ் வேண்டாம்.''

''சம்மதிக்கிறாயா... இல்லையா?'' அவன் குரலில் அழுத்தம் ஏறிற்று.

வேறு பேசித் தடுக்கத் தெரியாமல், ''இல்லை,'' என்றாள் சசி சுருக்கமாக.

அவன் முகத்தில் ஒரு கணம் கடும் சீற்றம் தெரிந்தது.

உடனேயே ஏளனமாக உதட்டைப் பிதுக்கினான். ''எதிர்பார்த்தேன். இந்த சுகம் எல்லாம் பழகிப் போய் விட்டது. விட மனம் இல்லை. அப்படித்தானே? ஆனால் உனக்கும் கணிசமாகவே பணம் கிடைக்குமே. பெரு நட்டம் இராது, தெரியுமா?'' என்றான் ஓர் உதாசீனத்துடன்.

இயல்பாக நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள் சசி. ''நீங்கள் நம்பப் போவது இல்லை என்றாலும் பணத்துக்காக நான் பார்க்கவில்லை சியாம்! சிந்தாவிடமிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காகவே விவாகரத்துக்கு நான் மறுக்கிறேன்,'' என்றாள் தெளிவான குரலில்.

அவன் இகழ்ச்சியாகச் சிரித்தான். ''நீ சொன்னதில் ஒன்று மட்டும் சரிதான். நான் உன்னை நம்பப் போவதில்லை என்ற மட்டும். ஆனால் இன்னொன்றையும் கேட்டுக் கொள். இப்போதே கூட நான் சிந்தாமணியுடன் வசிக்க முடியும். தெரியுமா? ஏன் இங்கேயே கூட அவளை அழைத்து வந்து இந்த வீட்டின் எஜமானியாக ஆக்க முடியும்,'' என்றான் இறுமாப்பாக.

சசியின் பார்வை தளரவில்லை. விழிகளில் வேதனை நிரம்பியபோதும், நிதானமாகவே, ''நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது,'' என்றாள்.

''ஓகோ! இந்த தைரியத்தில்தான் விவாகரத்துக்கு மறுப்பு வருகிறதா? உன்னை விட்டால் நாதியில்லை என்று, என்றேனும் திரும்பி வந்து விடுவேன் என்ற தைரியமா?''

இப்படி எல்லாம் பேச வேண்டுமா என்பது போல் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் சசி. பார்க்கப்

பார்க்க. .அந்த நேரான நாசியும் செதுக்கிய உதடுகளும் அவள் கையில் பிடிபடாமல் நழுவிப்போய்விட்ட ஒரு சின்னஞ்சிறு உருவத்தை நினைவு படுத்தின.

வாழ்ந்திருந்தால் அவனும் அப்பாவைப் போல இவ்வளவு உயரமாக நின்றிருப்பானோ?

ஆனால் அன்பான பார்வையோடு.

''அல்லது பணத்துக்காகத்தான் பார்க்கிறாயா'''

திடுக்கிட்டுக் கற்பனை கலைந்தவளாய், '' '' என்றாள் சசி.

''இன்னமுமா நடிப்பு? இதோ பார் சசி! கடைசி வார்த்தை இது. நீ எனக்கு விடுதலை கொடுக்கப் போகிறாயா இல்லையா?''

''இல்லை,'' என்று தலையசைத்தாள் சசி.

சினமும் அதைக் கட்டுப்படுத்த முயற்சியுமாக, அவனது உதட்டைச் சுற்றிலும் வெளுப்பதைச் சசி உள்ளூரப் பயத்துடன் கண்டாள்.

''என் மேல் உனக்குப் பிரியம் இருப்பதாகச் சொல்கிறாயே சசி! அந்த அன்பு உண்மையாகவே இருந்தால் ஒப்புக் கொள்!'' என்றான் உணர்ச்சியைத் துடைத்த குரலில் அவன்.

உள்ளூர நடுங்கினாலும் பிடிவாதத்துடன், ''அந்த அன்பு உண்மையானது என்பதால்தான் மறுக்கிறேன் சியாம்,'' என்று அமைதியான குரலிலேயே சொன்னாள் சசி.

கண்களில் ஒரு விதமான பளபளப்புடன், ''இந்தப் பிடிவாதத்துக்கு நீ ரொம்பவும் வருத்தப்படப் போகிறாய் சசி,'' என்று எச்சரித்துவிட்டு வீட்டுக்குள் சென்று விட்டான் சியாம்.

சசிக்குச் சிரிப்புக்கூட வரும்போல இருந்தது. இதைவிட அதிகம் எப்படி வருத்தப்பட முடியும் என்று நினைத்தாள்.

ஆனால் அது எப்படி முடியும் என்பதையும் அவள் தெரிந்து கொள்ள நேர்ந்தது. அவன் தெரிந்துகொள்ள வைத்தான்.

இரவு உணவு அருந்தும் நேரத்துக்குச் சியாம் கீழே வராததால் சசி அவனை அழைத்து வரச் சென்றாள்.

கையில் இருந்த ஃபைலை விட்டு நிமிராமலே, ''எனக்கும் சேர்த்து நீயே சாப்பிடு,'' என்றான் அவன்.

குத்தல் வார்த்தைகள் எல்லாம் பழகி விட்டவைதான் என்றாலும், இன்று புதிதாக ஒரு குளிர் உள்ளூரப் பிறக்க, ''ஏன் சியாம்?'' என்று பயந்து கொண்டே கேட்டாள் சசி. நிமிர்ந்து அவளை ஏளனமாகப் பார்த்தான் அவன்.

''விவாகரத்துக்கு நீ சம்மதிக்கும் வரையில் உபவாசம் இருக்கலாம் என்று ஓர் ஐடியா.''

விக்கித்துப் போனாள் சசி. ''வேண்டாம்!'' என்றாள் தீனமாக.

''ஆமாம். அதுவரை எனக்கும் சேர்த்து நீயே சாப்பிடு,'' என்று மீண்டும் ஃபைலில் ஆழ்ந்து விட்டான்.

அவனுக்குப் பசிக்குமே... சற்று நேரம் சிலைபோல நின்றாள் சசி. ஆனால் பிளாக் மெயிலா?

''என்னாலும் பட்டினி கிடக்க முடியும் சியாம்,'' என்றாள் மெதுவாக.

அவன் தோளைக் குலுக்கினான். கண்ணைத் தூக்கி அவளைப் பாராமலே, ''சந்தோஷம்! சமையல் குறைவாகச் செய்யச் சொல்,'' என்றான் இரக்கமற்று.

இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் சசி திரும்பிச் சென்றாள்.

கீழே போய், ''அவருக்குப் பசியில்லையாம் மீனம்மா! எனக்கும் வயிறு சரியில்லை. நீங்கள் சாப்பிடுங்கள்,'' என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போனாள். தலையைக் கையால் தாங்கிக் கொண்டு படுக்கையில் அமர்ந்தாள்.

சியாம் பிடிவாதக்காரன். முழுப் பட்டினி கிடப்பானோ? ஆனால் என்ன செய்வது? அவன் கேட்பதைச் செய்தால் சிந்தா அவனது வாழ்வை அழித்து விடுவாளே.

அவன் சிந்தாவை மணக்க மாட்டான் என்று மட்டும் உறுதி கிடைக்குமானால் அவன் விருப்பம் போலவே அது

அவளது இதயத்தை இரு கூறாக்குவது போல வலித்தாலும் கூடச் செய்து விடலாம். ஆனால் அவளை மணப்பதற்காக என்று சொல்கிறானே...

மறுநாள் காலையில், ''தயவு செய்து சாப்பிடுங்கள்,'' என்று கெஞ்சினாள் சசி.

பிச்சைக்காரி போலக் காலைப் பிடித்து மன்றாடினாள்.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கி விட்டுப் போய் விட்டான்.

சசி சற்று நேரம் இடி விழுந்தாற் போல நின்றாள். அவன் இப்படியே பட்டினி கிடந்தால் என்ன ஆகும்? ஆனால் அதற்காக அவனைச் சிந்தாமணியிடம் அவளே ஒப்புவிப்பதா? அதுவும் இதுவும் ஒன்றுதானே.

என் குழந்தை உயிரோடு இருந்திருந்தால், இதெல்லாம் நேர்ந்தே இராதே. சசியின் நெஞ்சில் தீப்பிடித்தாற்போல எரியத் தொடங்கியது.

ஒரு கப்பில் ஹார்லிக்சுடன் வந்தாள் மீனம்மா.

''சாப்பிடாட்டியும் இதையாவது குடிம்மா,'' என்றாள்.

''மீனம்மா...'' என்று கதறினாள் சசி.

கப்பை மேசை மேல் வைத்துவிட்டு, சசியின் அருகே வந்து அமர்ந்து ஆதரவாய் முதுகைத் தடவி விட்டாள் அந்தம்மாள்.

''பச்சை உடம்புக்காரி அழுவலாமா! ஆண் பிள்ளை கள்னா இப்படித்தான். எந்த நேரம் கோபப்படலாம், எப்பக் கூடாதுன்னே தெரியாது. அதுக்காக இந்த உடம்போட பட்டினி கிடக்கலாமா! மெல்ல இதையாச்சும் குடிச் சிடும்மா,'' என்றாள் இதமாக.

''வேண்டாம் மீனம்மா,'' என்று தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''இதப் பாரம்மா. நீ என் பொண்ணு மாதிரி. இந்த வயசிலே என்னைப் பட்டினி போடுவாயாம்மா? என்னம்மா அப்படிப் பார்க்கிறே! நீ மட்டும் பட்டினியாய் இருக்க எனக்கு மட்டும் ஒரு வாய் தின்ன மனசு வருமா?'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மீனம்மா.

அடுத்த பிளாக்மெயிலா என்று அலுப்புடன் நினைத்தாள் சசி. ஆயினும் அந்த அம்மாளின் பாசம் நெஞ்சைத் தொட்டது. சற்று அமைதியை வரவழைத்துக் கொண்டு, ''இப்போ வேண்டாம் மீனம்மா! மதியம் குடிக்கிறேன். ஆனால் அதுவும் நீங்கள் இப்போது சாப்பிட்டால்தான்,'' என்று பேரம் பேசினாள்.

இந்தப் பேரத்தில் சமையல்காரி அயர்ந்து போனாள். பிறகு, ''மத்தியானமாவது கட்டாயம் குடிக்கணும்மா,'' என்று எழுந்து போனாள்.

உணவு வேளையில், சசி சியாமுக்கு டெலிபோன் செய்தாள்.

''சியாம் சுந்தர் ஹியர்.''

''சாப்பிட்டீர்களா சியாம்?'' என்று குரல் தழுதழுக்க வினவினாள் சசி.

''அது உன் கையில் இருக்கிறது,'' என்று டெலிபோனை வைத்தான் அவன்.

அவன் அங்கே பட்டினி கிடக்க, இவள் மட்டும் ஹார்லிக்ஸ் குடித்தாயிற்று. மீனம்மாவுக்காக என்றாலும் கூடச் சசிக்கு நெஞ்சில் கரித்தது.

இரவிலும் சியாமின் பிடிவாதம் தளரவில்லை.

சசியின் பாச மிகுந்த விழிகள் அவன் முகத்தில் களைப்பின் ரேகைகளைக் கண்டு கலங்கின.

சியாமிடம் அவள் மன்றாடியபோது, ''உனக்கு உன் பிடிவாதம்தானே பெரிதாக இருக்கிறது? அது எதுவரை செல்லும் என்பதையும்தான் பார்ப்போமே...'' என்று கதவைப் பூட்டிக் கொண்டான். பூட்டுமுன் சற்றே நின்று, ''விடுதலைக்காக முயற்சி செய்கிறேன். அது எந்த விதமாக இருந்தால் என்ன?'' என்று சொல்லிவிட்டுக் கதவை மூடினான்.

சசியின் இதயம் ஒரு நிமிடம் நின்று பின் துடித்தது.

அவன் சொன்னதற்குப் பொருள் என்ன? இந்தத் திருமணத்திலிருந்து சசி அவனுக்கு விடுதலை கொடுக்காவிட்டால் பட்டினி கிடந்து இந்த உலகத்திலிருந்தே

விடுதலை பெற்றுப் போய்விடவும் தயார் என்பதுதானே. அவ்வளவு தூரத்துக்கா சசியிடம் வெறுப்பு வந்துவிட்டது?

நெஞ்சு தவியாய்த் தவித்தது. தவிப்பை ஒதுக்கி இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமே.

சசி குறுக்கும் நெடுக்குமாகக் கால் ஓயுமட்டும் தன் அறையில் நடையாய் நடந்தாள்.

ஆனால் கால் ஓய அதிக நேரம் ஆகவும் இல்லை.

பட்டினியும் பச்சை உடம்பும் அவளை முழுக்க அயர்வுறச் செய்து உறங்க வைத்தன.

ஆனால் காலையில் எழுந்ததுமே திகுதிகுவென்று மனதில் வேதனைத் தீ எரியத் தொடங்கி விட்டது.

அன்று காலையும் சியாம் சாப்பிடாமலே சென்று விடவும் சசி ஒரேயடியாக மனம் முறிந்து போனாள்.

இந்தத் தாக்குதலின் முன்னே பணிவதைத் தவிர வேறு வழி எதுவுமே தெரியவில்லை அவளுக்கு.

ஆனால் அந்தப் பணிவு சிந்தாமணியின் கையில் அவனைத் தூக்கிக் கொடுப்பது போல் ஆகுமே என்று எண்ணுகையில் அதற்கும் அவள் மனம் துணியவில்லை.

படிக்கும் நாளிலேயே சிந்தா கண்ணைச் சுழற்றி உடம்பை நெளித்து பவுடர் செண்ட் வாங்க ஒரு பையனைப் பிடித்து, பின் விஷயம் வெளிப்பட்டபோது, அந்தப் பையனையே குற்றவாளியாக்கி நாடகமாடி அதன் விளைவாக அந்தப் பையன் தற்கொலை செய்து கொண்டு சாவதற்கும் காரணமானவள். அதே போலப் பல பேரிடம் தொடர்பு வைத்திருந்தாள்.

பக்கத்து வீட்டுக்காரியாக இருந்து அறிந்த அந்தக் கதைதான் இன்று சியாமின் விருப்பத்தை நிறைவேற்ற விடாமல் சசியை அச்சுறுத்தியது.

இதை எல்லாம் அவனிடம் சொன்னாலும் அதை அணுவளவும் நம்ப மாட்டான். நம்புவானோ இல்லையோ, தன் பிடிவாதத்தைத் தளர்த்துகிறவன் அவன் அல்லன்.

பொறிக்கு வெட்டியில் மாட்டினாற்போலச் சசி திணறினாள்.

சிந்தாவை மணக்க வழியின்றிச் சியாமுடைய உண்ணா
விரதமும் முடிவது என்றால் எப்படி முடியும்?

யோசித்து யோசித்துப் பைத்தியம் பிடித்து விடுவது போல அவள் கலங்கி நின்றபோது கடைசியாக ஒன்று தோன்றியது.

வீட்டை விட்டு வெளியேறி விட்டால் என்ன என்று நினைத்தாள் சசி.

சிந்தனை செய்து பார்க்கையில் அதுவே நல்லது என்று தோன்றியது.

வீட்டை விட்டு வெளியேறுவது வேறு; அவன் வாழ்வை விட்டு வெளியேறுவது வேறு.

வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அவனது பட்டினியைக் கண்டு சித்ரவதைப்பட ஆளில்லாதது கண்டு அவன் உணவு உட்கொள்ளத் தொடங்கி விடுவான்.

அவனது வாழ்வை விட்டு வெளியேறினால் அது சிந்தாமணியை மணக்க அனுமதி அளிப்பதாகிவிடும். ஆனால் வாழ்வை விட்டு மறைந்து மட்டும் போனால் சட்டப்படி பல ஆண்டுகள் அவன் மறுமணம் புரிய இயலாது.

அதற்குள் அவன் மெய்யான சிந்தாமணியைக் கண்டு கொள்ள மாட்டானா?

யோசிக்க யோசிக்க இதுதான் நல்ல வழி என்று சசிக்கு உறுதியாகவே ஆகிவிட்டது.

சிறு பெட்டி ஒன்றில் சாதாரணமான மூன்று சேலைகளை எடுத்து வைத்தாள்.

சியாமின் ஃபிரேமிட்ட ஃபோட்டோ ஒன்று.

பேஸ்ட், பிரஷ் என்று சில அத்தியாவசியமான பொருள்கள்.

வேலை தேடிக் கொள்ளும் வரையிலான அவசியச் செலவுகளுக்காக ஐந்நூறு ரூபாய்ப் பணம்.

எல்லாம் தயார் செய்து முடிக்கும்போது சுபேசனின் நினைவு வரவே மீண்டும் கலங்கிப் போய் நின்றுவிட்டாள்.

சசி எங்கோ சென்று விடலாம். வீட்டு வேலை செய்து கூட வயிறு வளர்த்துக் கொள்ளலாம்.

ஆனால் அவள் தந்தையின் கதி என்ன?

சசி மேல் கொண்ட கோபத்தைச் சபேசன் மேல் காட்டக் கூடியவன் அல்ல சியாம்.

ஆனால் சிந்தாமணி வெறிகொண்ட வேங்கை போன்றவள். தன் திட்டங்களைக் குலைத்து விட்டாள் என்று சசி மீது பழிவாங்கத் துடிப்பாள். அது அவளுடைய தந்தை மீதும் பாயக்கூடும். எந்த அளவுக்கு அவள் சியாமை மாசுபடுத்தக் கூடும் என்று வரையறுக்க முடியாது.

ஆனால் இன்றைய நிலையில் சசி அவரையும் அழைத்துக் கொண்டு எங்கே போவாள்? அவரை எப்படிக் காப்பாற்று வாள்? மேலாக மருத்துவச் செலவை எப்படிச் செய்வாள்?

பின்னே சியாமுக்கு விவாகரத்து கொடுத்துவிட்டு அவன் சிந்தாவினால் சீரழிவதைக் கண் முன்னால் கண்டு துடித்தபடி அவன் தரும் பணத்தில் தந்தையைப் பேணுவதா?

'அப்பா! அப்பா!' என்று அழுதபடி உட்கார்ந்து விட்டாள் சசி. அழவும் சக்தியிருந்தால்தானே.

டெலிபோன் மணி அடித்தது.

அயர்வுடன் மெல்லச் சென்று எடுத்தாள்.

''டிரங்க்கால் ஃப்ரம் குன்னூர்'' என்ற குரலில் அச்சமுற்றுச் சிலிர்த்தாள். ''கொடுங்கள்... கொடுங்கள்...'' என்று அவசரப்பட்டாள்.

''ஹலோ...'' என்றார்கள் யாரோ.

''மிஸஸ் சியாம் சுந்தர் பேசுகிறேன்.''

''அடடா! நீங்களா அம்மா! மிஸ்டர் சியாம் இல்லையா? நான் அவரிடம் பேச வேண்டும். அலுவலகத்திலும் இல்லை என்கிறார்கள்.''

''அவர் இங்கேயும் இல்... ஆனால் மிஸ்டர்...''

''டாக்டர் ஜான்தான் பேசுகிறேன் மிஸஸ் சியாம்.''

தலைமை டாக்டரே பேசுகிறார்.

''என்ன டாக்டர், என்ன? என்ன விஷயம்? அப்பாவுக்கு என்ன? சீக்கிரம் சொல்லுங்களேன்...'' எனப் பரபரத்தாள் சசி.

''நீங்கள் நலம்தானே மிஸஸ் சியாம்? நான் எதற்கும் உங்கள் கணவரிடமே பேசுகிறேன்,'' என்றார் டாக்டர் தயக்கத்துடன்.

''டாக்டர்!'' என்று அழைத்தாள் சசி, தன்னை மிகவும் கட்டுப்படுத்திக்கொண்டு. ''அவர் வரத் தாமதம் ஆகக்கூடும் டாக்டர்! எனக்கு உடம்பு மிகவும் நன்றாக இருக்கிறது. எந்த அதிர்ச்சியும் என்னை எதுவும் செய்யாது. தைரியமாகத் தயவு செய்து சொல்லுங்கள் டாக்டர்! அப்பாவுக்கு எப்படி இருக்கிறது? மிகவும் சீரியஸா?''

''உங்களுக்கு இன்னமும் புரியவில்லை, மிஸஸ் சியாம்! இன்று காலை உங்கள் தந்தை தூக்கம் கலைந்து எழவே இல்லை... ஐ யாம் வெரி ஸாரி... ஹலோ... ஹலோ...''

## 22

சில கணங்கள் சசி மிகுந்த அதிர்ச்சியுற்றவளாக ஸ்தம்பித்து நின்றாள்.

பிறகு சிரிப்பு வந்தது. 'அட அப்பா, நமக்காக இவள் பட்டது எல்லாம் போதும். இப்போதேனும் ஓர் உதவி செய்வோம் என்று எண்ணிப் போய் விட்டீர்களா?' என்று மிகுந்த வேதனையுடன் நினைத்தாள்.

'வீட்டை விட்டு வெளியேற நான் தடையாக இருக்கவில்லை. நீ செல் மகளே!' என்று அவர் சொல்லாமல் சொல்லிப் போய்விட்டதாகவே அவள் கருதினாள்.

ஆக அவள் செய்ய வேண்டிய காரியம் உறுதியாகிப் போயிற்று.

அதற்குள் டாக்டர் பலமுறை 'ஹலோ... ஹலோ...' என்று சொல்லிவிட்டார்.

மெல்ல மெல்ல மெல்ல அந்தக் குரலின் தீவிரமும் அவசரமும் உள்ளே உறைக்க, ''எஸ்... ஹலோ டாக்டர்...'' என்று பலவீனமான குரலில் கேட்டாள் சசி.

''உங்களுக்கு ஒன்றும் இல்லையே?'' என்றார் அவர் பெருமூச்சுடன்.

''எனக்கா? எனக்கு என்ன வந்தது? ஒன்றும் இல்லை. ஒ... ஒன்றுமே இல்லையே... வைக்கட்டுமா?'' என்றாள் அசதியுடன்.

''நீங்கள் வருகிறீர்களா?'' என்று அவர் வினவினார்.

''நானா? ஏன்... ஓ! அவரிடம் பேசிவிட்டுத் தெரிவிக்கிறேன் டாக்டர்!''

''ஓ.கே.'' என்று டெலிபோனை வைத்தார் டாக்டர்.

ரிசீவரை மெல்லக் கீழே வைத்தாள் சசியும்.

ஆகக் கடைசியாக அவளைக் கட்டி வைத்திருந்த ஒரு பந்தமும் அறுந்தது.

மீண்டும் டெலிபோனை எடுத்துச் சியாமின் அலுவலக நம்பரைச் சுழற்றினாள்.

அங்கே இரண்டு முறை மணியடிக்கவும் டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது.

மீண்டும் 'கான்ஃபரன்ஸ்' ரூமில் அவனது தனி நம்பருக்கு டெலிபோன் செய்தாள்.

எடுத்து, ''யெஸ், சியாம் சுந்தர் ஹியர்!'' என்றான் அவன்.

''நான் சசி...'' என்று தொடங்கினாள் அவள்.

''ஸாரி. ராங் நம்பர்!' என்று சியாம் டெலிபோனைக் கீழே வைத்தான்.

ஹாலில் இருந்த மற்றவர்களுக்காக இந்த 'ராங் நம்பர்' என்று புரிந்தது சசிக்கு.

உதட்டைக் கடித்துக் கொண்டு சற்று நேரம் பேசாது நின்றாள்.

ரிசீவரை மெல்ல - அது உடைந்து விடுமோ என்று அஞ்சுகிறவள் போல - மெதுவாக வைத்தாள்.

உடம்பு மூளை எல்லாம் மரத்து விட்டாற் போலச் சற்று நேரம் அசையாது நின்றாள்.

ஏதோ தோன்றவும் டெலிபோனை மீண்டும் எடுத்து குன்னூர் மருத்துவமனைக்கு ஓர் அவசரக் கால் போட்டாள். வெகு விரைவிலேயே கிடைத்தது.

டாக்டரிடம் பேசினாள். ''டாக்டர்! அப்பாவை...'' தீர்மானித்த விஷயத்தைச் சொல்வது கடினமாகவே இருந்தது.

''என்னம்மா?'' என்றார் அவர் கனிவாக.

''வந்து... அப்பாவை அங்கேயே அடக்கம் செய்துவிட முடியுமா? நான்... நான் வர முடியாத நிலையில் இருக்கிறேன்,'' என்றாள் அவள்.

''எனக்குத் தெரியும் மிஸஸ் சியாம்!''

சசியின் சூலை மாதா மாதா அவள் அங்கே செல்லுகையில் கண்டவர்தாமே. இது பிரசவ மாதம் என்று எண்ணினார் டக்டர்.

சசிக்கும் அவர் நினைப்பது புரிந்தது. குனிந்து ஒட்டியிருந்த வயிற்றை வெறுப்புடன் பார்த்தாள்.

பிறகு நிமிர்ந்து, ''எவ்வளவு பணம் தேவைப்படும் என்று சொல்லுங்கள். அனுப்பி வைக்கிறேன்,'' என்றாள்.

''வேண்டாம் அம்மா! மூன்று மாதம் டெபாசிட் இருக்கிறதே, செலவு போக நான்தான் தர வேண்டியிருக்கும்.''

''தர வேண்டாம் டாக்டர்! நர்சிங்ஹோமுக்கு நன்கொடையாக வைத்துக் கொள்ளுங்கள். வைக்கிறேன்...'' என்று டெலிபோனைக் கீழே வைத்தாள்.

செய்ய வேண்டிய காரியம் மனக்கண்ணில் படம்போலத் தெளிவாகத் தெரிந்தது.

சியாமுக்கு ஒரு கடிதம் எழுதினாள். ''என்னை மன்னியுங்கள். நீங்கள் கேட்பதை என்னால் முழுமையாகத் தர முடியவில்லை. சிந்தாமணியைப் பற்றித் தெரிந்திருப்பதால் அவள் உங்களை அழித்து விடுவாளோ என்று மிகவும் அச்சமாக இருக்கிறது... அதனால்தான்.

ஆனால் இப்போதைய பிரச்னைக்கு ஒரு வழி தெரிந்தது சியாம்! நான் உங்கள் வீட்டை விட்டு வெளியேறுகிறேன். தயவு செய்து மூன்று ஆண்டுகள் பொறுங்கள். அதன் பிறகும் நீங்கள் சிந்தாவையே மணக்க விரும்பினால் இந்தக் கடிதத்தையே என் விடுதலைக் கடிதமாக வைத்துக் கொள்ளுங்கள்.

வேலை ஏதும் கிடைக்கும் வரையில் என் செலவுக்கு ஐந்நூறு ரூபாய் எடுத்துப் போகிறேன். சாகமாட்டேன். தயவு செய்து நன்றாகச் சாப்பிடுங்கள். சசி'' என்று முடித்தாள்.

கடிதத்தை அழகாக மடித்தாள். சியாமின் அறையில் மேசை மேல் வைத்துப் பேப்பர் வெயிட்டையும் வைத்தாள்.

அறையைச் சுற்றிலும் ஒரு முறை நிதானமாகப் பார்த்தாள். வாழும் காலம் எல்லாம் துணையிருக்க வேண்டிய தோற்றம் அல்லவா? சுழல் நாற்காலியில் மேசையின் பின்னே அவன் இருப்பது போலக் கூட ஒரு கணம் ஒரு மாயத் தோற்றம் தோன்றியது.

தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டு வெளியேறினாள்.

மீண்டும் டெலிபோனை எடுத்து ஒரு டாக்சி வருமாறு ஏற்பாடு செய்தாள்.

டாக்சி வரும்வரை அயர்வுடன் அமர்ந்திருந்தாள்.

டாக்சி வந்ததும், மீனம்மாளிடம், ''அப்பாவுக்கு ரொம்ப சீரியசாக இருக்கிறதாம். டெலிபோன் வந்தது. அங்கே போகிறேன்,'' என்று சோர்வாக இயம்பிவிட்டு டாக்சியில் ஏறினாள்.

டாக்சியில் கிளம்பியதும் 'எக்மோர்' என்றாள்.

ரயில் நிலையத்தில் இறங்கிக் கொண்ட பின் சற்றே திகைத்தாள். இப்போது எங்கே போவது?

ரயில்கள் வந்து புறப்படும் நேரங்கள் கொண்ட அட்டவணையைப் பார்த்தாள்.

'செங்கல்பட்டு' என்ற பெயர் நெஞ்சில் நெருடியது.

செங்கல்பட்டு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு அடுத்து அங்கே செல்லும் ரயிலிலும் ஏறிக் கொண்டாள்.

இயந்திரம் போல எல்லாம் செய்கையிலேயே, 'இது என்ன முட்டாள்தனம்! செங்கல்பட்டில் யார் இருக்கிறார்கள்? ஏன் அங்கே போகிறோம்?' என்று சற்று நேரம் குழம்பினாள்.

சட்டென நினைவு வந்தது.

செங்கல்பட்டு என்ற பெயர் ஏன் மனதில் நெருடியது என்பதும் புரிந்தது.

சில தினங்களுக்கு முன்பாக ஆங்கிலத் தினப் பத்திரிகை ஒன்றில் ஞாயிறு மலரில் செங்கல்பட்டின் அருகே அமைந்திருந்த ஓர் ஆசிரமம் பற்றிய விவரங்கள் வெளிவந் திருந்தன. அந்த ஆசிரமத்தில் அனாதைக் குழந்தைகள் வளரும் முறை பற்றிச் சிறப்பாக எழுதப்பட்டிருந்தது. ஆசிரமத் தலைவியின் அடக்கம், கம்பீரம், செயல் திறமை பற்றிக் கூறப்பட்டிருந்தது அங்கே நிலவிய வேலை செய்வோர் பஞ்சம் பற்றி அந்த ஆசிரமத் தலைவி வெகுவாக வருந்திக் கூறியிருந்தார். உணவு ஆசிரமப் பொறுப்பு. மேலே ஓரளவான தொகையே கிடைக்கக் கூடிய இந்த வேலைகளை முன் வந்து செய்ய யாருக்கும் மனம் இல்லையே என்று ஏங்கிச் சொல்லியிருந்தார் அவர்.

அங்கே சென்று விட்டால்...

சசிக்கு வயிற்றுக்கு உணவு மட்டிலும் போதுமே.

ஆனால் தன்னை ஏற்பார்களோ மாட்டார்களோ என்று சற்றுக் கலக்கமாக இருந்தது சசிக்கு.

செங்கல்பட்டில் இறங்கிப் பஞ்சவடி என்ற அந்த ஆசிரமம் பற்றி விசாரித்தாள்.

''வேடந்தாங்கல் தாண்டி இருக்கிறது. பஸ்ஸில் போகலாம்,'' என்றார்கள்.

ஒரு வழியாகச் சசி அங்கே சென்று சேர்ந்தபோது மாலையாகி விட்டிருந்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கிய சசி சற்றே மிரண்டாள்.

சுற்றிலும் வேறே ஒன்றுமே இல்லை.

வேலிக்கதிரால் அடைக்கப்பட்ட பெரிய இடம்.

வாயிற்புறமாக நின்று வயதான மனிதனிடம் விசாரித்தாள்.

அங்கே அவன் காவல்காரன் என்பது தெரிந்ததும், தான் வந்ததன் விவரமும் கூறினாள்.

அவன் தோட்டத்தில் நின்ற ஒரு பெண்ணை அழைத்துச் சசியை உள்ளே தலைவியிடம் கூட்டிச் செல்லுமாறு கூறினான்.

''சரி தாத்தா,'' என்று பணிவுடன் அந்தப் பெண் சசியை அழைத்துச் சென்றாள்.

அங்கே ஓலைக் கூரை வேயப்பட்டிருந்த குடில்கள் பச்சைப் பசேல் என்ற செடி கொடிகளிடையே அமைந்திருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பர்ணசாலையோ என்று தோன்றியது. கண்ணை மறைக்கும் களைப்பு மட்டும் இல்லாதிருந்தால் இந்த அழகில் நன்கு ஈடுபடலாம் போல இருந்தது சசிக்கு.

''இந்தப் பக்கம் வாங்கம்மா,'' என்று இடப்புறமாகத் தனியாக அமைந்திருந்த ஒரு குடிலுக்குள் அழைத்துச் சென்றாள் அவள்.

வாயில் புறமாகக் கிடந்த பெஞ்சில் உட்காரச் சொல்லி விட்டு அவள் மட்டும் உள்ளே சென்றாள்.

உட்கார்ந்ததுமே எழவே முடியாதோ என்பது போல அயர்வு தெரிந்தது சசிக்கு. உள்ளே யாரிடமோ அவள் தன்னைப் பற்றிச் சொல்வது எங்கோ போலக் கேட்டது.

''உள்ளே வரச் சொல் சீதா,'' என்று அமைதியான ஒரு குரல் ஒலித்தது.

தள்ளாடியபடி கால்களைக் கட்டுப்படுத்தி அந்தச் சீதாவைத் தொடர்ந்து உள்ளே சென்றாள் சசி.

''யாரம்மா நீ?'' என்று வினவியது முன் கேட்ட அதே அமைதிக் குரல்.

''இங்கே... இங்கே வேலை கிடைக்குமா...?'' என்று கேட்கும்போதே சசியின் குரல் பலவீனமாய் உள் வாங்கிற்று. கண்கள் இருட்டிக் கொண்டு வர, நிற்க முடியாமல் மேசையைக் கையால் இறுகப் பற்றினாள்.

இரண்டு நாள் பட்டினியின் பிரதிபலிப்பு.

அந்த அம்மாள் சசியை உற்றுப் பார்த்தார். உட்காரச் சொன்னார்.

அருகில் இருந்தவரைப் பார்த்துத் தலையசைத்து விட்டு மேசை மேல் இருந்த மணியை அழுத்தினார்.

அந்தச் சீதாவே ஓடி வந்தாள்.

''கொஞ்சம் எலுமிச்சைச் சாறு சீக்கிரமாகக் கொண்டு வாம்மா, பனை வெல்லம் போட்டு,'' என்று அவளை அனுப்பினார் தலைவி.

சசி பேச முயன்றபோது கையை உயர்த்தி அவளை அடக்கினார்.

அருகில் இருந்த இன்னொருவனுடன் பேசத் தொடங்கி விட்டார். ''அப்படியானால் போலியோ இல்லை என்பது நிச்சயம்தானே டாக்டர்?'' அவள் வருகையால் அறுந்த பேச்சின் தொடர் என்று சசி புரிந்து கொண்டாள்.

''நிச்சயம்!'' என்றார் அந்த டாக்டர்.

''அடுத்தவர்களுக்குத் தொற்றக் கூடுமா? தனியாகவே தான் வைத்திருக்கிறேன். நானும் மங்களமும்தான் கவனித்துக் கொள்கிறோம்.''

''இந்த ஒரு வாரம் அப்படியே கவனித்துக் கொள்ளுங்கள். பிறகு பயம் இராது... இதைப் பார்த்து முடியுங்கள். நான் காத்திருக்கிறேன்,'' என்றார் டாக்டர்.

அதற்குள்ளாக எலுமிச்சைச் சாறுடன் சீதா வந்தாள்.

தலைவியின் கண்ணசைவில் சசியிடம் அதைக் ''குடியுங்கள் அக்கா,'' என்றாள் முறுவலுடன்.

சற்றே திகைப்புடன், ''எனக்கா! நான் இங்கே...'' என்று தொடங்கினாள் சசி.

''முதலில் அதைக் குடி. அப்புறம் பேசலாம்,'' என்றார் தலைவி, குரலில் ஓர் அழுத்தத்துடன்.

நெஞ்சில் ஒரு வலியுடன் சியாம் போல அழுத்தம் என்று நினைத்தபடியே எலுமிச்சை ரசத்தை வாங்கி அருந்தினாள் சசி.

உடம்பின் தடுமாற்றம் நெஞ்சின் பதற்றம் எல்லாம் சற்று விலகினாற்போலத் தோன்றியது சசிக்கு.

''கடைசியாக எப்போது சாப்பிட்டாய்?''

''நேற்று மதியம் ஹார்லிக்ஸ் குடித்தேன்,'' என்று தன்னை அறியாமல் உண்மைப் பதிலைக் கூறினாள் சசி.

தலைவியின் கூரிய பார்வை மீண்டும் சசியை அளந்தது. ''நீ ஏன் வேலை தேடி வர வேண்டும்?'' என்றாள் திடீரென்று.

''எனக்குச் சம்பாதிக்க...'' மேலே பேச்சிழந்து ஆசிரமத் தலைவியைத் திகைப்புடன் பார்த்தாள் சசி. ''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் அம்மா?''

''வேலை தேடி வருகிறவர்கள் விண்ணப்பம் எழுதி வரச் சொல்லி உத்தரவு வந்தபின்தான் வருவார்கள்.''

''..........''

''இதோ பாரம்மா, உன் தாலிக் கொடியின் கனத்தையும் காது வளையத்தின் அமைப்பையும் கை வளையலையும் பார்க்கும்போது பசையுள்ள இடத்துப் பெண்ணாகத் தெரிகிறாய்...''

சசி குனிந்து நகைகளைப் பார்த்தாள். கழற்றி வைத்து விட்டு வந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தாள். ஆனால் அப்போதிருந்த கலவரத்தில் நகைகளைப் பற்றிய எண்ணமே வரவில்லை. வந்தாலும் தாலிக் கொடியை எப்படிக் கழற்றி வைப்பாள்!

தலைவியின் குரல் தொடர்ந்தது. ''இங்கே வாழ்க்கை மிகவும் எளிமையானது. உடல் தேய உழைக்க வேண்டியிருக்கும். சம்பளமும் மிகவும் குறைவு... இன்னமும் வேலை வேண்டுமா?''

''ஆமாம்,'' என்றாள் சசி திடமாக.

''அந்த வாழ்வை விட்டு இதை நாடி வரக் காரணம்?''

கண் அகல நிமிர்ந்தாள் சசி. ''இந்த வாழ்வேனும் கிட்டினால் போதும் அம்மா!'' என்றாள் வேதனையோடு.

''குடும்பக் கசப்பு தீர்ந்ததும் இந்த நினைப்பும் மாறிவிடும்.''

''இது மாறாத பெரும் கசப்பு அம்மா! இங்கிருந்து நீங்களே சொன்னால் தவிரப் போக மாட்டேன்,'' என்றாள் சசி தீர்மானமாக.

''ம்....'' என்ற தலைவி சிந்திக்கு முன் பச்சிளம் குழந்தை ஒன்றின் அழுகுரல் கேட்டது.

உடம்பெல்லாம் சிலிர்க்க, குரல் வந்த திசை நோக்கி ஆவலும் துக்கமுமாகப் பார்த்தாள் சசி.

பிறந்து சில வாரங்களே ஆன குழந்தை ஒன்றுடன் ஒரு பெண் உள்ளே வந்தாள்.

''அம்மா! பால் பாட்டிலைச் செல்வன் உடைத்து விட்டது. குழந்தைக்குப் பசி நேரம். ஸ்பூனால் கொடுக்கப் பார்த்தால் முடிய வில்லை. அழத் தொடங்கி விட்டது,'' என்றாள் வந்தவள்.

தன்னையறியாமல் சசி எழுந்தாள்.

அவளுடைய உடல் நடுங்கியது. நெஞ்சம் விம்மியது. தாங்க முடியாத வலியுடன் மார்புச்சேலை நனையலாயிற்று. இரு கைக ளாலும் நீட்டி அந்தக் குழந்தையை வாரி எடுத்துக் கொண்டாள்.

நெஞ்சில் பாலும் கண்களில் நீரும் பொங்கி வழிய, ''அம்மா! என் குழந்தை இறந்து ஒரு மாதமிருக்கும், இப் போது... இப்போது இந்தக் குழந்தைக்கு ஒரு கெடுதலும் இராதே?'' என்று குரல் தழுதழுக்க வினவினாள் சசி.

தலைவி டாக்டரைப் பார்க்க, அவர், ''கோ அஹெட்...'' என்றார் சுருக்கமாக.

ஒரு விம்மலுடன் மறைவுக்காகச் சுற்றிலும் பார்த்தாள் சசி.

புரிந்து கொண்டு தடுப்பின் மறுபுறத்தைச் சுட்டிக் காட்டினார் தலைவி.

கால்கள் பின்ன, வேகமாய் அங்கே சென்றாள் சசி.

சற்றுப் பொறுத்துக் குரல் கொடுத்துவிட்டு ஆசிரமத் தலைவி அங்கே சென்றபோது, குழந்தையின் குஞ்சுக் கரங்களையும் கால்களையும் பட்டான தலை மயிரையும் தொட்டுத் தொட்டுத் தடவித் தடவிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் சசி. தலைவி பேசாமல் திரும்பி விட்டார்.

மீண்டும் சற்று நேரம் ஆனபின், ''அம்மா சசி!'' என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

குழந்தையுடன் வெளியே வந்தாள் சசி.

''குழந்தையை வாங்கிக் கொண்டு போ தாரிணி,'' என்றார் தலைவி.

அதிர்ச்சியுற்றவள் போலக் குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள் சசி.

உடனே தன் உரிமையற்ற நிலையை உணர்ந்து மனமில் லாமல் தயக்கத்துடன் குழந்தையைக் கொடுத்தாள்.

குழந்தையுடன் தாரிணி செல்வதை எட்டு மட்டும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''உட்கார்,'' என்ற குரலில் திரும்பி, ஒரு நாற்காலயில் அமர்ந்தாள்.

''உன் குழந்தை ஏன், எப்படி இறந்தது?''

''தெரியவில்லையே,'' என்றாள் சசி, வேதனையுடன்.

''வேண்டுமென்று ஏதும்...''

''ஐயோ அம்மா...'' என்று கதறிவிட்டாள் சசி.

''குழந்தை போனாலும் கணவன் இருக்கிறான். உனக்கும் சிறு வயதுதான். விரைவிலேயே மீண்டும் ஒன்று பிறக்கக் கூடும்...''

எல்லாரும் சொல்லி நெஞ்சை ரணமாக்கும் அதே வார்த்தைகள். தலைவியை வெறித்துப் பார்த்தாள் சசி.

உலகத்தின் எத்தனையோ துயரங்களைக் கண்டு பழகி விட்டிருந்த தலைவியின் மனமும் திடுக்கிட்டது.

முழுக்க எரிந்துவிட்ட வீட்டின் இழப்பைப் பறைசாற்றும் இடிந்த சுவர்களைப்போல வெறுமையைக் காட்டின விழிகள்!

யோசனையோடு, ''உனக்கு என்ன வேலை தெரியும்?'' என்று கேட்டார்.

''டைப்பிங், ஷார்ட் ஹாண்ட், புக் கீப்பிங்... வீட்டு வேலைகள் ஆனாலும் - பெருக்குவது, துடைப்பது, துலக்குவது... எதுவும் செய்கிறேன் அம்மா!''

''முன்னதற்குத்தான் அவசியமாக ஆள் வேண்டும். என்ன சம்பளம் எதிர்பார்க்கிறாய்?''

யோசனையுடன் தலையை நிமிர்ந்து பார்த்தாள் சசி.

சட்டெனக் கண்களில் ஒளி பிறக்க, ''சம்பளம் என்று ஒன்றுமே வேண்டாம் அம்மா... ஆனால்...'' என்று தயங்கினாள்.

''சொல்லு,'' என்றார் தலைவி சுருக்கமாக.

''அந்தக் குழந்தை... அம்மா! அந்தக் குழந்தையை எனக்குத் தருவீர்களா?'' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுதலே வடிவமாகிக் கேட்டாள் சசி.

## 23

இரக்கத்துடன் லேசாகச் சிரித்தார் ஆசிரமத் தலைவி. ''உன்னையே பசி தாக்காமல் காப்பாற்ற முடியவில்லை. குழந்தையை வேறு எப்படிப் பேணுவாய்?''

''எவ்வளவு அதிகமாக வேணுமானாலும் உழைக்கிறேன் அம்மா! ப்ளீஸ்...'' என்று கெஞ்சினாள் சசி.

''ம்...'' என்று யோசித்தார் தலைவி.

லேசான புருவச் சுழிப்புடன் லேசாகத் தலையைப் பின்னே சாய்த்து அவர் யோசனை செய்த விதம் எங்கோ பார்த்தது போல் இருந்தது சசிக்கு. ஆனால் எங்கே என்று யோசிக்கத் தோன்றாமல் குழந்தை விஷயத்தில் மனம் கிளர்ச்சியுற்ற ஆவலுடன் தலைவியைப் பார்த்தாள்.

''கொஞ்ச நாள்கள் ஆசிரமத்திலேயே இருந்து டைப்பிங் புக்கீப்பிங் எல்லாம் கவனி. பிறகு சம்பளம் எல்லாம் நிர்ணயிக்கலாம்.''

''அம்மா! குழந்தை?'' என்றாள் சசி ஆவலே வடிவாக.

''அதையும் இப்போதைக்கு நீயே பராமரிக்கலாம். உன்னால் முடிகிறதா என்று கவனித்துப் பிறகு தீர்மானிக் கலாம்,'' என்றார் தலைவி அமைதியாக.

பார்வையிலேயே உள்ளம் நிறைந்த நன்றியைப் பிரதிபலித்தாள் சசி.

மனதைக் கண்ணாடி போலக் காட்டும் விழிகள் என்று எண்ணிக் கொண்டார் தலைவி. ''பிள்ளைக்காக வெகுவாக ஏங்குகிறாள் பாவம்!'' மனம் ஓடும்போதே அவரது பார்வை ஒரு கணம் சூனியத்தை வெறித்தது.

ஆசிரமத்து வாழ்க்கை சசிக்கு அவள் அன்று வரை அறிந்ததிலிருந்து முழுக்க முழுக்க வித்தியாசமானதாக இருந்தது. அந்த வேறுபாடு அவளுக்கு முழுக்க முழுக்கத் தேவையானதாகவும் இருந்தது.

அங்கிருந்த அனைவருமே அன்போடு பழகினர். ஆனால் அனாவசியமான பரிவோ இரக்கமோ காட்டவில்லை. அங்கிருந்த அனைவருமே பரிவு காட்டப்பட வேண்டி யவர்கள்தாமே என்பதாலோ என்னவோ!

யாரும் தூண்டித் துருவி எதையும் கேட்கவில்லை.

'வந்து விட்டாயல்லவா? இனி நீயும் எங்களுள் ஒருத்தி. இந்தச் சிறுமிக்குத் தலையைப் பின்னி விடு. அந்தக் குழந்தை

துணியை ஈரம் செய்து விட்டதே, மாற்றி விடு. அயர்வாகத் தெரிகிறாயே. கொஞ்சம் ஓய்வாக உட்கார்!' இவை போன்றவைதான்.

எல்லாமே மனத்திற்கு இதமாகத் தோன்றியது.

எல்லாவற்றுக்கும் மேலாக மனதிற்கு இதம் மட்டுமின்றி இன்பம் தந்தது ஒன்று. அதுதான் அந்தக் குழந்தை. பார்த்த மாத்திரத்தில் அவளிடமே பால் பெருகச் செய்து அருந்திய சிசு.

அந்தச் சிசு அப்போதைக்கு அவளிடமே ஒப்புவிக்கப் பட்டது. அதன் அழுகை கூடச் சங்கீதம் போல இனிமையாக இருந்தது அவளுக்கு. சிரிப்பைப் பற்றிக் கேட்பானேன்?

வேலை நேரத்தில் குழந்தையைச் சிசு பராமரிப்புப் பகுதியில் விட்டு விட்டுச் செல்ல மனம் வராது சசிக்கு. 'என்ன வேலை' என்று எரிச்சல் கூட வரும். அவ்வளவு தூரம் அவன் அவள் மனதைக் கவர்ந்திருந்தான்.

அங்கே தலைவிக்கு அடுத்தபடியாக 'மங்களம்' என்று ஒரு பெண்மணி இருந்தார். படித்தவர். முப்பத்தைந்து வயசு இருக்கக்கூடும்! ஒரு வகுப்புக் கலவரத்தில் கணவர் குழந்தைகள் அனைவரையுமே ஒரே நாளில் பறி கொடுத்தவராம். சற்றே இறுகிப் போய் வயதுக்கு மீறிய முதுமையை உடம்பில் காட்டியிருந்தார். ஆனால் ஒரு குழந்தை அழுதால் தாங்க மாட்டார். ஒரு சிறுவன் விழுந்து விட்டால் பதறிப்போவார்.

பொதுவாக ஆசிரமக் குழந்தைகளின் முகங்களில் ஒரு வெறுமையான பார்வை, வயதை மீறிய அமைதி இருக்கும். குடும்பங்களில் வாழும் குழந்தைகளைப் போல அவர்களின் சின்னச் சின்ன ஆசைகளையும் ஏக்கங்களையும் பகிர்ந்து கொள்ள ஆள் இல்லாததே அதன் காரணம். ஆனால் இந்தப் 'பர்ணசாலை'யின் குழந்தைகளின் முகத்தில் அந்த தோற்றம் இல்லாது போக மங்களம் முக்கிய காரணம் ஆவார்.

பொதுவாக உணவு நேரம் பன்னிரண்டரைக்கு என்றாலும், யாராவது பசி என்றால், ஏன், பசிபோல முகக்குறி

காட்டினாலும், தட்டில் பரிமாறிக் கொடுத்து விடுவார். லேசான வியப்புடன் பார்த்த சசியிடம் ''என் பிள்ளைகளுக்கு அன்று செய்தேன். இன்று இவர்கள் அத்தனை பேரும் என் பிள்ளைகள்தானே, செய்கிறேன்,'' என்றார். 'அயோக்கியத் தனம் இல்லாத சிறுசிறு ஆசைகளுக்கு இடம் கொடுக்க வேண்டும்,' என்பது அவரது எண்ணம். 'அதில் கொஞ்சம் அதிகப்படி சிரமங்கள் இருந்தால்கூடப் பரவாயில்லை,' என்பார்.

அவரைப் போலவே அதே வயதில் இன்னொரு பெண்மணியும் இருந்தார். பெயர் யோகம். வாழ்வில் நேர்மாறு. அதிகப் படிப்பறிவு இல்லாதவர். மங்களத்தின் நிழல் என்றே சொல்லலாம்.

சீதாவும் தாரிணியும் பதினைந்து, பதினாறு வயதுச் சிறுமிகள். இங்கேயே வளர்ந்தவர்கள். பையன்களைப் பத்து வயதிலேயே வேறு இடத்திற்கு அனுப்பி விடுவார்கள்.

மேல் வேலை, சமையல், சலவை போன்றவற்றைச் செய்ய ஆட்கள் இருந்தனர்.

எல்லாருக்கும் ஒவ்வொரு கதை.

ஆனால் எல்லோருக்குள்ளும் இருந்த அன்பைத் தூண்டி விட்டுச் சுடராக எரியச் செய்து அந்த ஆசிரம வாழ்வை ஒரு பெரிய குடும்ப வாழ்வு போல நடத்துமாறு செய்தவர் - செய்து கொண்டிருப்பவர் தலைவி என்பது நன்கு புரிந்தது.

புரிந்த அளவில் சசிக்கு அவரிடம் ஏற்கெனவே இருந்த மதிப்பும் பன்மடங்காயிற்று.

அமைதியான குரலில் சுருக்கமும் தெளிவுமாக அவர் வேலை தருவதும், குழந்தையின் பசி வேளைகளில் சரியாக வேலையை நிறுத்திச் சசியை அனுப்புவதும், முதலில் சசிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

ஆனால் அவ்வளவு கூர்மை இல்லாவிட்டால் ஐம்பது குழந்தைகளைக் குறை தெரியாமல் பராமரிக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டாள்.

தலைவியின் அறிவுக் கூர்மை பற்றி அவள் சொந்த விஷயத்திலேயே அறிய நேர்ந்தது. அதுவும் வந்த வுடனேயே.

வீட்டை விட்டு வெளியேறி வந்தபோது, 'இனி சியாம் பட்டினி கிடக்க மாட்டான்,' என்று நிச்சயமாக நினைத்திருந்தாள்.

ஆனால் இங்கே வந்த அன்று இரவின் அமைதியில் யோசிக்கையில் திடுமெனப் பயமாகிப் போயிற்று. ஒருவேளை அவள் விடுதலை கொடுக்கும் வரையிலும் பட்டினிதான் என்று அவன் உறுதியோடு இருந்தால்...? அவன்தான் பிடிவாதக்காரனாயிற்றே!

ஆனால் அந்தப் பிடிவாதத்தை அவள் அறியாமல் நடத்த அவன் முட்டாள் அல்ல.

அவளை எப்படி அறியச் செய்ய முடியும்?

ஒரே வழி பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதாகத்தான் இருக்க முடியும். சுருக்கமாக 'முடிவு சாதகம் ஆகும் வரை அதே விரதம் தொடரப்படும்' என்று அவன் பெயரைத் தாங்கி விளம்பரம் வந்தால் அவளுக்குத் தெரிந்து விடும்தானே!

அதன் பிறகு சசிக்குச் சரியாகவே உறங்க முடியவில்லை.

காலைப் பத்திரிகை அங்கே மதியம்தான் வந்து சேர்ந்தது.

உடனே எடுத்துப் படித்துவிட மனம் துடித்தபோதும் தலைவி தந்த கடிதங்களைப் பிடிவாதத்துடன் டைப் செய்து கொண்டிருந்தாள் சசி.

உடனடி வேலைகளை முடித்துவிட்டுச் சாதாரணம் போலக் காட்டிப் பத்திரிகையைப் பிடித்துத் தேடினாள். அப்பாடி! ஒன்றும் இல்லை என்று கொஞ்சம் நிம்மதி கொண்டாள். மறுநாளும் அதேதான்.

இரண்டு நாள்கள் ஏதும் இல்லை என்றதும், சசிக்குக் கொஞ்சம் மனதில் அமைதி உண்டாயிற்று. அவன் சாப்பிட்டிருப்பான்.

''உன் கணவன் ஒன்றும் தகவல் கொடுத்துவிடவில்லையா?'' என்று தலைவியின் அமைதியான குரல் நிதானமாக வினவவும் சசி திடுக்கிட்டுப் போனாள்.

''நான்... நான்... அவர்...'' என்று குளறினாள்.

அவர் அமைதியுடன் புன்னகை செய்யவும், சசி தலை குனிந்தாள்.

''போகட்டும்! வேலையைத் தொடங்குகிறாயா?'' என்று தலைவி மீண்டும் போகவும் நன்றியோடு வேலையைத் தொடங்கினாள் சசி. மற்றப்படி அவரிடம் என்னவென்று விளக்குவது? அவர் என்னதான் அன்பானவராக இருந்தாலும் கூட.

பத்து தினங்களுக்குப் பிறகு சசியின் வேலை, சம்பளம் எல்லாம் வரையறுக்கப்பட்டன.

சம்பளம் குறைவான அளவில் இருந்தபோதும், சசி திருப்தியற்றுப் போகவில்லை. 'இது போதும்!' என்று நினைத்தாள்.

குழந்தையைச் சசி 'தத்தா'கவே எடுத்துக் கொண்டாள். முதலில் அப்போதைய ஏற்பாட்டைப் போலவே தொடர்ந்து இருக்கலாம் என்றே நினைத்திருந்தாள். ஆனால் ஒரு நாள் ஒரு கணவரும் மனைவியுமாக வந்து பத்து மாதக் குழந்தை ஒன்றைத் தத்தாக எடுத்துச் சென்றபோது சசி சற்றே திகைத்தாள்.

அதிலும் சிசு பராமரிப்புப் பகுதியில் தொட்டிலில் கிடந்த செல்வனை, சசியின் மனம் கவர்ந்த சிசுவை எடுத்துச் செல்லலாம் என்று அந்தக் கணவன் தன் மனைவியிடம் வற்புறுத்தியபோது பயந்தே போனாள்.

நல்ல வேளையாக மிகவும் சிறிய குழந்தையானால் கவனிப்பது கஷ்டம் என்று மனைவி மறுக்கவும், அப்பாடி என்று பெருமூச்சு விட்டாள்.

அவர்கள் சென்ற பின், தலைவியிடம் சென்று விசாரித்தாள். இந்தத் தம்பதி விரும்பியிருந்தால் எந்தக் குழந்தையையும் எடுத்துச் சென்றிருப்பார்கள் என்ற உண்மை புரிந்ததும் சசி நடுங்கிப் போனாள்.

இந்தக் குழந்தையைப் பிரிந்து அவள் எப்படி வாழக்கூடும்?

எனவே குழந்தையைத் தத்து எடுத்துத் தன் உரிமையாக்கிக் கொண்டாள்.

ஆனால் அதிலும் ஒரு சிரமம் உண்டயிற்று.

உறவு என்று யார் இருந்தாலும் ஆசிரமத்தில் தங்கக் கூடாது என்பது ஒரு விதி.

தாய், பிள்ளை என்ற உறவு ஏற்பட்டு விட்டதால் அங்கே தங்கும் தகுதி சசிக்கு இல்லாது போயிற்று.

எனவே ஆசிரம எல்லையைத் தாண்டிப் பக்கவாட்டில் சற்றுத் தொலைவில் இருந்த சிறு வீட்டில் சசி குழந்தை யுடன் வசிக்கலானாள்.

காலை வேலைகளை முடித்துக் கொண்டு குழந்தையுடன் கிளம்புவாள்.

மதிய உணவும் மாலைச் சிற்றுண்டியும் ஆசிரமவாசி களோடு.

மாலையில் வேலை முடிந்து கிளம்பினால், ஐந்தரைக் கெல்லாம் மீண்டும் வீடு வந்து சேர்ந்து விடுவாள்.

ஒரு சோறுடன் சாம்பார் அல்லது துவையலை முடித்து விட்டால், சமையல் முடிந்து விடும்.

இரவிலும் மறுநாள் காலையிலும் அதையே உணவாக்கிக் கொள்வாள்.

வேலை முடிந்த பின் சசியின் பொழுது குழந்தையுடன் இனிமையாகக் கழிந்தது.

தன் குழந்தை இறக்கவே இல்லை. அது இதுதான் என்ற மனோபாவம் கிட்டத்தட்ட சசிக்கு வந்துவிட்டது.

ஆசையாகக் கதிரவன் என்று பெயரிட்டாள்.

கும்மிருட்டாய் இருந்த வாழ்வில் ஒளி பிறக்கச் செய்தானாம் - அதனால்தான்.

தூக்கச் சிரிப்பில், உதடு பிதுங்கும் அழுகையில், சிமிழ் விழிகளின் மலர்ச்சியில் - குழந்தையின் ஒவ்வோர் அசை வையும் ஆசையுடன் அனுபவித்துத் தாகம் தீர்ந்தாள். ஒவ்வொரு சமயம் இதெல்லாம் காணச் சியாமுக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கம் கூடத் தோன்றி விடும். அந்த மாதிரி நேரங்களில் கணவனின் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு யோசிப்பாள்.

இப்போது அவன் என்ன செய்துகொண்டு இருக்கக்கூடும்?

கற்பனையில் இங்கும் அங்கும் சுற்றிக் கடைசியில் சிந்தாமணியிடம் வந்து நிற்கும்.

ஆனால் விசித்திரமான வகையில் அந்த நினைவும்கூட வேதனை தரவில்லை.

தாய்மையின் நினைவு குத்துவிளக்கின் முத்தொளி போல அவனை ஆதரவுடன் சூழ்ந்து எந்த வித இருளும் அணுக விடாமல் காத்தது.

பழைய பரிதவிப்பு, நிராசை, வேதனை, விரக்தி எல்லாமே அரைகுறைத் தூக்கத்தில் கண்ட அவலக் கனவு போல மறையலாயின.

இது... ஆண்களுக்குப் புரிவது கொஞ்சம் கடினம்தான். ஆனால் மனதில் என்னதான் தவிப்பு இருந்தாலும் பச்சைக் குழந்தையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தால் பெருமளவு கவலை குறைந்து விடும் பெண்களுக்கு. பச்சிளம் சிசுவின் மென்மைக்கு அந்த சக்தி உண்டு. அதிலும் அந்த மழலைக்குப் பால் ஊட்டும்போதோ மரணமாவதைக் கூட மறந்து மனம் குளிர்ந்துவிடும். இது கோடானு கோடிப் பெண்கள் அனுபவத்தால் அறிவது. அறிய முடியாதது ஆண்களை இயற்கை வஞ்சித்த ஒன்று.

'இந்த அமைதி உன் அப்பாவுக்கும் கிட்ட வேண்டுமே, என் செல்வமே!' என்று தூங்கும் குழந்தையை வருடியபடி சொல்லிக் கொள்வாள் சசி.

தலைவியின் ஆலோசனையின் பேரில் சசி இன்னொன் றும் செய்திருந்தாள். மஞ்சள் கயிற்றில் தாலியைக் கோத்துப் போட்டுக் கொண்டு அந்த கனமான சங்கிலியையும் கை வளையல்களையும் விற்றுப் பணத்தில் பெரும் பகுதியைக் குழந்தையின் பேரில் பாங்க்கில் டெபாசிட் செய்தாள்.

''இந்தப் பகுதியில் திருட்டுப் பயம் இல்லை என்றாலும், தங்கம் விற்கும் விலையில் நீயாக ஏன் அதைத் தூண்ட வேண்டும்?'' என்று விளையாட்டுக் கேலி போலத் தலைவி கூறியது சசியின் இந்த நடவடிக்கைக்கு மூல காரணம்.

எளிமையான அந்த ஆசிரமத்தில் தான் மட்டும் அவ்வளவு தங்கத்தை அணிந்திருப்பதே ஒரு குற்றம் போலச் சசிக்கு உறுத்தத் தொடங்கி விட்டிருந்தது மற்றொரு காரணம்.

அங்கே நிலவிய எளிமையும் தூய்மையும் அவளது ஒன்றிரண்டு நகைகளைக்கூட அதிகப்படியாக எண்ண வைத்தன.

அந்த ஆசிரம வாழ்வில் சசியின் மனதில் பதிந்து அவளது நன்றிக்குப் பெருமளவு உரியவர் ஆனவர் டாக்டர் பரமகுரு.

தினமும் மாலை வேளையில் வந்து ஆசிரமவாசிகளின் உடல் நலத்தைக் கருத்துடன் கவனிப்பவர்.

சொந்த வாழ்வில் நேரிடும் துயரங்களும் இழப்புகளுமே ஒருவரை உண்மையான பொதுப் பணியில் ஈடுபடுத்து கின்றன என்று எண்ணியிருந்த சசியின் கருத்தைப் பொய்யாக்கியவர்.

நல்ல குடும்ப வாழ்க்கையை உடைய அவர் தினமும் தன் சொந்தச் செலவிலேயே வந்து இலவசமாகச் சிகிச்சை அளிப்பது தெரிந்ததும், சசியின் மதிப்பில் அவர் பல படிகள் உயர்ந்தார்.

அவர் மட்டுமின்றி, அவரது குடும்பத்தினர் அனைவருமே ஆசிரமத்துக்கு வருவதும், பெருமை காட்டாமல் பழகுவதும் சசிக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது.

டாக்டரின் இரண்டாவது மருமகள் அந்த ஆசிரமத் திலேயே வளர்ந்த ஓர் அனாதைப் பெண் என்பதை அறிந்தபோது சசி பிரமிப்பின் எல்லைக்கே போய்விட்டாள்.

டாக்டரின் இரு மகள்களுக்கும் சசியிடம் உறவு போல ஒரு தோழமை உண்டாகி விட்டது. இருவருமே அன்பில் சசிக்கு லில்லியை நினைவூட்டினர்.

வரும்போதெல்லாம் தாங்களும் ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களே என்பது போலக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்து கொண்டு வருவதும், ஊட்டுவதும், வேலை செய்வதும், சசியின் கண்களில் நீர் மல்கச் செய்தன.

'தேசபக்தி என்பது வெறும்-நாட்டின் மீது கொண்ட பற்று மட்டும் அல்ல. அந்த நாட்டின் மக்களுக்கு முழு மனதோடு சேவை செய்வதே ஆகும்!' என்று விவேகானந்தர் கூறியதை நடத்திக் காட்டுகிறார் என்று பெருமிதமாக நினைத்தாள் சசி.

இளம் தாய்மாருக்கே உரிய அனாவசியக் கவலைகளுடன் சசி அடிக்கடி கதிரவனுக்காக டாக்டரை நாடியது உண்டு.

சிறு முறுவலுடன் பொறுமையாகப் பேசி அந்தக் கவலைகளை அகற்றுவார் டாக்டர் பரமகுரு.

இதற்குப் போய்க் கவலைப்பட்டு டாக்டரையும் தொந் தரவு செய்தோமே என்றிருக்கும் சசிக்கு. வெட்கத்துடன் நன்றி கூறிவிட்டு ஓடிவிடுவாள்.

சசி மட்டும் ஆசிரமத்துக்கு வெளியே வசிக்கவில்லை.

ஆசிரமத் தலைவியும் அவளைப் போலவே தனி வீட்டில் தான் வசித்தார். தன்னந்தனியாக இருக்கும் அவர் ஏன் வெளியே வசிக்க வேண்டும் என்று சசி ஒருமுறை நினைத்தது உண்டு.

ஆசிரமத் துணிகளைச் சலவை செய்கிறவரும் குடும்பத் துடன் வெளியே வசித்தார்.

தோட்டங்களைக் கவனித்துக் கொள்பவர் வயதான மனைவியோடு இன்னொரு வீட்டில் குடியிருந்தார்.

அடுத்தடுத்த வீடுகள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அள்ளித் தெளித்தாற் போல ஆங்காங்கே, பார்வை எட்டும் தொலைவிலேயே, அந்த வீடுகள் அனைத்தும் அமைந்திருந்தன.

காலை வேளைகளில் சீக்கிரமாகவே தலைவி ஆசிர மத்திற்குச் சென்று விடுவார்.

மாலையில் வருவது நிலைமையைப் பொறுத்தது.

ஓரோர் சமயம் சசியிடம் வந்து அவர் நலம் விசாரிப்பதும் உண்டு.

அப்படி அன்றொரு நாள் மாலையில் ஆறு மணியளவில் அவர் வீடு திரும்புகையில் இடையில் சசியின் இல்லத் துக்குள் சென்றார்.

கதிர் பந்து விளையாடுவதைக் கண்டு களித்திருந்த சசி தலைவியைக் கண்டதும் அவசரமாக எழுந்தாள்.

மடியில் இருந்த கணவனின் படம் பாயில் விழுந்தது.

விரைந்து எடுத்து மாடத்தில் வைத்துவிட்டு, ''வாருங்கள் அம்மா,'' என்றாள்.

ஆனால் அன்னையின் கவனம் அவளிடம் இல்லை.

ஒரு விதமான பாவத்துடன் - பரிதாபத்துடன் சியாமின் படத்தில் அவர் பார்வை பதிந்திருந்தது.

சட்டெனத் திரும்பி, ''நீ சியாமின் மனைவியா?'' என வினவினார்.

தலையாட்டிவிட்டு, ''உங்களுக்கு அவரைத் தெரியுமா அம்மா?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தாள் சசி.

லேசாகப் புன்னகை செய்துவிட்டு, ''சியாமை இந்த உலகிற்கு அளித்த கருவி நான். அவனைப் பெற்றவள்!'' என்றார் நிதானமாக.

## 24

தலைவியின் வார்த்தைகளை நம்ப முடியாமல் திகைத்து நின்றாள் சசி.

சுருக் சுருக்கென்று கேலியும் குத்தலும் கடுமையாகப் பேசும் சியாம், இனிய உளவாக இன்னாத கூறாமையை நோன்பு போலப் பயிலும் இந்த அன்னையுடைய மகனா?

எப்படி முடியும்?

இது எப்படிச் சாத்தியம்?

எதிர் மறையான இயல்புகளை அடுக்கும்போதே மனம் ஒற்றுமைகளையும் கணக்கிடத் தொடங்கியது.

லேசான அழுத்தத்துடன் கூடிய பேச்சு - முதன் முறையாகக் கேட்டபோதே 'சியாம் போல அழுத்தம்' என அவளை எண்ண வைத்தது.

தலைவியிடம் கண்ட, தலையைப் பின்னே லேசாகச் சாய்த்து யோசிக்கும் பாவனை பழக்கமானது போலத் தோன்றியதே - அதுவும் சியாமிடம் கண்டதுதானே.

ஆனால்... தாயைப் பற்றிச் சியாம் பேசியதே இல்லை.

ஒரே ஒரு முறை மட்டும் பேசியபோது, பெண்களிடம் அவனுக்கு நம்பிக்கை கெடக் காரணம் தாய்தான் என்றான்.

இந்த மாதிரி அன்னையைப் பெற்ற அவனால் அவ்வாறு எப்படி எண்ண முடிந்தது?

சசியின் பிரமிப்பைக் கண்டு, தலைவியின் புன்னகை விரிவடைந்தது. ''என்னம்மா, நம்ப முடியவில்லையா?'' என்று வினவினார்.

''மு... முடிகிறது,'' என்றாள் சசி.

விழிகளை ஒருமுறை சுழலவிட்டு, ''உன் வேலைகள் முடிந்தாயிற்றா?'' என்று கேட்டார் அன்னை.

''ஆமாம்.''

குழந்தையின் அருகில் பாயில் அமர்ந்து, ''நீயும் உட்கார். உன் விவகாரம் என்ன என்று விவரம் சொல்லு. என் மகன் பிடிவாதக்காரன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவனுடைய தந்தை இல்லாத இந்நாளில் ஒரு வேளை சிக்கலைச் சீர் செய்ய முடியுமா என்று பார்க்கலாம்,'' என்றார் தாய்.

''சீர் பண்ண வழியேதும் இல்லை அம்மா! ஆனால் உங்களிடம் மறைக்கவும் எனக்கு எண்ணம் இல்லை,'' என்று சன்னக் குரலில் தொடங்கித் தங்கள் வாழ்வில் நடந்த சம் பவங்கள் தவறுகள் விளைவுகள் எல்லாமே சொன்னாள் சசி.

கேட்டு முடிந்த பின், பெருமூச்சுடன், ''அந்தப் பிடிவாதக் குணம் மாறவே இல்லையே. ஒன்றைப் பற்றினால் உடும்பு தானே!'' என்றார் அன்னை வருத்தத்துடன்.

''அம்மா! நான் கேட்பது தப்பிதம் என்றால் மன்னி யுங்கள். ஆனால் நீங்கள் ஏன்...'' கண்களில் ஆவலுடன் பேச்சை நிறுத்தினாள் சசி.

''நீ நிறுத்தியதை உன் கண்கள் கேட்டு முடித்து விட்டன,'' என்று லேசாகச் சிரித்தார் அன்னை. உடனே சிரிப்பு வாட, ''நான் ஏன் என் மகனுடன் வசிக்கவில்லை, ஏன் அனாதை

போல இந்த ஆசிரமத்தில் தனித்து வாழ்கிறேன் என்றெல்லாம் அறிந்து கொள்ள விரும்புகிறாய், அப்படித்தானே? என்னைப் பற்றி அதாவது உன் மாமியார் என்ற பெண்ணைப் பற்றிய கதை ஏதும் கேள்விப்பட்டாயா? சியாம் ஏதேனும் சொல்லியிருக்கிறானா?'' என்று விசாரித்தார்.

''இல்லையம்மா. ஆனால்...'' என்று நிறுத்தி விட்டாள் சசி.

''ஆனால்...?''

மென்று விழுங்கிக் கொண்டு, ''உங்களிடம் அவருக்கு நல்ல அபிப்ராயம் இல்லை என்று மட்டும் தெரிந்து கொண்டேன்,'' என்றாள் சசி.

''அந்த அளவில் மட்டும் நிற்கவில்லை மகளே. மிகவும் தாழ்வான மதிப்பீடு கூட உண்டு. அவனது கணிப்பில் நான் விபசாரி!'' என்றார் தாயார் சலனமின்றி. ஆனால் சசி அதிர்ந்து போனாள்.

சசியின் தோளில் தட்டி ஆறுதல் படுத்தியபடி, ''அது அவனுடைய தந்தை தீட்டிய வண்ணம். அவர் அருகிலேயே இருந்து வளர்ந்தவன். அதையேதானே நம்பத் தோன்றும், பாவம்!'' என்று பரிவும் காட்டினார் தலைவி.

பேச முடியாமல் தானே தவ்றிழைத்தாற்போலத் தலை கவிழ்ந்தாள் சசி.

சற்றும் கலங்காமல் எட்டியிருந்து பார்த்து யாருடைய கதையையோ சொல்வதுபோலத் தலைவி கூறலானார்.

''சசி! நான் காதலித்தவர் வேறு. ஆனால் நான் கைப்பிடிக்க நேர்ந்தது சியாமினுடைய தந்தையை. அவர் அப்போதே பெரிய பணக்காரர். என் மனதை நன்றாக அறிந்திருந்தும் ஒரு சவாலுக்காகச் சரவணனிடமிருந்து என்னைப் பிரித்து மணந்து கொண்டார்...'' பழைய நினைவில் அவரது பார்வை சாளரத்தின் வழியே வான் வெளியில் எங்கோ நிலைத்தது.

''சரவணனை மறந்து வாழ எவ்வளவோ - என்னால் இயன்றவரைக்கும் - முயன்றேன். சியாமின் தந்தை கொஞ்சம் உதவியிருந்தாலும் என் முயற்சியில் வெற்றி

பெற்றும் இருப்பேன். ஆனால் அவருக்கு என் மேல் நம்பிக்கை பிறக்கவே இல்லை. அவரும் மறக்கவில்லை. என்னையும் மறக்க விடவில்லை... குத்திக் குத்திப் பேசி...''

சியாமும் அப்படித்தானே! தானும் மறவாமல் அவளை யும் மறக்க விடாமல் குத்திக் குத்திப் பேசிப் பேசி... ஒரு திடுக்குறலுடன் வெளிப்படையாகவே தலையை அசைத்து மறுத்தாள் சசி. சியாம் அப்படி இல்லை. உண்மை தெரியும் வரையில் அனுபவித்த அவனது கனிவும் பிரியமும் சசிக்கு நினைவு வந்தன. நிச்சயமாகத் தந்தையைப் போன்ற கல் மனம் அவனுக்குக் கிடையாது என்று உறுதியோடு மனதில் சொல்லிக் கொண்டாள்.

''இதற்கிடையிலும் சியாம் சுந்தரன் பிறந்தான்...'' தாயின் முகத்தில் முழுமையான முறுவல் பிறந்தது. ''ஐந்து ஆண்டுகள் என் வாழ்வில் பசுஞ்சோலை நாள்களாகக் கழிந்தன. சியாம் என்னிடம் மிக அதிகமாக ஒட்டினால் அவன் தந்தைக்குப் பிடிக்காதுதான். ஆனாலும் அவர் அவனிடம் மிகவும் பிரியமாகவே இருந்தார். அவன் முகம் வாடப் பிடிக்காமல் என்னிடமும் சுமுகமாகவே இருந்தார். இப்படியே எல்லாமே நன்றாகி விடும் என்றுகூட நான் நம்பத் தொடங்கியிருந்தேன்... ஆனால்...''

மீண்டும் தொடர்ந்தார்.

''சியாமுக்கு ஆறாவது வயது தொடங்கிய அன்று... மாலையில் மகனுடன் கோயிலுக்குச் சென்றிருந்தார் அவர். நான் செல்ல முடியாத நாள். அதுவும் விதியோ என்னவோ? சரவணன் ஒரு விபத்தில் சிக்கிப் படுகாயத்துடன் ஆஸ்பத் திரியில் கிடப்பதாகவும் என்னைப் பார்க்க விரும்புவ தாகவும் தகவல் வந்தது... அன்று நான் சென்றிருக்கக் கூடாதா? ஆனால் இன்னமும் எனக்கு நான் சென்றது தவறென்று படவில்லை. சாகக் கிடக்கும் ஓர் உயிர் அழைக்கும்போது எப்படி மறுப்பது, அதுவும் சரவணன் அழைக்கையில்? என் கணவருக்குக் குறிப்பு எழுதி வைத்துவிட்டு நான் சென்றேன். ''தேவகி! தேவகி!'' என்று

சரவணன் தவித்த தவிப்பு! நாலு மணி நேரம் வதைப்பட்டு இறந்தான்... அந்த வதை அவனுக்கு ஏன் நேர்ந்தது? வாழ்வில் ஒருவருக்கு இடர் செய்து அறியாத ஜீவன்... ம் கடவுள் போட்ட கணக்கு! அன்றே என் விஷயத்திலும் ஒரு கணக்கு முடிந்து போயிற்று.

அவன் இறந்த பின் திரும்பி வந்த என்னை வீட்டுக்கு உள்ளேயே விடவில்லை அவர்.

''அவர் எனக்கிட்ட பெயர் விபசாரி. மரணப் படுக்கையில் கிடப்பவனோடு என்ன விபசாரம் செய்துவிட முடியும் என்று நினைத்தாரோ?

இப்போது நினைத்தால் சிரிப்புக்கூட வருகிறது. ஆனால் அன்று எவ்வளவோ மன்றாடிக் கதறிக் கண்ணீர் விட்டுக் கெஞ்சினேன். இரவெல்லாம் 'கேட்'டுக்கு வெளியிலேயே கிடந்தேன்.

அவர் மனம் இளகவும் இல்லை.. கதவு திறக்கவும் இல்லை. மூடி விட்டது. மனக் கதவு திறவாதிருக்கையில் புறக்கதவும் எப்படித் திறக்கும்?''

கிட்டத்தட்ட இதே போலத் தானும் நினைத்தது ஞாபகம் வந்தது சசிக்கு. ஆனால் கணவன் வாயினாலேயே விபசாரி என்ற பட்டம் பெறுவதும் எவ்வளவு துர் பாக்கியம்! மாமியாருக்காகச் சசியின் மனம் உருகியது.

பொருளற்ற செய்கையாய்க் குழந்தையின் தலையை விரல்கள் மிருதுவாய் வருட அன்னை தேவகி தொடர்ந்தார். 'மறுநாள் வேலையாட்கள் முன்னிலையில் வெட்கத்தை விட்டுக் கெஞ்சினேன். பெற்ற குழந்தையின் தாதிபோல ஒரு வேலைக்காரியாக இருக்கவேனும் இடம் கொடுங்கள் என்று மன்றாடினேன். நகைகளைப் பிடுங்கிக் கொண்டு, கூந்தலைப் பற்றி இழுத்து வெளியே தள்ளினார். கதவைத் தாழிட்டு யாராவது திறந்தால் கொன்று விடுவதாக மிரட்டினார்.

சியாமின் குரல் கூடக் கேட்கவில்லை. ஒருவேளை பின்புறம் தோட்டத்தில் வைத்திருக்கச் சொல்லியிருப்பார்.

பகல் வெளிச்சத்தில் தெரு மக்களுக்கு நடுவில்... அதன் பிறகு நான் கெஞ்சவில்லை. கால்போன போக்கில் நடந்தேன்.

அப்போது கருணையுடன் காப்பாற்றியவர் இந்த அனாதை இல்லத்து ஸ்தாபகர்.

இந்தச் சேவையில் என் வேதனைகளை எல்லாம் முயன்று மறந்தேன். மனம் பேதலித்து நான் நிற்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு குழந்தையை என்னிடம் தந்து, 'இதுவும் உன் சியாம்தானம்மா, குழந்தாய்!' என்பார் பெரியவர். மெல்ல மெல்லத் தெளிந்தேன். ஆனால் அஞ்ஞானம் முழுவதும் மாறி விடவில்லை என்று பிறகு தெரிந்து கொண்டேன்.

''பதினைந்து நீண்ட - ஒரு வகையில் குறுகிய என்றும் சொல்லலாம் - ஆண்டுகள் சென்ற பின், என் கணவரின் மரணம் பற்றிப் பத்திரிகையில் படித்துத் தெரிந்து கொண்டேன். பிள்ளைப் பாசம் விசுவரூபம் எடுத்தது. வெட்கமின்றி அவனைப் பார்க்க விரைந்தேன். பழைய வேலைக்காரர்கள் 'அம்மா' என்று ஓடி வந்தனர். ஆனால் என் மகன் மாடிப் படியில் நின்றபடி என்ன சொன்னான் தெரியுமா? 'அப்பா இறந்து போனால் இந்த வீடு விபசார விடுதியாகி விடுமென்று யார் சொன்னது?' என்று கேட்டான் அவன்,'' என்று கசப்புடன் சிரித்தார் அன்னை.

''ஐயோம்மா!'' என்று அலறிவிட்டாள் சசி.

அவள் குரலில் பயந்துவிட்ட குழந்தையைத் தூக்கி அணைத்த படி, ''ஷ்... குழந்தை பயப்படுகிறான் பார்,'' என்று அதட்டினார்.

மேலே கேட்கவே சசிக்கு அச்சமாக இருந்தது.

''மேலே என்னம்மா நடந்தது?'' என்று பயந்து கொண்டே மெல்லக் கேட்டாள்.

''முதலில் எனக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. சற்று நேரம் பேச்சிழந்தும் போனேன். பிறகு தோன்றிற்று. தன் தந்தை கற்பித்தது மட்டும்தானே என் சியாமுக்குத் தெரியும். என் வழக்கையும் உரைத்தால் உண்மை தெரிந்து கொள்வான் என்று நினைத்தேன்.

அதற்குள்ளாக என்னை அகற்ற அவன் அவசரப்பட்டான். 'இன்னமும் ஏன் கூடத்தை அசுத்தப்படுத்திக் கொண்டு நிற்க வேண்டும்?' என்று கேட்டான்.

விளக்கம் கூற ஒரு வாய்ப்புக் கொடு சியாம் என்று கேட்டேன். அதற்கு... 'விபசாரிகளுக்குக் கதைகளுக்கா பஞ்சம்? அதுதான் பத்திரிகை தோறும் பலப்பல வருகின்றனவே!' என்று மீண்டும் குத்தினான்.

சற்று நேரம் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றேன். என் முயற்சியின் பயனின்மை எனக்கு நன்றாகப் புரிந்து போயிற்று. திரும்பி விட்டேன்.

அன்றிலிருந்து முழுத் துறவி ஆகிவிட்டேன். இன்று எனக்கு இந்தப் பணி போதும். இதில் மனதிற்கு அமைதி கிட்டி விட்டது. இனி வரும் காலமும் இதே அமைதியில் கழிந்து விடும்,'' என்று முடித்தார் மூத்தவர்.

கண்களைத் துடைத்துக் கொண்டு, ''எனக்கும் இங்கே வந்த பின் மனம் அமைதியாக இருக்கிறது அம்மா! நானும் இப்படிக் காலத்தைக் கழித்து விடுவேன்,'' என்றாள் சசி.

''உன்னால் முடியாது,'' என்று தலைவி கூறவும், சசி திகைத்துப் போனாள்.

''ஏன்? ஏன் அம்மா?'' என்று வினவினாள்.

''உனக்கென்று ஒரு பற்றுக்கோடு இல்லாமல், உன்னால் வாழ முடியாது சசி! உன் பாசத்தைக் கொட்ட உனக்குத் தனிப் பாத்திரம் வேண்டும். இந்தக் குழந்தை இல்லாமல் நீ இங்கே அமைதி கண்டிருப்பாயா? இனியும்தான் கதிரை இழந்தால் வாழ்ந்து விடுவாயா?''

''ஐயோம்மா!'' கலவரத்துடன் குழந்தையைக் குனிந்து பார்த்தாள். தலைவியின் மடியில் குழந்தை உறங்கி விட்டிருந்தது. மெல்லத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

தேவகி சிறுநகை பூத்தார். ''உன்னைப் புரிந்துகொண்டு தான் குழந்தையை உனக்குத் தத்துக் கொடுக்க ஏற்பாடு செய்தேன். உன்னுடையது என்று உனக்கு ஒன்று வேண்டும். அந்த ஒன்றுக்காக எதை இழக்கவும் உயிரைத் தரவும் நீ

தயங்க மாட்டாய். ஆனால் இது சியாமுக்குத் தெரியாது போயிற்றே,'' என்று பெருமூச்செறிந்தார்.

அதுவரை சசி தன்னைப் பற்றி இந்த விதமாக எண்ணிப் பார்த்ததில்லை. இப்போது தலைவி கூறுவது சரிதானோ என்று தோன்றியது. முதலில் தந்தைக்காக எதையும் இழக்கத் தயாரானாள்.

பிறகு சியாமுக்காக வீடு, உறவு, நட்பு எல்லாவற்றையும் இழந்தாள்.

இப்போது... மெத்தென்று கையில் உறங்கும் குழந்தையைப் பார்த்தபடி, ''எனக்கு இவன் மட்டுமே போதும்,'' என்றாள் மெல்லிய குரலில்.

புன்னகையுடன் மருமகளின் தலையைத் தொட்டு ஆசி கூறுவதுபோல ஒரு கணம் மவுனமாக இருந்தார் தலைவி. பிறகு எழுந்து சென்றுவிட்டார்.

குழந்தையைப் படுக்கையில் விட்ட பிறகு வெகு நேரம் சசியின் மனம் துடித்துக் கொண்டே இருந்தது.

மீண்டும் மின் விளக்கைப் போட்டு விட்டுக் கணவன் படத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள். முட்டி மோதிக் கொண்டு அழுகை வந்தது. 'சியாம்! தூய்மையே உருவான உங்கள் அன்னைக்கு எப்படிப்பட்ட அநியாயத்தைச் செய்து விட்டீர்கள், சியாம்! இந்தப் பாவத்தை எப்படித் தீர்ப்பீர்கள்?'' என்று மனம் கலங்கிக் கண்ணீர் சொரிந்தாள்.

மறுநாள் சசியின் சிவந்து வீங்கிய கண்களைக் கண்டு, ''அசடு!'' என்று சிரித்தார் அன்னை.

அதன் பின்னர் தலைவியாகத் தங்கள் உறவு பற்றி எந்தப் பேச்சும் பேசவில்லை. மாலையில் சீக்கிரமாகத் திரும்பி னாலோ, காலை வேளையில் ஆசிரமத்துக்குச் செல்லும் வழியிலோ, அடிக்கடி சசியின் வீட்டின் உள்ளே வந்து எட்டிப் பார்ப்பார், பேசுவார். ஆனால் பேச்சு ஆசிரமத்தைப் பற்றி, கதிரைப் பற்றி இருக்குமே தவிர, சொந்த விஷயம் இராது.

சசிக்கும் சொந்த விஷயம் பேசத் துணிவு இருந்தது இல்லை. மேலும் அவசியமும் தோன்றவில்லை.

நாள்கள் நகர்ந்தன.

மெதுவாக அல்ல, சசியைப் பொறுத்தமட்டில் விரைவாகவே ஓடின.

இல்லாத பொல்லாத விவரங்களையும் பழைய வேதனைகளையும் இழுத்துப் போட்டு எண்ணிப் பார்க்க அவளுக்கு நேரம் இல்லை; மனமும் இல்லை.

வேலை முடிந்தால் அவள் வாழ்வின் வற்றாத ஜீவநதியாகக் குழந்தை இருந்தான்.

மெத்து மெத்தென்று மலர்ச் செண்டைப் போலச் சிசுவைக் கையில் ஏந்தும்போதே அவளுக்கு உள்ளம் குளிர்ந்து போகும்.

அவன் முகம் பார்த்துச் சிரிக்கையில் உலகமே மறந்து போயிற்று.

குழந்தைக்கு மீஸில்ஸ் வந்தது. சசி தவித்துப் போனாள்.

சளி பிடித்து லேசாக உடல் காய்ந்தபோது சசிக்கு நெஞ்சு உலர்ந்து போயிற்று. இரண்டே நாட்களில் பழைய மாதிரி அவன் சிரித்த பிறகுதான் அவளுக்கு உயிரே வந்தது.

இந்தக் குழந்தை தன் வயிற்றில் பிறந்தது அல்ல என்ற நினைவுகூட மறந்து போயிற்று.

இந்தக் குழந்தை கதிருக்காகவே வாழ்வது போல இருந்தாள்.

கதிருக்கு இரண்டு வயது முடிந்தது. குழந்தை தன் மழலையால் அவளை மகிழ வைத்தான்.

அவனுக்கு அங்கும் இங்கும் ஓடி ஆடுவதில் விருப்பம் அதிகம். ஆசிரமத்திற்குச் சென்று திரும்பும் போதெல்லாம், ''இதென்ன பூ? அதென்ன பூச்சி?'' என்று சசியைத் துளைத்து எடுப்பான். சசிக்கு அத்தனையும் சிரிப்பாக இருக்கும்.

டாக்டர் வீட்டு மனிதர்களுக்கும் கதிர் செல்லப் பிள்ளையே.

வழக்கம் போல ஒரு ஞாயிறன்று சியாமின் படத்தைப் பார்த்துப் பார்த்து மெல்லத் துடைத்துக் கொண்டிருந்தாள் சசி.

ஈர்க்குச்சியால் குருவி விரட்டிக் கொண்டிருந்த கதிர் அதைப் போட்டுவிட்டு உள்ளே வந்தான்.

சசியின் மேல் ஸ்டைலாகச் சாய்ந்து நின்று சற்று நேரம் அவளது வேலையைக் குறுகுறுவெனப் பார்த்தான். பிறகு, ''அது ஆரு?'' என்று புருவத்தைச் சுருக்கி விசாரித்தான்.

''இது... அப்பா!'' என்றாள் சசி முறுவலுடன்.

''ராஜி அப்பாவா?''

டாக்டருடைய பேத்தி ராஜி! அவளை அவளுடைய தந்தையுடன் கண்டிருந்த நினைவில் குழந்தை கேட்டான்.

''ம்ஹூம்! உன் அப்பா.''

''அப்பா எங்கே?''

எதிர்பார்த்த கேள்விதான்! எனவே சசியின் பதிலும் தயாராக இருந்தது. ''அப்பா ஊருக்குப் போயிருக்கார்,'' என்று பதிலிறுத்துவிட்டுச் சற்று அச்சத்துடனே அடுத்த கேள்விக்குக் காத்திருந்தாள்.

''எப்ப வருவார்?''

''ம்... வேலை முடிந்த பிறகு.''

''எப்ப வேலை முடியும்?''

''எனக்குத் தெரியாதப்பா!'' என்று முறுவலித்தபடியே கையை விரித்தாள் சசி.

''தெரியாதா?'' என்று அந்த அளவில் சமாதானம் அடைந்து தாயின் கழுத்தைக் கட்டி முத்தமிட்டுவிட்டுத் திருப்தியோடு ஓடினான் குழந்தை.

ஆனால் சசி யோசனையில் ஆழ்ந்தாள்.

இனி வரும் ஆண்டுகளில் குழந்தை இன்னும் இன்னும் விவரம் கேட்பானே, அதற்கு என்ன சொல்வது?

கேட்கும்போது பார்க்கலாம் என்று பிரச்னையை ஒதுக்கி வைத்தாள் சசி.

மேலும் சில மாதங்கள் வந்து ஓடி மறைந்தன.

கதிருக்கு மூன்றாண்டுகள் நிறைய இரு மாதங்கள் இருக்கையில் ஒருநாள் இரவில் தலைவி சசியிடம் பேச்செடுத்தார்.

''சசி! நீ சொன்ன மூன்று ஆண்டுகள் முடியப் போகின்றனவே. என்னம்மா முடிவு செய்திருக்கிறாய்? நீ சியாமிடம் திரும்பச் செல்லப் போகிறாயா? எப்படி?'' என்று விசாரித்தார்.

''இல்லை அம்மா,'' என்றாள் சசி அமைதியாக.

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''அந்தப் பெண் நல்லவள் இல்லையே என்றாயே, அவளை மணப்பதனால்...'' என்று நிறுத்தினார் தலைவி.

''மூன்று ஆண்டு காலம் அவளது காதல் நிலைத்திருக்குமானால் அந்த அன்பு மெய்யானதாக இருக்குமல்லவா, அம்மா? அதுவே அவளை நல்லவளாக மாற்றி விட்டிருக்கும். பழைய வாழ்வு எப்படி இருந்தால் என்னம்மா?'' என்றாள் சசி அமைதி மாறாமலேயே.

''சியாமைப் பற்றி அக்கறை இல்லையா சசி?''

''இனியேனும் அவர் மகிழ்ச்சியோடு இருக்கட்டுமே அம்மா!''

''அந்தப் பெண்ணோடு இணைந்தால் அவன் நன்றாயிருப்பான் என்று தோன்றவில்லையே...'' அன்னையின் குரலில் கவலை இருந்தது.

சசி சட்டென அவரை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தத் துறவி நெஞ்சமும் மகனுக்காகச் சற்றுக் கலங்குவதை உணர்ந்தாள். இதமான குரலில், ''அம்மா! மூன்று ஆண்டுகள் ஒருவருக்காகக் காத்திருக்கும் ஒரு பெண் எப்படியும் அவரை நன்றாகவே வைத்திருப்பாள்.. எனவே அவரைப் பற்றிய கவலையை விடுங்கள்,'' எனப் பேசி ஆறுதல் கூறினாள்.

''அவன் நன்றாயிருப்பான். அந்தப் பெண் நன்றாயிருப்பாள். ஆனால் நீ? உன் வாழ்வு என்னாவது மகளே? முழுக்க முழுக்க சியாமைப் பிரிந்தே இருந்து விட முடியுமா உன்னால்? கதிர் வளர்ந்து பெரியவனாகிச் சிறகு முளைத்துச்

சென்ற பிறகு தனிமையில் வாட மாட்டாயா? அதையெல்லாம் எண்ணிப் பார்த்தாயா?''

''அவருடைய வாழ்வில் முள்ளாக முளைத்து வேதனையைத் தந்தவள் நான். என் பிரிவினால் அவர் வாழ்வு மலரும் என்றால் அதை நிரந்தரமாக ஏற்கத் தயாராகித்தான் அன்று வீட்டை விட்டு வெளியேறினேன் அம்மா! தனி மரமாகவே நிற்கத் துணிந்திருந்த என் மேல் கருணை காட்டிக் கடவுள் இந்தப் பிஞ்சைத் தந்தார். உங்களையும் தந்தார். இதற்கு மேல் நான் ஆசைப்படவில்லை அம்மா! பிற்காலம் தலைவிதி போல அமையட்டும். இன்று வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கிறது. இது போதுமானது,'' என்று குரலில் உறுதியோடு பேசினாள் சசி.

''அவன் மனம் மாறியிருக்கக் கூடும்.''

தாய்மை என்றால் பேதைமையும் வந்துவிடுமோ என்று தோன்றியது சசிக்கு. லேசாக முறுவலித்துவிட்டு, ''அவர் மாறக் கூடியவர் அல்ல அம்மா! அப்படியே மாறினாலும் கூடக் கதிரை அவர் மகனாக ஏற்றாலன்றி நான் அங்கே போவது சாத்தியம் இல்லை. அந்த மாதிரி நிபந்தனைகள் போடக் கூடிய நிலையிலா இருக்கிறோம்? விட்டு விடுங்கள் அம்மா! எல்லாவற்றையும் படைத்தவன் கையில் விட்டு விடுங்கள்!'' என்றாள் சசி.

''சரிதான்...'' என்று எழுந்த தாய் சற்றே நின்றாள். சசியின் கையைப் பற்றி, ''சசிம்மா! நான் என் மகனுக்காக மட்டும் உன்னிடம் வரவில்லை. உன் எதிர்காலத்தைப் பற்றிய கவலையாலும்தான் வந்தேன். ஆனாலும் நீ சொல்வது போல இறைவன் சித்தப்படி நடக்கட்டும்!'' என்று வெளியேறினார்.

ஒரு மூலையில் ஒதுக்கிப் பெரிய பூட்டாகப் போட்டுப் பூட்டி வைத்திருந்த எண்ணங்கள் மீண்டும் தலையெடுத்துப் பேயாட்டம் ஆடத் தொடங்கின. சியாம்... சியாம்... சியாம்... அவன் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கக் கூடும்?

அவனைப் பார்க்கும் ஆசை நெஞ்சிலே ஒரு வலிபோல் எழுவதைச் சசி உணர்ந்தாள்.

ஆனால் அந்த ஆசையின் பயனற்ற தன்மையை உணர்ந்து பெருமுயற்சி செய்து அதை அடக்கினாள்.

ஆசைகளை அடக்கி மனதை அமைதி அடையச் செய்ய மகனும் உதவினான்.

ஆயினும் மீண்டும் அவள் வாழ்வின் அமைதியைக் குலைக்கவென்றே கங்கணம் கட்டிக் கொண்டவள் போலச் சிந்தாமணி வந்து சேர்ந்தாள்.

## 25

அன்று சசி வீட்டைவிட்டு வெளியேறி மூன்று ஆண்டுகள் முடிந்து போயின.

தவிர்க்க எண்ணி எவ்வளவோ முயன்றும் மீண்டும் மீண்டும் கணவனின் முகம் சசியின் கண் முன்னே வந்து நின்று கொண்டே இருந்தது.

சசி எழுதி வைத்துவிட்டு வந்ததன்படி இன்றிலிருந்து அவனுக்கு விடுதலை. அதை அவள்... தலைவியிடம் எவ்வளவோ தைரியமாய்ப் பேசிவிட்ட போதும் நினைக்கவே முடியாமல் சசியின் நெஞ்சு சில்லிட்டது.

''...ஆகவே நீங்கள் விரும்பிய குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளுமுன் உங்கள் வருமானம் பற்றிய திட்டவட்டமான...''

''சசி!'' என்றார் தலைவி சற்றே உரத்த குரலில்.

திடுக்கிட்டு நிமிர்ந்து, ''சொ... சொல்லுங்கள் அம்மா,'' என்றாள் சசி.

தாயின் பார்வை கூர்மையுடன் அவள் மீது படிந்தது. ''பைத்தியம்!'' என்றார் இரக்கத்துடன்.

தலை குனிந்த சசியிடம், ''நீ இன்று சிசு பராமரிப்பில் உதவி செய்ய இங்கே தாரணியை வரச் சொல்,'' என்று அனுப்பினார்.

புதிதாக வந்திருந்த மூன்று மாதக் குழந்தை ஒன்றின் ஈரத்துணியை மாற்றிப் பவுடர் போட்டு வேறு நாப்கினைக் கட்டிப் படுக்க வைத்தாள் சசி.

கையோடு மனமும் போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்தது. சிந்தாமணியை மணப்பானோ?

அவளை மணந்ததுபோல அக்கினியை வளர்த்து, அதைச் சாட்சி வைத்தே அடுத்தவளையும் கரம் பிடிப்பானா?

'கூடாது. கூடவே கூடாது!' என்று தன்னையுமறியாமல் முணுமுணுத்தாள் சசி.

ஓர் இரண்டு வயதுக் குழந்தைக்குப் பருப்புச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்த மங்களம் வியப்புடன் திரும்பி, ''ஏனம்மா கூடாது?'' என்று வினவினாள்.

''அது இதில்லை...'' என்று உளறிக் கொட்டிவிட்டு நகர்ந்தாள் சசி. ''கதிரைப் பார்த்துவிட்டு வருகிறேன் அக்கா,'' என்று சொல்லிவிட்டு நழுவிச் சென்றாள்.

சென்னையில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும்போல ஓர் ஆசை - தெரிந்து கொண்டே ஆக வேண்டும் போல ஒரு பேராசை - அவள் உள்ளத்தில் கிளர்ந்து எழுந்தது.

சென்று பார்க்கவோ துணிவில்லை.

லில்லியின் முகவரிகூட எடுக்காமல் ஓடி வந்தோமே என்று தன்னையே நொந்து கொண்டாள்.

ஆனால் லில்லி பாவம். ஒரு வழியாய்த் தோழியை மறந்து வாழத் தொடங்கியிருப்பாள்.. அதைக் கெடுத்து அவளையும் வேதனைப்படுத்தலாமா என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள்.

எண்ணங்களின் போக்கைச் சியாமிடமிருந்து கட்டாய மாகத் திருப்பி லில்லியிடம் செலுத்தினாள்.

லில்லி இப்போது எப்படி இருப்பாள்?

குணா அன்று உறுதி கூறியபடி கனிவாக நடந்து கொள்ளத் தொடங்கி விட்டிருந்தால் பணமே இல்லாவிட்டால்கூட லில்லி மகிழ்ச்சியாகத்தான் இருப்பாள். குணா சொன்ன சொல் மாறக் கூடியவன் அல்ல. எனவே அவர்களுடைய இல்லறம் இனியதாகத்தான் இருக்கும்.

குழந்தை ஏதும் பிறந்திருக்குமோ?

பெண் குழந்தை பிறந்து அது லில்லி போலவும் இருந்தால் வண்ணத்துப் பூச்சி போல அழகாக இருக்கும்... ஆனால் சியாம்...

''அம்மா, இந்தப் பூச்சி ப்ளூவா இருக்குது. இது ரெட்டா இருக்குது. ரெண்டும் எப்படி ஒரே மாதிரி வண்ணாத்திப் பூச்சி ஆகும்?'' என்று சசியின் சிந்தனையைக் கலைத்தபடி கதிர் வந்து சேர்ந்தான்.

''இது ப்ளூ வண்ணத்துப் பூச்சி. இது சிவப்பு வண்ணத்துப் பூச்சி கண்ணா!''

''அதோ பறக்குதே, அதில் ரெட், மஞ்சள், வெள்ளை எல்லாம் இருக்குதே, அது ரெட் மஞ்சள் வெள்ளை வண்ணத்துப் பூச்சியா?''

சசிக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் பையனின் சீரியசான முகத்தைப் பார்த்துச் சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''அது பல கலர் பூச்சியடா!'' என்றாள்.

''ஓகோ!'' என்று பெரிய மனிதன் போலத் தலையை ஆட்டினான் சிறுவன். பிறகு சற்று யோசித்துவிட்டு, ''அதுக்கு மட்டும் ஏன் பல கலர்?'' என்று மீண்டும் கேள்வி கேட்கலானான்.

''அது ரொம்ப நல்ல பூச்சியாம். அதனாலே கடவுளாகப் பார்த்து அன்போடு பல கலர் கொடுத்தாராம்!'' என்று மகனின் பட்டான தலை மயிரை விரல்களால் அளைந்தாள் சசி.

தாயின் தொடைமேல் சலுகையுடன் சாய்ந்து கொண்டு, ''அம்மா! கதிர் நல்ல பிள்ளைதானே?'' என்று இழுத்தான் கதிர்.

''ஆமாண்டா ராஜா!''

''அப்போ கதிருக்கும் கடவுள் பல கலர் கொடுப்பாரா?''

சிரித்துக் கொண்டே சிறுவனைத் தூக்கி அணைத்துக் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள் சசி.

அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''எனக்குப் பல கலர் வேண்டாம்மா. ஆனா கடவுள் இறக்கை தருவாராம்மா? எனக்கும் பறக்கணும்னு ஆசையா இருக்குது!'' என்று தாயின் காதினுள் வெட்கச் சிரிப்புடன் ரகசியம் பேசினான் மகன்.

மெய் மறந்தவளாய் அவனை இறுக அணைத்து, ''எனக்கு நீ போதுமடா கண்ணே! நான் வேறு எதுவும் கேட்கவில்லை ராஜா!'' என்று முணுமுணுத்தாள் சசி.

இந்த மனநிலை மாறுமுன், முன் ஏற்பாட்டின்படி, சசியை அழைத்துச் செல்ல டாக்டர் பரமகுருவின் வீட்டிலிருந்து அவருடைய மூத்த மருமகள் மல்லிகை வந்து விட்டாள். மல்லிகையின் தங்கைக்குத் திருமணம்.

தாயற்ற அல்லி டாக்டர் வீட்டிலும் ஒரு மகள் போலத்தான்.

தலைவியிடம் தாஜாப் பண்ணி ஒரு வாரம் முன்னதாகவே சசியை அனுப்ப வேண்டும் என்று ஏற்பாடு செய்து விட்டிருந்தாள் மல்லிகை. அதன்படி இன்று வந்து அழைத்துச் சென்று விட்டாள்.

அங்கே வேலை என்று பார்த்தால் ஒன்றும் இல்லைதான். ஆனாலும் மூன்றோடு நாலாவது ஆளாகத் துணிமணி வாங்குவதும், சாமான் சேர்க்கவும், லிஸ்ட் போடவும் என்று தனிப்பட்ட சிந்தனைக்கு இடமே இல்லாது நேரம் ஓட்டமாய் ஓடிப் போயிற்று. திருமண நாளும் வந்தது.

சசி எவ்வளவோ மறுத்தும் கேளாமல். அவளுக்கென்று ஒரு வாடாமல்லிக் கலர் பட்டுச் சேலையை வாங்கி வைத்திருந்தார்கள் - மல்லிகையும் அல்லியுமாகச் சேர்ந்து.

''கல்யாணத்துக்கென்று வாங்கியிருக்கிறோம். நீ கட்டிக் கொள்ளவில்லை என்றால் எங்கள் அப்பா மனக் கஷ்டப்படுவார்,'' என்று அவளை வாயடைக்க வைத்து விட்டனர் சகோதரிகள். வீட்டின் மற்ற இரு பெண்களும் கூடச் சேர்ந்து ஒத்து ஊதவும் சசியால் மறுக்க முடியவில்லை.

இதே பெரும்பான்மை பலத்துடன் சில நகைகளையும் கூட அவளுக்கு அணிவித்து விட்டனர் அந்தப் பெண்கள்.

''இப்போது அணிந்து கொள்கிறேன். ஆனால் பிறகு சேலையையும் சேர்த்து வைத்துவிட்டுத்தான் போவேன்!'' என்று நிபந்தனையோடு அணிந்து கொண்டாள் சசி.

பிறர் நகைகளை அணிவது உறுத்திய போதும், தன்னை ஒரு சகோதரி போல நடத்தியவர்களின் மனதைப் புண்படுத்த அவளுக்குத் துணிவு வரவில்லை. கூடவே கழுத்தில் ஒன்றும் இல்லாது நின்று அந்த வசதி உள்ள குடும்பத்தின் விருந்தினரின் குறுகுறு பார்வைக்கு இலக்காகவும் அவளுக்குப் பிரியம் இல்லை.

கல்யாணக் கூட்டம் பெருகியபோது கதிருக்கு வழக்கமான அளவு தாயின் கவனம் கிடைக்கவில்லை. தெரியாத முகங்கள் பெருகவும் சிணுங்க வேறு தொடங்கினான். ''நம்ம வீட்டுக்கு எப்போ போறது!'' என்ற பாட்டு வேறு.

வேலைக்கு இடைஞ்சலாக அவன் தொந்தரவு செய்யவே சசி மகனைத் தூக்கிக் கொண்டு வாயிற்புறமாகச் சென்றாள்.

அங்கே இலகுவாக வரவேற்பு! வேலையை மேற்பார்த்தபடி சம்பந்தியோடு நின்று கொண்டிருந்தார் பரமகுரு.

அவரிடம் கதிரை ஒப்படைத்து விட்டுத் திரும்பித் தன் வேலைகளைக் கவனிக்க உள்ளே சென்றாள்.

கதிரும் சுவாதீனமாய்ப் பெரியவரின் கையைப் பிடித்துக் கொண்டு பந்தலையும் மேளத்தையும் வேடிக்கை பார்க்கலானான்.

ஒரே ஒரு ஜோடி விஷக் கண்களில் இதெல்லாம் வேறு பொருளில் பட்டது.

''சசி! அந்த அப்பாவைப் பாரேன். எல்லா வேலையையும் போல மாப்பிள்ளைத் தேர்வையும் நம்மிடம் ஒப்படைத்திருக்கக் கூடாதா? சுத்த உபத்திரவம்!'' என்று எரிச்சலுடன் மொழிந்தாள் மல்லிகா.

விழிகளில் கேள்விக் குறியுடன் நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் போக்கில் வெற்றிலைக் கட்டுகளைப் பிரித்துத் தாம்பூலத் தட்டுக்களில் சுற்றிலும் வட்டமாக வைத்து நடுவில் பாக்குப் பொட்டலத்தையும் நட்ட நடுவில் சுண்ணாம்பு டப்பாக்களையும் அழகாக அடுக்கினாள் சசி.

''பின்னே என்னவாம்? மாப்பிள்ளை நாடகத்தில் நடிப்பவராம்.''

''பாங்கில் அல்லவா...?'' என்று திகைப்புடன் வினவினாள் சசி.

''அது இருக்கிறது சசி! அது போக இது வேறு. கலை ஆர்வமாம்! மண்ணாங்கட்டி. முதலில் அதைக் கத்தரிக்கச் சொல்ல வேண்டும் அல்லியிடம்,'' என்றாள் மல்லி அதே எரிச்சலுடனேயே.

''மெய்யாகவே கலை...'' என்று தொடங்கிவிட்டு, உடனே நிறுத்திக் கொண்டாள் சசி. ஒரு நாடக நடிகையால் நேர்ந்த அனர்த்தங்கள் அவ்வளவு சுலபத்தில் மறக்குமா அவளுக்கு?

''இருக்கலாம். எல்லாத் துறைகளிலும் நல்லவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் சசி. ஆனால் எனக்கென்னவோ மனதில் இது பிடிக்கவில்லை. அதிலும் இப்போது மாப்பிள்ளையின் ட்ரூப்பிலிருந்து வந்திருக்கிறார்கள் பார், அதற்குள் பறக்கிறார்கள். உடனே போக வேண்டுமாம். இல்லாவிட்டால் இன்றைய நாடகம் அவ்வளவுதானாம்,'' என்று குறைப்பட்டாள் மல்லி.

''ஷ்! என்ன மல்லி இது? பொறுப்புணர்வோடு நேரத்துக்குச் சென்றுவிட விரும்புகிறார்கள். அதைப் போய்க் குறை கூறலாமா? அடேடே... மாப்பிள்ளை நடிகர் என்றால் அவரையும்கூட அழைக்கிறார்களா? இது என்ன வம்பு?'' என்று சிரித்தாள் சசி.

மனமின்றிக் கூடச் சிரித்தாள் மல்லி. ''அது வேறா? போடி! அல்லியும் மாப்பிள்ளையும் இன்னும் இரண்டு வாரம் இங்கேயேதான். என் எரிச்சல் அதற்காக இல்லை. அவர்களுக்குச் சாப்பிட நேரம் இல்லையாம். பாயசம் கொடுங்கள், குடித்துவிட்டு ஓடுகிறோம் என்கிறார்கள் அவர்கள். இங்கானால் ஆறினால் கட்டி விழுந்து போகும் என்று பாயசத்தைத்தான் கடைசி அயிட்டமாக இப்போது தான் தயாரிக்கத் தொடங்குகிறாராம் நமது சமையல்காரர். கொஞ்சம் இனிப்பும் காரமுமாக டிபனாக வைத்துவிடச்

சொல்கிறார் அப்பா. நீ அதைக் கொஞ்சம் பார்க்கிறாயா சசி? ஒரு ஜாங்கிரி டப்பாவையும் ஒரு மிக்ஸர் டப்பாவையும் தூக்கிக் கொண்டு ராயனை உன்னோடு அனுப்புகிறேன். இருபது தாம்பூலப் பைகளையும் கொண்டு போ. எப்படியோ பரிமாறி அனுப்பி வைத்துவிடு. என்ன சசி, சரிதானா? நானும் கூட வருவேன். ஆனால் எங்கள் சித்தி முகத்தைப் பார்த்தாயா? எட்டு முழம் நீட்டியிருக்கிறார்கள். அவர்கள் சேலையை விட உசத்தியாய் என் மாமியாருக்கு எடுத்து விட்டோமாம். கோபப்பட நேரத்தைப் பாரேன். அவர்களை முதலில் சமாதானம் செய்தாக வேண்டும்,'' என்றாள் மல்லிகை அலுப்புடன்.

''நீ சித்தியைப் பார். இங்கே நான் போகிறேன்,'' என்று கிளம்பிய போது, சசி முற்றும் எதிர்பார்க்கவில்லை. தன் இன்ப வாழ்வை அழித்த எதிரியைக் காணப் போகிறோம் என்று.

மாப்பிள்ளை வீட்டில் ஆயத்த நிலையில் பலர் நின் றிருந்தார்கள்.

மாப்பிள்ளையிடம் ஒருவர் சொல்லிக் கொண்டு இருந்தார். பொறுப்பாளர் போலும். ''இருந்து சாப்பிட்டு விட்டே போகலாம் மதன்! ஆனால் ரிஹர்ஸலை கட் பண்ணி விட்டுக் கல்யாணத்துக்கு வந்து விட்டோம். இப்போதே போனால் லைட்டாக ஒரு ரிஹர்ஸலை முடித்து விட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கவும் நேரம் இருக்கும். புது நாடகம் பார். முதல் ஷோவில் தவறிவிடக் கூடாது பார். அதனால்தான் பாயசம் மட்டும் போதும் என்கிறேன். நின்று நிதானித்துச் சாப்பிட நேரம் இல்லை பார்.''

அவர் பேசியதைக் கேட்டபடியே சுமையுடன் ராயன் பின் தொடரச் சசி சென்றாள்.

மன்னிப்புக் கோரும் பாவனையில் முறுவலித்தபடியே, ''மன்னிக்க வேண்டும் மாப்பிள்ளை சார்! பாருங்கள். ஆறினால் கெட்டிப்பட்டு விடுமே என்று பாயசத்தைத் தயாரிப்பு அட்டவணையில் கடைசியாக வைத்திருக்

கிறோம். இப்போது அவசரமாகச் செய்யச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். ஓர் அரை மணி நேரம். முப்பதே நிமிடம் தாமதித்தால் தயாராகிவிடும்...'' என்று இழுத்தாள்.

''ஐயய்யோ, முடியாதம்மா. அப்படியானால் நாங்கள் கிளம்புகிறோமப்பா...''

''வந்தவர்கள் வெறும் வயிற்றோடு போகலாமா சார்? கொஞ்சம் இனிப்பும் காரமும் கொண்டு வந்திருக்கிறேன். பத்தே நிமிடத்தில் பரிமாறிச் சாப்பிட்டும் முடித்து விடலாம். உட்காருகிறீர்களா! என்ன மாப்பிள்ளை சார்? எடுத்து வைக்கட்டுமா?'' என்றாள் சசி.

மாப்பிள்ளை மதன் மிகுந்த நன்றியோடு, ''செய்யுங்கள் சிஸ்டர்,'' என்றான்.

எல்லாரும் அவசரமாக உட்காரவும் அதே அவசரத்துடன் சசியும் ராயனுமாக இருபது இலைகளிலும் பரிமாறினார் கள். ஒரே இலை காலியாகக் கிடந்தது.

''யாரு...? ஏ ஏ மணி, வா வா. நேரமாகிறது தெரிய வில்லையா? கதவோடு உன்னையுமா ஆணி அடித்திருக் கிறது? சீக்கிரம் வா,'' என்று அதட்டினார் மாப்பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்த பொறுப்பாளர்.

அவரது பார்வை சென்ற திசையில் நோக்கிய சசி கல்லாகச் சமைந்தாள்.

இடுப்பில் கை வைத்தபடி குரோதமும் பொறாமையு மாகப் பார்த்தபடி நின்றவள் சிந்தாமணியேதான்.

''எனக்கு வயிற்று வலி சார்! இதை யெல்லாம் சாப்பிட்டால் இரவு நடிக்கவே முடியாது. அதைவிட...'' என்று சசியிடம் திரும்பி, ''உன்னோடு சற்றுப் பேசுகிறேனே, உள்ளே வருகிறாயா?'' என்றாள் சற்றே திமிரான குரலில்.

''நீ வேறு கதையடிக்கக் கிளம்பி விடாதே,'' என்றார் பொறுப்பாளர்.

''இல்லை சார்! ஐந்தே நிமிடம்தான். நீங்கள் கை கழுவுமுன் வந்துவிடுவேன்,'' என்றாள் சிந்தாமணி.

''உலக்கை போல நில்லாமல் உள்ளே வா,'' என்றாள் சசியிடம்.

இவளுக்குச் சசி பணிய வேண்டியது இல்லைதான். எதிர்ப்பு அவள் மனதில் தோன்றவும் செய்தது. ஆனால் சியாமைப் பற்றி இவள் மூலமாக அறிய முடியுமே என்று பணிய வைத்தது வெட்கம் கெட்ட மனது.

எனவே ராயனிடம் திரும்பி, ''இதோ வந்து விடுகிறேன் ராயப்பா! அதுவரை நீயே கவனித்துக் கொள்கிறாயா?'' என்று முறுவலித்துவிட்டுச் சிந்தாமணியைப் பின் தொடர்ந்தாள்.

கதவைத் தாண்டியதுமே கூடத்தில் அமர்ந்திருந்தோருக்குக் கேளாத மெல்லிய குரலில், ''அவர் நன்றாக நலமாக இருக்கிறாரா சிந்தா?'' என்று குரல் நடுங்க அவசரமாகக் கேட்டாள் சசி.

சிந்தாமணி திரும்பி நின்று சசியை உதாசீனமாகப் பார்த்தாள். ''மெத்த அதிகப்படியாகத்தான் உருகுகிறாய். ஆனால் வேஷத்துக்கும் வசனத்துக்கும் பொருந்தி வரவில்லையே! பட்டுப் புடவை... நகைகள்... எவனடி கொடுத்தான்?'' என்றாள் பொறாமைக் கனல் தெறிக்க.

சிரமத்துடன் ஆத்திரத்தை அடக்கியபடி, ''நான் அவரைக் கேட்டேன்!'' என்றாள் சசி.

உதட்டைக் கோணி மட்ட ரகமாய் அழகு காட்டினாள் சிந்தாமணி. ''எல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறார். மூன்று ஆண்டுகளாக இரவும் பகலுமாய் அருகே இருந்து அவருடைய தேவைகளை நானே கவனிக்கையில். வேறு எப்படி இருப்பாராம்!'' என்றாள் குரூரமான பார்வையுடன்.

## 26

சிந்தாமணியின் வார்த்தைகள் அவள் கணக்கிட்டிருந்த அதே வேகத்துடன் சசியைத் தாக்கின. ஆனால் முகம் எல்லாம் உதடு வரையிலும் வெளுத்த போதும், ''பொய்!'' என்றாள் சசி.

''பின்னே? நீ அம்போ என்று அவரை விட்டுவிட்டு வந்த பின் இந்தமூன்றாண்டுகளாக இவர் காய்ந்து கிடப்பார் என்றா நினைத்தாய், அதுவும் தடை சொல்லாது கொடுப்பதற்கு நான் அருகிலேயே இருக்கையில்?'' என்று உடம்பை மதர்ப்புடன் நிமிர்த்தி நெளித்துக் காட்டினாள் சிந்தாமணி.

அருவருப்புடன் பார்வையை விலக்கி, ''அவர் ஒழுக்கம் தவறக் கூடியவர் அல்ல!'' என்றாள் சசி உறுதியோடு.

''என் திறமை தெரியாமல் சொல்லுகிறாய்,'' என்று ஆணவத்துடன் சிந்தாமணி தொடங்குகையில், குழந்தைக் குரலில் ஓர் அழுகை கேட்டது.

''கதிர்...'' என்று வேகமாகத் திரும்பினாள் சசி.

''அம்மா... ஆ..'' என்று டாக்டரின் சின்ன மகனின் கையிலிருந்து அழுதான் கதிர்.

உள்ளே வந்து, சசியிடம் சிறுவனைக் கொடுத்து, ''இந்தாம்மா, உன் பிள்ளையைப் பிடி! அங்கே மணவறையில் ஏறி விளையாடும்போது கீழே விழுந்து விட்டான். அதற்குள் பயமா உனக்கு? அவனுக்கு அடி ஒன்றும் பெரிதாக இல்லை. ஆனால் அப்போது பிடித்து 'அம்மா அம்மா' என்று ஒரே அழுகை. அப்பாவெல்லாம் வேண்டாமாம். சமாதானம் செய்து பார்த்துவிட்டு முடியாமல், 'அவன் அம்மாவிடம் கொண்டு விட்டுவிடு,' என்று அவனிடம் அனுப்பிவிட்டார். பிடியம்மா,'' என்றான் டாக்டரின் பிள்ளை.

பிறகு மணமகனிடம் சென்று, ''இன்னமும் பத்தே நிமிடத்தில் இலைபோட்டு விடலாம் மாப்பிள்ளை! எல்லாம் தயார் ஆனதும் நானே வந்து உங்களை அழைத்துப் போகிறேன்,'' என்று முறுவலித்துவிட்டுப் பெண் வீடு நோக்கி நடந்தான்.

சிந்தாமணியின் முகம் ஆச்சரியத்தைக் காட்டியது. ''ஆக இது உன் மாப்பிள்ளையேதானா? திருமண வீட்டிலேயே சந்தேகப்பட்டேன். வந்து உடனேயே உண்டாகிப் பெற்று விட்டாய் போலத் தெரிகிறதே! ரொம்பவும் வேகமாகத்தான் வேலை செய்திருக்கிறாய்! யாரடி தகப்பன்? கல்யாண வீட்டில் வாசல் பக்கமாய் இதைப் பிடித்துக் கொண்டு நின்றானே, அந்தக் கிழவனா? பணக்காரப் பயல்தான், இல்லையா? பறை சாற்றத்தான் பட்டும் நகையுமாக மினுக்குகிறாயே!'' என்றாள் அடக்க மாட்டாத பொறாமையோடு.

கூடவே, ''இந்த வயதிலும் கிழவன் பிள்ளை பெறுகிறானாடி? அல்லது பிள்ளை... அவனும் அறியாமல்

பெற்றதா?'' என்று கீழ்த்தரமாகப் பேசிக் கொண்டே போனவளை, ''சீ! நிறுத்து!'' என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டு அதட்டி நிறுத்தினாள் சசி.

சசி அதட்டவும், மற்றவளுக்கு ஆவேசமே வந்துவிட்டது. ''நீ இங்கே என்னை நிறுத்தச் சொல்லி என்னடி செய்வாய்? அங்கே மூன்றாண்டு காலமாய்ப் பிரம்மசரிய விரதம் காக்கிறாரே, அவரிடம் போய் 'அம்மே அம்மே' என்று அழுகிற குழந்தையோடு பட்டும் வைரமுமாய் உங்கள் சசி டாலடிக்கிறாள் என்று சொல்லப் போகிறேனே, அதை உன்னால் நிறுத்த முடியுமாடி? அதன் பிறகும் உன்னால் இப்படிச் சொல்ல முடிகிறதா என்று பார்க்கலாம்,'' என்று சவால் விட்டாள்.

''எ... எப்படி?'' என்றாள் சசி திகைப்புடன்.

''அதுதான் அவர் ஒழுக்கம் தவறக் கூடியவர் அல்ல என்றாயே, அப்படி...'' என்று குரூரத்துடன் சசி போலவே சொல்லி அழகு காட்டினாள் சிந்தாமணி.

என்ன சொல்வது என்று புரியாமல் சசிக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

கழுத்தைக் கட்டிக் கொண்டு விசும்பும் குழந்தையின் முன்னிலையில், 'நான் இவனைப் பெற்ற தாய் இல்லை!' என்று எப்படிச் சொல்வது?

அதிலும் கதிர் புத்திசாலிப் பையன்.

சசியின் தவிப்பை முடிவுக்குக் கொண்டு வருவது போலப் பொறுப்பாளரின் குரல், ''மணீ, வா! நேரமாகிறது,'' என்று உரத்துக் கேட்டது.

''இதோ வந்து விட்டேன்,'' என்று உடனே குரல் கொடுத்தாள் சிந்தாமணி.

சசியிடம் திரும்பி, ''இப்படி ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொண்டு நிற்பதற்குக் கோடி நன்றியடி, பத்தினித் தங்கம்!'' என்று குத்திவிட்டு நளினமாய் ஓடி மறைந்தாள்.

கால் வேரோடி விட்டாற் போல அசைய மாட்டாமல் நின்றாள் சசி.

பழக்க வழக்கங்கள் மிகவும் வலுவுள்ளவை.

உள்ளே பிரளயம் நிகழ்ந்தபோதும் விசும்பும் பிள்ளையின் முதுகைத் தன்னியல்பாய்ச் சசியின் கை வருடியது.

''என்னடா ராஜா, என் ராஜாக் குட்டி அழுவானோ?'' என்றெல்லாம் ஆறுதல் மொழிகளை வாய் உதிர்த்தது.

தலையை மெல்லத் தூக்கி, ''அம்மா! கதிர் டொம் விழுந்திட்டான். நெறய்யாச் சிரிச்சாங்க...'' என்று மீண்டும் விக்கத் தொடங்கினான் பையன்.

ஆகக் கீழே விழுந்ததை விடப் பிறர் நகைத்ததுதான் பிள்ளைக்குத் தாங்கவில்லை என்பது புரிந்ததும் சசிக்குச் சிரிப்பு வந்தது.

எப்போதும் போலவே சியாமைக் கதிரின் தந்தையாகப் பாவித்துப் பெருமையாக, 'கர்வத்தைப் பாரேன்! அசல் அப்பா போல அதே குணம்!' என்று தன்னியல்பாய் நினைத்தாள் சசி.

ஆனால் சட்டென உடம்பெல்லாம் குலுங்கிப் போயிற்று.

பாவி சிந்தாமணி என்னென்ன வார்த்தை யெல்லாம் சொல்லி விட்டாள்!

நெஞ்சு துணிந்து... நாவு துணிந்து... அப்பப்பா!

இதை யெல்லாம் சியாமிடம் சொல்லுவாளே.

இன்னமும் ஜோடனை செய்தே சொல்லுவாளே!

சும்மாவே சசியிடம் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. இழிவான எண்ணமும் கூட.

இந்நிலையில் சிந்தா சொல்வதை எல்லாமே மெய் யென்று ஏற்று விடுவானோ?

ஆயினும் சசி ஒழுக்கம் தவறினாள் என்றால்கூட ஒப்புக் கொள்ளுவானோ?

உடனே சென்னைக்குச் சென்று நடந்ததை யெல்லாம் கணவனிடம் கொட்டிவிட வேண்டும் போல் சசியின் உடல் பரபரத்தது.

செய்தால் என்னவென்று நிமிர்கையிலேயே அவளுக்கு இன்னொன்றும் நினைவு வந்தது.

சசியைப் பார்ப்பதைச் சியாம் விரும்ப மாட்டான்.

அவனைப் பொறுத்தவரையில் சசி முடிந்துவிட்ட, ஒரு விரும்பத் தகாத - அத்தியாயம்.

அவள் என்ன செய்தாலும் அதைப்பற்றி அவனுக்கு அணு அளவும் அக்கறை கிடையாது.

அவனளவில் சசி எழுதி வைத்துவிட்டு வந்த கடிதத்தின் படி அவன் இன்று விடுதலை பெற்ற - அவளிடமிருந்து விடுதலை பெற்ற - சுதந்திர மனிதன்.

அவள் அவனுக்கு அந்நியப் பெண்.

அந்தக் கடைசி வார்த்தையில் தாங்க மாட்டாமல் மனம் [illegible]வதனையுறச் சசியின் விழிகளில் நீர் திரண்டது.

''அச்சச்சோ! அம்மா, கதிர் அழலையம்மா! அம்மாவும் அழக் கூடாதும்மா!'' என்று தாயின் கண்களைத் தன் மொத்தென்ற மிருதுவான கரங்களால் துடைத்தான் கதிர்.

குழந்தைக்காக ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, ''இல்லை [illegible]ணா! இனிமேல் அம்மா அழ மாட்டேன்!'' என்றாள் [illegible]னிடம். 'உன் முன்னிலையில்,' என்று மனதினுள் [illegible]த்துக் கொண்டாள்.

இத்தனைக்கும் இடையில், 'மூன்றாண்டு காலமாகப் [illegible]சரிய விரதம் காக்கும்' என்ற வார்த்தைகள் அவளுள் [illegible] ஆறுதலைப் பெய்தன.

சென்னையில் சிந்தாமணி மறுநாளே சியாமைத் தேடிக் [illegible]டு ஓடினாள்.

[illegible]ளது அவசரம் தெரியாமல் அவன் எங்கோ [illegible]றுக்குச் சென்றிருந்தான்.

[illegible]ண்டு நாள்கள் கழித்து அவன் வந்தது தெரிந்ததும் [illegible] ஓடினாள்.

[illegible]க்கு ஏகப்பட்ட உற்சாகம்! 'வழுக்கிக் கொண்டே [illegible] .அந்த விலாங்கு மீனை இன்று எப்படியும் பிடித்து [illegible]!' என்று வாய்க்குள் முனகிக் கொள்வாள்.

[illegible] நகரில் சியாமின் பெரிய வீட்டின் முன்னே [illegible]லிருந்து இறங்கியபோது, சிந்தாமணியின் நெஞ்சில் [illegible] .அதே ஆசை வெறி பெருகியது.

[illegible]லும் எவ்வளவு பெரிய தோட்டத்துடன் அழகும் [illegible] எவ்வளவு பெரிதான வீடு!

அவனுடைய தோட்ட வீடு கட்டடமும் சிறிதென்றாலும் மதிப்பு உயர்ந்ததுதான்.

தொழிற்சாலை.

அலுவலகம்.

அங்கங்கே வீடுகள், நிலங்கள்... அடேயப்பா!

இவற்றுள் எதையுமே ஒரு சிறு துளியைக்கூட அவள் விடப் போவது இல்லை.

இன்று அவனை எப்படியாவது மடக்கிவிட வேண்டும்.

சியாம் மற்றவர்களைப் போலத் தொட்ட பின் ஓடுகிற வன் அல்ல.

தொட்டு விட்டால் விலகுவதே இராது.

அதனால் இன்று... சிந்தாமணியின் இருதயம் வழக்கத் துக்கு இரு மடங்கு வேகத்துடன் துடித்தது.

வழக்கம் போலவே நிதானமான முறுவலுடன், ''வா,'' என்று வரவேற்றான் சியாம்.

உடனேயே, ''இந்த மதிய நேரத்தில் இங்கே என்ன?'' என்று கேட்டான்.

''மிகவும் முக்கியமான விஷயம். அதனால்தான் ஓடோடியும் வந்தேன். முதலில் கொஞ்சம் ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரச் சொல்லுங்கள்,'' என்று அமர்த்தலாகச் சொல்லிவிட்டு, சோபாவில் ஸ்டைலாக உட்கார்ந்தாள்.

சியாம் முகத்தில் இளநகை மின்னியது.

அவளது விருப்பம் போலவே ஜூஸ் கொண்டுவரச் செய்தான்.

அதை எடுத்து, நாசூக்காக ஒரு வாய் அருந்திவிட்டு, ''என்ன விஷயம் என்று கேட்க மாட்டேன் என்கிறீர்களே. தெரிந்து கொள்ளும் ஆர்வமே இல்லையா?'' என்று கொஞ்சலாகக் கேட்டுச் சிணுங்கினாள்.

''சொல்லவென்றே வந்தவள் எப்படியும் சொல்லத்தானே போகிறாய்,'' என்றான் அவன் சாவதானமாக.

''அப்படியானால் நான் சொல்ல மாட்டேனாக்கும்!'' என்று சாயமிட்ட உதட்டைக் குவித்தாள் அவள்.

சியாம் கல்லுப் பிள்ளையார் போல அசையாமல் வீற்றிருந்தான்.

சிந்தாவுக்கு உள்ளூரக் கோபம் பொங்கியது. 'எத்தனை நாள் இந்தக் கல்லுளி மங்கத்தனம்? பிறகு பார்த்துக் கொள்கிறேன்,' என்று மனதிற்குள் கறுவியவள், ''சசி விஷயம்...'' என்றாள் வெளியே.

அவன் பேசாமல் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அதற்கு மேல் அடக்க முடியாமல், ''அவள் இப்போது ஒரு பணக்காரக் கிழவனோடு வாழ்கிறாள் சியாம்! அவர்கள் இருவருக்குமாக ஒரு குழந்தை கூட இருக்கிறதாம்!'' என்று கொட்டித் தீர்த்தாள் சிந்தாமணி.

''நம்புவதற்கில்லை!'' என்றான் அவன் அமைதியாக.

''ஏனாம்?'' என்றாள் அவள் எரிச்சலுடன். ''அவள் என்ன, தப்பே செய்யாத உத்தமி ரத்தினமா? உங்களை எப்படி ஏய்த்தாள்.''

''அது வேறு விஷயம் சிந்தாமணி! ஆனால் இது நம்ப முடியாதது!'' என்றான் சற்றும் அசையாமல்.

அவன் சர்வ நிச்சயத்துடன் பேசிய விதம் அவளுள் ஆத்திரத்தை மூட்டிற்று. அவனுக்குப் பாவலா காட்டிப் பேச வேண்டும் என்று எண்ணியிருந்ததை மறந்தாள். ''நீங்கள் நம்பா விட்டால் உண்மை பொய்யாகி விடுமா? அவள் அந்தக் கிழவனோடு கொஞ்சுவதை என் கண்ணால் பார்த்துக் காதல் கேட்டேன்,'' என்று மேலும் போட்டு உடைத்தாள்.

அதன் பிறகு அவன், ''சசி ஒழுக்கம் தவறி வாழக் கூடியவள் அல்ல!'' என்று அதே நிதானத்துடன் கூறவும், சிந்தாமணி தன்னை மறந்தாள்.

தாங்க முடியாத சினத்துடன், ''புருஷன் பெண்டாட்டி இரண்டு பேரும் சொல்லி வைத்துக்கொண்டு பேசுகிறீர்களா? அவளைப் போலவே அதே வார்த்தைகளையே சொல்லு கிறீர்களே?'' என்று வெடித்தாள்.

''எதே வார்த்தைகளை?'' என்றான் அவன் அசுவாரசியம்போல.

''அந்த அவர் ஒழுக்கம் தவறி வாழக் கூடியவர் அல்ல என்பதைத்தான்!'' என்று அதே ஆத்திரத்துடன் சசி போலவே சொல்லி அழகு காட்டினாள் சிந்தாமணி.

''ஆனால் சசி ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்?'' என்று புரியாதவன் போல விசாரித்தான் சியாம்.

''நாம் இருவரும் ஒன்றாக வாழ்வதாக நான் சொன்...!'' என்று வேகமாகத் தொடங்கி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் சிந்தாமணி.

சியாமின் கண்ணைத் தோண்டி விடலாம் போல அவ் வளவு ஆத்திரம் வந்தது அவளுக்கு. அவளை இந்த அள வுக்கு, அவள் வாயாலே ஒப்புக் கொள்ள வைத்து விட்டானே.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு, ''அவளிடம் நான் சொன்னது பொய்தான். ஆனால் அவள் பிள்ளை பெற்று வாழ்வது மெய்தான் சியாம்! பையனுக்கு இரண்டு வயது இருக்கும். ஊட்டி ஊட்டி வளர்த்திருக்கிறாள். வயதுக்கு மீறின வளர்ச்சி. 'அம்மா! அம்மா!' என்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினான். நான் அவளிடம் நேராகவே கேட்டு விட்டேன். அவளால் ஒரு வார்த்தை மறுக்க முடியவில்லை. தெரியுமா? நான் சொல்வதெல்லாம் சத்தியம் சியாம்!'' என்று அவன் நம்ப வேண்டுமே என்ற ஆதங்கத்துடன் வேகமாக மொழிந்தாள்.

''பின்னே நீ பொய்யா சொல்லப் போகிறாய்? அதுவும் என்னிடம்!'' என்று முறுவலித்தான் சியாம்.

''நான்... நான் சொன்னதை நீங்கள் நம்புகிறீர்கள்தானே சியாம்!'' என்று உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டி ஆவலோடு கேட்டாள் அவள்.

புருவங்களை வெகுவாக உயர்த்தி, ''சேச்சே! உன்னை நான் நம்பமாட்டேனா? இது உனக்குத் தெரியாதா?'' என்று வியப்புக் காட்டிப் பேசினான் அவன்.

''அப்பாடி. இப்போதுதான் என் மனம் நிம்மதி ஆயிற்று!'' என்று குதூகலித்தபடி எழுந்து வந்து அவன் அருகே அமர்ந்தாள் சிந்தாமணி.

எழுந்து சிகரெட் சாம்பலை ஆஷ் டிரேயில் தட்டினான் சியாம். அப்படியே அந்த வட்ட மேஜை மேல் லேசாகச் சாய்ந்தபடி நின்று, ''சசியை எங்கே சந்தித்தாய்?'' என்று விசாரித்தான்.

சட்டென நிமிர்ந்து, ''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்று சந்தேகத்துடன் வினவினாள் அவள்.

ஒரு கேலிப் புன்னகையுடன், ''அவளை அழைத்து வந்து குடும்பம் நடத்துவதற்காக...'' என்று தொடங்கினான் அவன்.

''ஆ!'' என்று கூவினாள் சிந்தாமணி.

அவள் இடையிடாதது போலச் சியாம் தொடர்ந்தான். ''...என்று பதில் சொல்வேன் என்றா நினைத்தாய்? நீ சரியான பைத்தியம்!'' என்று சொல்லிவிட்டுத் தலையைப் பின்னே சாய்த்து வாய்விட்டு நகைத்தான்.

''உங்களைத்தான் என்னால் உறுதியாகப் புரிந்து கொள்ள முடியவில்லையே!'' என்று மனத்தாங்கலுடன் சிணுங்கினாள் அவள்.

''பாவம் நீ, சிந்தாமணி!'' என்று பரிதாபம் காட்டினான். பிறகு நிமிர்ந்து, ''சசி எழுதி வைத்த கடிதத்தை மட்டும் அடிப் படையாக வைத்து விவாக விடுதலை பெற முடியாதாம். சட்டத்திற்கு அது போதாது என்று வக்கீல் சொல்லுகிறார். அதனால் அவளிடம் வேறு ஒரு கடிதம்... சட்ட ரீதியில் வார்த்தைகள் அமைத்து எழுதி வாங்க வேண்டுமாம்... நீ சொல்வதைப் பார்த்தால் அவள் மறுக்கவும் நியாயம் இல்லை. மறுத்தாலுங்கூட வேறு வழியில் சீக்கிரமாக விஷயத்தை முடித்து விடலாம்,'' என்று தெளிவாக எடுத்துச் சொன்னான்.

''அவள் சோரம் போனாள் என்றுதானே, குழந்தைவேறு சாட்சியாக இருக்கிறதே!'' என்று பரபரத்தாள் சிந்தாமணி.

''நீ தப்பாக ஊகிப்பாயா?'' என்று மெச்சியபடி திரும்பி ஆஷ் டிரேயில் சிகரெட்டை நசுக்கித் தீயை அணைத்துப் போட்டான் சியாம்.

கைகளைப் பிசைந்தாள் சிந்தாமணி. இவன் இவ்வளவு துடிப்பாய் இருப்பான் என்று தெரிந்திருந்தால் நின்று நிதானித்துச் சசியின் முகவரியையும் வாங்கிக் கொண்டே வந்திருக்கலாமே என்று தோன்றியது. ஆனாலும் என்ன?

''எனக்கு அவள் இருப்பிடம் ரொம்பவும் சரியாகத் தெரியாது சியாம். ஆனால் செங்கல்பட்டில் இரு நாள்களுக்கு முன்பாக ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அங்கே அந்தப் பெண் வீட்டு வழியில்தான் யாரோ ஒரு பெரியவ

ரோடு இருக்கிறாள். நல்ல வசதி. பட்டும் நகையுமாக மினுக்குகிறாள் தெரியுமா? நான் திருமண வீட்டு விலாசம் தருகிறேன். நீங்கள் அங்கே சென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்று எழுந்து அவன் அருகே நெருங்கினாள் சிந்தாமணி.

''அவள் கடிதம் தந்துவிட்டால் பிறகு நம் இன்ப வாழ்க்கைக்கு ஒரு தடையும் இராதே சியாம்?'' அவன் தோளில் கைவைத்து உடம்பு அழுந்த அவன் மேல் சாய்ந்தாள்.

அவன் லாவகமாக விலகி. ''தடையிருக்க வழியில்லையே! இப்போது எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நீ கிளம்பு கிறாயா? முதலில் அந்த முகவரியைக் குறித்துத் தந்துவிடு,'' என்று ஓரமாக இருந்த ஒரு பஸ்ஸரை அழுத்தினான்.

ஓடிவந்து நின்ற பையனிடம், 'இந்த அம்மா கிளம்பப் போகிறார்கள். டிரைவரிடம் சின்ன வண்டியை ரெடி பண்ணச் சொல்லு,'' என்று அனுப்பி வைத்தான்.

''அவளைக் கோர்ட்டுக்கு இழுத்துச் சந்தி சிரிக்க வைக்க வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. ஆனால் கழுதை ஒழிகிறது. கடிதம் தந்தால் விட்டு விடலாம் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். ச்சு... ஏதோ ஒரு வழியில் அந்த நந்தி விலகினால் சரி!'' என்று திருமண வீட்டு முகவரியை எழுதி அவனிடம் கொடுத்தாள் சிந்தாமணி.

''உங்கள் பெரிய காரில் நாம் இருவர் மட்டும் உல்லாசமாகப் போக வேண்டும் என்று இருக்கிறது சியாம்! ஏன் போகாமலேயே இங்கேயே இருந்து விடலாம் போலக் கூடத்தான் தோன்றுகிறது,'' என்று கைகளை உயர்த்திச் சோம்பல் முறிப்பது போல உடம்பை நெளித்து ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.

அவனோ அவளது குறிப்பையே உணராதவன் போலக் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''நேரமாகிறது. எனக்கு வேலை இருக்கு என்றேனில்லையா? நீ சீக்கிரம் கிளம்பு,'' என்று அவளை அனுப்பி வைத்தான்.

சியாம் இவ்வளவு தூரத்துக்கு இடம் கொடுத்துப் பேசியதே சிந்தாமணிக்குப் பெரிய வெற்றியாகத் தோன்றியது. 'சியாமை மணந்ததும், பிடிவாதம் பிடித்தேனும், காளியாட்டம் ஆடியேனும், தனக்கென்று தனியாக ஒரு பெரிய கார் வாங்கிக் கொள்ள வேண்டும். அந்தக் காரில் ஏறிச் சும்மா சும்மா விரட்டும் நாடகக் கம்பெனிப் பொறுப்பாளர், சக நடிகைகள் முன்னிலையில் ஸ்டைலாக ஓட்டிச் செல்ல வேண்டும்,' என்றெல்லாம் பல கற்பனை களில் மிதந்தபடி சிந்தாமணி சென்றாள்.

★ ★ ★

மல்லிகை ஆன்ட்டி வாங்கிக் கொடுத்த புதியதான பெரிய பந்தைத் தொப்பென்று போட்டு அது உயரே துள்ளி எழுவதை வெகுவாக ரசித்து மகிழ்ந்தான் கதிர்.

எந்த அளவு பலத்துடன் அந்தச் சின்னக் கைகள் பந்தை அடித்தனவோ, அந்த அளவு உயரத்துக்குப் பந்து துள்ளிக் குதித்தது. உள்ளே ஓடிச் சென்று காய் வெட்டிக் கொண்டிருந்த தாயிடம் தன் வியப்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டான் கதிர்.

கைவேலையை நிறுத்திவிட்டுக் கவனத்துடன் மகன் சொன்னதைக் கேட்டு அவனுடன் இணைந்து சிரித்தாள் சசி. பிறகு, 'வெளியே சென்று விளையாடு கண்ணா! பானை மேல் விழுந்தால் உடைந்து போகும்!'' என்றாள்.

''பந்தாம்மா?'' என்று மிகுந்த கவலையுடன் விசாரித்தான் பிள்ளை.

''பானைடா!'' என்று சிரித்தாள் சசி. ''பானை உடைந்து விட்டால் பிறகு எதில் சோறு பொங்குவது?''

''ஓகோ!'' என்று தாய் சொன்னதை ஜீரணித்த மகன், ''அப்போ வெளியிலையே வெளையாடறேம்மா,'' என்று ஓடினான்.

சற்று நேரம் சொன்ன திசையெல்லாம் குதித்துச் சென்ற பந்து திடும்மென்று வேலிப் படலைத் தாண்டி வெளியே விழுந்தது.

சற்றே யோசனையுடன் உட்புறமாய்ப் பார்த்தான் கதிர். சசி குடத்துடன் பின்புறம் செல்வது தெரிந்தது.

தாயைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தவனாய்ப் படல்மேல் ஏறி மாட்டும் கயிற்றுப் பின்னலை எடுத்துவிட்டுக் கதவைத் திறந்தான்.

ஓடிச்சென்று பந்தை எடுத்தான்.

அருகில் ஒரு கல்லின் மேல் அமர்ந்து தன் கழுத்தை வளைத்து அவனைப் பார்த்தது ஒரு தவிட்டுப் புறா.

பந்தை வீசுவது போலப் பாவனை செய்து அந்தப் பறவையை மிரட்டினான் கதிர்.

அது சற்று நகர்ந்து சென்று வேறிடத்தில் அமரவும், குஷியுடன் பந்தைத் தொப்பென்று போட்டுக் காட்டி அதைப் பயமுறுத்தினான்.

பறவை மேலும் சிறிது தூரம் பறந்து சென்று அமரவும், அதன் பின்னே ஓடிச்சென்று மீண்டும் பந்தை எறிந்தான்.

அன்றைய மழையில் குட்டையாகத் தேங்கியிருந்த தண்ணீரில் வேகத்துடன் பந்து விழுந்தது.

குட்டை நீர் சுற்றிலும் தெறித்தது.

நீர் தெறிப்பதை உற்சாகத்துடன் பார்த்த சிறுவன், தெறித்த நீர், அவ்வழியே தோளில் ஒரு பையுடன் வந்து கொண்டிருந்த ஒரு மனிதரின் மேலேயும் தெறித்ததைக் கண்டு திகைத்தான்.

'ச்சு...' என்று கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான் புதியவன்.

ஓடிச்சென்று பந்தை எடுத்துக் கொண்டு, "தெரியாம பட்டுட்டுது. வந்து... வந்து ரொம்ப ஸாரி!" என்று யோசித்துப் பேசினான்.

வந்தவனுக்குச் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டு, குனிந்து பான்ட்டில் தெறித்திருந்த நீரைத் தட்டி விட்டபடி, "இப்படித்தான் அழுக்குத் தண்ணீரை ஆள் மேல் அடிப்பதா?" என்று லேசாக அதட்டிப் பேசினான்.

பையன் நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தான். "நான் குருவியத்தானே வெரட்டினேன்...? நான்தான் சாரின்னு சொல்லி விட்டேனே!" என்று பயமற்றுப் பேசினான்.

அவன் நின்ற முறையிலும் பார்த்த பார்வையிலும் எதையோ தெரிந்து கொண்டவனாக ஒரு முறுவலுடன் சிறுவனை நெருங்கினான் புதியவன்.

பார்த்துக் கொண்டே நின்ற கதிரின் திராட்சை விழிகள் பெருவட்டமாய் விரிந்தன. ''நீ... நீங்க அப்பாவா? வேலை எல்லாம் முடிஞ்சு போச்சுதா?'' என்று ஆச்சரியத்துடன் வினவினான்.

ஒரு கூரிய பார்வையுடன், ''முதலில் நீ உன் பெயரைச் சொல்லு. அப்புறம்தான் அதெல்லாம் நான் சொல்லுவேன்,'' என்று பேரம் பேசினான் புதியவன்.

''கதிர்... எ...எஸ்... கதிர் என் பேர்!'' ஆர்வத்திலும் அவசரத்திலுமாகத் திக்கியது சிறுவனுக்கு.

''அம்மா பேரு.''

''எங்க அம்மா பேரு சசி.''

''அம்மா எங்கம்மா? அம்மாகிட்டே போலாமா?'' என்று கேட்டபடி பையனைத் தூக்கினான் அவன்.

''ஓ!'' என்று சந்தோஷமாகத் தலையாட்டினான்.

புதியவனின் தோளில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு,

''கதிர் ஒயரம்மா வளந்தாச்சுது!'' என்று சிரித்தான்.

''அடேயப்பா! எவ்வளவு உயரம்!'' என்று தலைக்கு மேல் தூக்கிக் காட்டினான் அவன்.

''இந்த வீடுதான். அம்மா பின்னால தண்ணிக்கு... அம்...'' என்று அழைக்கத் தொடங்கிய சிறுவனின் வாயில் ஒற்றை விரலை வைத்து அடக்கினான் அவன்.

''அம்மாவுக்குத் தெரியாமல் ஒளிந்து போய் நிற்போம்,'' என்று ரகசியம் பேசினான்.

கதிருக்கு ஒரே உற்சாகம். ஒரு கையால் புதியவனின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு இப்படி இப்படி என்று வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்புறம் செல்ல வழி காட்டினான்.

ராட்டினத்தில் குடத்தைக் கட்டி நீர் இறைத்துக் கொண்டிருந்தாள் சசி.

திடுமென ராட்டினக் கயிற்றை வலுவான கை ஒன்று பற்றவும் மருண்டு போய் இமைகள் படபடக்கத் திரும்பிப் பார்த்தாள்.

பார்த்தவளின் விழிகள் மலர்ந்தன.

இதழ்கள் மலர்ந்தன.

முகம் முழுமையுமே காலைத் தாமரையாய் மலர்ந்தது.

## 27

இனிக் காணவே போவதில்லை என்று எண்ணியிருந்த கணவன் கண்ணெதிரே வந்து நிற்கவும் கண்ணிமைக்க மறந்தவளாகச் சசி மெய்ம் மறந்து நின்றாள்.

மனைவியை ஏற இறங்கப் பார்த்த சியாமின் கண்கள் ராட்டினக் கயிற்றைப் பற்றியிருந்த அவளது மெல்லிய கரங்களில் வந்து நின்றன.

புருவங்களில் லேசான சுழிப்புடன், ''இதையெல்லாம் நீ ஏன் செய்கிறாய்?'' என்று அதட்டினான்.

பிறகு, ''இவனைப் பிடி. குடத்தை நான் எடுத்து வருகிறேன்!'' என்று கதிரைச் சசியிடம் கொடுத்தான்.

''அம்மம்மா, அப்பா வந்தாச்சு!'' என்றான் அவன் மட்டற்ற மகிழ்வுடன்.

''ஆமாண்டா ராஜா!'' என்று அவனை வாங்கினாள் சசி.

அதற்குள் பந்து கீழே விழுந்து உருளவும், கதிரும் தாயின் பிடியிலிருந்து இறங்கிப் பந்தின் முன்னே ஓடினான்.

சட்டென விழிகளில் கலக்கம் சூழ, ''சியாம்! கதிர்..'' என்று தொடங்கித் தடுமாறினாள் சசி.

''ஷ்... எல்லாம் சரிதான் சசி! உள்ளே போ!'' என்று குடத்தை அவிழ்த்து எடுத்துக் கொண்டு சசியோடு இணைந்து அந்தச் சிறு வீட்டினுள் புகுந்தான் சியாம்.

கதிருக்கு ஒரே உற்சாகம்.

தன் சின்னச் சின்ன எளிமையான விளையாட்டுச் சாமான்களை எல்லாம் கடை பரப்பினான். ''அப்பா!

பாருங்க அப்பா! இதைப் பாருங்க அப்பா. இந்த சக்கர வண்டி பாருங்க அப்பா. இதே இதுதான்... பிங்க் கலர்ப்பா!'' என்று காட்டினான்.

எப்படி எப்படி விளையாட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தான்.

''நான் லெட்டர்ஸ் எழுதட்டாப்பா?'' என்று தன் சின்னச் சிலேட்டில் எழுதிக் காட்டினான்.

சியாம் சிறுவனைத் தடுக்கவோ முகம் சுழிக்கவோ இல்லாமல், சிறுவனோடு இணைந்து சிரிப்பதைக் கண்டதும், சசிக்கு மனம் மிகவும் லேசாகிப் போயிற்று.

சியாம் மட்டும் கதிரிடம் முகம் சுழித்திருந்தால் அவளால் தாங்கியிருக்கவே முடியாது.

சசி சமையலில் இறங்குவதைக் கண்டதும், ''எதுவும் செய்ய வேண்டாம் சசி! அந்தப் பையில் ரொட்டி, சிப்ஸ், ஊறுகாய் எல்லாம் இருக்கிறது. இங்கே இருப்பதோடு கலந்து பங்கிட்டு உண்ணலாம்,'' என்றான் சியாம்.

ஒரு பருப்புத் துவையலை மட்டும் அரைத்து விட்டுச் சமையலை முடித்தாள் சசி.

கை பாட்டுக்குத் துவையலை அரைக்கையில், 'இவர் இங்கே எப்படி வந்தார்? சிந்தாமணி போய்ச் சொல்லித் தானே வந்திருக்க வேண்டும்? அவள் சொன்னதைக் கேட்ட பிறகும் ஏன் வந்தார்? இது நிஜமேதானா?' என்றெல்லாம் மனமும் தன் போக்கில் நினைத்துக் கொண்டே போயிற்று.

ஆனால் இதை எல்லாம் மனது நினைக்கையில்கூட எந்தவிதமான கலக்கமோ பயமோ உண்டாகவில்லை.

அவனைப் பார்க்கையில் குரல் கேட்கையில் தலையி லிருந்து கால்வரை சொல்லில் வடிக்க முடியாத சுகம் பரவியது. அவனை மீண்டும் பார்ப்பதற்காகவே இவ்வளவு நாள்கள் உயிருடன் இருந்தது போல உணர்ந்தாள்.

ஆசிரமத்திற்கு வந்த பின் அமைதி கிட்டி விட்டதாகவும் நிம் மதி பெற்று விட்டதாகவும் தான் நினைத்ததெல்லாம் எவ்வ ளவு பெரிய பொய்கள் என்பதைச் சசி அன்று புரிந்து கொண்டாள்.

சியாமைப் பார்த்த அந்த ஒரு வினாடி சுகத்துக்கு முன் மற்றதெல்லாம் எம்மாத்திரம்?

இந்த இனிமையில் மற்ற விவரங்கள் எல்லாமே அனாவசியமானதாகப் பட்டன.

கணவன், கதிர் இருவருடைய குரல்களும் பேசுவதையும் சிரிப்பதையும் ஒரு கிறக்கத்துடன் அனுபவித்தபடி சமையலறையிலேயே ஒதுங்கியிருந்தாள்.

உணவின் போதும் உறங்கும் வரையிலும்கூடக் கதிர் அன்று அப்பாவைப் பிரியவில்லை.

உணவை முடித்து, வேலைகளை எல்லாம் முடித்து விட்டு, ''தூங்க வருகிறாயா கதிர்?'' என்று சசி அழைத்த போதுகூட அவனுக்குச் சியாமை விட்டு நகர மனம் இல்லை.

தலையைச் சரித்து, தன் பெரிய விழிகளை விரித்து, ''இன்னும் கொஞ்ச நேரம் அப்பாகிட்டே பேசிட்டு இருக்கேம்மா!'' என்றான் கெஞ்சுதலாக.

மடியிலிருந்த சிறுவனின் ஸ்பரிசத்தை விரும்பியவன்போல, அவனை மெல்ல வருடியபடி, ''இருக்கட்டும் சசி! ஒரு நாள் சற்றுத் தாமதமாய்த் தூங்கினால் என்ன?'' என்றான் சியாமும்.

''அப்பா! அப்பா!'' என்று அவனை அணைத்தபடியே உறங்கிப் போனான் கதிர்.

கதிருக்கு விரித்து விட்டுக் கணவன் அருகில் வந்து தூக்கத்திலும் தந்தையை இறுகப் பற்றியிருந்த சிறு கரங்களைப் பிரித்து எடுத்துப் பிள்ளையைத் தூக்கினாள் சசி.

கணவனின் பார்வை தன் மீது அழுத்தமாகப் படிவதை உணர்ந்தபோது நெஞ்சு படபடத்தது.

கதிரைப் படுக்க வைத்து மூடிவிட்டாள்.

கதிருக்காக ஒரு சின்னச் சிம்னி விளக்கை ஏற்றி வைத்து விட்டுப் பெரிய விளக்கை அணைத்து விட்டுத் திரும்பினாள்.

திரும்பியவளைச் சியாமின் கரங்கள் இறுக அணைத்தன.

சிறு கலக்கத்துடன், ''சியாம், நான் இங்கே...'' என்று தொடங்கினாள் சசி.

''என்... சசி!'' என்றவன் அதற்கு மேல் பேசவில்லை. அவளையும் பேச்சிழக்க வைத்து விட்டான்.

''பால்!'' என்ற குரல் கேட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தாள் சசி.

கணவனின் கைகளை மனமின்றி விலக்கியபோது, 'இப்படி அயர்ந்து தூங்கி எத்தனை காலம் ஆயிற்று!' என்று தோன்றியது.

பாலை வாங்கி வைத்துவிட்டு, காலைக் கடன்களை முடித்துச் சசி வேலைகளைத் தொடங்கியபோது கதிர் விழித்து விட்டான்.

எழுந்த வுடனேயே 'அப்பா'விடமும் போய் அவனையும் எழுப்பி விட்டான்.

கையை உயர்த்திச் சோம்பல் முறித்தபடி, ''அப்பாடி! இப் படித் தூங்கி எத்தனை காலம் ஆயிற்று!'' என்றான் சியாம்.

திகைப்புடன் ஆனந்தமாகவும் இருந்தது சசிக்கு.

ஆண்கள் இருவரும் பல் துலக்கிவிட்டு வந்ததும், கதிரிடம் கேழ்வரகுக் கஞ்சி கலந்த பாலையும், சியாமிடம் காஃபி தம்ளரையும் நீட்டினாள் சசி.

''உனக்கு...'' என்று கேட்டுவிட்டு ஒரு வாய் அருந்தினான் சியாம்.''

''பிறகுதான்! இங்கே இரண்டு டம்ளர்கள்தான் இருக்கின்றன,'' என்றாள் சசி புன்னகையுடன்.

கண்களில் சட்டென எட்டிப் பார்த்த குறும்புடன், ''நாம் இரு வரும் மாறி மாறிக் குடிப்போமா?'' என்று சிரித்தான் சியாம்.

முகம் சிவந்த போதும் அந்தச் சிரிப்பைக் கண் கொள்ளாமல் பார்த்து மகிழ்ந்தாள் சசி.

''அம்மா! குட்டிப் பூனைக்கு...?'' என்று சசியிடம் கொஞ்சம் கஞ்சி கலந்த பாலை வாங்கிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றான் கதிர். செல்லுமுன் திரும்பி, ''பூனைக்குட்டி பார்க்க வர்றீங்களாப்பா? அழகாயிருக்கும்!'' என்று சியாமுக்கு ஆசை காட்டினான்.

ஆனால், ''அப்புறமாய்ப் பார்க்கிறேனடா,'' என்று அனுப்பி விட்டான் சியாம்.

கதிர் சென்றதும், குனிந்து சசியின் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு, ''வெளிச்சமும் குறைந்து அங்கங்கே நீரும் தேங்கி நின்றதால் காரை ஆசிரமத்திற்கு அருகில் நிறுத்தி விட்டு வந்தேன். இப்போது போய்க் காரை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்...'' என்றவன் இளமுறுவலுடன், ''காரைக் கண்டு விட்டால் கதிர் குதிப்பான்!'' என்று ரசனையுடன் கூறினான்.

சசியின் கன்னத்தை ஒரு முறை ஆசையுடன் வருடி விட்டுக் கிளம்பினான்.

அப்போது வாயில்புறம் அரவம் கேட்டது.

யார் என்று எட்டிப் பார்த்த சசிக்கு ஒரு கணம் நெஞ்சு நின்றது.

வந்து கொண்டிருந்தவர் அன்னை தேவகி.

வெளியே செல்வதற்காக இரண்டு எட்டு எடுத்து வைத்திருந்த சியாம் இயல்பாய் நின்று கவனித்தான்.

ஆனால் அவன் உடல் விரைப்புடன் நிமிர்வதைச் சசி கண்டாள்.

அதே சமயத்தில் சியாமைக் கண்ட தேவகியும் வாயில் கதவின் அருகில் அப்படியே நின்றார்.

கை வேலையை விட்டு எழுந்து பாய்ந்தோடினாள் சசி. சியாமின் கரத்தைப் பற்றித் தடுப்பது போல இழுத்து, ''அவசரப்பட்டு ஏதேனும் சொல்லி விடாதீர்கள் சியாம்,'' என்றாள் பதற்றத்துடன். 'சே! என்ன சுயநலம் எனக்கு! அன்னையைப் பற்றி நேற்றே சொல்லாமல் போனேனே,' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

சியாமின் பார்வை அவன் தாயை விட்டு அரைக் கணமும் விலகவில்லை.

ஆனால் அவன் உடலில் இறுக்கம் தளர்வதைச் சசி உணர்ந்தாள்.

ஒரு கையால் தன்னைப் பற்றியிருந்த சசியின் கையை மூடி ஒரு முறை அழுத்தினான்.

பிறகு, ''வந்தவர்கள் வாசலிலேயே நிற்பானேன்? உள்ளே வந்து உட்காருவதுதானே,'' என்றான் பொதுப் படையாக. இதை எப்படிக் கொள்வது?

வரவேற்பாகவே பாவித்து அந்த வீட்டின் ஒரே இருக்கையான நார்க் கட்டிலை அனாவசியமாகத் தூசு தட்டி அன்னையை அமரச் சொன்னாள் சசி.

நிதானமாகப் பின்புறம் திரும்பி, ''ராயப்பா!'' என்று அழைத்தார் தேவகி. வந்தவனிடம், ''கதிர் பின் பக்கம் இருப்பான். அவனை அழைத்துப் போய் ஓ... ஓர் அரைமணி நேரம் ஏதாவது விளையாட்டுக் காட்டி வைத்திருந்து விட்டு மீண்டும் அழைத்து வா,'' என்று உத்தரவிட்டு அனுப்பினார்.

பிறகு அதே சலனமற்ற தோற்றத்துடன், அதே கம்பீரத் துடன், அதே நிமிர்வுடன், உள்ளே வந்து கட்டிலில் அமர்ந்தார்.

அவரது பார்வை சசியிடம் ஒரு முறை கூர்மையுடன் பதிந்தது.

நெஞ்சு படபடக்க, முகம் சிவக்கத் தலை குனிந்தாள்.

மகனிடம் திரும்பி, ''ஆசிரமத்துக்கு அருகில் நிற்பது உன் கார்தானே?'' என்றார் கேள்வி போல.

''ஆமாம்... பாதை சரியாக இல்லாமல் வெளிச்சமும் குறையத் தொடங்கியதால் அங்கேயே விட்டு விட்டு வந்தேன்,'' என்று தப்பு செய்த சிறுவன் போலக் கணவன் முணுமுணுப்பதை ஆச்சரியத்துடன் கேட்டாள் சசி.

ஏதோ முடிவுக்கு வந்தவன் போல, அவனும் சென்று கட்டிலில் அமர்ந்தான், விலகித்தான்.

சசிக்கு அங்கே நிற்க ஒரு மாதிரியாக இருந்தது. என்ன இருந்தாலும் தாயும் பிள்ளையும் என்று நினைத்து மெல்லப் பின்புறம் செல்லத் திரும்பினாள்.

''நில் சசி!'' என்றனர் இருவரும். ''இங்கேயே இரு,'' என்றான் சியாம்.

மெதுவாக அவன் காலடியில் அமர்ந்தாள் சசி.

பிறகு தாயின் முகத்தைப் பார்த்து, ''இதோ பாருங்கள். எனக்கு அப்பா சொன்னது மட்டும்தான் தெரியும். இப்போது உங்கள் பக்கத்தையும் சொன்னீர்களானால் எனக்கு உண்மை தெரிய ஏதுவாக இருக்கும்,'' என்றான்.

கசப்புடன் லேசாகச் சிரித்தார் தேவகி. ''இப்போது மட்டும் நான் கதை சொல்ல மாட்டேன் என்பது என்னப்பா நிச்சயம்?'' என்று சற்றுக் கிண்டலாகவே கேட்டார்.

சற்றே முகம் சிவந்தபோதும் சியாம் தயங்காமல் சொன்னான். ''உங்களுக்கும் சசிக்கும் ஓர் ஒற்றுமை. நேரான பார்வை அது. அயோக்கியர்களால் முடியாதது. சிறகெல்லாம் வெட்டப்பட்டுத் தளர்ந்து சக்தியற்று நிற்கும் போதும் தளராத பார்வை அது. அன்று மாடியில் நின்ற என்னைப் பார்த்தீர்களே - அந்தப் பார்வை. அன்றைக்கு அது பற்றி எனக்கு ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் சசியிடம் பல தடவை அந்தப் பார்வையைக் கண்டிருக்கிறேன். சசியைப் பிரிந்த பின் பல தடவை அதைப்பற்றி யோசித்துப் பார்த்திருக்கிறேன். அந்தப் பார்வையுடன் தப்பை இணைத்தால் அணு அளவு கூட ஒப்புக் கொள்ள முடியாமல் முரண்படுகிறது. அதனாலேயே உங்கள் விஷயத்தில் ஏதோ பெரிய தவறு நடந்திருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டேன். அதனால்தான் இப்போதேனும் உண்மையை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்,'' என்றான்.

''சசியின் பார்வை புரிந்தும் அவளை இந்த முடிவுவரை விரட்டியிருக்கிறாய்,'' என்றார் அன்னை குறிப்பாக.

ஒரு கணம் மவுனமாக இருந்துவிட்டு, ''சசி விஷயம் பிறகு சொல்லுகிறேன்! முதலில் உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்! என்னதான் நடந்தது? அப்பா - என்னிடம் உயிரை வைத்திருந்த அப்பா - உங்களை ஏன் விஷமாக வெறுக்க வேண்டும்? தயவு செய்து எதையுமே மறைக்காமல் எல்லாமே சொல்லி விடுங்கள். ப்ளீஸ்!'' என்று கேட்டுக் கொண்டான் சியாம்.

நடந்ததனைத்தையும் தேவகி கூற-

தாயின் கதையை அறிந்ததும், ''பாவம்! வீணாகத் தன் வாழ்வையும் கெடுத்து உங்கள் வாழ்வையும் அழித்து விட்டார் அப்பா!'' என்றான் பரிதாபத்துடன்.

''வாழ்வை வீணாக்கிக் கெடுக்கும் கலையை வாரிசுக்குக் கற்றுக் கொடுத்து விட்டு இருப்பது போலவும் தெரிகிறதே!'' என்றார் தேவகி வறண்ட குரலில்.

''இல்லை,'' என்றான் சியாம் சட்டென்று.

''இல்லை என்றால் நல்லதுதான். ஆனால் சசியின் பார்வை புரிந்தும் அவளை ஏன் மனம் உடையச் செய்தாய்?''

சசியின் தலையை லேசாக வருடினான் சியாம். ''சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற் பட்டவளாக இருக்க வேண்டும் என்பானாம் அவன். பெண்களிடம் அவ நம்பிக்கையுடனேயே வளர்ந்திருந்த எனக்கு என் மனைவி நடிக்கவில்லை என்பது ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் பட வேண்டியிருந்தது. என் மேல் உள்ள அன்பிற்காக என்னையே தியாகம் செய்து அவள் தன்னை நிரூபிக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் சசி வீட்டை விட்டு வெளியேறக் கூடும் என்று நான் எண்ணவே இல்லை.''

சசி யோசனையோடு நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''மெய் சசி! விவாக ரத்திற்கு நீ சம்மதித்திருந்தால் உன்னை நான் விலக விட்டிருக்க மாட்டேன் தெரியுமா?'' என்றான் அவன்.

''ரத்து என்று ஆகும்வரை விடுகிறவரா நீங்கள்?'' என்பது போலத் தாங்கலுடன் நோக்கினாள் சசி.

அவளது பார்வை புரிந்தவனாக அவள் தோளில் கை வைத்து, ''நீ நினைப்பது சரியே சசி! இறுதி வரை கொண்டு செல்லாமல் நான் விட்டிருக்க மாட்டேன்தான். ஆனால் அதன் பின் உன்னை என்னுடனேயே அழைத்துச் சென்றிருப்பேன். அந்த ஆறு மாசம் கழிந்ததும் மீண்டும் சட்டப்படி உன்னை என்னுடையவளாக ஆக்கும் வரை ஓய்ந்திருக்கவும் மாட்டேன்,'' என்றான் அவன் உறுதியாக.

''பிரமாதமான ஐடியாதான். ஆனால் அவளுடைய துன்பத்தை நீ எண்ணிப் பார்க்கவில்லையே?''

''துன்பத்தை அனுபவித்தது அவள் மட்டும் அல்ல!'' என்றான் அவன் சுருக்கமாக.

''மன வேதனை தாளாமல் அவள் வேறு முடிவைத் தேடியிருந்தால்...?'' என்று விடாமல் கேட்டார் அன்னை.

''என் மனைவி அவ்வளவு முட்டாள் அல்ல!'' என்றான் அவன் கர்வத்துடன்.

''சந்தோஷம்!'' என்றார் தேவகி சற்றுக் கிண்டலாகவே.

அவன் முகம் கன்றுவது கண்டு சற்று இரக்கம் கொண்டவராக, ''சசியைப் பற்றி டாக்டர் வீட்டில் விசாரித்திருப்பாய்,'' என்று பேச்சைத் திருப்பினார் தேவகி. ஆயினும் அவர் குரலில் மற்றவரிடம் பேசும்போது காணப்படும் ஒரு நெருக்கம் இல்லாதிருப்பது சசிக்கு வியப்பாகவே இருந்தது.

''வீடு எங்கே என்று மட்டும் கேட்டேன்,'' என்றான் சியாம்.

''கதிரைப் பற்றி அங்கே விளக்கியிருப்பார்கள்.''

''ஆச்சரியப்படத்தக்க விதமாய் அவனைப் பற்றிய பேச்சே எழவில்லை. ஆனால் குழந்தையைப் பற்றி யாருடைய விளக்கமும் எனக்குத் தேவையும் இல்லை!'' என்றான் அழுத்தமாக.

''அவ்வளவு நம்பிக்கையுள்ளவன் இந்த மூன்று ஆண்டு காலமாக அவளைப் பற்றி அறிய ஏன் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை?'' என்று விடாமல் வினவினார் மூத்தவர். அவருக்கு மருமகளைத் தன் மைந்தன் நடத்திய முறை சற்றும் பிடிக்கவில்லை.

குனிந்திருந்த சசியைப் பார்த்தபடி சற்று நேரம் பேசாது இருந்தான் சியாம்.

ஆனால் சசி நிமிர்ந்து, ''போனது போகட்டுமே.'' யென்று மேலும் ஏதோ சொல்ல முயன்றாள்.

அவளைத் தடுத்து, ''இது நீயும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றுதான் சசி! தெரிந்து கொள்,'' என்று

அவளிடம் கூறிவிட்டுத் தாயிடம் திரும்பினான். ''சசி தன் கடிதத்தில் மூன்று ஆண்டு காலம் கெடு வைத்திருந்தாள். அந்தக் காலத்திற்குள் அவள் என்று வந்து நின்றாலும் கடிதம் சக்தியிழந்தது ஆகிவிடும். எனவே அந்த மூன்று ஆண்டுகள் முடியும் வரையில் பொறுத்திருந்தேன். சசி மறைந்திருந்து கண்காணிக்கிறாளோ என்று சிந்தாமணியின் தொடர்பைக் கூட விடாமல் இருந்தேன். எனக்கும் கடினமான காலம் தான் இந்த மூன்று ஆண்டுகளும். ஆனால் மனதில் நெருடலுடன் உடனே சேர்ந்து வாழ்வதைவிட எத்தனை காலமானாலும் இருவரும் கஷ்டப்பட்டுக் காத்திருப்பது மேல் என்று நினைத்தேன். பத்து நாள்கள் முன்னதாகவே நடவடிக்கை எடுத்திருப்பேன். ஆனால் வெளிநாடு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுப் போயிற்று. அங்கிருந்து நேற்றுத்தான் வந்தேன். வந்ததும் வராததுமாகச் சசியைப் பற்றிய தகவல் தானாக என் மடியில் வந்து விழுந்தது.''

''சிந்தாமணி!'' என்றாள் சசி, இன்னும் சிறு பயத்துடன்.

''அவள் சொல்லி யிராவிட்டால்...?'' என்று இன்னும் சந்தேகமாகவே கேட்டார் தாயார்.

''சசி பத்திரிகை படிப்பாள். எல்லாப் பத்திரிகைகளுமே அவள் மீண்டும் வந்து சேரும்வரை என் விருப்பத்தைத் தொடர்ந்து தாங்கி வந்திருக்கும்,'' என்றான் அவன் இலகுவாக.

''ஓகோ! இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?''

வியப்புடன் தாயைப் பார்த்தான் சியாம். ''நான் எத்தனையோ குறைகள் உள்ளவன்தான் என்றாலும் பொறுப்பின்மை அதில் ஒன்று அல்ல. வேறு நினைவு இருந்திருந்தால் நேற்றிரவு இங்கே வந்திருக்க மாட்டேன்,'' என்றான்.

மெய்யென்பதை உணர்ந்தாள் சசி. அவனுக்குப் பிடிக்காது பிள்ளை வந்தபோதும் அது பற்றித் தெரிந்த பின்னர் அது இறந்து பிறந்து மீண்டும் உடல் தேறும் வரை அவன் விவாகரத்துப் பேச்சுக்கூட எடுக்கவில்லை.

''உனக்கு வேறு எண்ணம் இருந்திருக்கலாம். ஆனால் சசி உன்னோடு வருவதை விரும்பாமல் இருக்கலாமே. சசியை நீ நடத்திய முறைக்கு வேறு பெண்ணாயிருந்தால் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாள்,'' என்றார் அன்னை.

கேட்டிருந்த இருவரில் அதிகமாகத் தூக்கிவாரிப் போட்டது சசிக்கா... சியாமுக்கா என்று சொல்வது வெகு கடினம்.

அடிபட்டாற் போலச் சசியை வெறித்தான் சியாம்.

அந்தப் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், ''அதெல்லாம் ஒன்றும் இல்லை அம்மா. நான் மறந்து கூடப் போனேன்,'' என்றாள் சசி.

''ஆனால் குழந்தையை விட்டுச் சசி பிரிந்திருக்க மாட்டாளே.''

''நானும் அப்படித்தான்,'' என்றான் சியாம்.

ஆச்சரியமாகப் புருவங்களை உயர்த்தி, ''சசிக்குத்தான் பால் ஊட்டி வளர்த்த பாசம். உனக்கு என்னப்பா?'' என்று வினவினார் தாயார்.

மறுக்காமல் ஆத்திரப்படாமல் சியாம் பொறுமையாகப் பதில் சொல்வது சசிக்கு ஆச்சரியமாகவே இருந்தது. இப்போது சொன்னான்.

''இதை எப்படி என்று சொல்வது? நேற்று அவனை முதல் முதலாகப் பார்த்ததுமே தன் அசைவுகளால் அவன் தன் இனிய தாயைத்தான் நினைவுபடுத்தினான். அதே நேர் பார்வை அவனிடமும். அந்தக் கணத்திலேயே என் பிள்ளையின் இளமைப் பருவத்தில் மூன்று ஆண்டுகளை நான் இழந்து விட்டேன் என்பதை வருத்தத்துடன் உணர்ந் தேன்,'' என்றான் அவன் உண்மையான வருத்தத்துடன்.

கூடவே, ''எங்கள் குழந்தை இறக்கவே இல்லை என்பது போல ஓர் எண்ணம், எப்படியும் சசியின் குழந்தை என்னுடையதுதானே!'' என்றான் தெளிவுடன்.

''அந்த நினைப்பு இருந்தால் எல்லாம் சரிதான். ஆனால் நீயும் கதிரைச் சட்டப்படி தத்து எடுத்துக் கொள்ள

வேண்டியது இருக்கும். முதலில் அதைச் செய்து விடு,'' என்று எழுந்தார்.

பொதுப்படையாக, ''வருகிறேன்,'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்..

## 28

அன்னை திடீரென்று கிளம்பவும் சசி கலக்கத்துடன் எழுந்தாள்.

ஆனால் அவளுக்கு முன்னே சியாம் ஓர் எட்டில் விரைவாகத் தாயின் முன்னே சென்று நின்றான்.

''அம்மா!'' என்று தன் ஆழ்ந்த குரலில் முதன் முறையாக அவரை அழைத்தான். ''அம்மா! சிறு வயதிலேயே உங்களோடு பழகும் பாக்கியத்தை இழந்தவன் நான். மீண்டும் அந்த சுகம் கிடைக்க இருந்தபோது எட்டி உதைத்த மூடனும்கூட. இன்று என் பிழையை உணர்ந்து உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன். அம்மா, தயவு செய்து எங்களோடு வந்து நம் வீட்டில் வாழ்ந்து நம் குடும்பத்தை முழுமை பெறச் செய்யுங்கள் அம்மா!'' என்று தாயின் காலடியில் அப்படியே நீள விழுந்தான்.

அவ்வளவு நேரம் யாரோ போல ஓர் ஒதுக்கத்துடனேயே பேசிக் கொண்டிருந்த அன்னை அப்போது உடைந்தார்.

அப்படியே தரையில் அமர்ந்து, மகன் தலையைத் தூக்கி மடியில் அணைத்து, ''சியாம், என் மகனே!'' என்று கண்ணீரால் மகனைக் குளிப்பாட்டினார்.

இந்தத் தாய்மை உணர்வில் இருந்து பெண்களுக்கு விடுதலையே இல்லையா அல்லது அதுவே வரமா?

வியப்புடன், பிரமிப்புடன் பார்த்த சசி அதற்கு மேல் அங்கிருப்பது தவறு என்று உணர்ந்தவளாய் ஓசையின்றிப் பின்புறமாய் மெல்ல நழுவினாள்.

ஆனால் தோட்டத்திற்குள் சென்று நின்று பிறகுதான் தன் கண்களிலும் நீர் பெருகிச் சொரிவதை உணர்ந்தாள்.

என்னதான் மனம் நெகிழ்ந்தபோதும் மகனோடு சென்னைக்குச் செல்லத் தேவகி சம்மதிக்கவில்லை.

''என் உலகம் இது என்றே ஆகிவிட்டது சியாம்! இனி இந்த ஆசிரமத்துக்கு வெளியே என்னால் நிம்மதியுடன் வாழ இயலாது. சென்னை என்ன அதிக தூரமா? நினைத்தால் நீயும் சசியும் கதிரோடு மாதம் ஒருமுறை இங்கு வந்து போவது கடினமல்ல. ஆனால் எனக்காக என்று நீ ஏதேனும் செய்ய நினைத்தால்...'' என்று நிறுத்தினார்.

''எதுவானாலும் சொல்லுங்கள் அம்மா! கண்டிப்பாகச் செய்கிறேன். ஆசிரமத்தை விரிவு படுத்தப் பணம் வேண்டுமா?'' என்று தானாக ஊகித்துச் சொன்னான்.

அன்னையின் முகம் மலர்வதைக் கண்டதும், ''அதுவே தானாம்மா? எவ்வளவு வேண்டும்? ஐம்பதினாயிரம்... ஒரு லட்சம் போதுமா அம்மா? அல்லது நீங்கள் விரும்புகிற மாதிரி எல்லாம் பிளான் தயார் பண்ணுங்கள்! லட்சத்துக்கு மேலேயே ஆனாலும் பரவாயில்லை அம்மா!'' என்று ஆயிரம் முறை அம்மா அம்மா என்று அழைத்துப் பேசினான்.

பேசவும் சக்தியற்றுப் போய் மகனின் தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார் தாயார்.

சென்னையை நெருங்க நெருங்கச் சசிக்கு லில்லியின் ஞாபகம் வெகுவாக வந்தது.

ஆனால் அவளைப் பற்றிச் சியாமிடம் கேட்க இன்னமும் பயமாக இருந்தது. நல்ல நாளிலேயே லில்லியிடம் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. பிறகோ ஒரு வெறுப்பு மட்டும்தானே.

நேசம் காரணமாக மனைவியின் பிழைகளை மன்னித் திருக்கலாம். ஆனால்...

இரண்டு முறை கணவன் முகத்தை லேசாகப் பார்த்து விட்டுப் பேசாமலே திரும்பி விட்டாள் சசி.

''லில்லி எப்படி இருக்கிறாள் என்று தெரிய வேண்டாமா சசி?'' என்று தானாகவே கேட்டான் சியாம்.

''......''

''கேட்க ஆசைதான்! ஆனால் பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடுமோ என்ற பயமும் வேறு! அப்படித்

தானே?'' கேலி போலப் பேசினாலும், அவன் குரலில் வருத்தமும் தொனிப்பதைச் சசி கண்டு கொண்டாள்.

''நான் கேளாமலே நீங்கள் சொல்வீர்கள் என்று நினைத்தேன்,'' என்று முறுவலித்தாள்.

அவன் முகமும் மலர்ந்தது. ''லில்லிக்கு இது ஏழோ அல்லது அதை ஒட்டின மாதமோ. கிட்டத்தட்ட அந்த மாதிரி டைம். நேற்று அங்கே வருமுன் ராபர்ட்டைப் பார்த்து அவரை ஒரு மாதிரியாகக் கிளப்பி விட்டேன்,'' என்று லேசாகச் சிரித்தான்.

''எப்படி?'' என்றாள் சசி வியப்புடன்.

''ஒரு புராஜக்டில் மேனேஜர் போஸ்டுக்கு மிகவும் நம்பிக்கையான திறமைசாலியான ஆள் வேண்டும். குணாளனின் விலாசம் கொடுங்கள். ஏற்றுக் கொள்கிறானா என்று கேட்க வேண்டும் என்றேன். அவருக்கு 'ஷாக்' அடித்து விட்டது. பிறகு, 'பாவம், அவன் மனைவி வேறு ஈருயிராம்!' என்றேனா? உடனே கிளம்பி விட்டார் மகளைப் பார்க்க,'' என்று நகைத்தான்.

சசியும் கூடச் சேர்ந்து சிரித்தாள். பிறகு, ''அவருக்கு லில்லியிடம் பிரியம் அதிகம் உண்டு. ஆனால் பணம் சொத்து என்று வந்து விட்டால் ஒரு மாதிரிப் பிடிவாதம் பிடிப்பார். 'ஒன் வே ட்ராபிக் மூளை,' என்பாள் லில்லி,'' என்று விவரித்தாள்.

''அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆனால் அவருக்கும்தான் வேறு யார் இருக்கிறார்கள்?'' என்றான் ஸியாம். சிறு பரிவுடன், ''நாளை லில்லியைப் பார்க்க நாம் மூவரும் போகலாம்,'' என்றான்.

அன்றிரவில் கதிர் உறங்கிய பின் சசியை அழைத்தான் ஸியாம். ''உன் அறையில் டிரஸ்ஸிங் டேபிள் மேல் ஒரு சேலை வைத்திருக்கிறேன் சசி. அதை அணிந்து கொண்டு வா,'' என்றான்.

புரியாமல் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் சசி.

அவன் மேலே பேசாமல், தலையை மட்டும் அசைக்கவும், வேறு எதுவும் கேளாது தன் அறைக்குச் சென்றாள்.

சேலையைக் கவரிலிருந்து வெளியே எடுத்துப் பிரித்தாள்.

இளம் சிவப்பு நிற உடலும் பச்சை நிறத்தில் சரிகை இழையோடிய கரையுமாக...

'காதலுக்கு இளம் சிவப்பு! கருணைக்குப் பச்சை நிறம்!' என்று தன் குரலே தன் காதுகளில் முணுமுணுப்பது போல உணர்ந்தாள் சசி. நெஞ்சு நெகிழச் சேலையை அணிந்து கொண்டு கணவனிடம் சென்றாள்.

''சசீ...'' என்று அவள் கைகளைப் பற்றினான் சியாம்.

''நான் நேற்று அங்கே வந்தபோதுகூட உன் தவறுகளை மன்னித்து உன்னை அழைத்து வருவதாக எண்ணித்தான் வந்தேன். ஆனால் அம்மா சொன்ன பிறகுதான், உன் நிலையிலிருந்து எண்ணிப் பார்க்கும்போதுதான், சசி, மன்னிப்புக் கோரும் தகுதிகூட எனக்கு இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். சசி, உனக்கு நான் செய்ததெல் லாமே கொடுமைதானே சசி. என் பிழைகளை எல்லாம் சசி, நீ தயவு செய்து மன்னிப்பாயா? ப்ளீஸ் சசி...'' என்று தன் ஆழ்ந்த குரலில் மெய்யான வருத்தம் மிகுதியாக ஒலிக்க அவன் கேட்டபோது சசி மனம் கசிந்து உருகிப் போனாள்.

கண்ணில் நீருடனும் உதடுகளில் முறுவலுடனுமாகத் தலையை உயர்த்தி அவனுடைய கன்னத்தில் தன் பட்டான இதழ்களை ஒற்றி எடுத்தாள்.

அவன் தன் சுவர்க்கத்தை இறுக அணைத்துக் கொண்டான் - இனி ஒரு போதும் கை நழுவ விடப் போவதே இல்லை என்பது போல.


வெண்மையில்
எத்தனை
நிறங்கள்
ரமணிசந்திரன்